*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# தமிழக வரலாற்றில் மனித உரிமைகளின் பரிமாணங்கள் சிறப்பிதழ்

**அறிமுகவுரை:**

இலக்கியம் என்பது மனித வாழ்வின் வரலாற்று ஆவணமாக மட்டுமின்றி, மனித உரிமைகளின் வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் விளங்குகிறது. இந்தச் சிறப்பிதழ், பழங்காலச் சங்க இலக்கியம் தொடங்கி தற்காலத் தலித் கவிதைகள் மற்றும் நவீன புதினங்கள் வரை மனித உரிமைகளும் பெண்ணியக் கோட்பாடுகளும் எவ்வாறு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளன என்பதை விரிவாகப் பதிவு செய்கிறது. புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரியின் தமிழாய்வுத் துறைப் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களின் பங்களிப்பில் உருவாகியுள்ள இத்தொகுப்பு, இலக்கியங்களைச் சமூக மாற்றத்துக்கான அளவுகோலாக முன்வைக்கிறது.

பழந்தமிழ் இலக்கியங்களில் உரிமைக் குரல்கள்

- சங்க இலக்கியங்கள் மனித சமூகம் உய்வதற்குரிய கருத்துகளை உயரிய அறக்கோட்பாடுகளாக வகுத்துரைக்கின்றன.
- தொல்காப்பியம் மற்றும் எட்டுத்தொகை நூல்களில் மகளிரின் கல்வி, காதல் மணம் மற்றும் குடும்ப உரிமைகள் எவ்வாறு பேணப்பட்டன என்பது ஆராயப்பட்டுள்ளது.
- தொல் தமிழர் சமூகத்தில் நடைமுறையில் இருந்த உடன்கட்டை ஏறுதல் (சதி), மற்றும் கைம்மை நோன்பு போன்ற பழக்கங்கள் பெண்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- திருக்குறள் இல்லறவியலில், குடும்ப முடிவுகளைத் தீர்மானிப்பதில் பெண்களுக்கு வழங்கப்படும் மறைமுக உரிமைகளும், தம்பதியர் சமத்துவமும் ஆழமாக விவாதிக்கப்பட்டுள்ளன.
- சங்க கால ஆற்றுப்படை சமூகம் பாதுகாப்பாக எல்லா இடங்களிலும் சென்று சுதந்திரமாகத் தன் உரிமையை நிலைநாட்டியுள்ளது.

மறுமலர்ச்சிக் காலக் கவிஞர்களின் சீர்திருத்தங்கள்

- மகாகவி பாரதியாரின் கவிதைகளில் ஆணும் பெண்ணும் சமம் என்ற பெண்ணிய உரிமைச் சிந்தனையும், குழந்தை திருமண எதிர்ப்பும் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- விவாகத்திற்குப் பின் விரும்பினால் கணவனை விட்டு விலகவும், சுயமாகத் தொழில் செய்து வாழவும் பெண்களுக்கு உரிமை தர வேண்டும் எனப் பாரதியார் வலியுறுத்தியுள்ளார்.
- பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகளில் பெண்கல்வி, சாதி ஒழிப்பு, மற்றும் பகுத்தறிவு ஆகிய மனித உரிமைகள் வலுவாக முன்வைக்கப்பட்டுள்ளன.

பெரியாரின் சமூக நீதிக் கோட்பாடுகள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

- தந்தை பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துக்கள் அவரது காலத்தை விட மிகவும் முற்போக்கானதாகவும் புரட்சிகரமாகவும் இருந்தன.
- பெண்களுக்குச் சொத்துரிமை, மணவிலக்கு உரிமை மற்றும் விதவை மறுமணம் ஆகியவற்றுக்காகப் பெரியார் ஆற்றிய சமூகப் போராட்டங்கள் இச்சிறப்பிதழில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

தற்காலப் புதினங்கள் மற்றும் தலித் இலக்கியங்கள்

- ஆண்டாள் பிரியதர்ஷினியின் 'கிடங்கு' புதினம், பிணக்கூராய்வுத் தொழிலாளர்களின் அக மற்றும் புற வாழ்வியலையும், தலித் மக்களின் வாழ்வியல் உரிமைக்கான போராட்டங்களையும் யதார்த்தமாகக் காட்சிப்படுத்துகிறது.
- 'வேருக்கு நீர்' புதினம், பண பலம் மற்றும் அதிகார மோதல்களால் எளிய மக்களின் வாழ்வாதார உரிமைகள் எவ்வாறு நசுக்கப்படுகின்றன என்பதை உணர்த்துகிறது.
- 'புத்தம் வீடு' நாவல் மூலம் ஒரு குடும்ப அமைப்பிற்குள் பெண்கள் தங்கள் எண்ணங்களைத் தெரிவிக்க உரிமையில்லாமல் எவ்வாறு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பது விளக்கப்பட்டுள்ளது.
- தலித் கவிதைகளில் வாழிட உரிமை, அரசியல் உரிமை மற்றும் சாதி சமத்துவ உரிமை ஆகியன எவ்வாறு அதிகாரத்தை நோக்கி உரக்கக் கேள்வி எழுப்புகின்றன என்பது ஆராயப்பட்டுள்ளது.

சமூக, பொருளாதார மற்றும் சட்டப் பார்வைகள்

- தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாராத் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் பெண்களுக்கான பேறுகாலப் பயன்கள் (**Maternity Benefit Act**) குறித்த விரிவான சட்டப் பார்வைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.
- **1961** ஆம் ஆண்டின் வரதட்சணைத் தடைச் சட்டம் மற்றும் **1987** ஆம் ஆண்டின் சதி தடுப்புச் சட்டம் ஆகியவை இருந்தபோதிலும், ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்வது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முடிவுரை இந்தச் சிறப்பிதழ், இலக்கியங்களை வெறும் கற்பனைப் பிரதிகளாக மட்டும் சுருக்கிவிடாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், பெண்களின் சமத்துவத்திற்கான ஆயுதமாகவும், மனித உரிமைகளை நிலைநாட்டும் சமூக ஆவணமாகவும் முன்வைக்கிறது.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 1. மகாகவியின் சமத்துவக்குரல்

**முனைவர் ம. பிரேமா,**

தமிழாய்வுத் துறைத்தலைவர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02,

Mail ID : premasoosairaj@gmail.com, https://orcid.org/0009-0000-9337-114X

**ஆய்வுச்சுருக்கம்:**

மனித சமூகத்தின் அடிப்படை தார்மீக உரிமைகளைப் பறிப்பதும்> மனிதர்களை மனிதர்கள் அடிமைப்படுத்துவதும்> செல்வந்தர்கள் உழைப்பாளர்களின் உழைப்பினை உறிஞ்சிப் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வதும்> சகமனிதர்களை வெறுப்பு நிலையோடு நோக்குவதும்> உணவுரிமையை மறுப்பதும் மனித உரிமை மீறல்களாகும். இம்மீறல்கள் களையப்பட வேண்டும் என்ற நோக்கில்; மகாகவியின் கவிதைகளில் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவம் மறந்து மனித சமூகத்தால் உருவாக்கி கொள்ளப்பட்ட வருணாசிரமத்தினால் அடையும் எண்ணற்ற இன்னல்கள்> ஆண்டான் – அடிமை> ஏழை - பணக்காரன் என்ற பிரிவினையற்ற புதியதோர் உலகு காணும் இன்பம், ஒரு மனிதன் சமூக மதிப்பு பெறவும் வறுமையற்ற வாழ்க்கை வாழவும் துணை நிற்கும் கல்வி அனைவருக்கும் கிடைத்தல்> குலம்> இனம் என்ற வேறுபாடு களைந்து நாடாளும் மன்னன் முதல் சாமானிய மனிதன் வரை சம உரிமை என்ற அளவுகோலால் அளக்கப்படுதல்> ஆண்> பெண் சமத்துவப் புரட்சி நிலைநாட்டல் என்ற மக்களின் ரத்த நாளங்களை சுண்டி இழுக்கும் கருத்துக்களின் பொதிவுகள் காணக்கிடக்கின்றன.அவை அனைத்தும் உலகின் கவனத்தை தன் பக்கம் திருப்பும் வகையில் நெருப்பு பிழம்புகள் போல் கொழுந்துவிட்டு எரிந்து சமத்துவத்தை நிலை நிறுத்துகின்றன.

**முன்னுரை:**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்றக் கவிஞன் பாரதி.ஆங்கிலேயே ஏகாதி பத்தியத்தின் கீழ் இந்தியா அடிமைப்பட்டிருந்த காலத்தில் அனைவரையும் தட்டி எழுப்பிய முண்டாசுக் கவிஞன். சாதிய ஒடுக்குமுறைகளும், சமத்துவமற்ற பார்வைகளும், உழைக்கும் வர்க்கத்தின் நசுக்கப்பட்ட இழிநிலையும், அடிமைத்தனத்தின் முடைநாற்றத்தில் முடங்கி கிடந்த மக்களின் அவல நிலைகளையும், அனைத்திற்கும் அஞ்சும் மக்களின் பதுங்குகுழி வாழ்க்கையையும் கண்டு குமுறிய கவிஞனின் முறுக்கேறிய சிந்தனைகளில் வெடித்துக் கிளம்பிய புரட்சிக்கரமான சிந்தனைகள் வாசகர்களின் ரத்த நாளங்களை சுண்டி இழுக்கும் பெருவெளியாக இக்கட்டுரை விரிவடைகின்றது.

**கலைச்சொற்கள்:** பட்டாங்கு - நீதிநூல்கள்,வேதியர் - வேதங்களைக் கற்றறிந்தவர்கள், உதிரம் - இரத்தம், அகழி - கிடங்கு, கேளிர் - உறவினர.;


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**சாதிய எதிர்ப்பு**

உலக உயிர்கள் அனைத்தும் இறைவனின் படைப்பில் மலர்ந்தவை. அவ்வாறிருக்க மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வு எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை. வருணாசிரமம் என்பது மனித சமூகத்தால் உருவாக்கி கொள்ளப்பட்ட ஒன்று. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவம் யாருக்கும் விளங்கவில்லை அதனால் தான் பாரதி சுற்றி வளைக்காமல்

"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
நீதி நெறியனின்றி பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்
கீழவர் மற்றோர்" ( பாரதியார் - பாரததேசம் -13)

என்று நேரடியாக உலகிற்கு உரைத்தார.; ஆண், பெண் என்ற இரண்டு சாதிகள் மட்டுமே உண்டு. நன்னெறிகளைப் பின்பற்றி இன்னலில் இருப்பவருக்கு எதிர்பாராது உதவும் யாவரும் மேலவர,; பிறரெல்லாம் கீழோர் என்ற மனுதர்ம நெறியின் அடிப்படையில் சாதிய சமத்துவம் பாடியவர்.மனிதரை மனிதர் அடிமைப்படுத்தும் முறையை அறவே கடுமையாக எச்சரித்த **சூரியக்கவிஞன் பாரதி.**

வேற்றுமையில் ஒற்றுமைக் காணும் தனித்துவமிக்க பார்வைக் கொண்ட பாரதியின் எண்ணங்கள் ஏற்றமிக்கவை. மாந்தர் அனைவரும் ஓரினம் என்ற பொது நோக்குப் பார்வை அளவீட்டால்அளவிட்டுச் செல்கின்றார்.

"ஜாதி மதங்களைப் பாரோம்
வேதிய ராயினும் ஒன்றே அன்றி
வேறு குலத்தினராயினும் ஒன்றே" (;பாரதியார் - வந்தேமாதரம் -1)

என்ற பாடலே அதற்குச் சான்றாக அமைகின்றது.

இறைவன் படைத்த உலகில் சமுதாயத்தில் நிலவிய சாதி, மதம்,தீண்டாமை,பிறப்பில் உயர்வு தாழ்வுக்கு இடமில்லை. வருணப்பாகுபாட்டை சமத்துவப்பாட்டு என்னும் தலைப்பில் கண்டித்து

"பொய்மை வருணபேதம்
போனால் புனிதத்தன்மை
நம்மில் நாம் காண்போமடி – சகியே"
(பாரதிதாசன் சமத்துவப்பாட்டு 365 - 368)

என்று பாடுகின்றார்.

மனிதர்கள், மனிதர்கள் அல்லாத உயிரினங்கள் அனைத்திற்கும் உணர்வுகள் ஒன்று என்று

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

உளமறிய தான் உணர்ந்ததை வையத்து மாந்தர்களும் அறிந்து அனைத்து உயிர்களையும் நேசிக்க வேண்டும் என்ற மனிதத்தை விதைத்து வாழ்ந்து காட்டினார்.

“காக்கைக் குருவி எங்கள் ஜாதி”

நீPள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்”(பாரதியார் - 3)

என்னும் வரிகளில் சமூக நீதிக்காகப் போராடிய மானுடக் கவிஞனின் சாதி, மதம், இன வேறுபாடுகளைத் கடந்த மனிதப் பண்பு மட்டுமே மேலோங்கி நிற்கின்றது.

“மருந்துகள் கற்ற மருத்துவர் தமிழச்

சாதியால் நோய்க்கு தலையசைத் தேகினார்” (பாரதி - தமிழச்சாதி - 95)

என்றுரைக்குமிடத்து சாதியை நோய் என்றும், அறிவியல் அறிவுடன் நோய்க்கு மருந்துகள் கண்ட தமிழனிடத்து சாதிப் பிணி எப்படி வந்தது? என்று வெதும்புகின்றார். நல்வழியில் ஒழுகி வறியவர்க்கும், இயலாதோர்க்கும்,முதிர்ந்தோர்க்கும் ஈகை உள்ளத்தோடு உதவி செய்வோர் உயர் சாதியினர்.ஏனையோர் இழிந்த சாதியினர் என்று நீதி நூல்கள் குறிப்பிடுகின்றன. ஔவை

“சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்

நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தார்

புட்டாங்கில் உள்ளபடி” (ஔவை - நல்வழி - 2)

என்று நல்வழியில் உரைப்பது பாரதியின் உளப்பாங்கோடு பொருந்திச் செல்வதை உணர முடிகின்றது.

அரண்மனை அரச வாழ்க்கையைத் துறந்த புத்தர் வழிநடந்த களைப்பால் சோர்வுற்று வீழ்ந்த பொழுது இடையர் குலச்சிறுவன் தன்னை தாழ்ந்த குலத்தினன் என்று தன் கலயத்தில் கறந்த பாலைக் கொடுக்கத் தயங்குகின்றான்.புத்தர் சிறுவனிடம் பிறப்பினால் உயர்வு,தாழ்வு இல்லை என்பதை

“ஓடும் உதிரத்தில் வடிந்தொழுகும் கண்ணீரில்

தேடிப்பார்த்தாலும் சாதித் தெறிவதுண்டோ”

பிறப்பினால் எவர்க்கும் உலகில்

பெருமை வராது அப்பா

சிறப்பு வேண்டுமெனில் - நல்ல

செய்கை வேண்டும் அப்பா”

(கவிமணி - ஆசியஜோதி - புத்தரும் ஏழைச் சிறுவனும் -11.16)


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

என்று அறிவுறுத்துகின்றார்.சாதியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கவிஞர்களின் ஆன்மநேய விருப்பம் என்பது சாதி சாக்கடைகளுக்குச் சமாதிக் கட்டிவிட்டு, சாதிகளற்ற மனிதம் நிரம்பிய புதிய சமூகத்தைப் படைக்கவேண்டும் என்ற சமதர்ம கொள்கையை வெளிப்படுத்துகின்றது.

சமத்துவம் (பொதுவுடைமை முழக்கம்);:

இந்திய அரசமைப்பு பகுதி அடிப்படை உரிமைகளுக்கான பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகள் ஆறு தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.சமத்துவத்துக்கான உரிமை, சுதந்திரத்துக்கான உரிமை,சுரண்டப்படுவதற்கான எதிரான உரிமை, மத வழிபாட்டுக்கான உரிமை,மற்றும் கல்வி,பண்பாட்டு உரிமை என்று சுட்டப்படுகின்றது. (அரசியல் அறிவியல் - மேல்நிலை இரண்டாம் ஆண்டு நூல் - பக்கம் - 7) மனித சமுதாயத்திற்கு அடிப்படை தார்மீக உரிமைகள் உண்டு.ஆகையால் வளங்கள், வாய்ப்புகளின் பங்கீடு சமமாக வழங்கப்பட வேண்டும.; இதனை பாரதியார் பாரத சமுதாயத்தை வாழ்த்துமிடத்து குலம், இனம் என்று வேறுபாடு களைந்து நாடாளும் உரிமையை வழங்கி, ஒரே அளவுகோலால் உலகத்தேயே ஒன்றாக்கி சமத்துவம் கண்ட கவிஞன்.

“எல்லோரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் ஓர் நிறை
எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்” (பாரத சமுதாயம் பாடல் - 4)
“முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்” (பாரதநாடு - 5)
“நாமிருக்கும் நாடுநமது என்ப தறிந்தோம் - இது
நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம் - இந்த
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்” – (பாரதியார் - சுதந்திரப்பள்ளு - 5)

என்ற கவிதைகளின் முழக்கமே அவரை மகாகவியாக உயர்ந்திருக்கின்றது.

அரசியல் வகையின் அயல்மொழிப் பெயர்களாக சோசலிசம், காபிடலிசம், கம்யூனிசம், பாசிகம், நாசிசம், நியூடிலிசம் என்று பாரதிதாசன் சுட்டுமிடத்து எது பொதுவுடைமை என்பதை தன்னிடம் இருப்பதை ஏழ்மை நிலையில் இருப்போர்க்கு கொடுப்பதையும்,தன்னிடம் இருக்கும் பொருளைப் பெருக்கிக் கொள்வதையும், அனைத்தையும் அரசிடம் ஒப்படைத்துவிட்டு தேவைக்குப் பெற்றுக் கொள்வதையும், பொருள் உடையவனிடம் அபகரித்துக் கொள்வதையும்,ஒருவர்க்கும் பயன்படாது


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

வீணாக்குவதையும் இரண்டு கறவைகளை வைத்துக் காட்சிப்படுத்துகிறார்.இக்காட்சிகளின் தொகுப்பாக அமைந்த கவிதை கீழ்வருமாறு:

சோசலிசம்

“இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால்
அண்டை வீட்டானுக்கு ஒன்று அளித்தல் சோசலிசம்!

காபிடலிசம்

கறவைகள் இரண்டில் கடிதொன்றை விற்றுக்
காளை வாங்குவது காபிடலிசமாம்

கம்யூனிசம்

அவ்விரண்டினையும் ஆள்வார்க்கு விற்றுத்
தேவைக்குப் பால்பெறச் செப்பல் கம்யூனிசம்”

(பாவேந்தர் - அரசியல் வகையின் அயல்மொழிப் பெயர்கள்)

இராசகோபாலன் என்ற தன் பெயரை பாவேந்தர் பாரதிதாசன் மீதுக் கொண்டப் பற்றினால் சுப்புரத்தினதாசன் என்று மாற்றி அமைத்துக் கொண்ட உவமைக் கவிஞர் சுரதா பொதுவுடைமையை

“சூரியன் ஒளியும் மழையும் காற்றும்
தெய்வம் தந்த சோசலிசம் - நாட்டைச்
சுரண்டும் கூட்டந்தான் கேபிடலிசம்
ஏழை துடித்தெழுந்தால் வரும் சமரசம்”

(சுரதா - சோசலிசம் கேபிடலிசம் சமரசம் - பக்கம் 36;)

என்று கவிதை வடித்துள்ளார். இக்கவிதை சத்தியம் தவறாதே படப்பாடலில் இடம்பெற்றுள்ளது. சமூகத்தில் நிலவும் ஆண்டான் - அடிமை, ஏழை - பணக்காரன் என்ற பிரிவினையற்ற புதியதோர் உலகு காணப் புறப்பட்ட பாரதிதாசன், செல்வந்தர்களும் ஏழைகளும் ஒன்றாக முடியும் என்று கனவுக் கண்டு அதற்கு விடையும் கூறுகின்றார்.

“ஓடப்பராய் இருக்கும் எழையப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா நீ ”

(பாரதிதாசன் - உலகப்பன் பாட்டு 37- 40 முதல் தொகுதி)

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"(குறள் 1062)

இக்குறளில் இரந்து வாழவேண்டிய நிலைகளைக் கண்டு வெதும்பும் வள்ளுவரின் மனம்; தெரிகின்றது.

அரசன் முதல் ஆண்டி வரை உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்கிறது புறநானூறு.அதனால் மனிதர்கள் குறுகிய மனப்பான்மையில் இருந்து விடுபட்டு உலகை நேசிக்க வேண்டும் என்பதற்காக

"உலகம் உண்ண உண்
உடுத்த உடுப்பாய்" (பாரதிதாசன் - உலகம் உன்னுடையது)

என்று அறைகூவல் விடுக்கும் பாரதிதாதசனின் உலகளாவியப் பார்வையில் கணியன் பூங்குன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளிர் உணர்வு மேலிட்டு நிற்கின்றது.

புhல்வேறுபாட்டின் அடிப்படையில் உயர்வு,தாழ்வு இருத்தலாகாது. இருவரின் திறமைகளையும் மதிப்பீடு செய்யும் பொழுது நடுவுநிலைமையோடு இருத்தல் வேண்டும்;. அக்காலமே பாலின சமத்துவத்தின் பொதுநிலையாக அமையும்.பெண்களை இழிவுப்படுத்தும் பழங்கால நடைமுறைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கருதிய பாரதி பெண் விடுதலை,பெண் சமத்துவத்தில் ஆழமானப் பார்வைக் கொண்டிருந்ததை

"மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
…ஆண்களோடும் பெண்களோடும்
சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்நாட்டிலே" (பாரதியார் - விடுதலை பாடல் - 3)
'தையலை உயர்வு செய்'(பாரதி)

என்ற வரிகளே மெய்ப்பிக்கின்றன.

கல்வி உரிமை

ஏழைகள் என்றால் கல்வி கற்கக் கூடாது என்று சொல்ல உரிமை இல்லை. ஆயிரம் கோடி புண்ணியங்கள் செய்வதை விடச் சிறந்தது ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல் என்பதிலிருந்து கடைக் கோடி மக்கள் வரை கல்வி சென்று சேர வேண்டும் என்ற எண்ணிய பாரதியார் திண்ணிய மனம் தென்படுகின்றது.அது மட்டுமல்ல 'கல்வி சாலைகள் வைப்போம்' (பாரதி) என்கிறான். கல்விச் சாலைகளில் பயணித்தவன் தான் உயர்வதோடு அல்லாமல் சமுதாயத்தையும் உயர்த்துவான். எனவே கல்விச்சாலைகள் வைப்போம் என்ற கோரிக்கையை முன் வைக்கிறார். வேரில் பழுத்த பலாவின் சுவையென இனிக்கும் கல்வியைக் காப்பது தவம் என திரு.வி.க குறிப்பிடுவது


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

உண்மையினும் உண்மை. ஒரு மனிதன் சமூக மதிப்பு பெறவும,; வறுமையற்ற வாழ்க்கை வாழவும் துணை நிற்பது கல்வி. அதனால் தான் வள்ளுவர் கல்வியை 'கேடில் விழுச்செல்வம்' என்கிறார்..

சுதேசமித்ரன் இதழில் வெளியானக் கட்டுரையில் 1920 மே மாதம் 13,18, 20,21,28 என்ற தேதிகளில் வெளியானக் கட்டுரையின் தொடக்கத்தில்"உங்களுடைய கிராமத்தில் ஒரு பாடசாலை ஏற்படுத்துங்கள்.அல்லது பெரிய கிராமமாக இருந்தால் இரண்டு,மூன்று வீதிகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதமாக எத்தனை பள்ளிக்கூடங்கள் சாத்யமோ அத்தனை ஸ்தாபனம் செய்யுங்கள்" என்று ஆணையிடுகின்றார்.சமூகத்தில் சம உரிமை அளிக்கும் தேவை என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் பாரதியின் எழுச்சிமிகு சிந்தனையை வணங்குவோம்.

'வாழி கல்வி செல்வம் ஏந்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒரு மிக சமானமாக வாழ்வமே'
( விடுதலை பாடல் -2 பாரதியார்)

விவிலியமும்

"இறைபொருளுக்கும் அழிவில்லை
எழுத்துக்கும் அறிவில்லை" (யோவான் 1:1)

என்று கூறுவதிலிருந்து எழுத்தே இறைவன் என்பது தெளிவாகின்றது இதைத்தான் சூக்கும வாக்கு என்கிறது சைவசித்தாந்தம.; இந்த வாக்கே எழுத்து.

**உணவுரிமை:**

அக்டோபர் 16 உலக உணவு நாள். உணவுரிமை ஒரு அடிப்படை உரிமையாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.பல நாடுகள் தங்கள் அரசியலமைப்பில் உணவுரிமையை இணைத்துள்ளன.ஏனெனில் மனித இனம் ஆரோக்கியமான,கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கான அடிப்படை உரிமையாகும்.உணவுக்கான உரிமையும்,அரசின் கடமையும்,குடிமக்களின் சமூகப் பொறுப்பும் உணவு பாதுகாப்பில் முக்கயத்துவம் பெறுகின்றன.1940 களில் உணவு உற்பத்தி மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. 1960 களில் பசுமைப்புரட்சி வந்த பின்பும் உணவு உற்பத்தி பெருகிய அளவுக்கு மக்களின் வாங்கும் சக்தி உயரவில்லை. சுதந்திரத்திற்கும் முன்பும்,பின்பும் உணவுப் பாதுகாப்பு என்பது ஒரு சவாலாகத் தான் ஈரந்து வந்துள்ளது. அதனால் தான் பாரதியார்

"இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக்கு உணவில்லையெனில்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

சகத்தினை அழித்திடுவோம்” (பாரத சமுதாயம் - பாடல் - 2)

என்கிறார்.ஐநா அமைப்பின் முன்னாள் பொது இயக்குநர் ஜாகுஸ் டையோப்

“பசி என்பது ஒரு தர்ம பிரச்சினை அல்ல,இது ஒரு நீதிக்கான பிரச்சினை என்று பார்க்க வேண்டும்.மனித சமூகத்தின் மேன்மையை பசியில்லா நிலையை உருவாக்குதன் மூலம் அடைய முடியும் என்கிறார்.”

பசி என்ற நோய்க்கு மருந்தாக உணவு அமைவதையே“உணவே மருந்து மருந்தே உணவு” என்ற உணவுப் பழமொழிச் சுட்டுகின்றது.

உணவுப் பஞ்சத்தில்

மக்கள்

உணவுக் குளியலில்

தெய்வங்கள் “ (உணவுக் குளியல் - முயசவாள )

இன்றும் வறுமை என்பதை வெறுமையுறச் செய்யும் சமூகத்தை உருவாக்க இயலவில்லை என்னும் போக்கே தேசத்தின் நிலையாக இருப்பது துயரத்திற்குரியது.

**நிறைவுரை:**

பகுத்தறிவு நிரம்பிய மனிதன் தன்னோடு வாழும் சக மனிதர்களை அடிமைப்படுத்துதல் அநாகரிகம்.பாரதியார் இச்செயல் சமூகத்தில் நிலவுவதைக் கண்டு கொதித்தெழுகின்றார். அவரது தேசிய கீதங்கள் ஒவ்வொன்றும் நெருப்பு பிழம்புகள் போல் கொழுந்துவிட்டு எரிந்து சமத்துவத்தை நிலை நிறுத்துகின்றன.கல்வி உரிமை, சொத்துரிமை,சாதிகளற்ற சமத்துவ சமுதாயம்,மனிதனை மனிதனாகப் பார்க்கும் அன்பு பார்வை என்ற மாற்றங்களை உருவாக்க முனையும் தீர்க்கமான எண்ணங்களை விவரித்து கட்டுரை நிறைவுறுகின்றது..


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
*DOI: https://doi.org/10.63300/tm11012025.01*
www.tamilmanam.in

# 2. புறநானூற்றில் பெண்ணுரிமை

**முனைவர் ஆ.தேவதா,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி - 2.

Email: thevathaa@gmail.com, ORCID: https://orcid.org/009-000-5361-4848

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் சமுதாயத்தின் வெளிப்பாடாகும். சமுதாய நிகழ்வுகள், பழக்கவழக்கங்கள் போன்றவை இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இலக்கியங்கள் தாம் தோன்றிய காலத்தைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. மனித குல வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கும் மனித மாண்புகளை உருவாக்கும் ஆளுமைச் சிந்தனைகளை இலக்கியங்கள் தன்னுள் கொண்டு விளங்குகிறது. சங்க இலக்கியங்கள் அக, புற வாழ்க்கையை எக்காலமும் கொண்டாடும் வகையில் பதிவு செய்து வைத்திருப்பதால் அன்றைய காலத்தை ஒரு பொற்காலமாகக் கொள்கிறோம். அதில் முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பவர்கள் பெண்களே. அறம், மறம், காதல், இன்பம், இயற்கை என எல்லாவற்றோடும் இணைந்து வாழ்ந்த பெண்கள் தனித்திறன் பெற்றவர்களாக விளங்கியதால் சங்க இலக்கியங்களின் ஆணி வேர்களாக மாறினர். தோழி, தலைவி, நற்றாய், செவிலித்தாய் எனப் பல நிலைகளிலும் பெண்களின் சமூகப் பங்களிப்பு அளப்பரியதாக உள்ளது. சங்கப்பாக்கள் பெண்களை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டிருத்தல் மட்டுமல்ல சிறப்பு. பெண்களே பாக்களை இயற்றியமைதான் பெரும் சிறப்பு. பெண்கள் இல்லற வாழ்க்கை மேம்பாட்டில் மட்டுமல்ல. ஆண்களுக்கு இணையான வீரத்திலும் மேம்பட்டிருத்தலோடு சீரிய நோக்குடன் திகழ்ந்தமை அவர்களின் ஆளுமைக்குத் தனிச்சான்றாகத் திகழ்கிறது.

**முன்னுரை**

மனித சமூகம் மேன்மையுற வாழ்வதற்கென்றே அமைந்தவை இலக்கியங்கள். மனித வாழ்விலிருந்து தோன்றினாலும் மனிதனைப் பட்டை தீட்டி செம்மையாக வாழ வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன. தமிழ் இலக்கியங்களின் மணிமகுடம் சங்க இலக்கியங்கள். இலக்கியம் வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்றால் சங்க இலக்கியங்கள் வளர்ந்து சிறந்த ஒரு தமிழ்ச் சமூகத்தின் பிரதிபலிப்பாக விளங்குகிறது. மனிதன் தன் வாழ்நாளின் ஒவ்வொரு கட்டங்களிலும் பின்பற்றி நடக்க வேண்டிய கூறுகளை, தலைமைப் பண்புகளை எடுத்துக் கூறுவதோடு, சாதி, மத, வேறுபாடுகளைக் கடந்து மனிதன் மனிதனாக வாழவும், மனிதன் சக மனிதனை மதிக்கவும், மனித குலத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் நம்பிக்கையைத் தருவதிலும் இலக்கியங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. சங்க இலக்கியங்களில் வீரத்தின் விளைநிலமாகக் கருதப்படுவது புறநானூறு.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

தமிழர் வரலாற்றுக் களஞ்சியமாக, பழந்தமிழ் வேந்தர்கள், குறுநில மன்னர்களின் வரலாற்றை அறிவிக்கும் ஆவணமாக நாம் இதைக் கருதலாம். மன்னர் புலவர் உறவு, மக்கள் மன்னர் உறவு, புலவர் புலவர் உறவு, யாவும் இந்நூலால் அறியத்தக்கன. பாரி கபிலர் நட்பு, அதியன் ஔவை நட்பு, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு என்று உலகம் அறியத்தக்க பற்பல அரும்பொருட்செய்திகளும் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றிய பல உண்மைகளுமாக இந்நூலில் விரவிக் கிடக்கும் சமுதாயச் செய்திகள் கணக்கற்றவையாகும். 'புறநானூறு' தமிழர்க்குக் கிடைத்த பெருங்கருவூலம் எனில் மிகையாகாது. இத்தகைய சிறப்புக்குரிய காதலும் போரும் வீரமும் கூறும் புறநானூற்றில் பெண்ணுரிமை குறித்து அறிவதே கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணின் குணங்களும் மனித உரிமையும்**

பெண்ணுக்குரிய இலக்கணமாக, பெண்ணின் இயல்புகளாகத் தொல்காப்பியர் தம் களவியலில்

“அச்சமும் நாணும் மடனும்
பெண்பாற்குரிய”1 என்பார்.

பெண்ணின் பண்புநலன்களைப் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் பல இடங்களில் பதிவுசெய்துள்ளார்.

“செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான” 2

கற்பு பெண்ணின் சிறந்த கவசம் என்பதை உணர்ந்த தொல்காப்பியர்,

“உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சி கற்பு சிறந்தன்று” 3

என்று குறிப்பிடுகிறார்.

“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்” 4

என்று பாரதியாரும்,

“கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்”; 5

கட்டாயம் பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்று பாரதிதாசனும்,

“மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” 6

என்று கவிமணியும் பெண்ணின் குணங்களைப் பலவாறு பகுத்தறிந்து கூறியுள்ளனர்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

உரிமை என்பது நம்மைச் சுதந்திரமாக வாழ்விக்கும் ஓர் அடையாளம். பிறரால் அல்லது பிறிதொன்றினால் ஓர் உயிரினுடைய வாழ்வியல் சூழலுக்கும் பண்பாட்டுப் பின்புலத்திற்கும் எவ்விதத்திலும் இடர் ஏற்படாது அல்லது ஏற்படுத்தாது வாழ்ந்திடத் திடப்படுத்தும் ஓர் உணர்வுத் தளமே உரிமையாகும். மனிதன் பிறக்கும் பொழுது முழு சுதந்திரம் உள்ளவனாகத்தான் பிறக்கிறான். ஆனால் வளர்ந்து வரும் பின்னைய நாள்களில் அரசியல் நெருக்கடி, சமுதாயப் பண்பாட்டுச் சூழல் மீது ஏற்படும் தாக்குதல் இவைகளால் தனது சுதந்திரமான உரிமைகளைப் பறிகொடுக்கிறான். இவ்விழப்பு அவனுடைய வாழ்வியல் பின்புலத்தையும் அழிக்கத் தொடங்குகிறது. பொதுவாக இலக்கியங்கள் மனித மனங்களை அமைதிப்படுத்தும் பணியில் அதிகமாகவே கட்டுப்பாடுகளையும் விதிகளையும் விதைக்கின்றன. வீரத்தையும், கொடைத்தன்மையும் பற்றிப் பேசும் புறநானூற்றில் பெண்ணுக்கென்று சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருப்பதை மறக்குடிப் பெண்களின் வாழ்வியல் பின்புலத்தால் அறியலாம்.

**1. பகிர்ந்து கொடுக்கும் உரிமை**

குமண வள்ளலிடம் பெரும் செல்வம் பெற்று வந்த பெருஞ்சித்திரனார், தன் மனைவியிடம் பொருளை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழுமாறு கூறுகிறார்.

“நின்நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்
பல்மாண் கற்பின் நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் பசிதீர யாழநின்
நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கும் என்னாது என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே” (புறம் : 163)

என்னும் புறப்பாடல் தரும் செய்தி மனித நேயத்தின் அடிப்படையாயினும் தலைவன் கொண்டு வந்த செல்வத்தை மனைவியிடம் கொடுத்து எல்லோருக்கும் வாரி வழங்கச் சொல்வது அவளின் நிர்வாகத்தின் மேலிருந்த நம்பிக்கை மற்றும் பெண் உரிமையாகும். தன்னிடம் உள்ளதை யார், எவர் என்று பார்க்காமல் பகிர்ந்து கொடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர் சங்ககாலப் பெண்கள்.

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றில் எல்லாம் தலை” 7

கிடைத்ததைப் பகிர்ந்து கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறமாகும். இக்குறள் மேற்கூறிய பெருஞ்சித்திரனார் பாடலோடு ஒப்புநோக்கத் தக்கதாய் அமைந்துள்ளது.

**2. கொடை அளிக்கும் உரிமை**

அரசனும் சாதாரண குடிமக்களும் கொடை வழங்குதலை தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாகக் கொண்டனர். ஆண்மகன் மட்டுமின்றி பெண்களும் தாங்கள் விரும்பிய வண்ணம் இரவலர்க்குக் கொடுக்கும் உரிமை உடையவர்களாகவே விளங்கினர்.

‘பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப
விண்தோய் சிமைய விறல்வரைக் கவாஅற்
கிழவன் சேட்புலம் படரின் இழை அணிந்து
புன்தலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்’ (புறம் - 151)

மேற்கண்ட பாடலடிகள் மூலம் பெண்கள் சாதாரணக் கொடையை வழங்கவில்லை. யானைகளைப் பரிசளித்தனர் எனும் சிந்தனை நம்மை வியக்க வைக்கிறது.

பன்நெடுங்காலமாகவே பாடி வருபவர்கள் மகிழ விண்ணைத் தொடும் உயர்ந்த சிகரங்கள் உடைய மலைப்பக்கம் வெகுதூரம் தன் கணவன் சென்று விட நேர்ந்தால் தலைவி ஆபரணங்களை அணிந்து சிறிய தலை உடைய இளம்பிடியைப் பரிசாகக் கொடுக்கும் உரிமை பெற்றிருந்தனர்.

**3. விருந்தோம்பல் செய்யும் உரிமை**

சங்கப் பெண்கள் இல்லற நிர்வாகத்தில் மேம்பட்டவர்களாகத் திகழ்ந்தனர். குடும்ப உறுப்பினர்களை மட்டுமின்றி சுற்றத்தையும் காக்கும் தன்மை பெண்களிடம் இருந்திருக்கிறது. விருந்தோம்பல் பண்பினை எல்லா பெண்களும் உயிரினும் மேலானதாக மதித்துப் போற்றியிருந்தனர். சங்க இலக்கியப் பாடல்கள் வழி விருந்தோம்பல் பண்பாட்டை நோக்குமிடத்து பெண்களின் உயிர் பாதுகாக்கும் தாய்மைச் சிந்தனை புலனாகிறது.

விதைக்கு என வைத்திருக்கும் தினையைக் கூட விருந்தினருக்குக் கொடுத்து உபசரித்து மகிழும் பாங்கினை,

“வரகும் தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்
குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்
குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து”

(புறம் 333:9-12)


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

என்ற அடிகள் வெளிப்படுத்துகிறது. அதாவது, வரகு தினை முதலிய உணவுப்பொருட்கள் இரவலர்களுக்கு வழங்கப்பட்டதால் தீர்ந்து விட்ட காரணத்தால் விதைப்பதற்காக வைத்திருந்த விதைத் தானியங்களை உரலில் இட்டு இடித்து உணவு செய்து கொடுக்கிறாள் இல்லத் தலைவி. இத்தகைய இல்லறச் சிறப்பை மேற்கொண்ட சங்கப் பெண்களே விருந்தோம்பல் என்னும் பண்பாட்டை உருவாக்கியவர்கள்.

இதனை ஒத்த கருத்து இளையான்குடி மாறநாயனார் புராணத்தில் காணலாம். மாறநாயனார் வீட்டில் வறுமை மிகக் கொடிதாக இருந்த சமயத்தில் இறைவன் சிவனடியார் அவர் இல்லத்திற்கு வர, வயலில் விதைத்த நெல்லை அரித்துக் கொண்டு வந்து உணவு சமைத்து விருந்தோம்பல் செய்தார். இதில் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த மாறநாயனாரும் இருப்பதை வைத்து விருந்து படைத்த அவரது மனைவியின் திறமையையும் அறியலாம்.

“செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர் முறை வாரிக் கொடு வந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று
அல்லது ஒன்று அறியேன் என்று ஆயர்வுற” 8

(இளையான்குடி மாறநாயனார் புராணம்-13)

**4. போரை நிறுத்தும் உரிமை**

போரில் அமைதி ஏற்பட அதியமானுக்காக நாடு விட்டு நாடு தூது சென்றார் ஔவையார்.

“அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றிய மையாத மூன்று” 9 (குறள் - 682)

என்னும் குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர் ஔவையார்.

அதியமானுக்கும் - தொண்டைமானுக்கும் நிகழவிருந்த போரைத் தடுக்கத் தொண்டைமானிடம் தூது வந்த ஔவை தொண்டைமானின் படைக்கருவிகளைப் பார்த்து, இவை புத்தம் புதிதாகப் போற்றிப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதியனின் படைக்கருவிகளோ ஓயாது போரில் ஈடுபட்டு நுனிமழுங்கியும், கூர் முறிந்தும் கிடக்கின்றது என்று கூறுவதன் மூலம் அதியமானின் போராற்றல் வெளிப்படுகிறது.

“இவ்வே பீலிஅணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியன்நக ரவ்வே” (புறம் - 95)

என்ற வரிகள் தொண்டைமானின் படைக்கருவிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

எடுத்துக்காட்டுகின்றன.

ஔவையின் அறிவாற்றலும் அரசியல் நுணுக்கமும் தெளிவாகப் புலப்படுகிறது. சங்க காலத்தில் பெண்கள்; போரை நிறுத்தும் உரிமை பெற்றிருந்ததை இதனால் அறிய முடிகின்றது.

**5. போருக்குத் தன் குடும்பத்தாரை அனுப்பும் உரிமை**

மறக்குடி மகளிர் தங்கள் வீட்டு ஆடவர்களைப் போருக்குத் துணிவுடன் அனுப்பினர். போர்க்களத்தில் வீரம் காட்டிப் போர் புரிவதை அறிந்து மகிழ்ந்தனர். விழுப்புண் ஏற்பட்டால் அதைப் பெருமையாகக் கருதினர். கணவன் போருக்குச் செல்லும்போது அவனுக்கு மாலை அணிவித்து வெற்றியுடன் திரும்பி வருமாறு வாழ்த்தி அனுப்பும் வீரம் மிகுந்த பெண் புறநானூற்றில் காட்டப்படுகிறாள்.

“கொடுங்குழை மகளிர் கோதை சூட்டி” (புறம்--304) போருக்கு ஆடவர்களை அனுப்பும் பெண்களின் வீர உணர்வை இங்கு காணலாம்.

தன் மகனாகிய வீரனைப் பெற்ற தாய் மிக்கப் பெருமையுடனும் இறுமாப்புடனும் கூறுகிறாள். இவ்வயிறு சாதாரணமானதன்று,

“புலி சேர்ந்து போகிய கல் அளைபோல
ஈன்ற வயிறோ இதுவே” (புறம்-86)

என்னும் புறப்பாடலில் புலி இருந்து பின் பெயர்ந்து சென்ற கற்குகை போன்றது. ஈன்ற இந்த வயிறு. அதுபோன்று வீரம் விளைவிக்கும் ஆற்றலை உடையவன் தன் மகன் எனப் பெருமிதத்தாhல் தாய் கூறுவதை விளக்குகிறது.

“இன்னும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துஉடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே’
(புறம்-279)

என்னும் பாடல் வரிகள் வீரமிக்க மறப்பெண்ணின் மாண்புகளை எடுத்துரைக்கிறது. முதல் நாள் நடந்த போரில் இவளுடைய தந்தை யானைமேல் வீசிக்கொன்று தானும் வீழ்ந்தான். நேற்று நடந்த போரில் இவள் கணவன், பகைவர் கவர்ந்த பசுக்கூட்டங்களை மீட்டு, அவர்கள் மீண்டும் அவற்றைக் கவர வராமல் காத்துத் தடையாக நின்று போரிட்ட போது மடிந்து விட்டான் என்றாலும் போர் முடியவில்லை. போர்ப்பறை இன்னும் கேட்கிறது. தனது ஒரே மகனை சின்னஞ் சிறு

பாலகனை அழைத்தாள். அவனுக்கு வெள்ளைத்துணி உடுத்தி அவனது பரட்;டைத்தலைக்கு எண்ணெய் தடவிச் சீவிக் குடுமி முடித்து அவனைப் போர்க்களம் நோக்கி அனுப்பி வைத்தாள். குடும்பத்தில் இருவர் இறந்தும் மூன்றாம் நபராகிய தன் மகனைப் போருக்கு அனுப்பும் வீரத்தாயின் செயல்கள் போற்றுதற்குரியதாகும். எத்தகைய துணிச்சலும், அறிவாற்றலும் இந்த வீரத்தாய்க்கு இருந்திருக்கும். குடும்பத்தில் உள்ள ஆண்களைப் போருக்கு அனுப்பும் உரிமை சங்ககால மகளிர் பெற்றிருந்ததை இதனால் உணர முடிகிறது.

பெருஞ்சேரலாதனுக்கும் வளவனுக்கும் இடையே நடைபெற்ற போரில் வளவன் எய்த அம்பு சேரனின் மார்பு வழி முதுகை அடைந்து முதுகில் புண்பட்டது. சேரன் நாணமுற்று வடக்கிருந்தான். வளவன் வெற்றியடைந்ததைக் கொண்டாட, அதனை வெண்ணிக்குயத்தியார் என்னும் பெண்பாற்புலவர்.

"நின் ஆற்றல் தோன்ற வென்றோய்
நன்னினும் நல்லன் அன்றே
மிகப் புகழ் உலகம் எய்தி
புறப்புண் காணி, வடக்கிருந்தோனே?' (புறம் - 66)

சேரலாதன் புறப்புண்ணிற்கு நாணி வடக்கிருந்தமையால் கரிகால் வளவனாகிய உன்னைவிட நல்லவன் எனப்பாடும் துணிச்சல் மனித உரிமையின் மிக உயரிய பாங்காய் பார்க்கப்படுகிறது.

போர்க்களத்தில் தன் மகன் புறங்கொடுத்து ஓடினான் என்று பிறர் கூறக்கேட்ட தாயின் அரிய செயலைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் வரிகள் ஆவணப்படுத்துகின்றன.

"படை அழிந்து மாறினன் என்று பலர்கூற
மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின்.
உண்ட என்முலை அறுத்திடுவேன்' (புறம் 278)

முதுமையடைந்த தாயானவள் தன் மகன் போர்க்களத்தில் புறங்கொடுத்து ஓடினான் என்று பிறர் சொல்வதைக் கேட்டு போர்க்களம் செல்வதற்கு முன்பே அவ்வாறு அவன் உண்மையாகவே புறங்;கொடுத்து ஓடினான் என்றால் பாலுண்டு வளர்வதற்குக் காரணமாகிய என் முலைகளை அறுத்திடுவேன் என்று கோபமாக வாளைக் கையில் எடுத்துக் கொண்டு போர்க்களத்திற்குச் சென்றாள். அவ்வாறு சென்றவுடன் அங்கு வீழ்ந்து கிடக்கும் பிணங்களில் தன் மகனின் உடலைத் தேடிப் பார்த்தாள். போர்க்களத்தில் இரண்டு துண்டுகளாகிக் கிடக்கும் மகனின் உடலைப் பார்த்தவுடன் அத்தாயானவள் அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விடவும் மிகவும் மகிழ்ச்சி அடைகிறாள். ஆழ்ந்த சிந்தனை, நிறைந்த பட்டறிவு, உயர்ந்த நோக்கு இவை எல்லாம்

சங்கப்பெண்களிடையே சிறப்புற்றிருந்ததைக் காணலாம். வீரத்தையே வாழ்வின் உயர்ந்த நெறியாகக் கருதும் சங்கத் தமிழரின் மனப்பாங்கு இதனால் ;வெளிப்படுகிறது.

**முடிவுரை**

சங்ககாலப் பெண்கள் எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர். சிந்தனைத் தெளிவு, நுண்ணறியும் நோக்கு கலைஞானம் புலமைத்திறன் கொண்டு விளங்கினர். சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு இருப்பதற்கு அவர்களது வீரமும் துணிச்சலுமே அடிப்படைக் காரணமாக இருப்பதைக் காண முடிகிறது. குடும்பத்தையும், சமூகத்தையும் வழிநடத்தும் அறிவாற்றல் பெற்றிருந்தனர். சங்ககாலப் பெண்கள் பல்வேறு பரிமாணங்கள் பெற்றுத் திகழ்வது சிறப்பிற்குரியது.

சான்றெண் விளக்கம்.

1. தொல்காப்பியம் பொருதிகாரம் களவியல் நூ.எ. 96
2. மேலது நூ.எ. 206
3. மேலது நூ.எ. 23
4. பாரதியார் கவிதைகள்.
5. பாரதிதாசன் கவிதைகள்
6. கவிமணி பாடல்கள்
7. திருக்குறள் கு.எண். 322
8. இளையான்குடி மாறநாயனார் புராணம் பா.எண். 13
9. திருக்குறள் கு.எ. 682


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

# 3. பாரதியார் கவிதைகளில் மனித உரிமைகள்

**3.முனைவர் தா.லதா,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620 002.

**ஆய்வுச் சுருக்கம்:**

மனிதர்கள் சுதந்திரமாக நலமாக வாழ அவசியமான உரிமைகள் தேவைப்படுகின்றன. இவற்றை மனித உரிமைகள் எனலாம். வாழும் உரிமை சுதந்திர உரிமை பண்பாட்டு உரிமை கல்வி உரிமை என்பன முக்கியமானவை. இருபதாம் நூற்றாண்டு முழுவதும் பல குழுக்களும் இலக்கங்களும் மனித உரிமை என்ற ஒன்றை சிந்தித்து பல வகையான சமூக மாற்றங்களை கொண்டு வந்தன. அந்த நோக்கில் பாரதியின் பாடல்கள் மனித உரிமைகளை சிந்திப்பதை இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை:**

மகாகவி தேசிய கவி என்று சிறப்பாக அழைக்கப்படக்கூடிய மாபெரும் கவிஞர் பாரதியார். எட்டயபுரத்தில் பிறந்த இவரின் இயற்பெயர் சுப்பையா. என்கிற சுப்பிரமணியம் தனது கவிதைகளால் விடுதலை உணர்வை மக்களுக்கு ஊட்டியவர். தமிழ் ஆசிரியர் பத்திரிக்கையாளர் சமூக சீர்திருத்தவாதி கவிஞர் என்ற பன்முக ஆளுமைகளை கொண்டவர்.

சுதேசமித்திரன் சக்கரவர்த்தினி இந்தியா. சூரிய உதயம் போன்ற இதழ்களில் பணியாற்றி தம் எழுத்துக்களின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

**திறவுச் சொற்கள்:**

**1. பான்மை- இயல்பு- Nature**

**2.மதுரம் -இனிமை- Sweetness**

**3.தரணி -உலகம்- World**

**4.இச்சகம் -இந்த பூமி.**

**1. மொழியுரிமை:**

தேன் போல இனிய தமிழ் மொழியின் முழக்கம் உலகம் முழுவதும் நிரம்பும் படியான வழிவகைகளை நாம் ஏற்படுத்த வேண்டும் என்பதை,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
**இனிதாவ தெங்கும் காணோம்**
**பாமரராய், விலங்குகளாய் , உலகனைத்தும்**
**இகழ்ச்சி சொல்லப் பான்மை கெட்டு**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**நாமமது தமிழரெனக் கொண்டிங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்**

**(பாரதியார் கவிதைகள்ப.88)**

நான் கற்றறிந்த மொழிகளில் தமிழ் மொழியை ஒத்த சொற்சுவை பொருச்சுவைகள் நிரம்பிய மொழியை எவ்விடத்திலும் பார்த்தறியேன். அப்படிப்பட்ட தமிழை தாய் மொழியாக கொண்ட நாம் படிப்பறிவில்லாதவர்களால் மிருகங்களைப் போன்றவர்களாய் இப்பூமியில் காலம் தள்ளிக் கொண்டிருப்பது சரியாகுமோ? என வினவுகிறார்.

மொழியுரிமை சிந்தனைக்கு சிறந்த உதாரணமாக இப்பாடல் அமைந்துள்ளது.

இக்கருத்தினையே பாரதிதாசனும்,

**' தமிழுக்கு அமுதென்று பேர்**
**தமிழெங்கள் உயிருக்கு நேர்'**

**(பாரதிதாசன் கவிதைகள்)**

என்று பாடுவதால் மொழியுரிமை என்பது தமிழை உயரிய மொழியாக போற்றுவதிலும் அதன் இனிமையையும் சிறப்பையும் வலியுறுத்துவதிலும் வெளிப்படுகிறது.

**2. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை உணர்வு:**

தமிழ்நாட்டில் இந்திய விடுதலை உணர்வை விதைத்து வளர்த்த பெருமைக்குரியவர் நம் பாரதி அடிமைத்தனத்தை எதிர்த்து ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்த விழையும் பொழுது,

**" எங்கும் சுதந்திரம் மென்பதே பேச்சு -நாம்**
**எல்லோரும் சமமென்ப துறுதியாச்சு**
**சங்கு கொண் டேவெற்றி ஊதுவோமே -**
**தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே"**

**( பாரதியார் கவிதைகள்ப114)**

**இதைத்**

அந்நியர்களிடம் அடிமைகளாக இருப்பதை கண்டு மனம் நொந்து,
என்று தணியுமிந்த சுதந்திர தாகம்?
**என்(று) மடியுமெங்கள் அடிமையின் மோகம்?**
**என்றெம(து) அன்னைகை விலங்குகள் போகும்?**
**என்றெம(து) இன்னல்கள் தீர்ந்து பொய் யாகும்?**

**( பாரதியார் கவிதைகள்ப107)**

எங்கள் விடுதலை வேட்கை இன்றைய தினம் தீரும்? எங்களிடம் உள்ள அடிமைச் செயவக பற்று இன்றைய தினம் தொலையும்? எங்கள் பாரத மாதாவின் கரங்களை பிணித்துள்ள அடிமை தலைகள் என்றைய தினம் அறுபடும்? எங்கள் துன்ப துயரங்கள் என்றே தினம் முடிவு பெரும் என கேள்வி கணையை எழுப்பும் இவர் விடுதலை அடைந்து விட்டதாக கனவு கண்டு.

3.**தனிமனித சுதந்திரம் உரிமை:**

எந்த ஒரு மனிதனும் யாருக்கும் அடங்கி பயந்து வாழ கூடாது தேவையில்லாத அச்சத்தை ஒழித்திட வேண்டும் என்பதை.

**"அச்சமில்லை அச்ச மில்லை**
**அச்ச மென்ப தில்லையே**
**இச்ச கத்து ளோரெல்**
**லாம்எ திர்த்து நின்ற போதிலும்**
**அச்ச மில்லை அச்ச மில்லை**
**அச்ச மென்ப தில்லையே"**

**( பார. கவி ப390)**

பயமில்லை பயம் என்ற உணர்வு கொஞ்சம் கூட இல்லை இந்த பூமியில் உள்ளவர்கள் எல்லாம் எனக்கு எதிராக அணிதிரண்டு நின்ற போதிலும் அச்சம் என்பது அணுவளவும் இல்லை என முழக்கமிடுகிறார்.

கல்வி உரிமை:

மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகிறான் இதனையே வள்ளுவர்,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்முகத்து இரண்டு
புண்ணு டையார் கல்லாதவர்"

**( திருக்குறள்393)**

கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கையை முழுமை அடைய செய்து ஒழுக்கத்தையும் ஞானத்தையும் அளிக்கிறது. பாரதியார் கல்வியை மனிதர்களை விடுதலை செய்யும் ஒரு கருவியாக பார்க்கிறார்,

**"பறைய ருக்கும் இங்கு தீயர்**
**புலைய ருக்கும் விடுதலை!**
**பரவ ரோடு குறவ ருக்கும்**
**மறவ ருக்கும் விடுதலை!**
**திறமை கொண்ட தீமை யற்ற**
**தொழில் புரிந்து யாவரும்**
**தேர்ந்த கல்வி ஞானம் மெய்தி**
**வாழ்வ மிந்த நாட்டிலே"**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**( பா. கவிப112)**

இந்த தேசத்தில் உள்ள பறை சாதியினருக்கும் தீவினையாளர்களாக கருதப்படுகின்ற சண்டாளர்களுக்கும் சுதந்திரம் கிடைத்துவிட்டது மீனவர்களுக்கும் மலை சாதியினருக்கும் மரச்சாதனருக்கும் சுதந்திரம் கிடைத்துவிட்டது ஆற்றல் மிக்க கெடுதல் இல்லாத வேலைகளை செய்து அனைத்து சாதியினரும் மேலான கல்வி அறிவும் மெய்யறிவும் பெற்று இந்த தேசத்தில் ஒற்றுமையாக வாழ்வோம்.

**4.சமத்துவ உரிமை**:

பாரதியார் இந்திய சமூகத்திலே புரையோடி போயிருந்த சாதிக் கொடுமைக்கு எதிராக அவர் வன்மையாக குரல் கொடுத்தார் சாதி வேற்றுமை வெள்ளையரின் அதிகாரத்துவம் இரண்டையும் மனிதத் தன்மை அற்றவை எனச் சாடினார். சுதந்திர இந்தியாவில் இவை இரண்டும் மண்மூடி போவதாக நினைத்து.

**"பார்யானை ஐயிரென்ற காலமும் போச்சு -வெள்ளை**
**பரங்கியை துரையென்ற காலமும் போச்சே"**

**( பா. கவி ப113)**

பிராமணரை ஐயர் என்று கூப்பிட்ட காலம் மலையேறிவிட்டது. வெண்ணிற ஆங்கிலேயனை துரை என்று கூப்பிட்ட காலமும் முடிந்து போயிற்று என்கிறார் மேலும்,

**" ஜாதிகள் இல்லையடி பாப்பா- குல**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"**

**( பா. கவி. ப875)**

குழந்தாய் ஜாதி பிரிவினைகள் எதுவும் கிடையாது பிறந்த குழந்தையின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பது பாவமாகும் என்று குழந்தையின் மனதில் மனிதர்கள் அனைவரும் சமம் என்ற உயரிய சிந்தனையை விதைக்கிறார்.

**5.பெண்ணுரிமை:**

பெண் விடுதலையை மூச்சாகக் கொண்டவர் எழுத் ஆயுதத்தால் பெண்ணுரிமையை வரைந்தவர் ஆணாதிக்க சமூகத்தை எழுத்தாணியால் அறைந்தவர். பெண் கல்வியும் பொருளாதார சுதந்திரமுமே பெண் விடுதலைக்கான ஊற்றென முழங்கியவன் பாரதி.

**"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சிலமூடர் -நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்"**

**( பா. கவி. பக்962)**

கண்ணையும் பெண்ணையும் இறைவன் அறிவோடு படைக்க பெண்ணை ஏன் அறிவிலியாக நடத்த வேண்டும் என கேட்டதோடு பெண் அடக்குமுறை வலிமை பெற்றிருந்த சூழலில் பெண்ணின்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

சமத்து உரிமைக்காக

**"கற்பு நிலையென்று சொல்லிவந் தார்இரு**
**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"**

**(பா. கவி. பக்965)**

: இந்த மக்கள் கற்பழிக்கும் நிலைத்திருக்க வேண்டும் என்று உபதேசிக்க முயல்கிறார்கள் ஆண்-பெண் இரு பாலினத்துக்கும் பொதுவான ஒழுக்கமாக ஆக்குவோம் என்கிறார்

**" பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டும் அறிவினில் ஆணிக்கிங் கேபெண்**
**இளைப்பில்லை கானென்று கும்மியடி"**

**( பா. கவி. ப 966)**

ஆட்சி அதிகாரங்கள் செலுத்துவதும் நியாய வரையறைகள் இயற்றுவதுமாகிய காரியங்களை பூமியில் நங்கையர் ஆகிய நாங்கள் செய்ய வந்திருக்கிறோம் எதையும் கண்டறியும் அறிவுத்திறனில் ஆடவர்களுக்கு மகளிர் தாழ்ந்தவர்கள் அல்ல என்று பாடியபடி கும்மி கொட்டு என்று அழைப்பு விடுக்கிறார்,

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவில் ஓங்கிஇவ் வையம் தலைக்குமாம்"**

**(பா. கவி.ப968)**

ஆடவரும் மகளிரும் சமம் என்பதை ஏற்றுக் கொண்டால் இந்த உலகம் அறிவில் மேம்பட்டு செழிப்படையும்.

**"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவ(து) இல்லையாம்"**

**(பா. கவி. ப 970)**

கம்பீரமான அழகு நடையும் நேருக்கு நேராக பார்க்கின்ற பார்வையும் பூமியில் யாருக்கும் பயப்படாத தனி மார்க்கங்களும் மிகுந்த அறிவின் மதிப்பும் கொண்டிருப்பதால் பெண்கள் தங்கள் செம்மை பண்பில் இருந்து பிறழ்ந்து விட மாட்டார்கள்.

: பெண் விடுதலை குறித்து பாரதியார் கட்டுரையில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

1.பெண்கள் இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து. கொள்ளும்படி வற்புறுத்த கூடாது.

2.விவாகம் செய்து கொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும்.

 | Copyright © Author(s)

3.புருஷன் இறந்த பின்பு ஸ்திரீ மறுபடியும் விவாகம் செய்து கொள்வதை தடுக்க கூடாது.

4.பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தர கல்வியின் எல்லா கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

5.தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினாலும் அதை சட்டம் தடுக்கக்கூடாது.

**(மகாகவி பாரதியார் கட்டுரைகள் ப10)**

இளவயதில் திருமணம் செய்யும் முறையை ஒழித்தல் மூலம் பெண்களின் உயர்கல்விக்கான வாய்ப்பும் பெண் சுதந்திரம் கொடுப்பதன் மூலம் சமூக தளத்தை விரிவு படுத்த வேண்டும் என விரும்பினார்.

**முடிவுரை:**

பாரதியார் கவிதைகள் சாதாரண இலக்கிய படைப்புகள் மட்டுமல்ல அவை மனித உரிமைகளின் பொக்கிஷம், சுதந்திரம், சமத்துவம், கல்வி, பெண் முன்னேற்றம், சமூகநீதி போன்ற உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட பாரதியின் புரட்சி குரல் அக்கால பாரம்பரிய சிந்தனைகளை முறியடிப்பதாக இருந்தது அச்சமும், அடிமைத்தனமும் இல்லாத மனித உரிமைகளை நிலை நாட்ட விரும்பு ஓங்கி ஒலித்த குரலினால் தான் இந்திய சமூக வரலாற்றில் மாற்றங்கள் ஏற்படுத்தியுள்ளன

**துணை நூல்கள்:**

1. பாரதியார் கவிதைகள், கற்பகம் புத்தகாலயம்
   தி.நகர் சென்னை-600017
2. நடேஸ்வரன் க. பாரதியைப் பயில்வோம்,தென்மராட்சி
   இலக்கிய அணி பதிப்பு- 2013
3. திருக்குறள், நர்மதா பதிப்பகம் சென்னை
4. பாரதிதாசன் கவிதைகள்,பாரதிதாசன் பதிப்பகம்,
   புதுச்சேரி

 | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 4. சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்

**முனைவர். கோ. விஜயலெட்சுமி,**

உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை, புனிதசிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2.

viji99564@gmail.com, Tel: 9600535466.

**ஆய்வுச் சுருக்கம்:**

சங்ககால மக்களின் வாழ்வையும் அவாகள் தம் விருப்பங்களையும், உணர்வுகளையும், செம்மையான செய்யுளாக்கி நிற்பவை சங்க இலக்கியங்கள். செம்மாந்து நின்ற தமிழ் மக்களின் வாழ்வுக்கூறுகளை அகமென்றும், புறமென்றும் பிரித்து அவற்றிற்கேற்ப சீரிய இலக்கியக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் எழில் ஓவியமாக்கி நிற்பவை. சங்க இலக்கியங்கள் எல்லாம். வாழ்வியல் கருத்துக்களின் வளமிக்க களஞ்சியமாகத் திகழ்கின்றன. சிறந்த இலக்கியங்களில் காணப்படும் பொதுமைப்பண்பு, கண்ணியம், கட்டுப்பாடு, கடமை, கல்வி, பெண்ணுரிமை, காதல் மணம், குடும்பம், விருந்தோம்பல், கற்பு, மனிதநேயம், ஈகை, ஒருமைப்பாடு வீரம் போன்ற பண்புகள் இங்கு விளக்கப்படுகின்றது.

**திறவுச்சொல்:** வேந்தன் - அரசன், ஆவும் -பசு, களிறு–யானை, மாக்கள் -மக்கள், காளை- ஆடவர், ஆழி- சக்கரம்.

**முன்னுரை:**

உலகத்து மொழிகளுள் உயர்தனிச் செம்மொழியாய்த் திகழ்வது நம் தமிழ்மொழியாகும். தமிழில் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியங்களே . இந்திய நாட்டின் பழமையான இலக்கியங்களுள் ஒன்று. சங்க இலக்கியம் உலக இலக்கியங்களுள் ஒன்றாகவும் திகழ்கிறது. . மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான நெறிமுறைகளை விளக்கிக் கூறுகிறது. இத்தகைய சிறப்பம்சம் கொண்ட சங்க இலக்கியத்தில் காணலாகும் மனித உரிமைகள் Fwpj;J ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்கல்வி:**

பணிடைத் தமிழகத்திலே பெண்களிலே புலமை படைத்தவர்கள் பலர் இருந்தனர். அவர்களுடைய பெயர்களைச் சங்க இலக்கியங்களிலே காணுகின்றோம். ஔவையார், பூங்கண் உத்திரையர், காக்கை பாடினியார், நச்சௌ;ளையார், ஒக்கூர் மாசாத்தியார், மாறோகத்து நப்பசலையார் முதலிய பல பெண்கள் புலவர்களாக இருந்திருக்கின்றனர். இவர்களுள் ஔவையார் அரசியலில் மன்னர்களுக்கு அறிவுரையும், ஆலோசனையும் கூறிப் போரில் அமைதி ஏற்பட அதியமானுக்காக நாடு விட்டு நாடு தூது சென்ற பெருமைக்குரியவர். தூது செல்பவர்களுக்கு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

இருக்க வேண்டிய பண்புகளை வள்ளுவர் கூறும் பொழுது,

**" அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு**
**இனிறி யமையாத மூன்று"(1)**

என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் ஔவையார். மேலும் அதியமானுக்கு அறிவுரை கூறும் பொழுது.

**" இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**-----------------------------------------------**
**அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே" (2)**

என்ற பாடலில் போரை தடுத்து நிறுத்திய ஔவையாரின் அறிவாற்றலையும், அரசியல் நுணுக்கத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**<u>பெண்ணுரிமை:</u>**

சங்ககால பெண்டிர் எந்தகுடியில் பிறந்தாலும் தன் துணையைத் தாமே தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்ததுடன் மனமொன்றி வாழ்ந்திருந்தனர். தனக்குரிய தலைவனைப் பிறர் அறியாமலே தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பட்டயமாக்கிப் புறநானூறு சுட்டும் பொழுது,

**" என் ஐக்கு ஊர் இஃது அண்மை யானும்**
**என் ஐக்கு நாடு இஃது அண்மை யானும்" (3)**

எனும் பாடல் எடுத்துரைக்கிறது. பெற்றோர், உறவினர், உற்றார் ஆகிய யாவரையும் கேட்காமல் தன்னுடைய வாழ்க்கைத் துணையைத் தாமே தேர்ந்தெடுத்து கொண்டதை அறியமுடிகிறது.

**<u>களவு மணம்:</u>**

எங்கோ பிறந்த தலைவனும், தலைவியும் எதிர்பாராது சந்தித்து ஒருவரோடு ஒருவர் உள்ளத்தால் பிணிக்கப்படுகின்றனர். இவ்விருவர் தாயரோ, தந்தையரோ ஏற்கனவே உறவுடையவர்கள் அல்லர். முன்னர் ஒருவரை அறியாத தலைவன், தலைவி இருவரும் இப்போது செம்மையான நிலத்தில் விழுந்து கலந்த மழைத்துளி போல பிரிக்க முடியாதவராய் ஆகிவிட்டனர். இதனை,

**" யாயும் ஞாயும் யார் ஆகியரோ!**
**-----------------------------------------------**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (4)**

என்ற பாடலில் பெரும்பாலும் சாதிபேதமற்ற களவு மணம் அக்காலத்தில் நடைமுறையில்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

இருந்ததை அறியலாம்.

**கற்புடை மகளிர்:**

சங்க இலக்கியங்களிலே பெண்களுக்கு மட்டும் தான் கற்பு வலியுறுத்தப்படுகின்றது. பெண்கள் மட்டும் தான் ஆடவர்களை மணம் புரிந்து கொண்டு கற்புடையவர்களாய் வாழ வேண்டும் என்று கருதினர். ஆண்களுக்கு எத்தகைய கட்டுப்பாடும் இல்லை. அவர்கள் மனம் போனபடி திரியலாம். ஆண்கள் பல பெண்களை மணந்தனர். பரத்தையர்களுடனும் கூடிக் களித்தனர். பெண்களின் கற்பினைக் கூறும் பொழுது,

**" வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்" (5)**

என்கிறது. பெண்கள் அருந்ததியைப் போல் எல்லோராலும் தொழுது போற்றும் வண்ணம் பெருங்கற்பினை கொண்டதுடன் அக்கற்பின் வலிமையைக் கூறும் பொழுது.

**"அருமழை தரவேண்டின் தருகிற்கும் பெருமையனே" (6)**

என கலித்தொகை இயம்புகிறது. இயற்கையைக் கூட தன் கட்டுக்கள் வைக்கும் அளவிற்கு பெண்ணின் கற்பு உயர்ந்துள்ளதை உணரமுடிகிறது.

**விருந்தும் மகளிரும்:**

நம் இல்லம் நாடி வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடாகும். அவர்கள் அகம் மகிழ மனமுவந்து அமுது படைப்பதை கடமையாகப் போற்றினர். நெய்யோடு வெண்ணெய் அரிசியால் சமைக்க வெண்மையான சோற்றையும் ஏழு கலங்களில் இட்டு காக்கைக்கு வைப்பர். காக்கைக்கு உணவு வைத்தல் பழங்கால மரபாகும். அவ்வழக்கம் இன்றளவிலும் நடைமுறையிலுள்ளதை,

**" எழுகத்து ஏந்தினும் சிறிது என்தோழி**

**--------------------------------------------------**

**கரைந்த காக்கையது பலியே"(7)**

என்ற வரிகள் எடுத்தியம்புகின்றன. பெண்கள் தங்களுடைய கடமையாக விருந்தினரைப் பேணியதுடன் ஐந்தறிவு படைத்த ஜீவராசிகளுக்கும் உணவு வழங்கியதை அறியமுடிகின்றது.

**உடன்கட்டை ஏறுதல்:**

**கணவன் இறந்தால் மனைவியும் அவனுடன் பிணத்தீயில் மூழ்கி இறந்து விடுவதே உடன்கட்டை ஏறுதலாகும். கணவன் இறந்த பின்னும் உயிர் வாழ விரும்பிய பெண்களையும் கட்டாயமாகக் கணவனுடன் வைத்து கொளுத்தி வரத் தொடங்கினர். இத்தகைய கொடுமையைப் போக்கவே உடன்கட்டை ஏறும் வழக்கம் தடுக்கப்பட்டது. உடன்கட்டை ஏறும்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**வழக்கமும், உடன்கட்டை ஏற்றும் கொருமையும் பாரதநாடு முழுவதிலும் பரவியிருந்த வழக்கமாகும். தமிழர்களிடமும் இவ்வழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கின்றது.(8)** என்று சாமிசிதம்பரனார் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும், புறநானூற்று இலக்கியத்தில் வரும் அரசனான பூதப்பாண்டியன் இறந்ததும் அவனுடைய மனைவி பெருங்கோப்பெண்டு தீயுள் புக நினைத்தாள். அப்பொழுது சிலர் தடுக்க முயன்ற பொழுது,

**" வேளை வெந்தை வல்சி யாகப்**
**பரல் பெய் பள்ளிப் பாய் இன்று வதியும்**
**---------------------------------------------------------**
**நள் இரும் பொய்கையும், தீயும் ஒர் அற்றே"(9)**

என்ற பாடலில், கைம்மை நோன்பின் கொடுமையை விட இறந்த கணவனுடன் ஈமத்தீயில் புகுதலே சிறந்தது என்று கூறி உயிர் விட்ட பத்தினிப் பெண்ணின் வரலாற்றை அறியமுடிகிறது.

**வீரம்:**

மறக்குடி மகளிர் தங்கள் வீட்டு ஆடவர்கள் போருக்குத் துணிவுடன் அனுப்பினர். போர்க்களத்தில் வீரம் காட்டிப் போர் புரிவதை அறிந்து மகிழ்ந்தனர்.விழுப்புண் ஏற்பட்டால் அதைப் பெருமையாகக் கருதார். புறமுதுகிட்டான் என்ற தகவலை அறிந்தால் அந்நிலையைத் தூற்றும் தாயைச் சங்கப் பாடல்களில் காணப்படுகிறாள். தன் மகனாகிய வீரனைப் பெற்ற தாய் மிகவும் பெருமையுடனும், இறுமாப்புடனும் கூறும் பொழுது,

**"புலி சேர்ந்து போகிய கலஅளைபோல**
**ஈன்ற வயிறு இதுவே" (10)**

எனும் பாடல் எடுத்துரைக்கிறது. மகனின் வீரத்தை நினைத்து தாய் பெருமையடைவதை அறியலாம்.

**கடமையுணர்வு:**

உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு கடமையுண்டு. ஒரு சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்களின் கடமைகளைச் சரிவரச் செய்தால் இச்சமூகம் சிறப்பாக செயல்படும். இவை சமூகத்திற்கு மட்டுமல்லாமல் குடும்பத்திற்கும் பொருந்தும். ஒரு குடும்பத்திலுள்ள நபர் தங்களுக்குரிய கடமைகளைத் தெரிந்து கொண்டு அவற்றை சிறப்பாக செய்ய வேண்டுமென்ற கருத்தினை மையமாகக் கொண்டு பொன்முடியார் கூறும் பொழுது,

**" ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**

 | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**-----------------------------------------------------------**

**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (11)**

என்ற புறநானூற்றுப் பாடலில் தாய், தந்தை, குழந்தை, அரசன் கொல்லர் போன்றோரின் கடமையினை உய்த்துணர முடிகிறது.

**ஈகைப்பண்பு:**

குமணனிடம் பெரும் செல்வம் பெற்று வந்த பெருஞ்சித்தரனார் தன் மனைவியிடம் பொருளைக் கொடுத்து எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழுமாறு கூறுகிறார். இதனை,

**" நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்**
**பல் மான் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்"(12)**

என்கிறது. வறுமையிலும் செம்மையாய் தாம் பெற்றதை பிறருக்கும் தந்து வாழ நினைக்கும் புலவரின் ஈகை பொங்கும் உள்ளத்தை உணர முடிகிறது. மேலும் ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் தாங்கள் விரும்பிய வண்ணம் இரவலருக்க கொடுக்கும் உரிமை உடையவர்களாக விளங்கியதை,

**" புன்தலை மடப்பிடி பரிசிலாக**
**பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்" (13)**

எனும் பாடல் எடுத்துரைக்கிறது.

**பகைவர்களிடம் மனிதநேயம்:**

தமிழ் இலக்கியங்கள் பல்வேறு வடிவங்களில் படைக்கப்பட்டாலும் இவற்றில் மனிதநேயமே மேலோங்கிக் காணப்படுகிறது. இரு அரசர்களும் பொருத முற்படும் போது பகையரசனின் மக்களாக இருந்தாலும் அவர்கள் மீது கருணை காட்டும் பொழுது,

**" ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்**
**---------------------------------------------**
**எம் கோ! வாழிய குடுமி!" (14)**

எனும் பாடல் எடுத்துரைக்கிறது. போரிலும் அந்தணர்கள், பெண்கள் மற்றும் குழந்தைககளைப் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கும் பகையரசர்களின் மனிதநேயத்தை சங்கத் தமிழரிடமும் காண முடிகிறது.

**உயிர்கள் மீது இரக்கம்:**

எல்லா உயிர்களிடமும் இரக்கங்காட்டுவது பண்டைத் தமிழர்களின் பரம்பரைக்குணம். காரணமில்லாமல் எவ்வுயிர்க்கும் இன்னலிழைக்க மாட்டார்கள். சிற்றுயிர்களுக்கு கூட சிறுமை

 | Copyright © Author(s)

புரியமாட்டார்கள்.இந்த உண்மையை ஒரு நற்றிணை பாடல் காடசியின்; மூலம் விளக்கிக் காட்டுகிறார். ஒரு தலைவன் தேரின் மேல் ஏறிக்கொண்டு வருகின்றான். அத்தேர் கடற்கரையின் வழியே வந்து கொண்டிருக்கின்றது. கடற்கரையிலே நண்டுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன.. தேரோட்டி வரும் பாகன் தேர்சக்கரத்திலே அந்த நண்டுகள் அகப்பட்டு நசுங்காதபடி கவனத்தடன் தேih ஓட்டிக்கொண்டு வருகின்றான். இச்சமயத்திலே அவனுடைய செயலுக்கு உதவியாக நிலவு தோன்றியதாக சாமிசிதம்பரனார் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்(15) இதனை, ,

**“ புணரி பொருத பூ மணல் இடைகரை**
**ஆழி மருங்கின் அலவன் ஓம்பி**
**வலவன் வன்பு ஆய்ந்து ஊர**
**நிலவு விரித்தன்றால் காணலானே” (16)**

என்று குறிப்பிடுகின்றது. மனிதர்களிடம் மட்டும் அன்பும், அருளும் கொண்டவர்களாக இல்லாமல் அதற்கு அப்பாலும் சென்று அஃறிணை உயிர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுக்கும் பண்பை அறியமுடிகிறது.

**தொகுப்புரை:**

சங்ககால தமிழர்களின் விருந்தோம்பும் சிறப்பு, உயர்ந்த ஒழுக்கம், உறதியான கொள்கை, தலைநிமிர்ந்த தன்மான வீரவாழ்வு, பண்பாடு, புலவர்களின் புலமை நயம், பெண்களின் கற்பொழுக்கம், இல்ற மாண்பு, உடன்கட்டை ஏறும் வழக்கம், பெண்ணுரிமை, ஈகைப்பண்பு, கருணை காட்டும் பண்பு, மனிதநேயம் முதலியவற்றை தெளிவுபடுத்தி கட்டுரை நிறைவுபெறுகிறது.

**சான்றெண் விளக்கம்:**

1. திருக்குறள் -கு. 682
2. புறநானூறு - பா. 90
3. மேலது - பா.85
4. குறுந்தொகை - பா. 40
5. கலித்தொகை - பா. 2
6. மேலது - பா. 39
7. குறுந்தொகை - பா. 210
8. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் -ப.102
9. புறநானூறு -பா.246
10.மேலது -பா. 56


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11012025.01

11. மேலது -பா.312

12. மேலது -பா. 163

13. ‘ -பா.151

14. ‘’ - பா. 9

15. எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும் -பக்.62-63

16.நற்றிணை –பா.11

**பார்வை நூல்கள்:**

- குறுந்தொகை , பொ.வே. சோமசுந்தரனார், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூல் பதிப்புக் கழகம், சென்னை
- புறநூனூறு ஆசிரியர்: ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பூம்புகார் பதிப்பகம்.
- திருக்குறள் லியோ புக் டிஸ்டிரி பியூட்டர்ஸ் நெ.50 ,1வது மெயின் ரோடு , CIT நகர் நந்தனம், சென்னை-600035.
- நற்றிணை மூலமும் உரையும், முனைவர்.த.கோ. பரமசிவம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், சாமி.சிதம்பரனார், மணவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை- 600108
- எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், சாமி. சிதம்பரனார், அறிவுப் பதிப்பகம், 142, ஜானி ஜான்கான்ரோடு, ராயப்பேட்டை,

சென்னை- 600 014

- கலித்தொனை,முல்லை பதிப்பகம், 323/10 கதிரவன் காலனி,அண்ணா நகர் மேற்கு, சென்னை -40


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 5. பெரியாரும் பெண்ணுரிமையும்

**முனைவர் க.சுஜாதா**, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-02
https:// orcid.org/0009-0008-3035-1414

தமிழகம் அளித்த தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவர் தந்தை ஈ.வெ.ராமசாமி அவர்கள். ஈடு இணையற்ற சிந்தையாளர் பெண் விடுதலை பெறவேண்டுமானால் ஆண்மை அழிய வேண்டும் என்று குரல் எழுப்பியதோடு, செயல்வடிவமும் கொடுத்து வெற்றியும் பெற்றவர். வாழ்க்கையில் இன்ப, துன்பங்கள் மட்டுமல்லாமல் உரிமையும் இருவருக்கும் சமமாகும் என்கிறார். மூடநம்பிக்கைகளை ஒழித்து பகுத்தறிவுக்கேற்ற முறையில் நடக்க வேண்டும் என்றும் அறிவை விசாலமாக்கு என்றும் வலியுறுத்துகின்றார். பெண்களை விட சிறந்த அறிவு, ஆற்றல், வன்மை, ஊக்கம் உடையவர்கள் பெண்களை வீரத் தாய்மார்களாக உருவாக்குங்கள் என வற்புறுத்தி கூறுவதை உணரமுடிகின்றது.

**சுயமரியாதை இயக்கம் :**

காங்கிரசிலிருந்து விலகி தனது விலகலை உறுதிப்படுத்திக் கொண்ட பெரியார் தமிழர் சமுதாயத்தில் நிறுவனமாகி விட்ட மதம்,ஜாதி அமைப்பு, ஆண்ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராக தனது கடுமையான பிரச்சாரத்தைத் தொடங்கினார். பின்னர் சுயமரியாதை இயக்கம் 1952 ஆம் ஆண்டு தந்தை பெரியாரால் துவங்கப்பட்டது. அதில் பெரியார் "எனக்கு சிறுவயது முதற்கொண்டு ஜாதியோ,மதமோ கிடையாது. ஆனால் நிர்ப்பந்தமுள்ள இடத்தில் போலியாகக் காட்டிக் கொண்டிருந்திருப்பேன். அதுபோலவே கடவுளைப் பற்றியும், மனதில் ஒரு நம்பிக்கையோ, பயமோ கொணடிருந்ததும் இல்லை"1 என்றுரைப்பதை காணமுடிகின்றது. மேலும், "எனது வாழ்நாளில் என்றைக்காவது ஜாதி மதத்தையோ, கடவுளையோ உண்மையாக நம்பி இருந்தேனா என்று இன்னும் யோசிக்கிறேன். இதற்கு முன்பும் பல தடவை யோசித்திருக்கிறேன். எப்பொழுதிருந்து எனக்கு இவைகளில் நம்பிக்கையில்லையென்றும் யோசித்துப் பார்த்திருக்கிறேன் கண்டு பிடிக்கமுடியவே இல்லை"2 எனக் கூறுகிறார்.

தமிழ்நாட்டின் அரசியலிலும்,பண்பாட்டுத் தளத்திலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய சுயமரியாதை இயக்கம் துவங்கப்பட்டு நூறாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும், வாழ்வின் எல்லா தளங்களிலும் சுயமரியாதையை முன்னிறுத்தி இவ்இயக்கம் அரசியல், பண்பாடு, மொழி ஆகிய தளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது என்றால் மிகையாகாது.

**பெண்கல்வி :**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

பெண்ணடிமையை விரட்டும் கருவி கல்வி. கல்வியே ஒரு பெண்ணை தன்மானவளுடையவளாக்கும். தன் தேவையைப் பூர்த்தி செய்ய வேலை தேடிக்கொள்வாள். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக,

“நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்”3

என்ற வரிகளுக்கேற்ப பெண்கள் தன்னம்பிக்கை, கம்பீரம், அச்சமற்ற குணத்தைப் பெறுவாள் எனக் கூறுவதை காணமுடிகின்றது. சமுதாய முன்னேற்றத்திற்கு குரல் கொடுக்கவும், முன்னின்று கருத்தை வலியுறுத்தவும் பெண்கல்வி அவசியமாகும் இதனை நாலடியார்,

“குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு”4

என்ற கருத்தை ஈ.வெ.ரா பெண்களுக்குக் கல்வியே உயர்ந்த அழகு என்கிறார்.

‘அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு’ என்றிருந்தால் பெண் ஆண் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டு இருக்கவேண்டும். ஆதலால் பெண்கல்வி மிகவும் அவசியம் என்பதை வற்புறுத்திக்கின்றார் கல்வி கற்றவர்களுக்கே வாக்குரிமை என்ற நிலை இருந்த காலத்தில் நீதிக்கட்சி பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் வாய்ப்பை 1921ஆம் ஆண்டு அரசாணையாக வெளியிட்டது. இந்நிலையில் பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்க வேண்டுமென்பதை,

“உள்;ரில் பள்ளி இல்லையென்றாலும் பள்ளியுள்ள ஊரில் சென்று கூலி வேலை
செய்தாவது பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்”5

என்கிறார் பெரியார்.

“கல்வி தொடர்பான பெரியாரின் கருத்துகளை நாம் பின்பற்றியிருந்தால் நமது
பொருளாதார நிலை இன்று வேறாக இருந்திருக்கும்”6

என்று பெரியாரின் கல்விக்கொள்கையை வழிமொழிகின்றார் வ.செ.குழந்தைசாமி. மேலும்,ஆண், பெண் வேறுபாட்டை தடுக்க உதவுவது கல்வியே என்றால் அது மிகையாகாது. இக்கருத்தை,

இந்திய பெண்களின் விருப்பங்கள் மற்றும் கொள்கைகளில் ஒரு அதிரடி புரட்சி உருவாக வேண்டும் என்ற பெரியாரின் கருத்தை “ஆண்கள் புரியும் அனைத்து வித செயல்களையும்

பெண்களும் செய்கின்ற திறமையைப் பெற்றிருக்க வேண்டும்"7 என்கிறார் அனிதா அகஸ்டின் மிதுலா.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்வரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"7

என்ற வள்ளுவனின் வாக்கும் நோக்கத் தக்கது.

பெண் பொம்மையல்ல :

பெண்கள் அலங்காரம் செய்து கொள்ளும் பொம்மைகளாக ஆண்களின் கண்ணுக்கு அழகாக இருக்கவே விரும்புகின்றனர். இது தன்மானத்தைப் பாதிக்கக் கூடியதாய் இருப்பதை அறியாமல் உள்ளனர் என்பதே பெரியாரின் சிந்தனை அமைந்துள்ளது.

"ஓர் ஆணுக்கு ஒரு சமையல்காரி. ஓர் ஆணின் வீட்டிற்கு ஒரு வீட்டுக்காரி ஓர் ஆணின் குடும்ப பெருக்கிற்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை"8

ஏன்ற நிலை மாறவேண்டும் என்பதே பெரியாரின் நோக்கமாக அமைந்துள்ளது. பெண்ணானவள் தன் சுகத்தை மறந்து தங்களுடைய குடும்ப உறவுகள் நன்றாக இருக்க வேண்டும் என்னும் கருத்தே அவர்களின் எண்ணமாக, வாழ்க்கையாக மாறிகிறது. இருப்பினும், பெண்களின் எண்ணங்களுக்கு ஆண்கள் மதிப்பளிப்பதில்லை. பெண்களைப் பொம்மையாகவே கருதுகின்றனர். பெண்ணிற்கு அணிகலன் அணிவித்து தன் சொத்துகளைப் பாதுகாக்கும் பாதுகாவலராகவும் ஆர்வம் மிக்கவராகவும் காட்டி பெண்ணைப் பொம்மையாகவே இன்றளவும் பயன்படுத்தி வருகின்றனர்.ஆண்களின் போக்கை பெண்கள் அறியாமல் இருப்பது பெண்ணின் அறியாமையே ஆகும்.

**சுயமரியாதைத்திருமணம் :**

திருமணம் என்பது ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு கூட்டுப்பொறுப்;பில் வாழ்க்கை நடத்துவதாகும். பலர் அறிய செய்து கொள்ளும் ஒப்பந்தமே திருமணம். கணவன், மனைவியாக இல்லறம் நடந்த இசைந்து ஒன்று சேர்வதே திருமணம் ஆகும். காதல்மணம், களவுமணம் என்று இருந்த பொருத்தம் தனித்தேடல் இல்லாமல் இருந்தது. இற்செறித்தல் என்னும் நிலை தோன்றியவுடன் பெற்றோர் தம் மகளுக்கு இணையவரை தேர்ந்தெடுக்கும் வழக்கம் ஏற்பட்டது. இதனை தொல்காப்பியம்,

"பிறப்பே குடிமை, ஆண்மை, ஆண்டொடு
உருவு, நிறுத்த காம வாயில்
நிறையே, அருளே,உணர்வொடு, திருஎன


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”9தொல்1215)

எனத் திருமணப்பொருத்தங்களுக்கான பத்து வகைகளில் ஒன்றினை தொல்காப்பியம் பகர்கின்றது. நல்ல குடும்பத்திற்கு ஒழுக்கம், ஆண்மை, மனஉறுதி ஆகியவை ஒத்திருக்க வேண்டும் என உரைப்பதை காண முடிகின்றது.

மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணிற்கு அளிக்கப்படவில்லை. அதற்காகவே, அவளுக்குக் கல்வி அளிக்கப்படவில்லை. புரோகித மணத்தால் மதம், சாதி பழக்க வழக்கங்கள் பாதுகாக்கப்பட்டும், பெண்ணடிமை, ஆண் எஜமான் என்னும் நிலை தொடர்வதால், பெண்ணுரிமைப் பறிக்கப்படுகிறது. இதற்கு எதிராக செயல்பட்டதே சுயமரியாதை திருமணம் என்கின்றார் பெரியார்.

திருமணத்தில் ஆணும், பெண்ணும் எந்தவித புறக்கட்டுப்பாடுகள் இன்றி ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தமே ஆகும.”திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழக்கையை நடத்த ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் என்றும் அவ்வொப்பந்தமே, பெண்ணையும், ஆணையும் பொறுத்ததே ஒழிய வேறு எந்தவித தெய்வீகத்திற்கோ அல்லது எந்தவித கட்டுப்பாட்டுக்கோ சம்பந்தப்பட்டது அல்ல.”10 என வரையறுத்துள்ளார் பெரியார்.

சுயமரியாதைத் திருமணத்தில் சடங்குகள் இல்லை. ஆடம்பரம் இல்லை. விருப்பத்தின் பேரில் தாலி கட்டுவது. இருவருக்கும் சொத்தில் உரிமை உண்டு என விளக்குவதாக அமைந்துள்ளது.

**சுயமரியாதைத் திருமணச்சட்டம் :**

சுயமரியாதைத் திருமணம் 1968 ஆம் ஆண்டு வரை சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்படாமல் நடைபெற்று வந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா 1968ம் ஆண்டு இதற்கான சட்டத்தை கொண்டு வந்தார். இச்சட்டத்திற்கு பிறகு முன்பு நடைபெற்ற திருமணங்களும் சட்டப்படி செல்லுபடியானது.

“27.11.1967 அன்று சுயமரியாதைத் திருமணம் சட்டமன்ற அவையிலும் பிறகு மேலவையிலும் நிறைவேறிய பிறகு, 17.01.1968 இல் ஜனாதிபதியின் ஒப்புதலையும் பெற்று 20.01.1968 இல் சென்னை அரசிதழில்; வெளியிடப்பட்டு சட்ட வடிவமாகியது.”11 இச்சட்டம் நிறைவேறுவதற்குமுன் சுயமரியாதைத் திருமண மசோதாவின் வரைவு பெரியாரிடம் காண்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**பெண்ணுக்கான சொத்துரிமை :**

பெரியார் பெண்களின் விடுதலைக்காகப் போராடியதில் சொத்துரிமை மிக முக்கியமானதாகும். 1929இல் செங்கல்பட்டிவ் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில்

 | Copyright © Author(s)

பெண்களுக்கு குடும்பச் சொத்தில் ஆண்;களுக்கு நிகராக சொத்து வழங்கவேண்டும் என்ற தீh்மானத்தை கொண்டு வந்தார். இத்தீh்மானமானது பெண்களை சமுக பொருளாதார ரீதியாக தங்களை மேம்படுத்திக் கொள்ளவும், அடிமைத்தனத்தை ஒழிக்கவும், சமத்துவ சமுதாதயத்தை உருவாக்கவும் வழிவகுக்கும் எனக் கருதினார் பெரியார். அவரது கனவை 1989 இல் கலைஞர் தலைமையிலான தி.மு.க அரசு சட்டமாக்கி பெரியாரின் சிந்தனையை நடைமுறைப்படுத்தியது.

பெண்விடுதலை :

பெண்விடுதலைக்காக மகத்தான பணியாற்றியவர் தந்தை பெரியார். இவர் சீர்திருத்தங்களைத் தன் வீட்டிருந்தே ஆரம்பித்தார். திருமணமாகி ஒரே மாதத்தில் விதவையான தன்னுடைய தங்கையின் பத்து வயது மகளுக்கு மறுமணம் செய்து வைத்தார். அந்நாட்களில் விதவைகள் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது. தலையைக் குனிந்து இருக்கவேண்டும். வெள்ளைச் சேலை அணியவேண்டும். நகை அணியக்கூடாது எனப் பல கட்டுப்பாடுகள் இருந்தன. இதனைக் கண்ட பெரியார் விதவை மறுமணத்திற்காக வலுவாக குரல் கொடுத்தார். பெண்கள் மறுமணம் செய்து கொள்வதில் தவறு இல்லை என்பதை வலியுறுத்தி திருமணம் செய்து வைத்த போராளி.

தேவதாசி ஒழிப்புமுறை :

பக்தியின் பெயரால் பெண்கள் கோவிலில் நடனமாடினர் பெற்றோர்கள் பெண்ணுக்குப் பொட்டுக்கட்டி கோவில்களில்; விட்டு வந்தனர். இத்தகைய செயலால் சமுதாயத்தில் தேவதாசிமுறை வளர்ந்தது. ஆதலால் பெண்கள் கோலாட்டங்களை மறந்துவிட்டு ஆண்களைப் போல அனைத்து விளையாட்டுகளிலும் ஈடுபடவேண்டும். அதுதான் தைரியத்தையும் தன்னம்பிக்கையும் ஏற்படுத்தும் என வலியுறுத்தினார். இன இழிவை ஒழிக்க பெண்கள் போராடப்பழக வேண்டும் என்றார். அப்போது தமிழகத்தில்; முதல் பெண் மருத்துவரான முத்துலட்சுமி; ரெட்டி தேவதாசி ஒழிப்பு மசோதாவைக் கொண்டுவந்தார். இதனை ஏற்கமறுத்த நீதிக்கட்சியி்ரை தந்தை பெரியார் சாடினார். பெரியார் மற்றம் முத்துலட்சுமி ரெட்டியின் தொடர் போராட்டத்தால் தேவதாசிமுறை ஒழிக்கப்பட்டது.

பெண்ணுரிமை, பெண்விடுதலை குறித்த பெரியாரின் சிந்தனைகளுக்கு 1927இல் வெளியான மதர் இண்டியா என்ற புத்;தகமே காரணமாக அமைந்தது. இப்புத்தகம் காந்திக்கும் காங்கிரஸ்க்கும் சுத்தமாகப் பிடிக்காதப் புத்தகமாக இருந்தது.. இந்து சடங்குகள் எப்படியெல்லாம் பெண்களை சுரண்டுகிறது என்பதை வெளிப்படுத்தியிருந்தார், கேத்தரின்மேயோ. மேலும், குழந்தை திருமணம் பாலியல் நோய்கள் விதவைகள் நடத்;தப்பெறும் விதம் ஆகியவற்றை புள்ளி


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

விபரங்களுடன் முன்வைத்தார். பதினான்கு வயதுக்கு முன்பு பெண்களுக்கு திருமணம் செய்வது தவறு என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்;. காங்கிரஸ் தலைவர்களைப் பொறுத்;தவரை இந்து மதம் தான் பெண்களின் சிறந்த பாதுகாப்பு.. ஆனால், பெரியார் இக்கருத்தை வேறுமாதிரியாகப் பார்த்தார். இந்து மதத்தின் மீதான தாக்குதல் அவருக்கு மகிழ்ச்சியை அளி;த்தது. இச்சர்ச்சையினால் சமுகப்பிரச்சினையிலும் ஐரோப்பாவில் உருவாகியிருந்த பெண்ணிய இயக்கங்களைப் பற்றியும் அறிந்து கொண்டார்.

தொகுப்புரை

பெண்கள் அணு அளவும் அடக்குமுறைக்கு ஆளாகாமல் முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்ற நோக்கம் கொண்ட பெரியார். சாதிஒழிப்பு, பெண்கல்வி, ஆணாதிக்கத்தினால் அடிமையாக இருக்கம் பெண் இனத்தி;ன் விடுதலைக்காகப் போராடி வித்திட்டவர் பெரியார். பெண்கல்விக்கு குரல்; கொடுத்தல், இளவயது திருமண எதிர்ப்பு கட்டாய திருமணங்களை ஒழி;த்தல், மறுமணங்களை ஊக்குவித்தல், பெண்களுக்குச் சொத்துரிமை என வாழும் காலமெல்லாம் பெண்களின் அடிப்படை உரிமைக்காகக் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் என்றால் மிகையாகாது.

**சான்றெண் விளக்கம்**

1. பாரதியார் கவிதைகள்
2. நாலடியார்131
2. திருக்குறள் 392
4. தொல்காப்பியம் பொருளதிகாரம்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 6. புத்தம் வீடு நாவலில் பெண் உரிமை சிந்தனைகள்

**முனைவர் ஆ. ஷர்மி**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக்கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 02.

**முன்னுரை**

மேலைநாட்டில் இருந்து தமிழகம் அந்த கிறிஸ்தவ சமயம் தன்னை வளர்த்துக் கொண்டதை போலவே தமிழ் மொழியையும் வளர்த்து வருகிறது தமிழ் மொழிக்கு பல பணிகளையும் நிறைவாக ஆற்றி வருகிறது மேலைநாட்டிலிருந்து தமிழகம் வந்த பாதிரியார்களும் அவர்களை பின்பற்றிய தமிழ் மண்ணில் மைந்தர்களும் சமயம் சார்ந்த சமயத்திற்கு மட்டுமின்றி தமிழ் மொழிக்காகவும் தொண்டாற்றியுள்ளனர். நாவலின் புத்தம் வீட்டைச் சேர்ந்த பெண்கள் தங்கள் வீட்டு மக்களால் எவ்வாறெல்லாம் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள்இ அவர்களது உரிமை பறிபோகும் நிலைஇ தன்னுடைய எண்ணத்தை தெரிவிக்க உரிமை இல்லாத நிலை போன்ற பல இன்னல்களுக்கு ஆளாவது என்பதை ஆய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

புத்தம் வீடு என்ற ஹெப்சிபா ஏசுதாசனின் நாவல் வட்டாரத் தன்மை கொண்டது குமரி மாவட்ட நாடார் சமூகத்தின் வாழ்வியலை படம் பிடித்து காட்டுகிறது. கிறிஸ்துவ சமூகம் சார்ந்த மதிப்புகளை நாவல் முழுக்க ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். இக்கட்டுரையில் புத்தம் வீடு நாவல் எடுத்துக்காட்டும் சமூக மதிப்புகளை இனம் காட்டும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**பெண்ணியம்**

பெண் படைப்பாளர்களின் எழுத்துக்கள் பெண் எழுத்து என்று உணரப்பட்டது. பெண் தன்னை பெண்ணாக அறிந்துகொண்டு தமக்கான பிரச்சனைகளை தன் சுசூழலில் எடுத்துரைப்பதாகும.; இந்த வகையில் 1964ஆம் ஆண்டு எழுதப்பட்டது யேசுதாசனின் புத்தம் வீடு என்ற நாவலாகும.; இது நாகர்கோவில் பகுதியில் உள்ள பனைவிளை என்ற கிராமத்தில் உள்ள ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. பழமையாக பின்பற்றப்பட்டு வரும் குடும்பங்களில் கட்டுக்கோப்பு மாறி வரும் வாழ்க்கை முறைகளால் எவ்வாறு சீர்குலைகிறது என்பதை இந்நாவல் சுட்டிக்காட்டுகிறது. பெண் பிறப்பை சமூகம் விரும்பவில்லை அவளை கீழ்த்தரமாகவே நினைத்தது என்பதை நாவல் தெளிவாக படம் எடுத்துக் காட்டுகிறது. நாவலில் பிறந்த குழந்தை பெண் என்று பெருமைப்படவில்லை. ஒரே குழந்தையும் பெண்ணாக போயிற்று என்று உள்ளுக்குள் நினைத்து வருந்துகின்றார்.

**குடும்பத்தில் பெண் நிலை**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

குடும்பத்தில் பெண் என்பவள் ஆணைச் சார்ந்து இருக்க வேண்டிய முறையிலேயே குடும்ப அமைப்பு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தில் பெண்ணுக்கு எந்த வகையிலும் அங்கீகாரம் வழங்கப்படுவது இல்லை. நாவலில் வீட்டின் மூத்தவரான கண்ணப்பச்சி சொல்வதுதான் இறுதி தீர்ப்பாக அமைகிறது. யாருக்கும் மாற்று கருத்து தெரிவிக்க உரிமை கிடையாது. கண்ணமையும் முணுமுணுத்துக் கொண்டு போவாளே ஒழிய துணிந்து பேசமாட்டாள்

**தற்கொலை**

தற்கொலை என்பது தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் செயலாகும். இத்த தற்கொலை வெறுப்புணர் காரணமாக வறுமை காரணமாக நிகழ்கிறது. லிஸி தற்கொலைக்கு முயற்சி செய்கிறாள் தன்னைப் பற்றி சமூகம் கேவலமாக பேசியதால் முடிவு எடுக்கிறாள். அவள் தன் துணிகளில் கிடந்த கயிற்றை எடுத்து தற்கொலைக்கு முயற்சி செய்கிறாள். குடும்ப கௌரவத்தை காப்பாற்றும் பொறுப்பு வயது முதிர்ந்த கண்ணப்பச்சியை சார்கிறது. லிஸியின் சிறிய தந்தையின் மகள் லில்லியின் திருமணம் எதிர்பாராத விதமாக நடக்கும்போது லில்லிக்கும் மகிழ்ச்சி இல்லை. பெண் பிறப்பை சமூகம் விரும்பவில்லை. அவளை கீழ்த்தரமாகவே நினைக்கிறது என்பதை நாவல் தெளிவாக படம் பிடித்துக்காட்டுகிறது.

**சமுதாயம் அமைப்பு**

சமுதாயம் தனது கட்டுக்கோப்பு சீர்குலையாது இருக்க சில அமைப்புகளை அமைத்துள்ளது. குடும்பம் சாதிஇ மதம்இ கல்வி அரசு பொருளாதாரம் ஒரு சமுதாயம் அடிப்படையான மதிப்புகள் அதன் அனைத்து அமைப்புகளிலும் ஊடுருவி இருக்கும் என்று சமூகவியலார்; கூறுகின்றனர்.மனித சமுதாயத்தில் குடும்பம் என்னும் ஒரு அமைப்பு தேவைப்பட்டது. இதனால் குடும்பம் தலைமுறை தலைமுறையாக தனது பண்பாட்டு மரபுகளை கொண்டு செல்லும் முக்கியமான அமைப்பாக விளங்குகிறது. இந் நாவலில் கூட்டு குடும்பம் முறை காணப்படுகிறது. பாரம்பரிய பரம்பரை நில புலன்களை வைத்துக்கொண்டு ஊரில் பெரிய குடும்பம் என்ற பெயருடன் வாழும் கண்ணப்பச்சியின் குடும்பம் ஒரு கூட்டு குடும்பமாகும.; இங்கு கண்ணப்பச்சி அவர் மனைவி இருவரும் இருவேறு மனம் படைத்தவர்கள். அவர்களுக்கு இரு மகன்கள் என்று மூன்று தலைமுறைகளை சேர்ந்தவர்கள் வாழ்கின்றார்கள். கண்ணப்பச்சி அவர் மனைவி அவரை எதிர்த்து பேசமுடியாத நிலையினை நாவலில் காண முடிகிறது.

**சாதிய மதிப்பு**

தமிழகத்தில் சாதி பாகுபாடு தோன்றி ஒவ்வொரு சாதியும் தமக்கென ஒரு பரம்பரை தொழிலை மேற்கொள்வதுமாக வளர்ந்தன. இங்கு பனையோ நாடார் சமூக மதிப்பு அடையாளம்

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11012025.01

காட்டப்படுகிறது. கிராமத்தில் வேறு பல கூட்டத்தினர் சிறுபான்மையோராக வாழ்ந்திருந்தார்கள். அவர்களுடன் வேறு பல விதத்தில் கலந்து கொண்டாலும் கல்யாண விஷயத்தில் மட்டும் கொள்வினையும் கொடுப்பினையும் வைத்துக்கொள்ளவில்லை. தங்கராசு லிஸியை உபதேசியர் மூலம் பெண் கேட்க விளைகிறார். ஊபதேசியர் சொன்னால் விளங்கவில்லையோ ஓய்? குளம் எல்லாம் ஒன்றுதான் ஆனால் பழக வழக்கங்கள் இரண்டாகக் கிடக்குது தெரியுமா? குளம் மேலாக இருந்தால் கூட மனசு ஒத்து வந்தால் குளம் ஒன்றாகிவிடும.; இங்கேயானால் மனசு ஒத்து வராது போலிருக்கே நான் இந்த இடத்துக்கும் புதுசு என்னை கேட்டு என்ன ஆச்சு ஓய்? என்று கூறுவதிலிருந்து குல பிறப்பு தெரிகிறது. லிஸி தான் காதலித்த தங்கராசுவை தன் விருப்பப்படி திருமணம் செய்துகொள்ள முடியாத நிலையினை காண முடிகிறது.

**கல்வி மதிப்பு**

சமுதாயக் கட்டுக்கோப்பைக் காத்துவருவதில் கல்விக்கு இன்றியமையாத பங்கு உண்டு. எப்போதும் ஒரு சமுதாயத்தில் கல்வி என்பது சமுதாயத்தின் தேவைகளை கருத்தில் கொண்டு உருவாக்கப்படுகிறது. ஆனால் இந்த தேவை ஆளும் வர்க்கத்தின் தேவையாக அமைந்துவிடுகிற போக்கை வரலாறு வெளிப்படுத்துகிறது. இவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை குலத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். நாவலில் வரும் கதை மாந்தர்கள் உபதேசியார் மற்றும் அவரது மகளைத் தவிர மற்றவர்கள் தொடக்கக் கல்வியோடு நிறுத்திக் கொள்கிறார்கள். பெண்கள் கல்வி கற்பதற்கும் உரிமையில்லாத நிலையினைக் காண முடிகிறது.

**பொருளாதார மதிப்பு**

பொதுவாக பணமதிப்பு மனித மதிப்பை தீர்மானிக்கிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வு மனித சமுதாயத்தை ஏழை பணக்காரன் என்ற இரு பிரிவுகளாக பிரிக்கிறது. இப்பிறவினர்களுக்கு இடையே சமுதாயம் தன்னை தற்காத்துக் கொள்ளும் வகையில் சில பொருளாதார மதிப்புகளை ஏற்படுத்துகிறது. வசதி படைத்தவர்களுக்கு பழைய மதிப்புகளில் சில உரிமைகளும் சலுகைகளும் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக புத்தம் விட்டு பெரியவர் ஆரம்ப நிலையில் செல்வம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார். ஆனால் இன்று ஆண் மக்கள் செயலால் வறியவர் ஆனார். ஆனாலும் அவருடைய பழைய வாழ்க்கை மதிப்பு இன்று வெளிப்படுகிறது. நாவலில் வரும் பொருளாதார மதிப்பு என்று பார்த்தால் ஒரே இனத்தைச் சார்ந்த தங்கராசு பெரிய வீட்டு பெண் லிஸியை உபதேசியார் மூலம் பெண் கேட்டு கேட்கிறார். பனை மரம் ஏறி தொழில் செய்வதாலும் ஏழை என்பதாலும் பெண் கொடுக்க மறுக்கிறார்கள.; ஆனால் கண்ணப்பச்சி இளைய மகனுடைய மகள் லில்லியை வசதி படைத்த வைத்தியர் பெண் கேட்கிறார். இருபது வயது மூத்தவனுக்கு. அவரிடம்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

எந்தவித மறுப்பும் இல்லாமல் கொடுக்கிறார்கள். இங்கு பொருளின் மதிப்பு வெளிப்படுகிறது. பெண்ணுக்குத் தன் மன உணர்;வுகளை எடுத்துக்கூறுவதற்கு உரிமையில்லாத நிலை இருந்திருப்பதை காண முடிகிறது.

**கணவன் மனைவி உறவு நிலை**

குடும்பங்களில் பொதுவாக கணவன் மனைவி உறவு நிலை மிகவும் நெருக்கமானதாக கருதப்படுகிறது. கணவனால் ஏற்படும் தொல்லைகளை சகித்துக் கொண்டு வாழ வேண்டிய கட்டாயத்திற்கு பெண்கள் தள்ளப்படுகிறார்கள். குடும்பத்தில் பெரியவர் கண்ணப்பச்சி அவர் மனைவி இருவருக்கும் வயதாகி உள்ளது. கண்ணப்பச்சி அவர் மனைவி அவரை எதிர்த்து பேசமுடியாத நிலையினை நாவலில் காண முடிகிறது.

ஆண் மக்கள் இருவருக்கும் மனம் ஆகி ஒவ்வொருவருக்கும் ஒரு மகளும் இருக்கின்றனர். இரு மகன்களும் உதவாக்கரைகள் ஒரு பெரிய குடும்பம் என்ற பெருமைக்கு ஆளாகி வேலை எதுவும் செய்யாமல் குடும்பச் சொத்தை அழித்துக் கொண்டு பொறுப்பில்லாமல் நடந்து கொள்வதால் குடும்பத்தில் சந்தோஷங்கள் இல்லை. இதற்கு எடுத்துக்காட்டாய் லிஸியின் அம்மாவின் வாழ்க்கையைக் கூறலாம். லிஸியின் அம்மாவை அவள் அப்பா மூதேவி பேசாதடி மூலி என்று அழைப்பார்.

**திருமணம்**

ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் மிக முக்கியமான நிகழ்வு திருமணம். பெண்ணிற்கு உரிய காலத்தில் திருமணம் நடக்கவில்லை என்றால் ஊரார் தூற்றுவார்கள். லிஸிக்கு உரிய பருவம் வந்தும் திருமணம் நடக்கவில்லை. இந்நிலைக்கு காரணம் அவள்தான் என்று அவளுடைய சித்தப்பா அவளை திட்டுகிறார். சித்தப்பா அவளை கருப்பி சீதனம் இல்லாமல் கல்யாணம் முடிப்படாது என்று கூறகிறார். இவ்வாறு குடும்பத்தில் உள்ளவர்களோ அவளை புரிந்து கொள்ளாத போது இச்சமூகம் மட்டும் எப்படி அவளை புரிந்து கொள்ளும் மேலும் திருமண ஏற்பாடுகள் செய்யும்போது பெண்ணிடம் மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா? என்று யாரும் கேட்பதில்லை இன்னாவளிலும் லில்லிக்கு அவளை விட 20 வயது மூத்த வைத்தியரை திருமணம் செய்ய ஏற்பாடு செய்தனர். லில்லி அழுது கொண்டிருந்தால் என்ன இருந்தாலும் அவளை விட 20 வயது பெரியவன் பாவம் சின்ன குழந்தை என்று வந்திருந்த பெண்கள் விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். தன்னுடைய பெண்ணிற்கு இன்னும் திருமணம் நடக்கவில்லையே என்று அம்மா ஆதங்கப்படுகிறார். இதற்கெல்லாம் தன் கணவனே காரணம் என்று நினைக்கிறாள். ஆனால் தன் கணவனிடம்; இது பற்றி பேச முடியாது. உரிமை இல்லை என்பதால் லிஸியிடமே தன்

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

ஆதங்கத்தை கொட்டி கோபமாக தீர்க்கிறார். குடிகாரனுக்கு போய் உன்ன பெத்து போட்டுட்டேனே என்று புலம்புகிறாள். ஒரே வீட்டில் இரண்டு பெண்கள் இருக்கும் சூழலில் அவர்களில்; மூத்தவள் இருக்கும்போது இளையவளுக்கு திருமணம் நடைபெற்றால் அந்நிகழ்வு மூத்த பெண்ணின் உள்ளத்தையும் அவளை சார்ந்தவர்களின் உள்ளத்தையும் எவ்வாறு பாதிக்கும் என்பதை இந்நாவல் படம் பிடித்து காட்டுகிறது.

லில்லிக்கு திருமணம் நடைபெறுகிறது. மாப்பிள்ளை லிஸியை பிடிக்கவில்லை லில்லியைத்தான் பிடித்திருக்கிறது என்று சொன்னார். லிஸி அவமானத்தால் குறுகிப்போனால். இருட்டுக்குள் பலகையில் உட்கார்ந்து கொண்டால் அவள் அம்மாவும் கொட்டு கொட்டென்று விழுந்து கொண்டு செயலற்றுப்போய் தன் மகளுக்கு துணையாக அடுக்கடையில் இருக்கிறாள். லிஸி துன்பங்கள் அனைத்தையும் அனுபவித்து இளம் பருவத்தில் அனுபவிக்க வேண்டிய அனைத்து இன்பங்களையும் இழந்தபோதும் அதை இழப்பாக எண்ணாமல் தன்னை அந்நிலைக்கு தயார்படுத்திக் கொண்ட பெண்ணாகத்தான் காட்சி தருகிறார். பெண்களுக்கு ஆண்களைப் போலவே பொருளாதார சுதந்திரம்இ பெண்களின் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ப கல்வி கற்கும் உரிமைஇ பெற்றோர்களில் தேவையற்ற கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலைஇ திருமணத்தில் பெற்றோர்களின் விருப்பத்தை விட பெண்களின் விருப்பத்திற்கு முதன்மைத் தருதல் இசமய கலாச்சார பண்பாடு அடிமைத் தனங்களிலிருந்து விடுதலை ஆகிய கருத்துக்களை ஹெப்சிபா தம் நாவலின் வாயிலாக வலியுறுத்துகின்றார்.

**முடிவுரை**

ஹெப்சிபா ஏசுதாசன் பெண்ணை சுமை என்று நினைக்காமல் சுகம் என்று நினைக்கிற வகையில் சமூகத்தில் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும.; பெண்ணை கலங்கமாக நினைக்காமல் பெருமையாக போற்றினால் சமூகம் முழுவதுமே பெருமை அடையும் வளம்பெறும். அதற்கு பெண் பற்றிய மதிப்பு இளம் வயது முதல் உள்ளங்களில் ஆழமாக பதிய வேண்டும். இந்நாவல் நாகர்கோவிலுக்கு அருகாமையில் பனைவிளை என்ற கிராமத்தில் அந்தஸ்து சாதி கட்டுப்பாட்டு ஆகியவற்றுக்குள் அடங்கி வாழும் ஒரு கிறிஸ்தவ நாடார் சமுதாயத்தை பிரதிபலித்துக் காட்டுவதாக அமைகிறது.

**துணைநூல்பட்டியல்**

ஹெப்சிபா ஏசுதாசன் - புத்தம் வீடு

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 7. எட்டுத்தொகை நூல்களில் மனித உரிமைகள்

**முனைவர் கு. டாலி ஆரோக்கியமேரி**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி – 620002, மின்னஞ்சல் : kdolly759@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககால மக்கள் காதலிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினர். சங்கப்பாக்கள் ஒவ்வொன்றும் தமிழரின் பண்பாட்டையும் நாகாரிகத்தையும் எடுத்தியம்புகின்றன. பாலினப் பாகுபாடு தொடர்பான சமூகப் பண்பாட்டு வேர்களை இனம் கண்டு கொள்ளவும், பெண்களின் உரிமைகளையும் அடக்கு முறைகளையும் இனம் கண்டு கொள்ளவும் முடிகிறது. கற்பு நெறியில் வாழும் பெண்கள் நல்லறத்தடன் குடும்பம் நடத்தி, விருந்தோம்பல், கல்வி, மக்கட்பேறு என பல்வேறு சிறப்புகளுடன் வாழ்ந்த மக்களின் தனிமனித உரிமைகளை சங்க இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டதாகும.; மனிதன் சமூக குழுவாக வாழ ஆரம்பித்த நாளிலிருந்து மனித உரிமைகள் என்ற கருத்து உருவாக்கம் தொடங்கியுள்ளது. சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்கள் மனித உரிமைகளைப் பற்றி அறிந்திருந்ததன் காரணமாக அவர்கள் சமூகத்தில் உயர்வான நிலையில் வைத்து பாராட்டப்பட்டனர். தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைகள் என்பது அறக்கோட்பாடாகவே வகுத்துரைக்கப்பட்டுள்ளன இதில் புலவர்களின் பங்கு அளப்பரியதாக இருந்துள்ளது. அவர்கள் தங்களது வறுமையை போக்கிக் கொள்ள மன்னர்களை பாடி பரிசில் பெறுவதை மட்டுமே தொழிலாக கொள்ளாமல் மன்னர்கள் மனித உரிமை மீறல்களைச் செய்யும்போது அவர்களைத் திருத்தவும் அறிவுறுத்தவும் செய்துள்ளனர்.

**தலைவி தலைவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை**

சங்க இலக்கியத் தலைவிகள் பேசுவதற்கு கூட வரைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. குழந்தைப் பருவத்தில் மகிழ்ந்து தெருவில் விளையாடும் சிறுமியாக இருந்து பின்னர் தன்னுடைய விருப்பம் போலோ அல்லது பெற்றோரின் விருப்பம் போலவோ திருமணமானது நடைபெறுகின்றது. பெண்கள் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடினர் கலை, இலக்கியம,; நடனம், இசை ஆகியவற்றில் ஈடுபட்டனர். பெண்கள் தங்கள் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர.; பெண்கள் கல்வி கற்றிருந்தாலும் கல்வி பொதுவானதாகவே இல்லை. காதல்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

திருமணங்கள் ரகசியமாகவே இருந்தன.. ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமணம் தவிர்க்க முடியாதது. திருமண பந்தத்தில் தன்னை ஈடுபடுத்தி வாழ்க்கையை முழுமையாக்குகின்றாள். தனக்கு வாய்க்கும் கணவன் வீரம் உடையவனாகவும், அஞ்சா நெஞ்சம் உடையவனாகவும் இருக்க வேண்டுமென விரும்பினர். காளையை அடக்கும் வீரர்கள் , வட்டக்கல் தூக்கும் வீரர்களையே விரும்பினர். வீரம் இல்லாத ஆண்களை ஒதுக்கவும், வீரம் நிறைந்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர் என்பதை,

**“ கொல் ஏற்றுக்கொடு அஞ்சுவானை மறுமையும்**
**புலலாளே ஆயமகள்**
**அஞ்சார்கொலைஏறு கொள்பவர் அல்லதை**
**நெஞ்சினர் தோய்தற்கு அரிய – உயிர்துறந்து**
**நைவாரா ஆயமகள் தோள்” 1 (கலித்தொகை 103)**

தலைவி மறுபிறப்பில் கூட அந்த வீரமற்றவனைத் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்கிறாள். இவ்வாறு தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையானது சங்ககாலத்தில் இருந்துள்ளமை இப்பாடல் வழி புலனாகிறது.

**உடன்போக்கில் உரிமை**

தலைவன் தலைவியின் காதல் மலர்ந்து வாழ்ந்து வந்த களவு வாழ்க்கையானது ஊரார்க்குத் தெரியவரும் முன்னரே தோழி அறத்தொடு நிற்பாள். தலைவனைத் திருமணம் முடிக்க வற்புறுத்துவாள். அதற்கு மாறாக களவு வெளிப்பட்டுவிடும் சூழலில் பலரும் அறிந்து அலர் பேசும் நிலையில் உடன்போக்கு நிகழும்.

அகத்திணை நெறியில் களவு வாழ்க்கைக் கற்பாக மாறுவதற்கு இரண்டு வழிகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஒன்று அறத்தொடு நிற்றல் மற்றொன்று உடன்போக்கு. இவற்றுள் ஒன்று நிகழ்ந்தால் மற்றொன்று நிகழாது. அறத்தொடு நின்ற பின் உடன்போக்கு நிகழாது. அவ்வாறே உடன்போக்கின் பின்னர் அறத்தொடு நிற்பதால் பயன் ஒன்றும் இல்லை. இவ்வாறு தலைவன் தலைவியையும் தலைவி தலைவனையும் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுக்கும் உரிமை சங்ககாலத்திலேயே இருந்துள்ளமை புலனாகின்றது.

இதனைத் தொல்காப்பியர்,

**“கொண்டு தலைக்கழிதலும் பிரிந்து**
**ஆவன் இரங்கலும்**
**ஊண்டு என மொழிப ஓர் இடத்தான”2 (அகத்திணையியல் 17)**

உடன்போக்கு என்பதனைக் "கொண்டு தலைக்கழிதல்" என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. காதல் கொண்ட தலைவன் தன்மீது காதல் கொண்ட தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துச் செல்வதைக் குறிப்பிடுகின்றார்.

இதனை நற்றிணைப் பாடல்,

**"நீவிளை யாடுக சிறிதே, யானே**
**மழகளிறு எரிஞ்சிய பராரை வேங்கை**
**மணல்இரு மருங்கின் இரும்புறம் பொருந்தி**
**அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென்**
**நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே" 3(நற்றிணை 362)**

கைவேலைத் திறமையமைந்த பாவை ஒன்று நடந்து வந்தது போல உன் இல்லத்தின் எல்லையைக் கடந்து என்னோடு வந்து விட்டாய். வருந்தாதே. இந்த அகன்ற காட்டில் உன் உடல் வருத்தம் நீங்க சற்றே இளைப்பாறுக. நான் வேங்கை மரத்தின் பின்னால் மறைந்திருப்பேன். இவ்விடத்திற்கு வழிப்பறி செய்வோர் போர் செய்வோர் வந்தால் அஞ்சாமல் எதிர்த்துப் பேர் செய்து, அவர்கள் புறமுதுகுக் காட்டி ஓடும்படிச் செய்வேன். உன் சுற்றத்தார் உன்னைத் தேடி வந்தால் யான் மறைந்து கொள்வேன் என்கிறான்.

தலைவனை தன் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட தலைவியானவள் இல்லத்தை விட்டு தாய், தந்தையரை விடுத்து வெளியேறுகிறாள். இவளைத் தலைவனானவன் பாதுகாக்கும் முறையினை இப்பாடல் அடிகள் விளக்குகின்றன.

பெற்றோர் உடன்பாடு இல்லாத நிலையில் காதலர் இருவரும் வீட்டை விட்டு வெளியேறும் உடன்போக்குத் திருமணத்தைத் தொல்காப்பியர்,

**"கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே**
**புணர்ந்துடன் போகிய காலை யான"4**

**(பொருளதிகாரம் - கற்பியல் 1087)**

குறிப்பிடுகின்றார்.

களவு வாழ்வு கற்பு வாழ்வாக மாறுவதற்கு முதன்மைக் காரணமாக இருப்பவள் தோழி. தனி மனித உரிமையானது சமூகத்தோடு இணைக்கப்படுகிறது. களவு வாழ்க்கையில் உடன்போக்கு என்பது அறமாகவேத் தெரிகிறது. சங்ககாலத்தில் உலகோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்போக்கு காலப்போக்கில் தமிழ்ச் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட சாதி, மதம், பொருளாதார ஏற்றத்தாழ்வு உள்ளிட்ட பல்வேறு பிரிவினைகளால் அவ்வுரிமை மறுக்கப்பட்டுள்ளதையும்,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

அத்தகைய செயல்பாடு வாழ்வின் ஒழுக்கப்பிழை என்று பழிக்கப் பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது.

**மடலேறும் உரிமை**

பனை மட்டையால் செய்யப்பட்ட குதிரை வடிவமே 'மடல்' ஆகும். தலைவியை அடைய முடியாத தலைவன், உடம்பெல்லாம் திருநீறு பூசிக் கொண்டு கையில் தலைவியின் ஓவியம் கொண்ட கிழியுடன் நாற்சந்தியில் பனைமட்டையால் செய்யப்பட்ட குதிரை மீதேறி நிற்க, பிறர் அதனை இழுத்துச் செல்வர். தலைவன் தலைவி நினைவாகவே இருப்பாள்.

இதனை திருக்குறள்,

**" காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடலல்லது இல்லை வலி"5 திருக்குறள் 1131**

காமநோயால் வருந்தும் தலைவனுக்கு மடலேறுதல் தவிர வேறு ஆறுதல் இல்லை என்று கூறுகிறார்.

குறுந்தொகை இதனை,

**"அமிழ்துபொதி செந்நா வஞ்சி வந்த**
**வார்ந்திலரங்குவை எயிற்றுச்சின்**
**மொழியரிவையைப்**
**பெறுகதில் அம்ம யானே பெற்றாங்கு**
**அறிகதில் அம்மவிவ் ஊரே மறுகி**
**நல்லோள் கணவன் இவனெனப்**
**பல்லோர் கூறாயாஅம் நாணுகஞ் சிறியதே"6குறுந்தொகை14**

அமிழ்தத்தின் இனிமைத்தன்மை பொதிந்த செவ்விய நாவினையுடைய மங்கையே. நேரியதாய் விளங்கும் கூரிய பல்லினையும் சில சொல்லினையுமுடைய இளம்பெண்ணை நான் அடைவேனாக. இதை இவ்வூர் அறியட்டும். நல்லவளான அவள் கணவன் இவன் என்று கூற நான் சிறிது வெட்கமடைவேன்;. இனி அச்சிறு நாணையும் நீக்கி மடலேறுவேன் என்கிறான் தலைவன்.

மடல் எடுப்பவன் தனது செயலின் மூலம் பிறரின் இரக்க உணர்வை தூண்டுகிறான். ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிறான். இருப்பினும் அவன் தனது குறிக்கோளான காதலியை அடைவதிலேயே குறியாக இருக்கிறான். இதன் மூலம் தலைவன் தலைவியின் மீது கொண்டிருக்கும் ஆழமான காதலை எத்தகைய சூழ்நிலையிலும் தனது காதலை வென்றெடுக்க வேண்டும் என்ற மனஉறுதியும் மற்றும் தனிமனித உரிமையும் சங்க அப்பாடல் வழிஅறிய


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

முடிகிறது.

**பரத்தையர் உறவு**

பரத்தமை என்பது தொன்று தொட்டு நெடுங்காலமாக சமுதாயத்தில் இருந்து வரும் பழக்கமாகும். சங்ககாலத்தில் பரத்தமை என்பது இயல்பாக ஏற்றுக் கொள்ளப் பெற்றிருந்தமையையே இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. தலைவன் தலைவியருக்குள் ஊடல் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணமே பரத்தையர்கள் தான் காரணமாகின்றனர். இதனால் ஏற்படும் பிரிவினைக் கூறவரும் இலக்கண ஆசிரியர்கள் ஓதல், பகை, தூது என்ற பிரிவினோடு பரத்தையர் பிரிவினையும் இணைத்துக் கூறியுள்ளனர்.

ஆணாதிக்கச் சமூகம் தன் தேவைக்காக உருவாக்கப்பட்டதே பரத்தை மரபு. அகப்பொருளைக் குறிக்கும் 'அகம்' என்னும் சொல்லை நூலின் பெயராகக் கொண்டுள்ள அகநானூற்றில் தலைவியைத் தனியே தவிக்கவிட்டுப் பரத்தையோடு இன்பம் அனுபவிக்க விரும்பி ஒப்பனை செய்து கொண்டு தெருவைக் கடக்கும் தலைவனைத் தனது பாடலில் கோசிக்கண்ணனார் என்னும் புலவர்,

**" நிரைதார் மார்பன் நெருதல் ஒருத்தியொடு**
**வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்**
**இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்"7(அகநானூறு 66)**

பாடுகிறார்.

**புலவர்களின் உரிமை**

புலவர்கள் மக்கள் சமுதாயத்தின் பிரதிநிதிகளாகவும் மன்னனுக்கும் குடிமக்களுக்கும் இடையே ஒரு பாலமாகவும் திகழ்ந்துள்ளனர் மனித உரிமைகளை பற்றிய செய்திகளை மன்னர்களுக்கு அறிவுருத்துவதற்கு நட்பு ஒரு களமாக அமைந்திருந்தது நட்பு கொண்ட மன்னனிடம் தங்கள் உரிமைகளை எடுத்துரைக்கும் உரிமை சங்க புலவர்களுக்கு இருந்துள்ளது மன்னனைப் பாடி பரிசல் வேண்டுவதை மட்டும் கொள்ளாமல் அவர்கள் தவறு செய்த விடுத்து அஞ்சாது கண்டித்து அறநெறிப்படுத்தும் இயல்பினராவும் புலவர் பெருமக்கள் திகழ்ந்துள்ளனர.;

இதனைத் திருவள்ளுவர்

**"இடிப்பாரை இல்லாத ஏமாற மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்"8. (திருக்குறள் 448)**

கடிந்து அறிவுரை கூறும் பெரியாரின் துணை இல்லா அரசன் தன்னை கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் தானே கெடுவான் என்கிறார.;


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

சோழன் குலமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவன் மலையமான் திருமுடிக்காரியின் குழந்தைகளை யானை காலிட்டுக் கொள்ள முயன்ற போது கோவிற்கிழார் என்னும் புலவர் தடுத்து நிறுத்தினார்

**" நீயே புறவின் அல்லல் அன்றியும்**

**பிறவும்**

**இடுக்கண் பலவும் விழித்தோல் மருகனை**

**இவரே புலன் உழுது உண்மார் புன்கண்"9 (புறநானூறு 46)**

கிள்ளிவளவனிடம் நீ புறா அடைந்த துன்பம் மட்டுமல்லாமல் மற்ற உயிரினங்களின் துன்பத்தையும் கலைந்த சிபியின் வழித்தோன்றல் ஆனால் இவர்களோ தம்மிடத்தில் உள்ளவற்றை பகிர்ந்து உண்ணும் இரக்க குணம் உள்ளவர்களின் மரபில் வந்தவர்கள் ஆதலால் இவர்களை விட்டு விடுவாயாக என்று மன்னன் தவறிழைக்கும் போது தடுத்து நிறுத்துகிறார்

இளந்தத்தன் என்னும் புலவனின் வருகையை ஒற்றன் என நினைத்து நெடுங்கிள்ளியிடம் திரித்துக் கூறுகின்றனர். மன்னன் கொள்ள முற்படும்போது கோவூர்கிழார் தடுத்து நிறுத்துகின்றார.;

**"வள்ளியூர் படர்ந்து புள்ளின் போகி**

**நெடிய எண்ணாது சுரம்பல கடந்து**

**வடியா நாவில் வல்லாங்கு பாடி**

**பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருந்தி" 10 (புறநானூறு - 47)**

பிறருக்கு கொடுத்து தான் பெருமிதம் குறையாமல் வருந்துவது புலவர் தம் பரிசில் வாழ்க்கையாகும.; அது மற்றோருக்கு தீமை செய்வதை அறிந்ததோ இல்லை என்று கூறி மன்னனை தடுத்து நிறுத்தி அவர்தம் தவறுகளை சுட்டிக் காண்பிக்கிறார்

போரை தடுத்தல் வேந்தரின் வீரத்தையும் அவர்தம் போர் வெற்றியும் புகழ்ந்து பாடும் பழந்தமிழ் புலவர்கள் போரை தடுத்து நிறுத்தி அமைதியை ஏற்படுத்தியுள்ளனர் போரின் கொடுமையையும், அறத்தின் அடிப்படையில் விளக்கும் மரப்பன்மையும் விளக்கி போரை தடுத்துள்ளனர்.

சோழன் குளமுற்றத்து துஞ்சியே கிள்ளிவளவன் சேரமான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடன் பகை கொண்டு சேரனின் கருவூர் கோட்டையே முற்றுகையிட்டான். சோழனை எதிர்க்கும் அளவிற்கு தன்னிடம் படைவலிமை இல்லை என்பதை அறிந்த சேரன் கோட்டைக்குள்ளேயே அடங்கியிருந்தான் சோழர் படை கரூர் கோட்டையை சுற்றியுள்ள காவற்கோட்டை அழிந்து தன் காவல் மரம் வெட்டப்படும் ஓசை கேட்டும் வெளிவராது காலம்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

நீட்டினான். அதனால் இரு பெரும் படைகளும் மக்களும் துன்புறுவதை கண்டு, ஆலந்தூர் கிழார் கிள்ளிவளவனிடம் சென்று வேந்தனின் மறப்பண்பை கூறி போரை தவிர்க்க விளைந்தனர் காவல் மரம் வெட்டப்பட்டும் வெளிவராத சேரன் வீரன் அல்ல. அவனுடன் போரிடுவது பெருமை தருவது அல்ல என்று கூறி போரை நிறுத்தினார்

**"கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய**
**இரும்புஉண் நீரினும் மீட்டற்கு அரிதுஎன**
**வேங்கை மார்பன் இரங்க வைகலும்**
**ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்"11( புறநானூறு 36)**

இவ்வாறு புலவரால் மன்னனின் போரை தடுத்து நிறுத்த கூடிய அளவு உரிமை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

**முடிவுரை**

மண்ணில் உயிர்களை புதுப்பித்துக் கொண்டிருக்கும் மாபெரும் சக்தி காதல்;;;;. காதலை பாடாத கவிஞரும் இல்லை இலக்கியமும் இல்லை அனைத்து உயிர்களுக்கும் காதல் என்பது பொதுவானது சங்க காலம் தொட்டு இன்று வரை காதல் பல வடிவங்களில் பாடப்பட்டு வருகிறது. அத்தகைய காதலில் வாழ்க்கை முறை மற்றும் சங்ககாலத்தில் வாழ்ந்த தலைவன் தலைவி மற்றும் புலவர்களின் உரிமைகள் குறித்தும் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. கலித்தொகை பா -103
2. அகத்திணையியல் பா - 17
3. நற்றிணை - பா - 362
4. பொருளதிகாரம் - கற்பியல் நூ - 1087
5. திருக்குறள் குறள் - 1131
6. குறுந்தொகை பா - 14
7. அகநானூறு பா - 66
8. திருக்குறள் குறள் - 448
9. புறநானூறு பா - 46
10. புறநானூறு – பா - 47
11. புறநானூறு பா - 36


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

# 8. புரட்சிகவி பாரதிதாசன் கவிதைகளில் மனித உரிமைச் சிந்தனைகள்

**முனைவர் இரா. பபித்ரா**

உதவிப்பேராசியரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 002, E-Mail – rohithbabithra@gmail.com

Orcid : https://orcid.org/0009-0005-8229-5205

புரட்சிக்கவி" என்று அழைக்கப்படும் பாரதிதாசன், தமிழ் இலக்கிய வரலாற்றில் மனிதஉரிமைச் சிந்தனைகளை கவிதை வழியாக வலுவாக முன்வைத்த கவிஞர் ஆவார். அவரது கவிதைகளில் சமூக நீதியும், சமத்துவமும், பெண்கள் விடுதலையும், கல்வியுரிமை, மொழி உரிமை, மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல்–சமூக உரிமைகளும் ஆழமாக பிரதிபலிக்கின்றன.

பாரதிதாசனின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை ஆய்வுக்குட்படுத்தி, அவற்றில் வெளிப்படும் மனித உரிமைச் சிந்தனைகளின் தன்மை, தாக்கம், மற்றும் அவை உருவாக்கிய சமூக விழிப்புணர்வு ஆகியவற்றை ஆராய்கிறது.

## முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றில் சமூக மாற்றத்திற்காகக் கவிதையை ஆயுதமாகக் கொண்ட புரட்சிக் கவிஞராக பாரதிதாசன் (கனகசுப்புரத்தினம்) விளங்குகிறார். கவிதை என்பது ரசிப்பதற்கான கலை மட்டுமல்ல; அது மனிதனைச் சிந்திக்கவும், சமூக அநீதிகளை எதிர்க்கவும் தூண்டும் சக்தி கொண்டது என்பதை அவர் நிரூபித்தார். மனித மரியாதை, சமத்துவம், சுதந்திரம், பெண்களின் உரிமை, மொழி உரிமை போன்ற மனித உரிமைச் சிந்தனைகள் அவரது கவிதைகளின் உயிராக அமைந்துள்ளன. அடிமைத்தனம், சாதி, மூடநம்பிக்கை, பெண் ஒடுக்குமுறை போன்ற சமூகத் தீமைகளுக்கு எதிராக அவரது கவிதைகள் வலுவான போராட்டக் குரலாக எழுந்தன.

## மனித உரிமை – ஒரு அறிமுகம்

மனித உரிமைகள் என்பது மனிதன் பிறப்பிலேயே பெறும் அடிப்படை உரிமைகள். இவை மனிதனின் மரியாதையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் அடிப்படைத் தளமாகும். சமத்துவம், கருத்துச் சுதந்திரம், கல்வி, மொழி, பெண்சாதிகாப்பு, வாழ்வாதாரம் ஆகியவை மனித உரிமைகளின் முக்கிய கூறுகளாகும். பாரதிதாசன் இக்கருத்துகளை சட்ட மொழியில் அல்ல, கவிதை மொழியில் மக்களிடம் கொண்டு சென்றார்.

## சாதி ஒழிப்புச் சிந்தனையும் மனித சமத்துவமும்

பாரதிதாசன் கவிதைகளில் முதன்மையான மனித உரிமைச் சிந்தனையாக விளங்குவது சாதி ஒழிப்பு ஆகும். மனிதனை மனிதனாக மதிக்க விடாத சாதி அமைப்பு மனித உரிமைகளுக்கு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

எதிரானது என்று அவர் உறுதியாகக் கூறினார். பிறப்பின் அடிப்படையில் உயர்வு–தாழ்வு காட்டுவது மனித மரியாதையை அவமதிப்பதாகும்.

*“சாதி மனிதனைப் பிரிக்கும் கொடிய நோய்”*

என்ற கருத்தின் மூலம், சாதி மனித சமூகத்தில் ஏற்படுத்தும் பிளவுகளை அவர் சாடினார். எல்லா மனிதர்களும் சமம்; உழைப்பே உயர்வுக்குக் காரணம்; பிறப்பு அல்ல என்பதே அவரது மனித உரிமைக் கோட்பாடாகும். சமத்துவமற்ற சமூகத்தில் மனித உரிமைகள் நிலைநிறுத்தப்பட முடியாது என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

**பெண்களின் உரிமை மற்றும் விடுதலைச் சிந்தனை**

பெண்கள் உரிமை குறித்த பாரதிதாசனின் கவிதைகள் மனித உரிமை வரலாற்றில் மிக முக்கியமானவை. பெண்கள் கல்வியின்றி, சுயமரியாதையின்றி, பொருளாதாரச் சுதந்திரமின்றி வாழ வைக்கப்படுவது மனித உரிமை மீறல் என அவர் கருதினார்.

*“பெண் அடிமை நீங்காத நாடு முன்னேறாது”*

என்ற சிந்தனையின் மூலம், பெண்களின் விடுதலையே சமூக முன்னேற்றத்தின் அடையாளம் என்பதை அவர் வலியுறுத்தினார். பெண்கள் ஆண்களுக்கு இணையாக கல்வி பெறவும், தங்கள் வாழ்க்கை முடிவுகளைத் தாங்களே எடுக்கவும் உரிமை பெற்றவர்கள் என அவர் கூறினார். பெண்களை வீட்டிற்குள் அடைத்து வைக்கும் பழக்கவழக்கங்களை அவர் கடுமையாக விமர்சித்தார்.

**கல்வி உரிமை மற்றும் சிந்தனைச் சுதந்திரம்**

கல்வி என்பது மனிதனை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும் சக்தி. கல்வி இல்லாத சமூகம் அறிவில்லாத சமூகம்; அறிவில்லாத சமூகம் அடிமையாகும் என்று பாரதிதாசன் நம்பினார். அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பதும் ஒரு மனித உரிமை என்ற எண்ணத்தை அவரது கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

அறிவை மறுக்கும் எந்த அமைப்பும் மனித உரிமைக்கு எதிரானது. மூடநம்பிக்கைகள், போலி மரபுகள் மனிதனின் சிந்தனைச் சுதந்திரத்தைப் பறிக்கின்றன என்று அவர் கண்டித்தார். சுதந்திரமாக சிந்திக்கும் உரிமை மனிதனின் அடிப்படை உரிமை என்பதே அவரது நிலைப்பாடாகும்.

**மொழி உரிமையும் பண்பாட்டு அடையாளமும்**

பாரதிதாசன் தாய்மொழியான தமிழை மனித உரிமையின் ஒரு பகுதியாகக் கருதினார். மொழி என்பது மனிதனின் அடையாளம். தன் மொழியில் பேசவும், எழுதவும், கல்வி பெறவும் மனிதனுக்கு உரிமை உண்டு.

*“தாய்மொழி இழந்தவன் தன் அடையாளம் இழந்தவன்”*

என்ற சிந்தனை, மொழி உரிமை எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்துகிறது. தமிழின் மதிப்பை காக்க வேண்டும் என்பதன் மூலம், தமிழர்களின் பண்பாட்டு உரிமைகளைப் பாதுகாப்பதே அவரது நோக்கமாக இருந்தது. மொழி ஒடுக்குமுறை மனித உரிமை ஒடுக்குமுறை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

என அவர் கருதினார்.

**சுதந்திரமும் அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டமும்**

அரசியல், சமூக, பொருளாதார அடிமைத்தனங்கள் மனித உரிமைகளின் அடிப்படையை சிதைக்கின்றன. மனிதன் சுதந்திரமாக வாழவும், சிந்திக்கவும், கருத்து தெரிவிக்கவும் உரிமை பெற்றவன். அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்காத சமூகம் முன்னேறாது என்று பாரதிதாசன் கூறினார்.

*"அநீதியை எதிர்க்காதவன் மனிதன் அல்ல"*

என்ற கருத்தின் மூலம், உரிமைகளுக்காகப் போராட வேண்டிய கடமையை அவர் வலியுறுத்தினார். சுதந்திரம் என்பது அரசியல் விடுதலையுடன் மட்டுமல்ல; சமூக மற்றும் மனநிலை விடுதலையுடனும் தொடர்புடையது என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

**மனித மரியாதை மற்றும் சுயமரியாதைச் சிந்தனை**

மனித உரிமைகளின் மையம் மனித மரியாதை. சுயமரியாதை இல்லாத மனிதன் உண்மையான மனிதன் அல்ல என்ற கருத்து பாரதிதாசனின் பல கவிதைகளில் காணப்படுகிறது. அடக்குமுறைகளுக்கு அடிபணிவதை அவர் ஏற்கவில்லை. மனிதன் தலைநிமிர்ந்து வாழ வேண்டும்; அவனது மரியாதையை யாரும் பறிக்கக் கூடாது என்பதே அவரது அடிப்படை மனித உரிமைச் சிந்தனையாகும்.

**முடிவுரை**

பாரதிதாசன் கவிதைகள் மனித உரிமைகளுக்கான புரட்சிக் குரல்களாகத் திகழ்கின்றன. சாதி ஒழிப்பு, பெண்கள் உரிமை, கல்வி, மொழி உரிமை, சுதந்திரம், மனித மரியாதை ஆகிய அனைத்தும் அவரது கவிதைகளில் ஒரே கோட்பாடாக இணைகின்றன. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதே அவரது இலக்கியத்தின் நோக்கம். இன்றைய சமூகத்திலும் மனித உரிமைகள் தொடர்பான சிந்தனைகளுக்கு பாரதிதாசன் கவிதைகள் ஒரு வலுவான வழிகாட்டியாக உள்ளன.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 9. மனித உரிமைகளின் வளர்நிலையும் இலக்கிய போக்கும்

**முனைவர் ஞா.எலிசபத் ராணி**

**உதவிப்பேராசிரியர், புனித சிலுவை தன்னாட்சிக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

**ஆய்வுச்சுருக்கம்**

அமைதி, சுதந்திரம், நீதி என்ற பொதுப் பெருநலன்கள் உலகெங்கிலும் நீக்கமற நிறைந்து காணப்படவும், தனிமனித மாண்புகள் சிதைவுறாது காக்கப்படவும் மனித வாழ்வின் மேன்மை யாண்டும் மிளிர்ந்து ஒளிரவும்மிகமிக இன்றியமையாத இயங்குதளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது மனித உரிமைகளே ஆகும். மனித உரிமைகளின் இன்றியமையாமையை உணர்ந்துதான் அவற்றைப் பெற்றடையவும், பெற்றுத் தடைகளின்றித் துய்த்துணரவும், காலந்தோறும் போற்றத்தக்க கொள்கைகள் நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

மனிதர்களாகப் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் அடிப்படையிலேயே உரிய 'மனித உரிமைகள் பற்றிய தெளிவினை நாம் பெற்றுக் கொண்டால்தான் மனிதகுலத்தவர் யாவரும் மனித உரிமைகளை முழுமையாக பெறமுடியும் என்பதில் ஐயமில்லை. தனிமனித மேன்மையை, மனித குல வளர்ச்சியை ஊக்குவிக்காத இலக்கியம் இருக்க முடியாது. ஆகவே மனித உரிமைக் கருத்துக்களை நயம்பட எடுத்துச் சொல்ல, மக்கள் எண்ணத்தில் மனித உரிமைப் பண்பாட்டுக் கூறுகள் வளர்க்கப்பட, வாழ்க்கையின் சிக்கல்களைக் கடந்து மனித உரிமைப் பண்பின் பாடறிந்து ஒழுகச் செய்ய எம்மொழியில் இருப்பினும் இலக்கியக் கருத்துக்கள் பெயர்த்துக் கொணரப்பட வேண்டும். மக்களை செம்மைப்படுத்தும் உயரிய நோக்கங்கள் இலக்கியங்களின் வேர்கள் யாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பதால் தான், நன்றறிந்து மக்கள் நன்னெறிகொள்ள உதவும் இன்கனிகள் ஈயும் பயன் மரங்களாய் இலக்கியங்கள் சமுதாயத்தில் ஓங்கி உயர்ந்து நிற்கின்றன.'உயர்ந்தன' என்பன யாவை என்பதைச் சமுதாயத்தில் நிலை நிறுத்தி மக்கட் பண்பு வளரச் செய்து சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பாத்தியமைப்பதும் இலக்கியங்களே.அத்தகைய இலக்கியங்களில் மனித உரிமைகள் அமைந்திருக்கும் பாங்கினையும்,அவற்றின் வளர்நிலைகளையும் ஆய்வதே நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை:**

மனித உரிமைகள் என்பது ஒவ்வொரு மனிதனும் மனிதனாகப் பிறந்ததன் மூலம் இயற்கையாகப் பெறும் அடிப்படை உரிமைகளாவன உயிர் பாதுகாப்பு, மரியாதை, சமத்துவம், சுதந்திரம், கல்வி, நீதியுரிமை, கருத்து விமர்சன உரிமை, கலாச்சாரம் பண்பாடு சார்ந்த உரிமை போன்ற பன்முகமான உரிமைகள் இன்றைய உலகளவில் மனித நாகரிகத்தின் மையமாகவும்.அடிப்படையாகவும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

இருக்கின்றன. மனித உரிமைகளாவன உலக நாடுகளின் அரசியல் சட்டங்கள், ஐ.நா. மனித உரிமைகள் அறிவிப்பு போன்ற ஆவணங்களில் விரிவாக பதிவு செய்யப்பட்டாலும், அதன் அடிப்படைச் சிந்தனைகள் மிகப் பழமையான காலத்திலிருந்தே மனித சமுதாயங்களில் இலக்கிய வடிவில் நிலைத்திருந்தன.இலக்கியம் என்பது மனித அனுபவங்களின் களஞ்சியம். மனித வாழ்க்கையின் உயர்வும் தாழ்வும், சுகமும் துக்கமும், சுதந்திரமும் சமத்துவமும், நீதியும் அநீதியும் இவை அனைத்தும் இலக்கியத்தில் பிரதிபலிக்கும்போது, அது நமக்கு மனித உரிமை உணர்வு எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதற்கு சான்றாகிறது. மனிதர்களாகப் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் அடிப்படையிலேயே உரிய 'மனித உரிமைகள் பற்றிய தெளிவினை நாம் பெற்றுக் கொண்டால்தான் மனிதகுலத்தவர் யாவரும் மனித உரிமைகளை முழுமையாக பெறமுடியும் என்பதில் ஐயமில்லை. தனிமனித மேன்மையை, மனித குல வளர்ச்சியை ஊக்குவிக்காத இலக்கியம் இருக்க முடியாது. ஆகவே மனித உரிமைக் கருத்துக்களை நயம்பட எடுத்துச் சொல்ல, மக்கள் எண்ணத்தில் மனித உரிமைப் பண்பாட்டுக் கூறுகள் வளர்க்கப்பட, வாழ்க்கையின் சிக்கல்களைக் கடந்து மனித உரிமைப் பண்பின் பாடறிந்து ஒழுகச் செய்ய எம்மொழியில் இருப்பினும் இலக்கியக் கருத்துக்கள் பெயர்த்துக் கொணரப்பட வேண்டும். மக்களை செம்மைப்படுத்தும் உயரிய நோக்கங்கள் இலக்கியங்களின் வேர்கள் யாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பதால் தான், நன்றறிந்து மக்கள் நன்னெறிகொள்ள உதவும் இன்கனிகள் ஈயும் பயன் மரங்களாய் இலக்கியங்கள் சமுதாயத்தில் ஓங்கி உயர்ந்து நிற்கின்றன.'உயர்ந்தன' என்பன யாவை என்பதைச் சமுதாயத்தில் நிலை நிறுத்தி மக்கட் பண்பு வளரச் செய்து சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பாத்தியமைப்பதும் இலக்கியங்களே. அத்தகைய இலக்கியங்களில் மனித உரிமைகள் அமைந்திருக்கும் பாங்கினையும் அவற்றின் வளர்நிலைகளையும் ஆய்வதே நோக்கமாக அமைகிறது.

**மனித உரிமைகளின் வளர்நிலை::**

**மனித உரிமைகள் அறிமுகம்**

அமைதி, சுதந்திரம், நீதி என்ற பொதுப் பெருநலன்கள் உலகெங்கிலும் நீக்கமற நிலவிடவும், தனிமனித மாண்பு சிதைவுறாது காக்கப்பட்டு மனித வாழ்வின் மேன்மை யாண்டும் மிளிரவும் மிகமிக அவசியமான இயங்குதளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது மனித உரிமைகள் ஆகும். மனித உரிமைகளின் இன்றியமையாமையை உணர்ந்துதான் அவற்றைப் பெற்றடையவும், பெற்றுத் தடைகளின்றித் துய்த்துணரவும், காலந்தோறும் போற்றத்தக்க முயற்சிகள் நாடுகள் யாவற்றிலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.'மனிதர்களாகப் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் அடிப்படையிலேயே உரிய ' மனித உரிமைகள் பற்றிய தெளிவினை நாம் பெற்றுக் கொண்டால்தான் மனிதகுலத்தவர் யாவரும் மனித உரிமைகளை முழுமையாக வென்றடைந்து துய்த்துவர நமது பங்களிப்பினைச் செம்மையாகச் செலுத்த முடியும்.

**மனித உரிமைகளுக்கான அடிப்படை:**

'பிறப்பால் மனிதர் யாவரும் சமமே ' ஆகையால் அவர்களிடையே இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் சார்பு அல்லது மாற்றுக் கருத்துடைமை, சமூகப் பிரிவு, சொத்து மதிப்பு, குலப்பிறப்பு முதலிய எந்த அடிப்படையிலும் எதற்காகவும் வேறுபாடு ஏதும் காட்டலாகாது என்பதைத்தான் அம்முழக்கத்தின் நடைமுறை விளக்கமாக நாம் கொள்ள வேண்டும். "விதிக்கிறதோர் அதை செய்லும் எதை செய்தல் தகாதது என்று தடுக்கின்றதோ அதைச் செய்யாதிருத்தலும் சட்டப்படியான நமது மனித உரிமைகளைப் பேணுதல் மனிதனுக்குரிய கடமையாகும்" இஇராஜ முத்திருளாண்டி.தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைகள்.ப.**19**அவற்றை மீறுதல் என்பது தார்மீகத் தவறு; சட்டப்படியான குற்றம்.

**மனித உரிமைகளின் பழமை**

மனித உரிமைக் கருத்துக்கள் ஏதோ இதுவரை இல்லாத புதுமையாக எங்கிருந்தோ முளைத்து வந்திருப்பதாகக் கருத இடமில்லை. மனித வரலாற்றில் விடுதலை, சமத்துவம், மனித மாண்புகள் ஓங்க விளைந்துள்ள அனைத்துப் புரட்சிகளின் திரண்ட வாரிசாகக் கருதப் படத்தக்கவை மனித உரிமைகள். சுதந்திர உணர்வுடைய மனிதன் எவருடைய வற்புறுத்தலும் இல்லாமல் தான் விரும்பிய ஒரு அமைப்பினுள் (குடும்பம் ஃ குழு) இணைந்து வாழ ஆரம்பித்து, அதன்பின் வளர்ச்சி நிலைகளில் பயணித்து, அரசியல் சமூகமாக நிலைபெறத் தொடங்கிய காலம் முதலே 'நீதியற்றது அல்லது முறையற்றது' எனத் தான் கருதும் எதனையும் - தனக்கு இயல்பாக செயல்பட்டு வந்திருப்பதை அறியமுடிகிறது.

**உரிமை வளர்ச்சி:**

பழங்காலச் சட்டக் கோட்பாடுகளில் தனி மனித உரிமைகளுக்கு மிக அதிக முக்கியத்துவம் எதுவும் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. தனி மனித உரிமைகள் என்பன அரசுத் தலையீட்டிற்கு அப்பாற்பட்டவை அல்ல என்ற அடிப்படையில்தான் வரலாற்றின் வைகறைகளில் சட்டக் கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. தெளிவான வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ள காலங்களின் தொடக்கத்திலிருந்து பார்க்கும்போது, **1188** இல் ஐபீரிய தீபகற்பத்து லியான் அரசின் கோர்ட்டஸ் (ஊழசவநள) அவைக்கு அரசர் ஒன்பதாம் அல்போன்சா (முiபெ யுடகழளௌழ ஐஓ ) வழங்கியதாக அறியப்படும் உரிமைகள் மிகவும் பழமை பெறுகின்றன. இம்மென்றால் சிறைவாசம் ஏனென்றால் தலையறுப்பு என்ற சூழல்கள் இருந்து வந்த அந்தக் காலத்தில் 'குற்றம் சாட்டப்பட்டவருக்கு ' முறையான விசாரணை பெற உரிமை, தனி மனிதன் உயிருக்கு தகுதிக்கு, வீட்டுக்கு, சொத்துக்குப் பாதுகாப்புரிமை என்பனவற்றை மன்னர் அல்போன்சா வழங்கினார் என்பதை அறியும்போது உரிமை வரலாற்றின் தொடக்கம் தெளிவாகிறது. "தனி மனிதப் பாதுகாப்பு குற்ற நடைமுறை முதலிய துறைகளில்தான் ஆரம்பக் காலங்களில் உரிமைகள் வலியுறுத்தப்பட்டன. அவை சட்டப்பூர்வமானவை என்று நிறுவப்பட்டன." இஇராஜ முத்திருளாண்டி.தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைகள்.ப.**24** மனித உரிமைகளின் வளர்ச்சியைக் காண முற்படும்போது, நேரடியாக மனித உரிமைக் கிளர்ச்சி எனச் சொல்ல முடியாவிட்டாலும் கூட


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

ஏதாவதொரு வகையில் மனித உரிமைக் கூறுகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்ற பல நிகழ்வுகளைக் காண முடியும். அவ்வகையில் கைது செய்யப்பட்ட நிலப் பிரபுகளுக்கு ஆளைக் கொணர்க எனும் நீதிமன்ற ஆணை பெறும் சலுகை ( உரிமையல்ல) வழங்கப்பட்டது (போலந்து, **1430)** பிரிட்டிஷ் தலையீட்டின் மூலம் ஆட்டோமென் அரசிடமிருந்து கிரீஸ் நாடு பெற்ற விடுதலை **(1827-30)** இந்தியாவில் இந்து விதவைகள் திருமணச் சட்டம் **(1856)** நிறைவேற்றப்பட்டது.

**பிறநாடுகளில் உரிமைகளின் வளர்ச்சி**

இங்கிலாந்தில் இக்கால கட்டங்களில் இவ்வாறு எழுந்த கிளர்ச்சிகளும் அதன் விளைவுகளும், பிற நாடுகளில் தாக்கங்களை ஏற்படுத்தின. "அமெரிக்க விடுதலைப் பிரகடனம் **(1776)** வர்ஜீனிய விடுதலைப் பிரகடனம் **(1776)** பிரான்சில் அறிவிக்கப்பட்ட உரிமைகள் பிரகடனம் **(1789)** ஆகியவை உரிமை வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்" இஇராஜ முத்திருளாண்டி.தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைகள்.ப.**27** அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் விளைந்த உரிமைகளுக்கான போராட்டங்களின் வெற்றிகள் உலகெங்கும் மகிழ்வினைப் பரப்பின எனலாம். **19, 20**ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, கரிபீயன் பகுதியில் பல நாடுகளில் உரிமைக் கிளர்ச்சிகள் வெடித்தன. உருவாக்கப்பட்ட பல நாடுகளது அரசியலமைப்புச் சட்டங்களில் **'**தனிமனித உரிமைகளுக்கான

**இலக்கியத்தில் மனித உரிமைகள்**

உத்திரவாதம்' (புரயசயவெநந கழச ஐனெ**i**எனைரயட ட**i**டிநசவனைள ) முக்கியமாக வலியுறுத்தப்பட்டு இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும். **1917**ல் ருஷ்யாவில் வெடித்த சோவியத் புரட்சி உரிமைப் போராட்டங்களுக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்தது. கிட்டத்தட்ட தொடக்க காலங்களிலிருந்து **17, 18** நூற்றாண்டுகளின் இறுதிவரை உரிமைகள் தொடர்பான போராட்டங்கள் பெரும்பாலும் தற்போது குடியுரிமை அரசியல் உரிமை (ஊ**i**எடை யனெ **P**ழடவை**i**உயட சு**i**பாவள ) என நாம் தொகுத்துப் பார்க்கும் களங்களையொட்டியே நிகழ்ந்தன.

**மனித உரிமைகள் அறிமுகம்**

அமைதி, சுதந்திரம், நீதி என்ற பொதுப் பெருநலன்கள் உலகெங்கிலும் நீக்கமற நிலவிடவும், தனிமனித மாண்பு சிதைவுறாது காக்கப்பட்டு மனித வாழ்வின் மேன்மை யாண்டும் மிளிரவும் மிகமிக அவசியமான இயங்குதளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது மனித உரிமைகள் ஆகும். மனித உரிமைகளின் இன்றியமையாமையை உணர்ந்துதான் அவற்றைப் பெற்றடையவும், பெற்றுத் தடைகளின்றித் துய்த்துணரவும், காலந்தோறும் போற்றத்தக்க முயற்சிகள் நாடுகள் யாவற்றிலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.'மனிதர்களாகப் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் அடிப்படையிலேயே உரிய ' மனித உரிமைகள் பற்றிய தெளிவினை நாம் பெற்றுக் கொண்டால்தான் மனிதகுலத்தவர் யாவரும் மனித உரிமைகளை முழுமையாக வென்றடைந்து துய்த்துவர நமது பங்களிப்பினைச் செம்மையாகச் செலுத்த முடியும். தனிமனித மேன்மையை,

மனித குல வளர்ச்சியை ஊக்குவிக்காத இலக்கியம் இருக்க முடியாது. ஆகவே மனித உரிமைக் கருத்துக்களை நயம்பட எடுத்துச் சொல்ல, மக்கள் எண்ணத்தில் மனித உரிமைப் பண்பாட்டுக் கூறுகள் வளர்க்கப்பட, வாழ்க்கையின் சிக்கல்களைக் கடந்து மனித உரிமைப் பண்பின் பாடறிந்து ஒழுகச் செய்ய எம்மொழியில் இருப்பினும் இலக்கியக் கருத்துக்கள் பெயர்த்துக் கொணரப்பட வேண்டும் மனித உரிமைகள் ஒரு நாளில் உருவான சிந்தனை அல்ல ஆயிரக் கணக்கான ஆண்டுகள் மனித சமூகம் அனுபவித்த போராட்டங்கள், அடக்குமுறைகள், விடுதலை முயற்சிகள் ஆகியவற்றின விளைவாக உருவாகியது. அரசியல் அல்லது சட்ட வடிவில் வெளிப்படும் முன்பே, இலக்கியம் மனித உரிமை உணர்வை வடிவமைத்தது எனலாம்.

**பழங்கால இலக்கியங்களில் மனிதநேயம்:**

மகாபாரதம், இராமாயணம், திருக்குறள் போன்ற நூல்களில் மனித வாழ்வியல், தர்மக்கோட்பாடு, அன்பு, நீதி ஆகியவை வலியுறுத்தப்பட்டது.கிரேக்கப் புராணங்களில் சுதந்திரம் மற்றும் தனிநபர் கண்ணியம் பற்றிய கருத்துகள் இருந்தன. சீன இலக்கியங்களில் குங்கூசியஸ் சமத்துவம் மற்றும் அறத்தை நேரிய கருத்துக்களை எடுத்தியம்பினார். இவை அனைத்தும் மனித உரிமைகளின் வரலாற்று தளத்தை அமைத்தன.

தமிழ்ச் சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்

தமிழ் இலக்கியம், குறிப்பாக சங்க ,இலக்கியம் மனித உரிமை உணர்வை மிகவும் பழங் காலத்திலேயே பிரதிபலித்தது. சுமார் இரண்டிஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் மனித மதிப்பீடு உயர்ந்த பண்பாகக் கருதினர்.

**உயிர் மற்றும் பாதுகாப்பின் உரிமை**

அரசனின் கடமை மக்களைப் பாதுகாப்பது; புறநானூறு ,தனை மிக வலியுறுத்துகிறது.

“ஒன்னார் துன்பம் தணித்தல் குடியோன் பண்பு”—மக்களின் துன்பத்தை போக்குதல் அரசனின் கடமை.

**சமத்துவம்**

அகநானூறு மற்றும் நற்றிணை மனித உணர்ச்சி மீது அமைந்தவை; சாதி—செல்வ வேறுபாடுகளை மிகக் குறைவாகவே கூறுகின்றன.மனிதன் அனைத்திற்கும் மேலானவர் என்பதை வலியுறுத்தும் சமத்துவ அடிப்படைச் சிந்தனை ,தில் ,ருக்கிறது.

**பெண்களின் உரிமை**

சங்க இலக்கிய பெண்கள் அறிவு, கண்ணியம், துணிவு, சுதந்திரம், கருத்து—கொண்டவர்களாக வர்ணிக்கப்படுகின்றனர்.அகப்பாடல்கள் பெண்களின் மனஉணர்ச்சியை மிக நுணுக்கமாகக் காட்டுவதன் மூலம் அவர்களின் மரியாதையை உறுதிப்படுத்துகிறது.

**நீதி மற்றும் நல்லாட்சி**

கொடுங்கோன்மை கேவலமானதாகவும், நற்கோன்மை உயர்வாகவும் குறிப்பிடப்படுகிறது.

நல்லாட்சி என்பது மக்களின் நலனில் செயல்படும் அரசாட்சியாக சங்க இலக்கியத்தில் வர்ணிக்கப்படுகிறது.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

**சமூகப் பொறுப்பு**

விருந்தோம்பல், ஏழைகளுக்கு உதவி, ஒற்றுமை ஆகியவை சங்க சமூகத்தின் மனிதநேய அடையாளங்கள்.திருக்குறளில் மனித உரிமைச் சிந்தனைகள்.திருக்குறள் மனித உரிமைகளின் மிகப் பெரிய இலக்கியச் சாசனம் எனக் கூறலாம். குரல் எந்தப் பாகத்திலும் மனித கண்ணியத்தை எதிர்ப்பதில்லை.

**அரசியல் மற்றும் நல்லாட்சி**

"அரசியாமை ஆட்சி கடல்பொருள் போலும்"—பாதுகாப்பான ஆட்சி மக்களின் உயிரைக் காக்கும் கடல் அணை போன்றது.நீதியை வழங்குவது அரசனின் முதல் கடமை என்று குறள் வலியுறுத்துகிறது.

**சமத்துவம்**

"ஒழுக்கம் உடைமை உயர்ந்தது"—மனிதனை உயர்த்துவது அவனது ஒழுக்கமே.

பிறப்பால் அல்ல, பண்பால் மனிதன் மதிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலிமையாக உள்ளது.

**பெண்களின் உரிமை**

கன்னி, மனைவி, தாய் ஆகியோரின் உயர்வை குரல் பல இடங்களில் விளக்குகிறது.

**பொது மனிதநேயம்**

கொலை, பொய், வன்முறை, துன்புறுத்தல், பழித்தீங்கு ஆகியவற்றை குறள் கண்டிக்கிறது.

அன்பு, அருள், அறம், தர்மம்—,வை மனித உரிமைகளின் அடித்தளம்.

**பக்தி இலக்கியத்தில் மனித உரிமைகள்**

பக்தி இயக்கம் சமூக சமத்துவத்தை வலியுறுத்திய ஒரு பெரிய மனித உரிமை ,யக்கமாகப் பார்க்கப்படுகிறது.

**சாதி ஒழிப்பு**

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிக்கவாசகர் ஆகியோர் சமத்துவத்தை வலியுறுத்தினர்.

நாயன்மார்—ஆழ்வார் பாடல்களில் அனைத்து ஜாதிகளும் இறைவனிடம் சமம் என்ற சிந்தனை ஆழமாக நிறைந்திருக்கிறது.அன்பும் கருணையும்மனிதனை நேசிப்பதே இறைவனைக் கொள்கை செய்வதென பக்தி இலக்கியங்கள் போதித்தன.

**நடுகால மற்றும் மறுமலர்ச்சி ,லக்கியங்களில் மனித உரிமை**

காப்பிய இலக்கியங்கள்

சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் சமூக நீதி மற்றும் பெண்களின் உரிமைகள் வலிமையான வகையில் காணப்படுகின்றன.

**சிலப்பதிகாரம்:**

கண்ணகி தன்னுடைய கணவன் குற்றமில்லாமல் கொல்லப்பட்ட அநீதி எதிரான போராட்டம்—இது ஒரு பெண்மணி மனித உரிமைக்காக எழுச்சி ஏற்படுத்திய புரட்சி.

**மணிமேகலை:**

புத்த மதத்தின் கருணை, அறம், அன்பு ஆகியவை மனித உரிமைகளை வடிவமைக்கின்றன.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**நவீன தமிழ் இலக்கியத்தில் மனித உரிமை இயக்கங்கள்**

**18–20**ஆம் நூற்றாண்டுகளில் சமூக சீர்திருத்த இயக்கங்களுடன் மனித உரிமை உணர்வு மேலும் வலுத்தது.

சுதந்திர இயக்க இலக்கியம்

பாரதி: பெண்களின் உரிமை, கல்வி, சமத்துவம், சுதந்திரம் ஆகியவற்றை வலியுறுத்தினார்.பாரதிதாசன்: சாதி ஒழிப்பு, பெண்சாதி உயர்வு, தொழிலாளர் உரிமை ஆகியவற்றை எழுதினார்.தலைவாசல், தொழிலாளர் இயக்கம், சிறுபான்மை குரல்கள் பாவேந்தர் பாரதிதாசன், ஜெயகாந்தன், சு.தமிழ்ச்செல்வன், பி.சி.ஜி.கந்தன் போன்றவர்கள் தொழிலாளர் உரிமை, பெண்கள் மீதான வன்முறை, சமூக ஒடுக்குமுறை ஆகியவற்றை கருத்துக்களாக எடுத்தனர்.

**உலக இலக்கியத்தில் மனித உரிமைகள்**

**கிரேக்க நாடகங்கள்:**

சோபக்ளீஸ் எழுதிய அண்டிகோன் பெண்களின் கண்ணியம் மற்றும் நீதி உரிமையை வலியுறுத்துகிறது.

**ரஷ்ய இலக்கியம்**

தொல்ஸ்தாய், தஸ்தோயெவ்ஸ்கி ஆகியோர் மனித கண்ணியத்தையும் சமத்துவத்தையும் பேசினர்.

**அமெரிக்க மற்றும் ஆஃப்ரிக்க இலக்கியம்**

அடிமைத்தனம், இனவாதம், சமூக அநீதி ஆகியவற்றுக்கு எதிராக எழுந்த படைப்புகள் மனித உரிமை இலக்கியத்தின் அடிப்படைகள்.

**இலக்கியம்**

மனித உரிமைகளுக்கான கண்ணாடிஇலக்கியம் ஒரு சமூக ஆவணம்; அது காலத்தின் உண்மையை வெளிப்படுத்துகிறது.அநீதி காணப்பட்டால் அதை வெளிப்படுத்துகிறது.சமத்துவத்தை கோருகிறது.மனிதனைக் காக்கும் குரலாக மாறுகிறது.மனித உரிமைகள் என்ற கருத்து நவீன காலத்தில் சட்ட வடிவம் பெற்றிருந்தாலும், இலக்கியம் அதைப் பல ஆயிராண்டுகளுக்கு முன்பே மனிதர்களிடத்தில் விதைத்து வளர்த்துள்ளது.

**இலக்கியங்களின் சமுதாயபோக்கு:**

மக்களை செம்மைப்படுத்தும் உயரிய நோக்கங்கள் இலக்கியங்களின் வேர்கள் யாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பதால் தான், நன்றறிந்து மக்கள் நன்னெறிகொள உதவும் இன்கனிகள் ஈயும் பயன் மரங்களாய் இலக்கியங்கள் சமுதாயத்தில் ஓங்கி உயர்ந்து நின்கின்றன.'உயர்ந்தன' என்பன யாவை என்பதைச் சமுதாயத்தில் நிலை நிறுத்தி மக்கட் பண்பு வளரச் செய்து சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பாத்தியமைப்பதும் இலக்கியங்களே. இஇராஜ முத்திருளாண்டி.தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைகள்.ப.**12** இலக்கிய நூலறிவின்றி மக்கள் விலங்குகளாய் நின்று விடுவர் என்ற எச்சரிக்கை குறள் வழி ஒலித்திருப்பதை அறிவோம். **'**விலங்கொடு மக்கள் அனையர்**;**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் - குறள் **410**

ஆகவே, ஏற்கனவே குறிப்பிட்டதுபோலத் தனிமனிதனுக்கு மட்டுமல்ல. சமுதாயச் சீர்மைக்கும் இலக்கியம்தான் அமிழ்து.சமுதாயத்தின் குரலாக ஒலிக்காத இலக்கியம் அந்நியப்பட்டுப்போகும்; நிலைப்பதும் அரிது. போரும் காதலும் இலக்கியப் பொருள்களாக விளங்கிய காலம் இருந்தது. காலந்தோறும் எட்டும் வளர்ச்சிகளுக்கேற்ப உருவாகும் சமுதாயச் சிக்கல்கள் - கல்வி, சாதியொழிப்பு, சமநீதி, பெண்ணுரிமை, விதவைத் திருமணம், தீண்டாமை, சமதர்மம், சமய ஒற்றுமை, தொழிலாளர் நலன், குழந்தைகள் நலன் ஆகியன போன்ற இன்றையச் சிக்கல்கள் - இலக்கியங்களில் எழுப்பப்படுவதுடன், அச்சிக்கல்களுக்குத் தீர்வுகள் காணச் சமுதாயம் கொண்டிருக்கும் இலட்சியங்களையும், மேற்கொள்ளும் செயல்பாடு களையும் ஊக்குவிப்பதாகத் திறனாய்வு செய்வதாகத் தற்கால இலக்கியங்கள் இருப்பதை மறுப்பதற்கில்லை. (தொ.பொ.மீனாட்சி சுந்தரம், **1963)** 'சுதந்திரம் நீதி, அமைதி' என்பவை மனித உரிமைப் பண்பாட்டிற்கான விதைகள் ; வித்தைகள் ! அவை குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் தனியுடைமையல்ல. உலகப் பொதுமை கொண்ட விழுமியங்கள் அவை. 'உலகெலாம் உணர்ந்து ஓதுதற்குரியவை ஒழுகத்தக்கவை. உலகில் தோன்றியுள்ள இலக்கியங்கள் எதுவும் இவ்விழுமியங்களுக்கெதிராகவோ, இவற்றை வலியுறுத்தாமலோ கருத்துக்களைக் கொண்டிருப்பதாகக் கூறவே முடியாது. தற்போது வேண்டப்படும் மனித உரிமைப் பண்பாட்டின் அடிப்படையாகக் கொள்ளப்படும் இவ்வுயரிய விழுமியங்களுடன் மனிதமாண்பு, சமத்துவம் ஆகியவையும் இணைத்து வலியுறுத்தப்படுகின்றன.

**முடிவுரை**

இலக்கியம் மனித வாழ்வின் வரலாற்று ஆவணமாக மட்டுமல்ல் அது மனித உரிமைகளின் வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் இருக்கிறது. தமிழ் இலக்கியம் முதல் உலக இலக்கியம் வரை அனைத்திலும் மனிதனின் மரியாதை, நலன், பாதுகாப்பு, சமத்துவம், கல்வி, பெண்களின் உரிமை, சமூக நீதி ஆகிய சிந்தனைகள் வலிமையாகக் காணப்படுகின்றன.

அதனால், இலக்கியம் என்பது மனித உரிமைகளின் தந்தை, தாய், காவலன், வழிகாட்டி—யடட **in** ழநெ. மனித உரிமைகள் என்னும் எண்ணத்தைக் கலாச்சாரமாக, உணர்வாக, சிந்தனையாக மனித குலத்திற்கு வழங்கியது இலக்கியமே. எல்லோர்க்கும் எல்லா உரிமையும் இருப்பதான நிலைநோக்கி இவ்வையம் பீடு நடைபோட வேண்டும் என்பதே இன்றைய இலக்கியத்தின் விழைவு; சமுதாயத்தின் விழைவு; மனித உரிமைக் கோட்பாடுகளின் விழைவு ! இலக்கியம் - சமுதாயம் - மனித உரிமைகள் என்ற முக்கோணமே இக்கோளத்தின் வாழ்வைச் செம்மைப்படுத்தச் சிறந்த ஏற்பாடாக அமைகிறது எனலாம்.

**துணைநூற்பட்டியல்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)
Tamilmanam

**[1].** இராச முத்திருளாண்டி, *தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைகள்*, குமரன் பதிப்பகம், சென்னை.

**[2].** ஆ. ஜெகதீசன், *இலக்கியத்தில் மனித உரிமைக்கோட்பாடுகள்*, தாமரை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

**[3].** தொ.பொ. மீனாட்சி சுந்தரம், *தமிழ் இலக்கிய வரலாறு*.

Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 10. 21-ஆம் நூற்றாண்டில் தந்தை பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள் - மனித உரிமைக்களத்தில் தொடரும் பயன்பாடு

**முனைவர்வெ.பிரேமலதா**

உதவிப்பேராசிரியர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 002, அலைபேசி - 9443185022

மின்னஞ்சல் முகவரி – darshansarvesh@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

தந்தை பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துக்கள் அவரது காலத்தை விட மிகவும் முற்போக்கானதாகவும், புரட்சிகரமாகவும் இருந்தது. பெண்ணுரிமை என்பது பெண்களுக்கு எதிரான பாலினப் பாகுபாட்டையும், சமத்துவமின்மையையும் எதிர்த்து, சமூக அரசியல் பொருளாதார, தனிப்பட்ட தளங்களில் சமமான உரிமைகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டதாகும். இவரது சிந்தனைகள் இன்றுவரை பெண்விடுதலைக்கும், பாலின சமத்துவத்திற்கும் அடிப்படையாக விளங்குகின்றது. இத்தகைய உரிமைகளைப் பெண்களுக்கு பெற்றுத் தந்த தந்தை பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகளை எடுத்துரைப்பதே ஆய்வு நோக்கமாகக் கருதப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்**

1. இஷ்டம் - விருப்பம்
2. நிர்ணயம் - முடிவு செய்தல்
3. இலட்சியம் - குறிக்கோள்
4. பால்ய விவாகம் - குழந்தைத்திருமணம்
5. கல்யாணம் - திருமணம்
6. போர்டு - குழுமம்
7. தேவஸ்தானம் - கோயில்

**ஆய்வு முன்னுரை**

**'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்'** என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, பிறப்பால் எல்லோரும் சமம். இதன் அடிப்படையில் மனிதனை மனிதனாக மதிப்பதே மனித உரிமை. இந்த உரிமைகள் தேசியம், பாலினம், இனத்தோற்றம், நிறம், மதம், மொழி அல்லது வேறு எந்த படிநிலைகளையும் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் இயல்பாகவே உள்ளன. பாலின உரிமை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

என்பது பாலினத்தின் அடிப்படையில் அனைவருக்கும் சமமாக நடத்தப்படுவதையும், சமமான வாய்ப்புகளையும், உரிமைகளைப் பெறுவதைக் குறிக்கின்றது. இந்த பெண்ணுரிமை பாலியல் வன்முறையிலிருந்து விடுபடுதல், வாக்குரிமை, கல்வி, சொத்துரிமை, சமமான ஊதியம் மற்றும் குடும்ப உறவுகளில் சமத்துவத்தை உள்ளடக்கியதாகத் திகழ்கின்றது.

**பெண்ணுரிமை பற்றிப் பேசியவர் தந்தை பெரியார்**

பெரியார் பெண்ணுரிமையை வலியுறுத்தி, பெண்ணடிமைத்தனங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் எதிராகப் போராடியவர். கல்வி, சொத்துரிமை, சுயமரியாதை, சமஊதியம், வாக்குரிமை போன்ற பெண் உரிமைகளுக்கு ஆதரவாகப் பேசியவர். அதற்காக வாழ்நாள் முழுவதும் போராடினார். பெண்ணுரிமைப் போராளியாக இருந்ததால் தான் பெண்கள் அவருக்கு பெரியார் என்ற பட்டத்தை அளித்தனர். சாதி ஒழிப்பையும், பெண்ணடிமைத்தனத்தையும் ஒழிப்பதே தந்தை பெரியாரின் தலைசிறந்த இலட்சியமாகக் கருதினார். பெண்விடுதலைக்கு பெரியார் ஆற்றிய பங்கு மகத்தானது. பெண்ணரிமைக்காக நூறு ஆண்டுகளுக்கு முன்பே போராடியதோடு வலுவாகக் குரல் கொடுத்தார்.

மேலும் சமத்துவம் பற்றிப் பேசும்பொழுது, ***“பெண்மக்கள் தமது உரிமையையும், தேவையையும் ஆண்மக்கள் தடையின்றி, பெணடகள் தடையின்றி அவர்களுக்குத் துன்பமில்லாமல் பெறுதலும் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதும் ஆண்பெண் சமத்துவமாகும்”1*** என்று உரைக்கின்றார். இந்த 21ஆம் நூற்றாண்டில் பெண்கள் உணராத உரிமைகளைப் பற்றிப் பேசுவதே, தந்தை பெரியாரின் பெண்ணியம். பெண்களுக்கு எதிரான எந்தவொரு கருத்தையும், செயலையும் தகர்த்தெறியும் தளமே பெரியாரின் பெண்ணியம் ஆகும்.

**குழந்தைமணம்**

இந்தியாவில் ஆணின் திருமணவயது 21 எனவும், பெண்ணின் திருமணவயது 18 எனவும் நிர்ணயம் செய்யப்படகின்றது. ஆனால் பெற்றோரின் அவசரத்தாலும், பல்வேறு காரணங்களாலும் பால்ய விவாகம் நடைபெற்றுவந்தது. குழந்தைத் திருமணத்தைத் தடுக்க ஆங்கிலஅரசு 1891இல் சட்டம் கொண்டுவர முயற்சித்தது. பால கங்காதர திலகர் கடுமையாக எதிர்த்தார். மீண்டும் 1929இல் குழந்தைமண தடுப்புச்சட்டம் கொண்டு வர அரசு முயற்சித்தது.

“சாரதா சட்டம்” என்றழைக்கப்பட்ட அச்சட்டம் 28.09.1929இல் நிறைவேறியது. 01.04.1930இல் நடைமுறைக்கு வந்தது. இதனைக் குறித்து தந்தை பெரியார், ***“ஹரிவிலாச சாரதா சட்டத்தை வரவேற்று 06.04.1930ஆம் ஆண்டு குடியரசு இதழில் தலையங்கம் தீட்டினார். பெண்விடுதலை கோருகின்றவர்கள் சாரதா சட்டத்தை வரவேற்கவே செய்வார்கள் என்றார்.***

***17.02.1929 அன்று செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க முதலாவது மாகாண மாநாட்டில் பால்ய விவாகத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது"2*** என்று தந்தை பெரியார் குழந்தை திருமணத்தை எதிர்த்து தொடர்ந்து பிரச்சாரம் செய்தார். பெண்ணிணத்தை துயரிலிருந்து மீட்டார்.

**விதவை மறுமணம்**

விதவை மறுமணத்தை தந்தை பெரியார் ஒரு முக்கிய பெண்ணுரிமை மற்றும் சமூகசீர்திருத்தமாகக் கருதினார். விதவைகளின் துன்பங்கள் இயற்கையானவை அல்ல என்றும், அவை ஆணாதிக்க சமூகத்தின் சூழ்ச்சியால் உருவாக்கப்பட்டவை என்றும் அவர் வாதிட்டார். விதவை மறுமணத்தை வலியுறுத்தியது பெண்அடிமைத்தனத்தை ஒழிக்கும் ஒரு பகுதியாகும் என்று கூறினார். இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உள்ள சமத்துவமின்மையை நீக்கும் என்றும் அவர் கூறினார்.

விதவை மறுமணம் குறித்து, ***"ஈ.வெ.ரா மிகவும் துணிந்து பொதுமன்றங்களில் பேசியபோது கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. இதனைத் துளியும் பொருட்படுத்தாமல் விதவை நிலையில் பெண்கள் படுகின்ற துன்பங்களையும் அவர்கள் மீது இந்த சமுதாயம் திணிக்கும் கொடுமைகளையும் வெளிஉலகிற்கு தனது மேடைப்பேச்சின் மூலம் புரியவைப்பதுடன் மக்கள் மத்தியில் பதியவும் செய்வித்தார்"3*** இத்தகைய புரட்சியை தந்தை பெரியார் தம் குடும்பத்திலேயே செய்துவைத்து புரட்சியை உண்டுபண்ணியவர் என்;பதை,

***"பெரியாரின் தங்கை பொன்னுத்தாயி அம்மாள். அவருடைய மகள் பெயர் அம்மாயி. அம்மாயிக்கு திருமணம்செய்து வைக்கப்பட்டபோது வயது 10. அந்தப்பெண்ணின் கணவன் சிறுவன் வயது 13. திருமணமான 60ஆம் நாள் கணவன் இறக்கின்றான். மறுமணம் செய்துவைக்க தந்தைபெரியார் முயற்சிசெய்து, யாருக்கும் தெரியாமல் வெளியூரில் மணம்முடித்து புரட்சிசெய்கின்றார்"4*** விதவை மறுமணங்ளை ஆதரித்து தந்தை பெரியார் நடத்திய பிரச்சாரங்கள் மக்களைப் பக்கவப்படுத்தியது. ஆயிரக்கணக்கான விதவை மறுமணங்களை நடத்திவைத்து முன்னோடியாக வலம்வந்தார் தந்தை பெரியார்.

**மணவிலக்கு உரிமை**

கணவன் மனைவிக்கு இடையே மனம் ஒத்துப் போகவில்லை என்றால் கணவனை மனைவியும், மனைவியை கணவனும் விவாகரத்து செய்யும் உரிமை வேண்டும் என்று தந்தை பெரியார் வலியுறுத்தினார். சமூகத்தில் இருவருக்குமே சமத்துவம உரிமை வேண்டும் என்பதை***,***

***"இரண்டு மனிதர்களுக்கு அதாவது ஆணுக்கும், பெண்ணுக்கும் சமுதாயத்தில் சேர்ந்து சிந்திக்க,***


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

***வாழ இருக்கும் எல்லையற்ற சமூகக் கண்ணோட்டமானது தனி மனிதச் சுதந்திரமாக செயல்பட வேண்டும்"5*** பெண்கள் உலகம் முன்னேற்றமடைய வேண்டுமென்றால், பெண்களுக்கும் மனிதத் தன்மையும், மனித உரிமையும், சுயமரியாதையும் ஏற்பட வேண்டுமானால், ஆண்களுக்கும் திருப்தியும் இன்பமும் உண்மையான காதலும் ஒழுக்கமும் ஏற்படவேண்டுமானால் கல்யாணரத்துக்கு இடம் அளிக்கப்பட வேண்டியது முக்கியமான காரியமாகும். 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாகான மாநாட்டில் மணவிலக்கு உரிமைகோரி தீர்மானம் நிறைவேற்றினார்.

**கற்பு**

பெண்ணை மிரட்டுவதற்கும், அடிமைப்படுத்துவதற்கும் இழிவுபடுத்துவதற்கும் ஆண்வர்க்கத்தால் கண்டுபிடிக்கப்பட்ட பதம் தான் கற்பு. கற்பு என்ற கருத்தை ஒழித்து பெண்களுக்குச் சமத்துவம் வழங்க வேண்டும் என்பது அவரது முக்கியக் கருத்தாக இருந்தது. 90% பெண்களின் வளர்ச்சிக்கு கற்பு என்ற கட்டுப்பாடு தடையாக உள்ளது என்று தந்தை பெரியார் கடுமையாக விமர்சித்தார். கற்பு என்ற கருத்தை கைவிட்டு பெண்களுக்கு நீதி, சுதந்திரம் போன்ற உரிமைகளை வழங்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

**பெண்கல்வி**

**"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?"** என்று கேட்ட நாட்டிலே பெண்கல்வியை வலியுறுத்தியவர் தந்தை பெரியார். எனவே ***"பெண்கள் தங்கள் மீது செலுத்தப்படும் அடிமைத்தளைகள் மற்றும் குடும்ப வன்முறைகளிலிருந்து விடுபட அவர்கள் கல்வி பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும். பெண்கல்வி அவர்களுக்கு நம்பிக்கையையும், சுயமுன்னேற்றத்தையும் அடையச் செய்வதுடன் தன் உழைப்பின் மூலம் தன்னைச் சார்ந்தவரை மேன்மைப்படுத்தியும், தனது வாழ்வையும் வளமுடன் வைத்துக் கொள்ள முடியும்"6***

அதுமட்டுமல்லாமல், ***"பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டு வரையில் இந்தியச் சமூகத்தில் உடன்கட்டை ஏறல், இளமை மணம், விதவைக்கொடுமைகள், பெண்;களுக்குச் சொத்துரிமை மறுப்பு, கல்வியுரிமை மறுப்பு முதலிய தீய பழக்கங்கள் தலைவிரித்து ஆடின. பெண்கள் கல்வியறிவு பெறாத ஒரே காரணத்தினால் தான் இளவயதுத் திருமணங்கள் (பால்ய விவாகம்) அதிகமாக நடைபெற்றன"7*** இவை எல்லாவற்றுக்கும் மூல காரணம் கல்வியறிவு இன்மையே என்று கூறுகின்றார். பெண்களின் கல்வி, பெண்களின் விடுதலைக்கு வழிவகுக்கும் என்று நம்பினார். பெண்கல்வி, பெண்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சுயமரியாதையுடன் வாழவழிவகை செய்யும் என்று பெரியார் கருதினார். பெண்கல்வியை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

வலியுறுத்தி இடைவிடாது பிரச்சாரம் செய்தார்.

**பெண்களுக்கு வேலைவாய்ப்பு**

பெண்கள் வீட்டில் முடங்கிக் கிடக்கக் கூடாது. வேலைக்குச் சென்று சம்பாதிக்க வேண்டும். சொந்தக்காலில் நிற்கும் தகுதிபெற வேண்டும். பெண்கள் விடுதலை பெற கல்வியும், உத்தியோகமும் அவசியம் என வலியுறுத்தினார் தந்தை பெரியார். பெண்களின் அறிவு, கல்வி மற்றும் வேலைவாய்ப்பே அவர்களின் உண்மையான அழகு என்று கருதினார். பெண்கள் வேலைக்குச்செல்வதால் பெரியாரின் பெருங்கனவு நிறைவேறுவதாகக் குறிப்பிடுவதை,

***"பெண்களை அடுப்பங்கரையை விட்டு வெளியேற்றுவது, பெண்களிடமுள்ள நகைப்பேயை விரட்டுவது, திருமணம் என்ற சிக்கல்களிலிருந்து விடுபடுவது"8*** இவை அனைத்தும் பெண்கள் வேலைக்குச் செல்வதால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்று நம்பினார். தொடக்கப்பள்ளி ஆசிரியர் பணிக்குப் பெண்களையே நியமிக்க வேண்டும் என்று பெண்களின் வேலைவாய்ப்பிற்குரிய பாதையை வழிவகுத்துக் காட்டினார். ஆண்களைப் போலவே பெண்களும் பொது நிறுவனங்களில் வேலை செய்ய வேண்டும், சமமான ஊதியம் பெற வேண்டும் என்றும் வாதிட்டார்.

**தேவதாசிமுறை ஒழிப்பு**

கோயில் பணிக்காகச் சிறுவயதுப் பெண்களை நேர்ந்துவிடும் பழக்கம் அக்காலத்தில் இருந்தது. அவர்கள் **'தேவதாசி'** என்று அழைக்கப்பட்டனர். கடவுளைத் தம் கணவராக ஏற்றுக்கொண்டு, கடவுளின் பெயரால் பொட்டுக்(தாலி) கட்டிக் கொள்ள வேண்டும் என்பது சாத்திர, சம்பிரதாயமாகக் கொள்ளப்பட்டிருந்தது. இந்தப் பெண்கள் ஆடல், பாடல் கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இந்த தேவதாசிகள் திருமணம் செய்து கொள்ள முடியாது. பெண்களை அவல வாழ்க்கைக்குத் தள்ளும் தேவதாசிமுறையை கடுமையாக எதிர்த்தார். இதனை தந்தை பெரியார் ஒழிக்க முற்பட்டதை,

***"தந்தை பெரியார் தேவஸ்தான போர்டின் தலைவராக, செயலாளராக இருந்த போது தேவதாசிகளை நியமிக்கக் கூடாது என்று உத்தரவிட்டு இழிநிலையை ஒழித்திருக்கின்றார். அதன்பின் 1930ஆம் ஆண்டு நீதிக்கட்சியின் ஆட்சியில் தந்தை பெரியாரின் ஆலோசனையின் பேரில் அப்போதைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த மருத்துவர் முத்துலெட்சுமி தேவதாசி ஒழிப்புச் சட்டத்தினை முன்மொழிந்தார்"9*** 1947ஆம் ஆண்டு அக்டோபர் 9ஆம் தேதி சென்னை நீதிமன்றம் தேவதாசி ஒழிப்புச்சட்டத்தை நிறைவேற்றியது.

**பெண்களுக்குச் சொத்துரிமை**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

பெண்களுக்கச் சொத்தரிமை வழங்க வேண்டும் என்பதை 1929இல் சுயமரியாதை இயக்கத்தின் மூலம் பெரியார் வலியுறுத்தினார். பெண்களுக்குச் சொத்துரிமை குறித்துத் தந்தை பெரியார்,

- *"பெண்கள் வாரிசுச் சொத்துரிமை அனுபவிக்கத் தகுதியுடையவர்கள் அல்லவென்பது கொடுமையும் அநீதியுமாகும்.*
- *பெண்கள் சீதனம், நன்கொடை முதலிய சொத்துக்களை அடைந்து, அவைகளை வைத்து நிர்வகிக்கத் தகுதியுடையவர்கள் என்ற உரிமை உண்டு.*
- *எந்தவிதமான சீதனச்சொத்தையும் பெண்கள் தங்கள் இஷ்டப்படி விநியோகித்துக் கொள்ளலாம்"10* என்று தந்தை பெரியார் கூறியுள்ளார்.

பெண்களுக்கு சொத்துரிமை என்பது பெண்ணடிமைத்தனத்தை ஒழிப்பதன் முக்கியபகுதி என்று எடுத்துரைக்;கின்றார். மேலும் ***"பெண்கள் பொருளாதார நிலையில் முழுவதுமாக தனது தந்தையரால் கைவிடப்பட்டும், அதே வேளையில் முழுவதும் கணவரை நம்பிடும் சூழல் ஆரம்ப காலத்தில் இருந்ததால் பெண்கள் பெரிதும் ஒடுக்கப்பட்டும் பொருளாதார பின்புலம் அற்றவராகவே வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் இருந்து பெண்கள் விடுபட்டு அவர்கள் மனதளவில் நம்பிக்கை பெற்றிடவும், பொருளாதார வளமும் பெற்றிட வேண்டும் என்ற எதார்த்த நோக்கில் பெண்களுக்கு சொத்துரிமை பெற்றிடக் குரல் கொடுத்தார்"11*** இவ்வாறு பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கினால் சுதந்திரமும், சமத்துவமும் கிடைக்கும் என்று தந்தை பெரியார் கருதினார்.

**தொகுப்புரை**

தந்தை பெரியார் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சிந்தனையாளர். பெண்களின் விடுதலைக்காகப் போராடிய ஒரு முக்கிய சமூகசீர்திருத்தவாதி. அவர் பெண்ணடிமைத்தனம் ஒழிய வேண்டும் என்றும், சொத்துரிமை, கல்வி உரிமை மற்றும் திருமணமுறை போன்ற உரிமைகளை அடைய வேண்டும் என்று வற்புறுத்தினார். பெண்விடுதலைக்குத் தடையாக இருந்த சாதி, மதம் மற்றும் மூடநம்பிக்கைகளை தந்தை பெரியார் கடுமையாக எதிர்த்தார். பெண்களும் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்பட வேண்டும் என்றும், பெண்கள் மீதான பாகுபாடு நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். பெண்ணுரிமைக்காக போராடிய தந்தை பெரியாரின் செயல்கள் இந்நூற்றாண்டில் வெற்றிகண்டுவிட்டது.

**சான்றெண்விளக்கம்**

1. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? புhரதி புத்தகாலயம், முதற்பதிப்பு, 1934, ப.15


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11012025.01

2. கி.வீரமணி, கற்போம் பெரியாரியம், திராவிடர் கழக வெளியீடு, முதற்பதிப்பு, 2021, பக்.53,54
3. பெ.வைரமூர்த்தி, மானுடர் பெரியார், ஜாமி பப்ளிகேஷன், முதற்பதிப்பு, 2018, ப.27
4. கி.வீரமணி, மு.நூ, ப.56
5. பி.இரயாகரன், ஆணாதிக்கமும் சமூகஒடுக்குமுறைகளும், கீழைக்காற்று வெளியீட்டகம், முதற்பதிப்பு, 2002, ப.336
6. பெ.வைரமூர்த்தி, மு.நூ, ப.28
7. ஆ.ஜெகதீசன், இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள், தாமரை பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு, 2019, ப.208
8. கி.வீரமணி, மு.நூ, ப.62
9. மேலது, ப.64
10. தந்தை பெரியார், மு.நூ, ப.55
11. பெ.வைரமூர்த்தி, மு.நூ, பக்.27,28

**துணைநூற்பட்டியல்**

1. **இரயாகரன், பி.** *ஆணாதிக்கமும், சமூகஒடுக்குமுறைகளும்.* கீழைக்காற்று வெளியீட்டகம், 2002.
2. **ஜெகதீசன், ஆ.** *இலக்கியத்தில் மனிதஉரிமைக்கோட்பாடுகள்.* தாமரை பப்ளிகேஷன்ஸ், 2019.
3. **தந்தை பெரியார்.** *பெண் ஏன் அடிமையானாள்?* பாரதி புத்தகாலயம், 1934.
4. **வீரமணி, கி.** *கற்போம் பெரியாரியம்.* திராவிடர் கழக வெளியீடு, 2021.
5. **வைரமூர்த்தி, பெ.** *மானுடர் பெரியார்.* ஜாமி பப்ளிகேஷன், 2018.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 11. “வேருக்கு நீர்" நாவலில் மனித உரிமைகள்

**முனைவர் அ. அருள் சகாய அனிட்டா**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி – 02. E.mail: arulsagayaanita@gmail.com

ORCID ID: https://orcid.org/0009-0006-8574-7657

**ஆய்வுச் சுருக்கம்**

"வேருக்கு நீர்" (1973) நாவல் காந்திய இலட்சியங்கள் சுதந்திர இந்தியாவில் சிதைக்கப்பட்டதை ஆய்வு செய்கிறது. இது பீகார் மற்றும் கல்கத்தா கள ஆய்வை அடிப்படையாகக் கொண்டது. முக்கியமாக, அரசியல் நேர்மை மற்றும் சமூக நீதி (Human Rights to Justice) மறுக்கப்படுவதைச் சித்தரிக்கிறது. சுதந்திரப் போராட்டத்தின்போது உறுதியளிக்கப்பட்ட ஏழை மக்களின் துயரம் மற்றும் வாழ்வாதார உரிமை மறுக்கப்படுதல் முதன்மைப்படுத்தப்படுகிறது. அன்றைய சமூகத்தில்> பண பலம் மற்றும் அதிகார மோதல்கள் எவ்வாறு அடிப்படை உரிமைகளை நசுக்குகின்றன என்பதைக் காட்டுகிறது. தனிமனித ஒழுக்கத்தின் சிதைவு சமூகத்தின் வேரையே பாதிக்கிறது என்பதை நாவல் உணர்த்துகிறது. நேர்மையான போராட்டக்காரர்கள், ஊழல் நிறைந்த அரசியல் சூழலில் சந்திக்கும் அவமானங்கள் மற்றும் புறக்கணிப்புகள் விவரிக்கப்படுகின்றன. மனிதனின் கௌரவம், வறுமையிலிருந்து விடுதலை> அரசியல் பாகுபாடின்மை போன்ற உரிமைகளுக்காக நாவல் குரல் கொடுக்கிறது. சமூக மாற்றத்திற்கான மறுபரிசீலனை தேவை என்பதை நாவல் வலியுறுத்துகிறது. இது> அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து> நாட்டின் வேருக்கு நீர் ஊற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் ஆவணமாகும்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியம் சமூக நியாயத்தை, மனித நலனைக், குடும்ப உறவுகளை, மக்கள் வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வலிமையான ஊடகம். தமிழ்நாட்டின் நவீன நாவல்களில் ஒன்று “வேருக்கு நீர்”> மனித உறவுகளின் உண்மைத்தன்மையையும் சமூக மாற்றங்களின் தாக்கத்தையும் ஆழமாக வெளிப்படுத்துகிறது. இந்த நாவலில் ஊடுபயணமாகத் தெரியும் மிக முக்கிய அம்சம் மனித உரிமைகள் – குறிப்பாக உடல் உரிமை> குடும்ப உரிமை> கல்வி உரிமை> பெண் விடுதலை> சமத்துவம்> வாழ்வுரிமை> மரியாதை ஆகியவை. சமூக அமைப்பின் பல்தளங்களையும் படைப்பில் நுணுக்கமாகச் சித்தரிக்கும் ஆசிரியர்> மனிதனின் அடிப்படை தேவைகள் வெறும் உயிர் வாழ்வில் அல்ல> மரியாதையுடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதில் உள்ளது என்பதை தெளிவாகப் படமாக்குகிறார்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**நாவலின் முதன்மை கருத்து மற்றும் மனித உரிமைகள்**

“வேருக்கு நீர்” என்பது வேர்கள் வறண்டு போனால் மரம் வாழ முடியாததைப்போல், மனிதன் சமூக, குடும்ப> ஆதரவு> அன்பு> நம்பிக்கை என்ற வேர்களால் தான் வாழ முடியும் என்ற சிந்தனையை முன்வைக்கிறது. ஒரு சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவரும் தமது வேர்கள் குடும்ப ஆதரவு> சமூக நீதி> கல்வி வாய்ப்பு> பொருளாதார பாதுகாப்பு - இவை இல்லாமல் வளர முடியாது. இதனால்தான் நாவலின் ஒவ்வொரு கதாப்பாத்திரத்திலும் மனித உரிமை மீறல் அல்லது அதன் தேவையைக் காணலாம்.

**பெண்ணுரிமைகள் மற்றும் பாலின சமத்துவம்**

நாவலின் மையத்தில் நிற்கும் முக்கிய உரிமை பெண்ணின் உரிமை.

**பெண் கல்வி உரிமை**

நாவலில் வரும் பெண்கள் பலரும் சமூக வரையறைகளால் கல்வி வாய்ப்புகளை இழக்க நேரிடுகிறது. இது பெண்கள் மீது நிகழும் கல்வி உரிமை மறுப்பு எனும் மனித உரிமை மீறலை வெளிப்படுத்துகிறது. கல்வி என்பது மனிதனை அதிகாரமிக்கவராக மாற்றும் கருவி; அதனை மறுக்கும் சமூகம் பெண்ணை அடிமைத்தனத்தில் தள்ளுகிறது.

திருமணத் திணிப்புகள் மற்றும் வாழ்வுரிமை

பெண்கள் தங்களது விருப்பம் இல்லாமல் திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாய நிலை, அவர்களின் தனிப்பட்ட தேர்வு உரிமை மற்றும் வாழ்வுரிமை மீறப்படுவதை காட்டுகிறது.

**பெண் சுயமரியாதை**

நாவலில் பெண் கதாப்பாத்திரங்கள் எதிர்கொள்ளும் அவமானங்கள். அவர்களின் மரியாதையுடன் வாழும் உரிமை எவ்வாறு ஆபத்துக்குள்ளாகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. இத்தகைய சித்திரிப்புகள் சமூகத்தில் பெண்களின் நிலையை மாற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன.

**சமூக சமத்துவம் மற்றும் தரவரிசை மீறல்கள்**

“வேருக்கு நீர்” நாவலில் முக்கிய மனித உரிமையாக சமத்துவ உரிமை பேசப்படுகிறது.

**சாதியாதிக்கம்**

சில கதாபாத்திரங்கள் சாதி ஆதிக்கத்தால் அடக்கப்பட்டிருப்பது காணப்படுகிறது.

- சாதி அடிப்படையிலான பாகுபாடு
- ஒருவரின் சுதந்திரம்
- பாதுகாப்பு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

- பணி வாய்ப்பு
- கல்வி

என பல உரிமைகளைப் பறிக்கிறது.

பொருளாதார பாகுபாடு

பணக்கார–ஏழை இடையே உள்ள விரிவான இடைவெளி ஏழை மக்களின் வீழ்ச்சிக்கும் கல்வியின்மைக்கும் காரணமாகிறது. இது சமத்துவமடைவு உரிமை மற்றும் வாழ்க்கைத் தரம் உரிமை மீறப்படுவதை காட்டுகிறது.

**சமூக மரியாதை**

கீழ்த்தர மக்களுக்கு மரியாதை மறுக்கும் சில காட்சிகள். அவர்களின் சுயமரியாதை உரிமை பறிக்கப்படுவதை வெளிப்படுத்துகிறது.

**கல்வி உரிமை மற்றும் வாய்ப்புச் சுழற்சி**

இந்த நாவலில் கல்வி ஒரு முக்கிய கருவியாக தோன்றுகிறது. கல்வி வாய்ப்பின்மையால் மனிதர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் அவர்களின் வாழ்நிலை முழுவதையும் மாற்றுகிறது.

**கல்வி என்பது சுயநிறைவு**

கல்வியைப் பெறாதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்காது. அதனால் அவர்கள் பொருளாதார உரிமைகளையும் இழக்கிறார்கள்.

**கல்வியில் பாலின மற்றும் சாதி தடைகள்**

பல கதாப்பாத்திரங்கள் பெண்ணாக இருப்பதற்காக குறைந்த சாதியைச் சேர்ந்ததற்காக ஏழை குடும்பத்தைச் சேர்ந்ததற்காக கல்வியை இழக்கின்றனர். இதன் மூலம் கல்வி உரிமை எப்படி சமூக-பொருளாதார சூழல் காரணமாக மறுக்கப்படுகிறது என்பதை நாவல் வலிமையாகச் சொல்லுகிறது.

**குடும்ப உரிமைகள் மற்றும் உணர்ச்சி பாதுகாப்பு**

நாவல் மனிதனின் வேரைப் பற்றி பேசும்போது அதன் மிக முக்கியமான பகுதி குடும்பம்.

**உறவுகளின் உரிமை**

குழந்தைகள் அன்பு> பாதுகாப்பு> வழிகாட்டுதல் ஆகியவற்றை அனுபவிக்காத காட்சிகள். அவர்களின் உணர்ச்சி உரிமை மீறலை வெளிப்படுத்துகிறது.

**குடும்ப வன்முறைகள்**

சில பாத்திரங்கள் வீட்டிலேயே மனரீதியான அல்லது உடல் ரீதியான துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இது உடல் பாதுகாப்பு உரிமை மீறப்படுவதை உணர்த்துகிறது.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**முதியோர் உரிமைகள்**

முதியோரைக் கவனிக்காமல் சமூகத்தால் புறக்கணிப்பது அவர்களின் கண்ணியத்துடன் வாழும் உரிமையை பாதிக்கிறது.

**பொதுமக்கள் வாழ்வுரிமை மற்றும் சமூக நலம்**

நாவலில் பொதுமக்களின் வாழ்க்கைச் சிரமங்கள் – வறுமை> வேலை வாய்ப்பின்மை> சுகாதார வசதி இல்லாமை - அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் நிறைவேறாததை உணர்த்துகின்றன.

**சுகாதார உரிமை**

அரசியல் மற்றும் அரசு அமைப்புகள் சரியாக செயல்படாததால்> மக்களுக்கு தேவையான மருத்துவ வசதி கிடைக்காமல்> அவர்களின் வாழ்வுரிமை ஆபத்துக்குள்ளாகிறது.

**தொழிலாளர் உரிமைகள்**

கூலி தொழிலாளர்கள் அனுபவிக்கும் சுரண்டல்கள் அவர்களின் வேலை நிபந்தனை உரிமை, பாதுகாப்பான தொழில் சூழல்> நியாயமான கூலி போன்ற உரிமைகளை பறிக்கிறது.

**மனித உரிமைகளின் முழுமையான விளக்காட்சி**

உரிமை நாவலில் காட்டப்படும் நிலை கல்வி உரிமை பெண்களுக்கும் ஏழைகளுக்கும் மறுப்பு சமத்துவ உரிமை, சாதி> வர்க்க பாகுபாடு, குடும்ப உரிமை, உறவுச் சிதைவு> துன்புறுத்தல், பெண் சுயமரியாதை, கட்டாய திருமணம்> ஆண் ஆதிக்கம் வாழ்வுரிமை சுகாதார> பொருளாதார பாதுகாப்பின்மை வேலை உரிமை தொழிலாளர் சுரண்டல், குழந்தை உரிமை அன்பு> பாதுகாப்பு இ.ழப்பு

**முடிவுரை**

“வேருக்கு நீர்” நாவல் ஒரு கதையல்ல - அது சமூகத்தின் கண்ணாடி. நாவலில் மனித உரிமைகள் மீறப்பட்ட பல்வேறு நிலைகளை ஆசிரியர் மிக நுணுக்கமாக சித்தரிக்கிறார். மனிதன் சமூகம், குடும்பம் ஆகியவற்றின் வேர்கள் வலுவாக இருந்தால்தான் அவனின் வாழ்க்கை மரம் வளமாக வளர முடியும் என்பதை நாவல் வலியுறுத்துகிறது. இந்த நாவல் மூலம் நாம் அறிய வேண்டிய மிக முக்கியமான செய்தி மனித உரிமைகள் என்பது சட்டச் சொற்கள் அல்ல; ஒவ்வொரு மனிதனும் மரியாதையுடன் வாழ வேண்டிய அடிப்படை நிபந்தனைகள். அவற்றை பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு சமூக உறுப்பினருக்கும் உள்ளது.

**பார்வை நூல்**

1. ராஜம் கிருஷ்ணன், வேருக்கு நீர், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை பதிப்பு - 2010

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 12. தொல் தமிழர் சமூகத்தில் மனித உரிமை மீறல்கள்

**Dr.S.Anulakshmi**

Asst.Prof. in Tamil, Holy Cross College (Autonomous), Tiruchirappalli – 02

Cell.No – 7598852072, E mail – anuganeshan2018@gmail.com

https://orcid.org/0009-0001-9183-8145

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச் சமூகம் நீண்ட நெடிய வரலாற்றையும் அறுபடாத தொடர்ச்சியையும் கொண்டுள்ள சமூகமாகும். அத்தகைய நமது சமூக அமைப்பில் தாய்த் தெய்வங்களாக கொற்றவை, காடுகெழு செல்வி, துணங்கையற் செல்வி, மூதேவி போன்ற பெண் தெய்வ வழிபாட்டு முறைகளுக்கு இலக்கியங்கள் இலக்கிங்கள் சான்றுபகிர்கின்றன. சங்க இலக்கியத்தில் வரும் ஆய், ஞாய், யாய் ஆகிய யாவும் தாயைக் குறிப்பவையே பிறப்பின் மகத்துவத்தை சிந்தித்த மனிதன் தாயை வழிபட்டான். இத்தகு பெண்ணை தலைமைத்துவமாகக் கொண்டு தாய்வழிச் சமூகமாக தமிழர் வாழ்ந்தனர்.

பெண் தெய்வ வழிபாடுகளும் அத்தெய்வங்களுக்குரிய இயல்புகளும் பெண்ணின் சிந்தனையை பரந்துப்பட்ட நோக்கமாக காட்டியுள்ளன. பொதுவுடைமைச் சிந்தனையோடு திகழ்ந்த பெண்களின் தன்னியல்பு தெய்வத்தை முதன்மையாக வழிபட வைத்து அவற்றுக்கான சடங்குளில் அவளை ஈடுபடுத்த வைத்து ஆணைச் சார்ந்து வாழும் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டதனை அறியமுடிகிறது. தந்தை வழிச்சமூகத்தில் பெண்கள் ஆணைச்சார்ந்து இருப்பதோடு மட்டுமில்லாமல் அவர்களின் அடிமைகளாகவும் விருப்பு வெறுப்பினை கூறமுடியாத உரிமை இழந்து வாழும் அவலநிலைக்கு தள்ளப்பட்டதையும் இலக்கியங்கள் சுட்டிக்காட்ட தவறவில்லை.

**கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| ஞெலிதீ | - | கடைந்த தீ |
| பரல் | - | சிறுகல் |
| உயவல் பெண்டிர் | - | கைம்மை மகளிர் |
| கொய்மழி | - | கொய்தும் மழித்தும் |

**முன்னுரை**

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் பெண் உரிமைகள் ஓரளவு பேணப்பட்டன. ஆனால் இடைக்காலத்தில் அது பறிக்கப்பட்டு தற்காலத்தில் மீண்டும் உறுதி செய்வதற்கான பல போராட்டங்களையும், எதிர்ப்புக்களையும் சந்திக்க வேண்டிய போக்கானது காணபட்டதை பார்க்கமுடிகிறது. தமிழ்ச்சமூகத்தில் பெண்கள் ஆணாதிக்கத்துக்கு கட்டுப்பட்டு இருந்துள்ளனர். ஆண்களின் தேவைகேற்ப பெண்களை வழிநடத்தினர். விலைமகளிராகவும், அடிமைமகளிராகவும், கைம்மை மகளிராகவும் பெண்ணின் ஆக்க சக்திகளை உடைத்து அவளை பலவீனப்படுத்தும் செயல்களை உடல் அளவிலும், மனதளவிலும் செய்து அவளை நிலைகுலைய செய்து


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

மனவலிமைமையினை இழந்து துணையைச் சார்ந்து வாழவேண்டிய நிலைக்கு மட்டுமில்லாமல் துணையின்ற வாழவும் கூடாது என்ற சூழலுக்கு அவர்களை தள்ளினர் அதிலும் கணவனை இழந்த மகளிர் நிலை துயர்மிகுந்ததாகவும் இருந்துள்ளன.

பண்டைத் தமிழரிடம் தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கம் கணவன் இறந்தவுடன் அவனது ஈமத்தீயில் அவனது மனைவியும் உயிர்விடும் பழக்கமே **'சதி'** என்னும் உடன்கட்டை ஏறுதல் அழைக்கப்படும் இப்பழக்கமானது பெண் உரிமை மீறல் செயல்களாகவே உள்ளன. சங்ககாலத்திற்கு முன்பே தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இந்தப் பழக்கமானது தமிழரிடம் காணப்பட்டுள்ளமையும் அதன் நீட்சியாக இலக்கியங்களில் கையாளப்பட்ட பாங்கினையும் ஆய்ந்து அறிய முற்படுகிறது.

**அழகு என்னும் புனைவு**

பெண்ணின் அழகு என்பது ஆண் சமூகத்தால் கட்டமைக்கப் பட்ட ஒன்று இதில் பெண் உடலுக்கு மென்மை என்னும் பண்பை பெரிதும் வலியுறுத்திக் காட்டுகின்றனர். பெண்கள் பற்றிய வருணனைகளிலும் அழகியலை சொல்லும் இடத்திலும் மெல்லிய இடை, நீண்ட கரிய கூந்தல், மென்மையான நடை எனக் குறிப்பிடுகின்றனர்.

**'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு**

**நல்ல படாஅ பறை' (குறள் - 1115)**

என்ற குறள் அனிச்ச மலரின் காம்பினை களையாமல் சூடியதால் பெண்ணின் இடை வருந்தும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**'இருண்ட மேகஞ்ச்சூற்றி சுருண்டு சுழி' (குற்றால குறவஞ்சி)**

மேகங்கள் சில சுருண்டு சுழித்தது போல கூந்தலை உடையவள் என்றும்

**'அன்ன நன்னுதல் மென்னடை கழிந்து' ( சிலம்பு)**

அன்னப் பறவைகள் உன் மேன்மையுடைய நடைக்கு பயந்து நன்னீர் பூக்களின் பின்சென்று மறைகின்றன. போன்ற சொல்லாடல்கள் பெண் பெண்ணுக்கும் ஆணுக்குமான சமூகப் போராட்டத்தில் பெண்ணை வெல்வதற்கு இத்தகைய கருத்துக் கட்டமைப்புக்கள் ஆணுக்குத் தேவையாயிருந்தன. உடலளவில் போட்டியாளரின் வலிமையைக் குன்றச் செய்வதன் மூலம் அவரை எளிதில் வென்று தன்னுடைய ஆளுமைக்கு உட்படுத்தும் ஆணாதிக்க சமூகத்தின் முயற்சிகளுக்கு அழகு பற்றிய புனைவுகள் உதவின. அழகு என்னும் பெயரில் உருவாக்கப்பட்ட சொல்லாடல்கள் பெண்ணின் உடல் வலிமையைக் குன்ற செய்வதுடன் அவளை பலவீனப்படுத்தும் என்னும் நோக்கில் சில கருத்தாக்கங்கள் முன் வைக்கப்பட்டன.

பெண்ணின் அழகு என்பது பெண்மையை முழுமைப்படுத்துவதற்கு மேலும் சில வரையறைகளை முன் வைத்தன. அவை கைவளை, காதணி, ஓசை எழுப்பும் காற்சிலம்பு, மஞ்சள் பூசுதல் போன்றவை அழகு பெயரில் கட்டாயமாக்கப்பட்டன. இவை இல்லையெனில் பெண்ணழகு முழுமை பெறாது என்று பெண்களை நம்ப வைத்ததோடு மட்டுமன்றி அவற்றை ஏற்க செய்யப்பட்டனர். இத்தகைய அணிகலன் ஏதுமின்றி பெண்கள் வெளியில் செல்ல வெட்கப்படுமாறு அவர்களை பதப்படுத்தப்பட்டனர். இத்தகைய அழகியல் ஒப்பனைகள் ஏதுமின்றி ஆண்களை ஈர்க்க முடியாது என்றும் அழகினால் மட்டுமே ஆண்களை கவர முடியும் என்று


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

தொடர்ந்து வலியுறுத்தப்பட்டதன் மூலம் பெண்கள் ஒப்பனைகளை முழுமனதுடன் ஏற்கத் தொடங்கினர். பெண்ணை பலவீனப்படுத்த சமூகமானது செய்த அனைத்து முயற்சிகளும் அம்முயற்சியினால் அவர்கள் அடைந்த பயனையும் காணமுடிகிறது.

**கொண்டி மகளிர்**

தமிழ்ச்சமூகம் அரசர்களும், நிலக்கிழார்களும் தலைமை ஏற்று வழி நடத்திய போது அடிமை முறையோ, தீண்டாமை முறையோ வழக்கத்தில் இருந்ததாக தெரியவில்லை. பேரரசர்களின் தோற்றத்திற்கு பிறகு போர்ச்சூழல் காரணமாக பிறநாட்டு வீரர்களை சிறைப்பிடித்தலும் பெண்ணை பொருளாக எண்ணி கொள்ளையிட்டு கொண்டு வந்ததும் நடந்தேறியதை பல இலக்கியச் சான்றுகளில் காணமுடிகிறது. அவ்வாறு கொள்ளையடித்து வந்த பெண்களையே கொண்டி மகளிர் என அழைக்கலாயினர்.

**'கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி**

**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்' (ப.பாலை:246-247)**

**'வானவ மகளிர் மான கண்டோர்**

**நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்' ( ம.காஞ்சி:582-583)**

போன்ற பாடல்களில் கொண்டி மகளிர் ஏவல் மகளிராகவும், பரத்தையராகவும் இருந்துள்ளமையை அறியமுடிகிறது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் தன் மனைவியை பணய பொருளாக வைத்து சூதாடி இழந்த நிகழ்வையும் நன்கு அறிகிறோம். ஆண் தான் மட்டுமின்றி தன்னை சார்ந்தவள் என்ற காரணத்தினால் பெண்ணை பொருளாக பார்க்கும் நிலைமை ஆணாதிக்க சமூகத்தின் போக்கினை காட்டுகிறது. கணவன் எது செய்திடினும் அதனை ஏற்று அவ்வாழ்க்கையினையே வாழ வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டதை இலக்கியங்கள் பல இடங்களில் காட்சிப்படுத்தியுள்ளன. குடும்பம் மற்றும் சமூகத்திற்காக தன் சுயத்தை இழந்து வெறும் கூடு போன்ற உயிரற்ற வாழ்வையே வாழவேண்டிய நிலைக்கு பெண் ஆளாக்கப்படுகிறாள்.

**'நாடவர் காண நல்லரங் கேறி**

**ஆடலும் பாடலும் அழகுங் காட்டிச்**

**…………………. …………**

**வண்டிற்றுறக்கும் கொண்டி மகளிர்' (சிலம்பு 18:103-109)**

அரங்குகளில் ஏறி ஆடலையும் பாடலையும் எழிலையும் புலப்படுத்துவோர் கண்களால் ஆடவரை அகப்படுத்தி அவரை மயக்கி பொன், ஆடை, மணி போன்றவற்றை வாங்கிப் பொருள் வற்றிய பின் அவரைத் துறப்பர். பெண்மையினை எத்தகைய நகைப்பிற்கு உள்ளாக்கியதோடு ஆடவர்களை கவரவும் பொன், பொருள் விரும்புவோர் என்றும் இச்சமூகம் பெண்ணை கட்டமைத்துள்ள போக்கினை உணரமுடிகிறது.

**உடன் கட்டை ஏறுதல்**

தமிழ்நாட்டில் சில பகுதிகளில் **'தீப்பாஞ்சியம்மன்'** என்ற பெயரில் சிறு தெய்வ வழிபாடுகள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in
DOI: https://doi.org/10.63300/tm11012025.01

நடத்தப்படுவதை காணமுடிகிறது. இவை உடன்கட்டை என்னும் கணவருடன் உயிர்நீத்த மனைவிகளின் நினைவாகப் போற்றும் வகையில் அமைந்த வழிபாட்டு இடங்களாகும் நாட்டார் வழக்காற்றில் இன்றளவும் இத்தெய்வ வழிபாட்டை பின்பற்றப்படுவதை காணலாம். உடன்கட்டை ஏறும் பழக்கம் வடநாட்டு இராஜபுத்திரர்கள் இடையே மட்டும் உள்ள பழக்கம் என்று எண்ணினால் அது தவறாகும். இப்பழக்கமானது தொல் தமிழர் பண்பாட்டில் இருந்தமையை பல இலக்கியங்கள் சான்று தருகின்றன. மூதானந்தம், பாலைநிலை, தாபதநிலை, முதுபாலை, தபுதாரநிலை என்று வகைப்படுத்தப்படுகிறது.

**'நல்லோள் கணவனோடு நனிஅழல் புகீஇச்**

**சொல்லிடை இட்ட மாலை நிலை' (தொல்.பொருள்.புறத்:77)**

கணவனை எரிக்கும் தீயில் தானும் புகுவாள் நல்லோள் என்று கணவனை இழந்த பெண் செய்யும் செயலாக சுட்டுகிறது. நல்லோள் என்ற சொல்லானது கணவன் இறந்த தீயில் தானும் வீழ்ந்து இறப்பவளையே இச்சமூகமானது நல்லோள் என்று அடையாளப்படுத்துகிறது இத்தகைய கட்டமைப்பில் வாழும் பெண்கள் தன் சுய உரிமையை இழந்து தான் வாழும் சமூகமானது தன்னை தவறாக நினைக்க கூடாது என்ற காரணத்தினால் வேறு வழியின்றி இந்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். பெண் கணவனை இழந்தால் அவள் வாழவேண்டுமா? வாழ கூடாதா? என்பதையே இச்சமூகம் தீர்மானிப்பது எத்தகைய உரிமை மீறல்களாக கையாளப்பட்டுள்ளன. கொண்டிமகளிராக அடிமையாக வாழ்வதை விட உடன்கட்டை ஏறுதலே சிறந்தது என்று என்னும் மனநிலைக்கு அவளை சமூகமானது தள்ளிய போக்கினை காணமுடிகிறது.

**மூதானந்தம்**

**'கயல் ஏர் கண்ணி கணவனோடு முடிய**

**வியல் நெறிச் செல்வோர் வியந்துரைத்(து) அன்று' (புறப்.வெ.மா: 262)**

என்ற நூற்பாவானது வீரன் இறந்ததும் மனைவி இறந்ததை கண்டோர் பார்த்து வியந்ததாக கூறப்படுகிறது.

**'தென்னவன் ..................**

**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவல் இல் என்று**

**இணை அடி தொழுது வீழ்ந்தனளே**

**மடமொழி......'(சிலம்பு.வழக்குரை:77-79)**

கணவனை இழந்த கற்புடைய மகளிர்க்கு அந்த இழப்பிற்கு ஈடாகக் காட்டுவதற்கு உலகில் எதுவும் இல்லை ஆதலால் கணவன் திருவடிகளைத் தொழுது வீழ்ந்து உயிர் துறந்தாள்.என இலக்கியம் சுட்டுகிறது. கணவனை இழந்தவுடன் பெண் அவனுடன் சேர்ந்து இறப்பதை சமூகமானது வியப்பிற்குரியதாக பேசியதோடு பெண்களை எத்தகைய உணர்வுகளால் கட்டுபடுத்தி சமூகத்தின் தேவைக்கு பழிப்பொருளாக மாற்றும் விதத்தினையும் காணமுகிறது. உடனுயிர் மாய்தல் குறித்த செய்திகள் அரிதாகவே காணக்கிடைக்கின்றன. போர்க்களத்தில் இறந்த சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் மற்றும் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி ஆகிய மன்னர்களின் மனைவியர் தத்தம் கணவர் மார்பிலே வீழ்ந்து உயிர் மாண்டதாக கூறப்படுகிறது.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

தலைவன் இறந்தவுடன் உயர்குடி மகளிர் தன்னுயிரைப் பேணுதல் தகாது எனும் அறம் நுட்பமாகப் பெண்ணிடம் போதிக்கப்பட்டுள்ளது.

**'களம் கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர**
**உடன்வீழ்ந் தன்றால் அமரே பெண்டிரும்**
**பாசமிகு மிசையார் பனிநீர் மூழ்கார்**
**மார்பகம் பொருந்தி ஆங்கமைந்தனரே'(புறம்.62:11-14)**

மேலும் பெண்களை சமூகமானது பல சொல்லாடல்கள் மூலம் அவர்களை அடக்கியும் வைத்துள்ள பான்மையினை காணமுடிகிறது. மேலும் தலைவனைப் பிரியும் நிலை தனக்கு நேர்ந்தால் அக்கணமே தன்னுயிர் ஆனாது பிரிந்து விடவேண்டும் என்று விரும்பும் தலைவியின் உளநிலை கூறப்படுகிறது. பெண்களை இத்தகைய கட்டமைப்புக்குள் கொண்டு வந்து உளவியல் ரீதியாக புடம் போட்டு பதப்படுத்திய ஆணாதிக்க சமூகத்தின் போக்கினை நன்கு உணரமுடிகிறது.

**'…………….. பாய்ந்துயிர் வகுக்கும்**
**சார னாட நடுநாள்**
**வாரல் வாழியே வருந்தும் யாமே' (குறுந்.69:5-6)**

கணவன் இறந்தால் தான் இறந்துவிட வேண்டும் என்ற எண்ணத்தை பெண்களின் மனதில் ஆழமாக பதிக்கப்பட்டதை உணரமுடிகிறது.

**'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' (குறுந்.135:2)**

என்னும் பாடல் கணவனின் மறைவுக்குப் பின்னர் மனைவி உயிரற்றவள் உயிர் வாழத் தகுதியற்றவள் என்ற கருத்தை நுட்பமாக முன் வைத்து அவளது மனநிலையினை மரணத்தை நோக்கி நகர்த்துகிறது. இத்தகைய கருத்துக்களை தொடர்ந்து வலியுறுத்துவது மூலம் தமக்கு விதிக்கப்பட்ட கற்புநெறிபடி உயிர்வாழ்வது அல்லது உயிர் நீப்பதே தலையாய அறம் என்று மகளிரை நம்ப வைத்தனர் அதிலும் உயர்குடி சார்ந்த மகளிர்களின் கற்பு சார்ந்த நிலைப்பாடு சமூகத்தால் பெரிதும் கவனிக்கப்பட்டதால் அவர்கள் உயிர்விடுவதையே தம் பிறவிக்குரிய கடமையாகவும், பெருமையாகவும் நினைக்கும் வண்ணம் செய்தனர்.

**பாலை நிலை**

கணவனை எரியூட்டப்படும் சிதையில் வீழ்ந்து மனைவியும் எரியுண்டு இறப்பதே பாலைநிலையாகும்.

**'பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்**
**நுமக்கு அரிதாகுக தில்ல எமக்கு எம்**
**பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பு அற' (புறம்.246:11-13)**

பெங்கோப்பெண்டு என்பவர் தன் கணவர் பூதப்பாண்டியன் போரில் மாண்டான் எமக்குப் பொய்கையும் தீயும் ஒரு தன்மைத்தான் எனக்கூறி கணவன் இறந்தவுடன் தீப்பாய முற்பட்ட நிகழ்வினை சுட்டுகிறது.

**தாபதநிலை**

**'குருத்து அலர்க் கண்ணி கொழுநன் மாய்ந்து எனக்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**கருந்தடங் கண்ணி கைம்மைகூ றின்று'(புற.வெ.மா.257)**

உடன்கட்டை ஏறாது பூவிழந்து அறுசுவை உணவினை நீக்கி வெறுந்தரையில் படுத்துறங்கிக் கைம்மை நோன்புற்று உடலை வருத்தி வாழ்ந்தனர். இத்தகைய கைம்மை நோன்பு என்பது கணவனை இழந்த பெண்கள் மீது திணிக்கப்பட்டதே தவிர மனைவியை இழந்த எந்த ஆண்மீதும் இதனை சுமத்தவில்லை. பழங்கால மகளிர் விதவிதமான ஆடை, அணிகலன்களை அணிந்து தங்கள் உடலை அழகுப்படுத்துவதில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். தொய்யில் எழுதுதல், மஞ்சள் பூசுதல், முடி அலங்காரம், வாசைன திரவங்கள் போன்றவற்றை கொண்டு தங்களை அழகுபடுத்திக் கொண்டனர். ஆனால்இவை எல்லாம் கணவனை இழந்த மகளிர் அணியக்கூடாது வெளி உலகிற்கு அவள் அழகற்ற உருவமாக கணவனை இழந்த பெண்ணை நிறுத்தப்படுகிறாள்.

**'ஊழினிருப்பு வெருக்கிய மகளிர்**

**வாழைப் பூவின் வளைமுறி சிதற'(புறம்.237:10-11)**

கணவனை இழந்த பெண்ணின் கையில் உள்ள வளையல்கள் நீக்கப்படுவதும் அவ்வாறு அணிகலன்களை நீக்கப்பட்ட மகளிரை **'கழிகல மகளிர்'** என்னும் பெயரில் அழைக்கலாயினர்.

**'கொய்ம் மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய**

**கழிகல மகடூஉப் போல'(புறம்.261:17-18)**

கணவனை இழந்த பெண்களின் கூந்தல் மழிக்கப்பட்டதை புறப்பாடல் காட்டுகிறது.

**'பரல்பெய் பள்ளிப் பாயின்று வதியும்' (புறம்.246:9)**

கணவனை இழந்த பெண் தலைமழிக்கவும், வெந்த கீரையை உண்டும், பாயின்றி பரல்கற்கள் மீதும், வெறுந்தரையிலும் படுத்துறங்க வேண்டும் என்ற கொடிய நிலையினைக் காட்சிப்படுத்துகிறது. கணவனின் மறைவுக்குப் பின்னர் மனைவியின் அழகு தேவைபடாது என்றும் அப்பெண் வேறொரு ஆடவர் மீது விருப்பம் கொண்டு விடாமல் இருக்கவும் இச்சமூகத்தால் மேற்கொள்ளப்பட்ட முன் ஆயத்தங்களே இவை.கணவனை இழந்த பெண் புலனடக்கம் கொண்டு வாழும் விதமாக பண்பாடு என்னும் பெயரில் அவளுக்கு கட்டாயமாக்கப்பட்டன. அத்துடன் நில்லாமல் கணவனை இழந்தவள் எதிரே வரக்கூடாது பொதுநிகழ்வில் கலந்துக் கொள்ளக்கூடாது போன்ற நம்பிக்கைகளை உளவியல் ரீதியாக அவள் சமூகத்தில் இருந்து அந்நியப்படுத்துவதும் வீட்டிற்குள்ளே தன்னை அடைப்பட்டுக் கொள்ளும் விதமாக இம்முறைகளையெல்லாம் செயல்படுத்தினர்.

**தபுதாரநிலை**

**'புனைஇழை இழந்தபின் புலம்பொடு வைகி**

**மனை அகத்து உறையும் மைந்தன் நிலை உரைத்தன்று' (பு.வெ.மா.256)**

மனைவியை இழந்த கணவன் வருத்தத்துடன் தனியே வாழ்வது ஆகும்.

**'கள்ளி போகிய களரியம் பறந்தலை**

**வெள்ளிடைப் பொத்தியவிளை விறகு ஈமத்து**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை' (புறம்.245:4-7)

ஈமத்தீயில் தலைவியை வைத்து எரித்ததும் அவளை பிரிந்த கணவன் செய்வதறியாது நின்ற நிலையினை குறிப்பிடுகிறது. கணவன் இழந்தால் பெண்ணானவள் முதலில் உடன்கட்டை ஏறவேண்டும் அது முடியாமல் போனால் தன்னுடைய அணிகலன்களை களைய வேண்டும், தலை மழிக்க வேண்டும், அறுசுவை உணவை தவிர்க்க வேண்டும், வெறுந்தரையில் தூங்க வேண்டும், பொதுநிகழ்ச்சியில் கலந்துகொள்ளாமல் சகுனத்தடையாகப் பார்க்கும் இச்சமூகமானது மனைவியை .இழந்த கணவனுக்கு யாதொரு கட்டுபாட்டினையும் கூறவில்லையே வெறும் வார்த்தையளவில் மட்டுமே தன்னுடைய துன்பத்தை பதிவு செய்கின்றனர். இத்தகைய ஆணாதிக்க சமூகத்தின் போக்கு நகைப்பிற்குரியதாகவே அமைந்துள்ளது. பெண்ணை பல இழிவுகளுக்கு ஆட்படுத்தி அவளை சுய சிந்தனையும் சுயமாக வாழும் உரிமையினையும் தகர்த்து அவளை தன் விருப்பபடி ஆட்டுவிக்கும் பொருளாக மட்டுமே இச்சமுதாயத்தை மாற்றிய பாங்கினை காணமுடிகிறது.

**முடிவுரை**

ஒரு மனிதனின் மரணம் என்பது அவனளவில் மட்டும் முக்கியத்துவம் பெறுவதன்று அவன் வாழ்ந்த சமூகத்தின் வரலாறு பண்பாடு அரசியல் உள்ளிட்ட அனைத்து வாழ்வியல் கூறுகளையும் அடையாளப்படுத்தி நிற்கிறது. அதிலும் குறிப்பாக ஒருவன் தன் மரணத்தை தானே விரும்பி ஏற்றுக்கொள்ளுவதான நிகழ்வுகள் உளவியல் மற்றும் சமூகவியல் அடிப்படையில் காணவேண்டியது. இத்தகைய நிகழ்வுகள் தொல் சமூக வரலாற்றில் பரவி கிடந்ததையும் அவை மகளிர் வாழ்வியலில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் அறியமுடிந்தன.

பெண்ணுக்குள் மறைந்திருக்கும் சக்தி மேன்மை பெறுவதை விரும்பாத ஆண்கள் தாங்கள் இல்லாமல் சந்ததியினை பெருக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்டபோதே தங்களின் சர்வாதிகாரப் போக்கை பெண்ணக்குள் திணிக்க முற்பட்டிருக்க வேண்டும். பெண்ணுக்கு சந்ததி உருவாக்குதல் என்னும் பலமே பலவீனமானது அவளுக்கான ஆற்றலும் அறிவும் உணரமுடியாத படி அடக்கப்பட்டிருந்ததையும் மேலும் அவளை குற்ற உணர்வில் அடக்கி ஒடுக்கி ஆள நினைத்ததின் விளைவாகவே பலவிதமான அடக்குமுறைகள் பண்பாடு என்னும் பெயரில் அவள் மீது திணித்து சுயத்தையும் இழந்து நிற்கதியாய் பெண்ணை நிற்க வைக்கப்பட்டிருந்த அத்துணை உரிமை மீறல்களையும் அறியமுடிந்தன.

**பார்வை நூல்கள்**

1. **இரயாகரன், பி.** *ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும்.* கீழைக்காற்று வெளியீட்டகம், 2002.
2. **இராஜமுத்திருளாண்டி.** *இலக்கியத்தில் மனிதஉரிமைகள்.* குமரன் பதிப்பகம், 2003.
3. **ஜெகதீசன், ஆ.** *இலக்கியத்தில் மனித உரிமைக்கோட்பாடுகள்.* தாமரை பப்ளிகேஷன்ஸ், 2008.
4. **பூரணசந்திரன், க.** *தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர்.* அகரம் வெளியீடு, 2004.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 13. திருக்குறள் இல்லறவியல் காட்டும் பெண் உரிமைகள்

**முனைவர் தே.அனித்தா மேரி**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி-02, 9585733887, am498740@gmail.com

https//orcid.org/0009-0004-6348-2710

திருக்குறள் சமூகநீதி> ஒழுக்கம் மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இவற்றில் இல்லறவியல் பிரிவில் பெண்களின் பங்களிப்பு > மதிப்பு மற்றும் உரிமைகள் குறித்து நேரடியாகவும் மறைமுகமாகவும் கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. அவர்களுடைய அறிவு> கற்பு> துணை நிற்றல்> மற்றும் சமமான பொறுப்புகள் போன்றவையை நவில்கிறது. அவர்களின் கற்பு> சொல்லாற்றல்> அறிவு மற்றும் உயர்ந்த பண்புகள் இல்லற வாழ்வின் தன்மையை நிர்ணயிக்கும் என திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் திருக்குறளில் பெண்களுக்கு சம மரியாதை மற்றும் முடிவுகளை தீர்மானிக்கும் வகையிலான மறைமுக உரிமைகள் வழங்கப்படுகின்றன. இதன் வாயிலாக சமத்துவ நோக்கு மற்றும் குடும்ப அமைப்பில் அவர்களின் முக்கிய பங்களிப்பை புரிந்து கொள்ள முடிகிறது. குடும்ப அமைப்பில் பெண் ஆற்றும் பங்கைத் திருக்குறள் உயர்த்திப் பேசுகிறது. பெண்ணின் மரியாதை மற்றும் சுயநிலை இல்லற வாழ்வின் மையக்கருவாக விளங்குவதை திருக்குறள் முன்வைக்கிறது.

**முன்னுரை**

தமிழ் மரபின் உயரிய நெறி நூல்களில் ஒன்றான திருக்குறள்> மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமாணத்திற்கும் ஒளியூட்டுகிறது. அதில் குறிப்பிடத்தக்க பகுதி “இல்லறவியல்”. இது குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட நெறிமுறைகளை விளக்குகிறது.குடும்ப அமைப்பு> தம்பதியர் ஒற்றுமை> மனைவியின் கண்ணியம்> பெண்களின் பங்கு மற்றும் உரிமைகள் போன்றவை இதில் மையக்கருத்துகளாக அமைகின்றன. சமூகத்தின் ஒழுக்கத் தளத்தை உறுதிப்படுத்துவதில் பெண்களின் நிலை முக்கியப் பொறுப்பாகக் கொள்ளப்படுவதையும் திருவள்ளுவர் பல குறள்கள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

**பெண்மை**

பெண்மை என்பது அடக்கம்> தியாகம்> பொறுமை> இரக்கம், அன்பு> அழகு>ஆற்றல் தொண்டு ஒப்புரவு முதலிய இயல்புகள் சேர்ந்த கலவையே பெண்மை எனப்படும்.பெண்மையின் இந்த இயல்புகள் இன்பத்தை தரவல்லன. யாரும் இன்பத்தை இழிவு படுத்துவதில்லை. இதனால் இன்பத்தைத்தரும் பெண்மை பெருமை அடைகிறது. உலகில் பெண்ணைவிடப் பெருமை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

பெற்றவை வேறு எவை இருக்கின்றன? எனத் தன்னையே கேள்வி கேட்டு வியந்தவர்> கற்பே அதன் பெருமைக்கு காரணம் என்றும் கூறுகிறார். நீதிசாஸ்த்திரம் எழுதிய மனு - 'எங்கு பெண்களை வணங்குகிறார்களோ அங்கு தேவதைகளின் ஆலயங்கள் தானாக உண்டாகின்றன என்றும் தந்தையாயினும் சரி> கணவன் என்றாலும் சரி> சகோதரன் என்றாலும் சரி பெண்களுக்குத் தகுந்த மரியாதை கொடுக்க வேண்டும் என்று நீதி கூறியவர்> ஒரு குலம் உயர்வடையவும்> மற்றோரால் அறியப்படவும் பெண்ணே காரணமாக விளங்குகிறாள்' என்று வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.மனு மட்டும் பெண்ணின் பெருமையைப் போற்றவில்லை. இவற்றிற்கு ஒருபடி மேலே சென்று வேதகாலத்தில் வேதநூல் வல்லவர்கள் பலர் பெண்ணின் பெருமைக்கு தலைவணங்கி இருக்கிறார்கள்.

**பெண்களின் உரிமைகள்:**

திருக்குறள் பெண்களைப் பற்றிப் பேசும் போது அவர்களின் கண்ணியம், ஒழுக்கம்> அறிவு மற்றும் குடும்பத்தை முன்னெடுக்கும் திறன் உடையவர்கள் என பெண்களை உயர்த்திக் காட்டுகிறார். பெண்கள் நற்பண்பு> நாணம்> மெய்யுணர்வு உடையவராக இருந்தால் அவர்களுக்கு பெருமை உண்டு என வலியுறுத்துகிறது.

“பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்” **- குறள்: 505**

என்பது திருக்குறள்.அவரவர் செய்யும் செயலே அவர்களது பெருமைக்கும் சிறுமைக்கும் காரணமாகும். தன்னலம் கருதாமல் தொண்டாற்றுபவள் பெண்.அதனால் வள்ளுவர் கூற்றுப்படி பெண்ணின் செயலே பெண்ணின் பெருமைக்கு காரணமாக விளங்குகிறது.

இல்லதென் இல்லவை செய்யாளள் மகள்
சொல்லுடை யாளாகத் தான். **குறள் 55**

இந்தக் குறள் மனைவியின் பண்பும் புரிதலும் குடும்பத்தின் பெருமையாக இருப்பதை குறிப்பிடுகிறது.

**குடும்ப பெண்களின் உரிமைகள்:**

இல்லறத்தை நிலைநிறுத்தும் சக்தி பெண்களே என திருவள்ளுவர் படம் வரைகிறார்.

மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. **குறள் 60**

வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில் மனைவி என்பவள் குடும்பம் நடத்தும் பண்புகளும்>

Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

மாண்புகளும் உடையவளாகவும்> தன்னுடைய கணவனின் வருவாய் மற்றும் வசதிக்கேற்ப வாழக்கூடியவளாகவும் இருப்பாள். இத்தகையவளே சிறந்த வாழ்க்கைத் துணை ஆவாள் என்றும்

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்." **குறள் 54**

என்று கற்பு என்ற மன உறுதி ஒரு பெண்ணிடம் இருக்குமானால்> அந்தப் பெண்ணின் பெருமையைப் போல் சிறந்த பெருமை தரக்கூடியவை வேறு என்ன இருக்கின்றன? என்கிறார். இது இல்லற வாழ்க்கையில் மனைவியின் பங்கு, அவளின் குணநலன்கள் மற்றும் கற்பின் சிறப்பு ஆகியவற்றை விளக்குகின்றன. வீட்டின் நன்மை> குடும்பத்தின் மேன்மை எல்லாம் நல்ல இல்லாளின் முன்னிலையில் அமையும். இது பெண்கள் இல்லறத்தில் மைய உரிமை பெற்றவர்கள் என்பதைக் காட்டுகிறது.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். **குறள் 56**

என்று பெண்> தன்னைத் தானே காத்து கொள்ள வேண்டும். அது மட்டும் அல்ல> அவள் கணவனையும் காக்க வேண்டும் என்று சொல்லும் போது பெண்ணின் பொறுப்பு எவ்வளவு என்பதை வள்ளுவர் எடை போடுகிறார். அவளால் தான் இரண்டும் முடியும். கணவனின் உடல் நலம் - ஆரோக்கியம் சார்ந்தது. அதை அவள் காக்க வேண்டும். அதை விட முக்கியம்> அவனின் மன நலம் மற்றும் கணவனின் நல்ல பெயரை காக்க வேண்டும். ஒரு பெண் தன் கணவனை மதிக்காமல்> அவனை ஏளனமாக பேசத் தலைப்பட்டால்> அவளின் பிள்ளைகள் தந்தையை மதிக்காது. தகப்பன் சொல் கேளாத பிள்ளை ஒழுக்கமாக வளர்வது கடினம். எதற்காக இல்லாவிட்டாலும் பிள்ளைகளின் எதிர் காலம் கருதியாவது> அவள் கணவனின் புகழை காக்க வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு மதிப்பும் மரியாதையும் இருக்கும். அந்த மதிப்பையும் மரியாதையும் காத்து உயர்த்த வேண்டியது ஒரு பெண்ணின் கடமை. ஒரு குடும்பத்தின் மதிப்பும் மரியாதையும் ஒரு பெண்ணின் கையில் இருக்கிறது.நண்பர்கள்> சுற்றம் எல்லாம் ஒரு குடும்பத்தை மதிப்பது அந்த குடும்பத்தின் பெண்ணை வைத்துதான். சங்க இலக்கியம் முதல் திருக்குறள் வரை பெண்களின் உரிமைகள் என்பது நவீன கருத்தாக இருந்தாலும் சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும் இது பல பரிமாணங்களில் காணப்படுகிறது

**குழந்தை வளர்ப்பில் பெண்களின் உரிமை**

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

மக்கட்பேறு அல்ல பிற. **குறள் 61**

அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளைவிட இல்வாழ்க்கையில் சிறந்த பேறு வேறு எதுவுமில்லை என்ற நோக்கில் பெண்கள் குழந்தைகளை பேணி வளர்த்தனர் என்பதை,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். **குறள் 69**

நல்ல மகனைப் பெற்றெடுத்தவள் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள் என்றும் "தாயின் இறை குணம்; தான் மகத்தல்." தாயின் உயர்வு அளவிட முடியாதது. இது பெண்களின் தாய் உரிமை, சமூக மதிப்பு, அடையாளம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. பெண் தாயாகப் பிள்ளைகளின் நல்லொழுக்கத்தை உருவாக்கும் பெரும் உரிமையையும் பொறுப்பையும் உடையவர் எனக் கூறப்படுகிறது.

**பெண்களின் சமூக உரிமைகள்**

பெண்களின் முக்கியத்துவத்தையும்> பெருமையையும்> அவர்களின் கடமைகளையும்> குடும்ப வாழ்க்கையில் அவர்களின் பங்கையும் பல இடங்களில் திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

மனைகாத்தும் மாண்புடையள் எனின்தெளிந்தாட்குப்
பெண்ணின் பெருந்தக்க தில்." **(குறள் 50)**

வீட்டிற்குரிய கடமைகளைச் செய்து, சிறந்த பண்புகளும் உடையவளாக விளங்கும் பெண்ணைவிட ஒருவனுக்குச் சிறந்த செல்வம் வேறு இல்லை என்றும்

சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை**." (குறள் 57)**

சிறைசெய்து காக்கின்ற காப்பு என்ன பயனைத் தரும்? பெண்கள் தங்கள் ஒழுக்கத்தினால் தம்மைக் காத்துக்கொள்ளும் காப்பே சிறந்தது என்றும்

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்." **(குறள் 46)**

என்கிறார். கற்பு என்னும் மன உறுதி ஒரு பெண்ணிடம் இருக்குமானால்> அந்தப் பெண்ணை விடப் பெருமை உடையவை வேறு என்ன இருக்கின்றன என்றார் திருவள்ளுவர்> அன்றைய சமூக அமைப்பின்படி இல்லறத்தின் மாண்பையும்> அதில் பெண்ணின் பங்களிப்பையும் போற்றியுள்ளார்.ஆனால் உரிமைகளைப் பற்றி நேரடியாகப் பேசாமல்> பெண்களின் மேன்மையையும்> ஒழுக்கத்தின் அவசியத்தையும் வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது. திருக்குறள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

பெண்களின் உரிமைகளை நேரடியாக சட்ட வடிவில் குறிப்பிடவில்லை. ஆனால்> நடத்தை> மதிப்பு> குடும்ப மரபு> ஒற்றுமை ஆகியவற்றின் மூலம் பெண்களுக்கு உரிய மரியாதை> பாதுகாப்பு> சமவாய்ப்பு போன்ற உரிமைகளை வலியுறுத்துகிறது. கல்வி பெறும் உரிமை >இருப்பு > மரியாதை மற்றும் கண்ணியம் பெறும் உரிமைகுடும்ப முடிவுகளில் பங்கு கொள்வது பாதுகாப்பான சமூக சூழல் தம்பதிய சமநிலை மற்றும் பரஸ்பர மரியாதை போன்றவை மறைமுக உரிமைகளாக பார்க்கப்படுகின்றன.

**பெண்களின் ஒழுக்கமும் பாதுகாப்பும்**

ஒழுக்கமான குடும்ப வாழ்க்கை>பரஸ்பர மரியாதை >பெண்களின் கண்ணியம் மற்றும் பங்கு >சமமான பொறுப்புகள்> பொருளாதாரம்> மனநலன்> சமூக நலன்கள் போன்றவை பெண்கள நிலைக் குறித்து பேசுகின்றன. திருவள்ளுவர் பெண்களின் உயர்வை பற்றி குறிப்பிடும் போது குடும்பத்தை நிலைநிறுத்தும் தூணாக மனைவியை சித்தரிக்கிறார்.குடும்ப நலனுக்குத் தேவைப்படும் அனைத்து பண்புகளையும் உடையவர் மனைவி எனக் கூறப்படுகிநார். இது பெண்ணின் சமூக உரிமையான மரியாதை> கண்ணியம் ஆகியவற்றை உறுதிப் படுத்துகிறது.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையு மின்மை பெறின். **குறள் 60**

திருக்குறள் பெண் ஒழுக்கத்தை வலியுறுத்தினாலும்> அதே நேரத்தில் அவளை காக்கும் பொறுப்பு கணவனுக்கும் சமூகத்துக்கும் உள்ளது எனப் புரிய வைக்கிறது.இதுவும் பெண்களின் பாதுகாப்பு> மரியாதை ஆகியவை உரிமையாகவே கருதப்பட்டதைக் காட்டுகிறது.

தன்னைத் தானே காக்கின்றாள் தற்காத்துக் கொள்பவர்
தன்னைத் தானே காக்கும் துறை. **குறள் 59:**

மனைவி ஒழுக்கத்தையும் குடும்பக் கண்ணியத்தையும் காக்கும் பொறுப்பு உடையவர் எனக் கூறுகிறது. இது பெண்ணின் உரிமை மற்றும் பொறுப்பு இரண்டையும் ஒருங்கே வெளிப்படுத்துகிறது.

**தம்பதியர் சமத்துவம்**

குடும்ப அமைதி> செல்வம்> நலன் ஆகியவை இருவரின் ஒற்றுமையாலும் பொறுப்புப் பகிர்வாலும் உருவாகும் என வலியுறுத்துகிறது.இதன் மூலம் பெண்களுக்கு குடும்பத்தில் சமமான பங்கு என்ற உரிமை மறைமுகமாக வெளிப்படுகிறது. திருக்குறள் பெண்களை ஒதுக்கிப் பார்க்காமல்> தம்பதிய சமத்துவத்தை முன்னிறுத்துகிறது.

நல்லிறன் நெஞ்சத்துத் துணையுடை மனைவி


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

என்கொல் உலகத்தார்க்கு இனிது. **குறள் 72**

இது மனைவியின் துணை நிற்கும் நிலையை சம உரிமையின் அடிப்படையாக குறிப்பிடுகிறது.

குடும்ப நலன் மற்றும் பெண்கள்

ஒற்றும் பெருஞ்செல்வம் பெண்ணின் பெருந்தக்க

கற்றம் அனைத்தும் ஒருங்கு. **குறள் 73**

பெண்களின் அறிவு> ஒழுக்கம்> திறமை ஆகியவை குடும்பத்திற்கு மிகப்பெரும் செல்வம் என வள்ளுவர் கூறுகிறார். இது பெண்களுக்கு கல்வி> அறிவு மற்றும் கருத்துரிமை வழங்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

சமூக நிலை உயர்வு; ஒழுக்கத்திற்கும் உயர்விற்கும் தகுதியான மனைவியை குடும்பத்தின் தூணாகக் காண்கிறது. குடும்ப நெறி மற்றும் மதிப்புகளின் உருவகம் எனக் காட்டுகிறது.இது பெண்களின் சமூக மரியாதையை அதிகரிக்கும் ஒரு வகை நெறி உரிமை ஆகும்.

**தலைமுறை வளர்ச்சி மற்றும் கல்வி**

குடும்பத்தின் கல்வி> ஒழுக்கம்> குழந்தைகளின் வளர்ப்பு ஆகியவற்றில் பெண்கள் முக்கிய பங்கிருப்பதை திருக்குறள் குறிப்பிடுகிறது.இதுவே பெண்களுக்கு கல்வி> அறிவு பகிர்வு போன்ற உரிமைகளை மறைமுகமாக ஆதரிக்கிறது.இதன் மூலம் மனைவி கணவனின் துணைவியாய் மட்டுமல்லாமல்> குடும்பத்தின் பாதுகாப்பையும் ஒழுக்கத்தையும் காக்கும் ஒருவராகக் காட்டப்படுகிறது.திருக்குறளில் நேரடியாக பெண்களின் கல்வி குறிப்பிடப்படவில்லை என்றாலும் > ஒழுக்கம்> அறிவு> நுட்பம் ஆகியவை பெண்களின் அடையாளம் என்று குறிப்பிடுவதன் மூலம் அறிவு சம்பந்தமான உரிமையை ஆதரிக்கிறது.

**முடிவுரை**

திருக்குறளின் இல்லறவியல் பெண் உரிமைகளை நெறிமுறையாகவும் மரியாதையாகவும் அமைத்துக் காட்டுகிறது. பெண்களின் உணர்வுகளையும் தனிப்பட்ட குரலையும் வெளிப்படுத்தும் சக்திவாய்ந்த கலை வடிவமாகின்றன. இவ்வி லக்கியங்கள் தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் நிலை> பங்கு> கண்ணியம் மற்றும் உரிமைகளை பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்தி > பெண்கள் உயர்விற்கான பாதையை அமைத்துக் காட்டுகின்றன. திருக்குறள் குடும்பத்தை ஒரு சிறிய சமூகமாகப் பார்க்கிறது. அங்கே பெண்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்.

**கலைச்சொற்கள்**

1.கருமம் - செயல் >வினை 2. தற்கொண்டான் – கணவன் 3. திண்மை – வலிமை>உறுதி

4. மக்கட்பேறு –குழந்தைகள் 5. காப்பு – காப்பாளன்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**சான்றெண்விளக்கம்**

1. **பரிமேலழகர், உரை.** *திருக்குறள்*. பூம்புகார் பதிப்பகம், 2026. [Year of publication not provided in original, assuming current/standard edition].
2. **முனுசாமி, திருக்குறள்.** *திருக்குறள் தெளிவுரை*. வானதி பதிப்பகம்.
3. **விசுவநாதம், கி. ஆ. பெ.** *திருக்குறள் கட்டுரைகள்*. பாரி நிலையம், 1985.

.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 14. தொல் தமிழர் சமூகத்தில் மனித உரிமை மீறல்கள்

**முனைவர் சு.அனுலெட்சுமி**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,திருச்சிராப்பள்ளி – 620 002
அலைபேசி – 7598852072,மின்னஞ்சல் – anuganeshan2018@gmail.com
https://orcid.org/0009-0001-9183-8145

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச் சமூகம் நீண்ட நெடிய வரலாற்றையும் அறுபடாத தொடர்ச்சியையும் கொண்டுள்ள சமூகமாகும். அத்தகைய நமது சமூக அமைப்பில் தாய்த் தெய்வங்களாக கொற்றவை, காடுகெழு செல்வி, துணங்கையற் செல்வி, மூதேவி போன்ற பெண் தெய்வ வழிபாட்டு முறைகளுக்கு இலக்கியங்கள் இலக்கிங்கள் சான்றுபகிர்கின்றன. சங்க இலக்கியத்தில் வரும் ஆய், ஞாய், யாய் ஆகிய யாவும் தாயைக் குறிப்பவையே பிறப்பின் மகத்துவத்தை சிந்தித்த மனிதன் தாயை வழிபட்டான். இத்தகு பெண்ணை தலைமைத்துவமாகக் கொண்டு தாய்வழிச் சமூகமாக தமிழர் வாழ்ந்தனர்.

பெண் தெய்வ வழிபாடுகளும் அத்தெய்வங்களுக்குரிய இயல்புகளும் பெண்ணின் சிந்தனையை பரந்துப்பட்ட நோக்கமாக காட்டியுள்ளன. பொதுவுடைமைச் சிந்தனையோடு திகழ்ந்த பெண்களின் தன்னியல்பு தெய்வத்தை முதன்மையாக வழிபட வைத்து அவற்றுக்கான சடங்குளில் அவளை ஈடுபடுத்த வைத்து ஆணைச் சார்ந்து வாழும் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டதனை அறியமுடிகிறது. தந்தை வழிச்சமூகத்தில் பெண்கள் ஆணைச்சார்ந்து இருப்பதோடு மட்டுமில்லாமல் அவர்களின் அடிமைகளாகவும் விருப்பு வெறுப்பினை கூறமுடியாத உரிமை இழந்து வாழும் அவலநிலைக்கு தள்ளப்பட்டதையும் இலக்கியங்கள் சுட்டிக்காட்ட தவறவில்லை.

**கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| ஞெலிதீ | - | கடைந்த தீ |
| பரல் | - | சிறுகல் |
| உயவல் பெண்டிர் | - | கைம்மை மகளிர் |
| கொய்மழி | - | கொய்தும் மழித்தும் |

**முன்னுரை**

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் பெண் உரிமைகள் ஓரளவு பேணப்பட்டன. ஆனால் இடைக்காலத்தில் அது பறிக்கப்பட்டு தற்காலத்தில் மீண்டும் உறுதி செய்வதற்கான பல போராட்டங்களையும், எதிர்ப்புக்களையும் சந்திக்க வேண்டிய போக்கானது காணபட்டதை பார்க்கமுடிகிறது. தமிழ்ச்சமூகத்தில் பெண்கள் ஆணாதிக்கத்துக்கு கட்டுப்பட்டு இருந்துள்ளனர். ஆண்களின் தேவைகேற்ப பெண்களை வழிநடத்தினர். விலைமகளிராகவும், அடிமைமகளிராகவும், கைம்மை மகளிராகவும் பெண்ணின் ஆக்க சக்திகளை உடைத்து அவளை பலவீனப்படுத்தும் செயல்களை உடல் அளவிலும், மனதளவிலும் செய்து அவளை நிலைகுலைய செய்து மனவலிமைமையினை இழந்து துணையைச் சார்ந்து வாழவேண்டிய நிலைக்கு மட்டுமில்லாமல் துணையின்ற வாழவும் கூடாது என்ற சூழலுக்கு அவர்களை தள்ளினர் அதிலும் கணவனை இழந்த மகளிர் நிலை துயர்மிகுந்ததாகவும் இருந்துள்ளன.

பண்டைத் தமிழரிடம் தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கம் கணவன் இறந்தவுடன்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

அவனது ஈமத்தீயில் அவனது மனைவியும் உயிர்விடும் பழக்கமே **'சதி'** என்னும் உடன்கட்டை ஏறுதல் அழைக்கப்படும் இப்பழக்கமானது பெண் உரிமை மீறல் செயல்களாகவே உள்ளன. சங்ககாலத்திற்கு முன்பே தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இந்தப் பழக்கமானது தமிழரிடம் காணப்பட்டுள்ளமையும் அதன் நீட்சியாக இலக்கியங்களில் கையாளப்பட்ட பாங்கினையும் ஆய்ந்து அறிய முற்படுகிறது.

**அழகு என்னும் புனைவு**

பெண்ணின் அழகு என்பது ஆண் சமூகத்தால் கட்டமைக்கப் பட்ட ஒன்று இதில் பெண் உடலுக்கு மென்மை என்னும் பண்பை பெரிதும் வலியுறுத்திக் காட்டுகின்றனர். பெண்கள் பற்றிய வருணனைகளிலும் அழகியலை சொல்லும் இடத்திலும் மெல்லிய இடை, நீண்ட கரிய கூந்தல், மென்மையான நடை எனக் குறிப்பிடுகின்றனர்.

**'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு**

**நல்ல படாஅ பறை' (குறள் - 1115)**

என்ற குறள் அனிச்ச மலரின் காம்பினை களையாமல் சூடியதால் பெண்ணின் இடை வருந்தும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**'இருண்ட மேகஞ்ச்சுற்றி சுருண்டு சுழி' (குற்றால குறவஞ்சி)**

மேகங்கள் சில சுருண்டு சுழித்தது போல கூந்தலை உடையவள் என்றும்

**'அன்ன நன்னுதல் மென்னடை கழிந்து' ( சிலம்பு)**

அன்னப் பறவைகள் உன் மேன்மையுடைய நடைக்கு பயந்து நன்னீர் பூக்களின் பின்சென்று மறைகின்றன. போன்ற சொல்லாடல்கள் பெண் பெண்ணுக்கும் ஆணுக்குமான சமூகப் போராட்டத்தில் பெண்ணை வெல்வதற்கு இத்தகைய கருத்துக் கட்டமைப்புக்கள் ஆணுக்குத் தேவையாயிருந்தன. உடலளவில் போட்டியாளரின் வலிமையைக் குன்றச் செய்வதன் மூலம் அவரை எளிதில் வென்று தன்னுடைய ஆளுமைக்கு உட்படுத்தும் ஆணாதிக்க சமூகத்தின் முயற்சிகளுக்கு அழகு பற்றிய புனைவுகள் உதவின. அழகு என்னும் பெயரில் உருவாக்கப்பட்ட சொல்லாடல்கள் பெண்ணின் உடல் வலிமையைக் குன்ற செய்வதுடன் அவளை பலவீனப்படுத்தும் என்னும் நோக்கில் சில கருத்தாக்கங்கள் முன் வைக்கப்பட்டன.

பெண்ணின் அழகு என்பது பெண்மையை முழுமைப்படுத்துவதற்கு மேலும் சில வரையறைகளை முன் வைத்தன. அவை கைவளை, காதணி, ஓசை எழுப்பும் காற்சிலம்பு, மஞ்சள் பூசுதல் போன்றவை அழகு பெயரில் கட்டாயமாக்கப்பட்டன. இவை இல்லையெனில் பெண்ணழகு முழுமை பெறாது என்று பெண்களை நம்ப வைத்ததோடு மட்டுமன்றி அவற்றை ஏற்க செய்யப்பட்டனர். இத்தகைய அணிகலன் ஏதுமின்றி பெண்கள் வெளியில் செல்ல வெட்கப்படுமாறு அவர்களை பதப்படுத்தப்பட்டனர். இத்தகைய அழகியல் ஒப்பனைகள் ஏதுமின்றி ஆண்களை ஈர்க்க முடியாது என்றும் அழகினால் மட்டுமே ஆண்களை கவர முடியும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டதன் மூலம் பெண்கள் ஒப்பனைகளை முழுமனதுடன் ஏற்கத் தொடங்கினர். பெண்ணை பலவீனப்படுத்த சமூகமானது செய்த அனைத்து முயற்சிகளும் அம்முயற்சியினால் அவர்கள் அடைந்த பயனையும் காணமுடிகிறது.

**கொண்டி மகளிர்**

தமிழ்ச்சமூகம் அரசர்களும், நிலக்கிழார்களும் தலைமை ஏற்று வழி நடத்திய போது அடிமை முறையோ, தீண்டாமை முறையோ வழக்கத்தில் இருந்ததாக தெரியவில்லை. பேரரசர்களின் தோற்றத்திற்கு பிறகு போர்ச்சூழல் காரணமாக பிறநாட்டு வீரர்களை சிறைப்பிடித்தலும் பெண்ணை பொருளாக எண்ணி கொள்ளையிட்டு கொண்டு வந்ததும் நடந்தேறியதை பல இலக்கியச் சான்றுகளில் காணமுடிகிறது. அவ்வாறு கொள்ளையடித்து வந்த பெண்களையே

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

கொண்டி மகளிர் என அழைக்கலாயினர்.

**'கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி**
**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்' (ப.பாலை:246-247)**

**'வானவ மகளிர் மான கண்டோர்**
**நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்' ( ம.காஞ்சி:582-583)**

போன்ற பாடல்களில் கொண்டி மகளிர் ஏவல் மகளிராகவும், பரத்தையராகவும் இருந்துள்ளமையை அறியமுடிகிறது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் தன் மனைவியை பணய பொருளாக வைத்து சூதாடி இழந்த நிகழ்வையும் நன்கு அறிகிறோம். ஆண் தான் மட்டுமின்றி தன்னை சார்ந்தவள் என்ற காரணத்தினால் பெண்ணை பொருளாக பார்க்கும் நிலைமை ஆணாதிக்க சமூகத்தின் போக்கினை காட்டுகிறது. கணவன் எது செய்திடினும் அதனை ஏற்று அவ்வாழ்க்கையினையே வாழ வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டதை இலக்கியங்கள் பல இடங்களில் காட்சிப்படுத்தியுள்ளன. குடும்பம் மற்றும் சமூகத்திற்காக தன் சுயத்தை இழந்து வெறும் கூடு போன்ற உயிரற்ற வாழ்வையே வாழவேண்டிய நிலைக்கு பெண் ஆளாக்கப்படுகிறாள்.

**'நாடவர் காண நல்லரங் கேறி**
**ஆடலும் பாடலும் அழகுங் காட்டிச்**
**...................... ............**
**வண்டிற்றுறக்கும் கொண்டி மகளிர்' (சிலம்பு 18:103-109)**

அரங்குகளில் ஏறி ஆடலையும் பாடலையும் எழிலையும் புலப்படுத்துவோர் கண்களால் ஆடவரை அகப்படுத்தி அவரை மயக்கி பொன், ஆடை, மணி போன்றவற்றை வாங்கிப் பொருள் வற்றிய பின் அவரைத் துறப்பர். பெண்மையினை எத்தகைய நகைப்பிற்கு உள்ளாக்கியதோடு ஆடவர்களை கவரவும் பொன், பொருள் விரும்புவோர் என்றும் இச்சமூகம் பெண்ணை கட்டமைத்துள்ள போக்கினை உணரமுடிகிறது.

**உடன் கட்டை ஏறுதல்**

தமிழ்நாட்டில் சில பகுதிகளில் **'தீப்பாஞ்சியம்மன்'** என்ற பெயரில் சிறு தெய்வ வழிபாடுகள் நடத்தப்படுவதை காணமுடிகிறது. இவை உடன்கட்டை என்னும் கணவருடன் உயிர்நீத்த மனைவிகளின் நினைவாகப் போற்றும் வகையில் அமைந்த வழிபாட்டு இடங்களாகும் நாட்டார் வழக்காற்றில் இன்றளவும் இத்தெய்வ வழிபாட்டை பின்பற்றப்படுவதை காணலாம். உடன்கட்டை ஏறும் பழக்கம் வடநாட்டு இராஜபுத்திரர்கள் இடையே மட்டும் உள்ள பழக்கம் என்று எண்ணினால் அது தவறாகும். இப்பழக்கமானது தொல் தமிழர் பண்பாட்டில் இருந்தமையை பல இலக்கியங்கள் சான்று தருகின்றன. மூதானந்தம், பாலைநிலை, தாபதநிலை, முதுபாலை, தபுதாரநிலை என்று வகைப்படுத்தப்படுகிறது.

**'நல்லோள் கணவனோடு நனிஅழல் புகீஇச்**
**சொல்லிடை இட்ட மாலை நிலை' (தொல்.பொருள்.புறத்:77)**

கணவனை எரிக்கும் தீயில் தானும் புகுவாள் நல்லோள் என்று கணவனை இழந்த பெண் செய்யும் செயலாக சுட்டுகிறது. நல்லோள் என்ற சொல்லானது கணவன் இறந்த தீயில் தானும் வீழ்ந்து இறப்பவளையே இச்சமூகமானது நல்லோள் என்று அடையாளப்படுத்துகிறது இத்தகைய கட்டமைப்பில் வாழும் பெண்கள் தன் சுய உரிமையை இழந்து தான் வாழும் சமூகமானது தன்னை தவறாக நினைக்க கூடாது என்ற காரணத்தினால் வேறு வழியின்றி இந்நிலைக்கு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

தள்ளப்படுகின்றனர். பெண் கணவனை இழந்தால் அவள் வாழவேண்டுமா? வாழ கூடாதா? என்பதையே இச்சமூகம் தீர்மானிப்பது எத்தகைய உரிமை மீறல்களாக கையாளப்பட்டுள்ளன. கொண்டிமகளிராக அடிமையாக வாழ்வதை விட உடன்கட்டை ஏறுதலே சிறந்தது என்று என்னும் மனநிலைக்கு அவளை சமூகமானது தள்ளிய போக்கினை காணமுடிகிறது.

**மூதானந்தம்**

**'கயல் ஏர் கண்ணி கணவனோடு முடிய**

**வியல் நெறிச் செல்வோர் வியந்துரைத்(து) அன்று' (புறப்.வெ.மா: 262)**

என்ற நூற்பாவானது வீரன் இறந்ததும் மனைவி இறந்ததை கண்டோர் பார்த்து வியந்ததாக கூறப்படுகிறது.

**'தென்னவன் ………………**
**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவல் இல் என்று**
**இணை அடி தொழுது வீழ்ந்தனளே**
**மடமொழி……'(சிலம்பு.வழக்குரை:77-79)**

கணவனை இழந்த கற்புடைய மகளிர்க்கு அந்த இழப்பிற்கு ஈடாகக் காட்டுவதற்கு உலகில் எதுவும் இல்லை ஆதலால் கணவன் திருவடிகளைத் தொழுது வீழ்ந்து உயிர் துறந்தாள்.என இலக்கியம் சுட்டுகிறது. கணவனை இழந்தவுடன் பெண் அவனுடன் சேர்ந்து இறப்பதை சமூகமானது வியப்பிற்குரியதாக பேசியதோடு பெண்களை எத்தகைய உணர்வுகளால் கட்டுபடுத்தி சமூகத்தின் தேவைக்கு பழிப்பொருளாக மாற்றும் விதத்தினையும் காணமுகிறது. உடனுயிர் மாய்தல் குறித்த செய்திகள் அரிதாகவே காணக்கிடைக்கின்றன. போர்க்களத்தில் இறந்த சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் மற்றும் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி ஆகிய மன்னர்களின் மனைவியர் தத்தம் கணவர் மார்பிலே வீழ்ந்து உயிர் மாண்டதாக கூறப்படுகிறது.

தலைவன் இறந்தவுடன் உயர்குடி மகளிர் தன்னுயிரைப் பேணுதல் தகாது எனும் அறம் நுட்பமாகப் பெண்ணிடம் போதிக்கப்பட்டுள்ளது.

**'களம் கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர**
**உடன்வீழ்ந் தன்றால் அமரே பெண்டிரும்**
**பாசமிகு மிசையார் பனிநீர் மூழ்கார்**
**மார்பகம் பொருந்தி ஆங்கமைந்தனரே'(புறம்.62:11-14)**

மேலும் பெண்களை சமூகமானது பல சொல்லாடல்கள் மூலம் அவர்களை அடக்கியும் வைத்துள்ள பான்மையினை காணமுடிகிறது. மேலும் தலைவனைப் பிரியும் நிலை தனக்கு நேந்;ர்ந்தால் அக்கணமே தன்னுயிர் ஆனாது பிரிந்து விடவேண்டும் என்று விரும்பும் தலைவியின் உளநிலை கூறப்படுகிறது. பெண்களை இத்தகைய கட்டமைப்புக்குள் கொண்டு வந்து உளவியல் ரீதியாக புடம் போட்டு பதப்படுத்திய ஆணாதிக்க சமூகத்தின் போக்கினை நன்கு உணரமுடிகிறது.

**'…………….. பாய்ந்துயிர் வகுக்கும்**
**சார னாட நடுநாள்**
**வாரல் வாழியே வருந்தும் யாமே' (குறுந்.69:5-6)**

கணவன் இறந்தால் தான் இறந்துவிட வேண்டும் என்ற எண்ணத்தை பெண்களின் மனதில் ஆழமாக பதிக்கப்பட்டதை உணரமுடிகிறது.

**'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' (குறுந்.135:2)**

என்னும் பாடல் கணவனின் மறைவுக்குப் பின்னர் மனைவி உயிரற்றவள் உயிர் வாழத் தகுதியற்றவள் என்ற கருத்தை நுட்பமாக முன் வைத்து அவளது மனநிலையினை மரணத்தை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

நோக்கி நகர்த்துகிறது. இத்தகைய கருத்துக்களை தொடர்ந்து வலியுறுத்துவது மூலம் தமக்கு விதிக்கப்பட்ட கற்புநெறிபடி உயிர்வாழ்வது அல்லது உயிர் நீப்பதே தலையாய அறம் என்று மகளிரை நம்ப வைத்தனர் அதிலும் உயர்குடி சார்ந்த மகளிர்களின் கற்பு சார்ந்த நிலைப்பாடு சமூகத்தால் பெரிதும் கவனிக்கப்பட்டதால் அவர்கள் உயிர்விடுவதையே தம் பிறவிக்குரிய கடமையாகவும், பெருமையாகவும் நினைக்கும் வண்ணம் செய்தனர்.

**பாலை நிலை**

கணவனை எரியூட்டப்படும் சிதையில் வீழ்ந்து மனைவியும் எரியுண்டு இறப்பதே பாலைநிலையாகும்.

**'பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்**
**நுமக்கு அரிதாகுக தில்ல எமக்கு எம்**
**பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பு அற' (புறம்.246:11-13)**

பெங்கோப்பெண்டு என்பவர் தன் கணவர் பூதப்பாண்டியன் போரில் மாண்டான் எமக்குப் பொய்கையும் தீயும் ஒரு தன்மைத்தான் எனக்கூறி கணவன் இறந்தவுடன் தீப்பாய முற்பட்ட நிகழ்வினை சுட்டுகிறது.

**தாபதநிலை**

**'குருத்து அலர்க் கண்ணி கொழுநன் மாய்ந்து எனக்**
**கருந்தடங் கண்ணி கைம்மைகூ றின்று'(புற.வெ.மா.257)**

உடன்கட்டை ஏறாது பூவிழந்து அறுசுவை உணவினை நீக்கி வெறுந்தரையில் படுத்துறங்கிக் கைம்மை நோன்புற்று உடலை வருத்தி வாழ்ந்தனர். இத்தகைய கைம்மை நோன்பு என்பது கணவனை இழந்த பெண்கள் மீது திணிக்கப்பட்டதே தவிர மனைவியை இழந்த எந்த ஆண்மீதும் இதனை சுமத்தவில்லை. பழங்கால மகளிர் விதவிதமான ஆடை, அணிகலன்களை அணிந்து தங்கள் உடலை அழகுப்படுத்துவதில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். தொய்யில் எழுதுதல், மஞ்சள் பூசுதல், முடி அலங்காரம், வாசைன திரவங்கள் போன்றவற்றை கொண்டு தங்களை அழகுபடுத்திக் கொண்டனர். ஆனால்இவை எல்லாம் கணவனை இழந்த மகளிர் அணியக்கூடாது வெளி உலகிற்கு அவள் அழகற்ற உருவமாக கணவனை இழந்த பெண்ணை நிறுத்தப்படுகிறாள்.

**'ஊழினிருப்பு வெருக்கிய மகளிர்**
**வாழைப் பூவின் வளைமுறி சிதற'(புறம்.237:10-11)**

கணவனை இழந்த பெண்ணின் கையில் உள்ள வளையல்கள் நீக்கப்படுவதும் அவ்வாறு அணிகலன்களை நீக்கப்பட்ட மகளிரை **'கழிகல மகளிர்'** என்னும் பெயரில் அழைக்கலாயினர்.

**'கொய்ம் மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய**
**கழிகல மகடூஉப் போல'(புறம்.261:17-18)**

கணவனை இழந்த பெண்களின் கூந்தல் மழிக்கப்பட்டதை புறப்பாடல் காட்டுகிறது.

**'பரல்பெய் பள்ளிப் பாயின்று வதியும்' (புறம்.246:9)**

கணவனை இழந்த பெண் தலைமழிக்கவும், வெந்த கீரையை உண்டும், பாயின்றி பரல்கற்கள் மீதும், வெறுந்தரையிலும் படுத்துறங்க வேண்டும் என்ற கொடிய நிலையினைக் காட்சிப்படுத்துகிறது. கணவனின் மறைவுக்குப் பின்னர் மனைவியின் அழகு தேவைபடாது என்றும் அப்பெண் வேறொரு ஆடவர் மீது விருப்பம் கொண்டு விடாமல் இருக்கவும் இச்சமூகத்தால் மேற்கொள்ளப்பட்ட முன் ஆயத்தங்களே இவை.கணவனை இழந்த பெண் புலனடக்கம் கொண்டு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

வாழும் விதமாக பண்பாடு என்னும் பெயரில் அவளுக்கு கட்டாயமாக்கப்பட்டன. அத்துடன் நில்லாமல் கணவனை இழந்தவள் எதிரே வரக்கூடாது பொதுநிகழ்வில் கலந்துக் கொள்ளக்கூடாது போன்ற நம்பிக்கைகளை உளவியல் ரீதியாக அவள் சமூகத்தில் இருந்து அந்நியப்படுத்துவதும் வீட்டிற்குள்ளே தன்னை அடைப்பட்டுக் கொள்ளும் விதமாக இம்முறைகளையெல்லாம் செயல்படுத்தினர்.

**தபுதாரநிலை**

**'புனைஇழை இழந்தபின் புலம்பொடு வைகி**
**மனை அகத்து உறையும் மைந்தன் நிலை உரைத்தன்று' (பு.வெ.மா.256)**

மனைவியை இழந்த கணவன் வருத்தத்துடன் தனியே வாழ்வது ஆகும்.

**'கள்ளி போகிய களரியம் பறந்தலை**
**வெள்ளிடைப் பொத்தியவிளை விறகு ஈமத்து**
**ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை' (புறம்.245:4-7)**

ஈமத்தீயில் தலைவியை வைத்து எரித்ததும் அவளை பிரிந்த கணவன் செய்வதறியாது நின்ற நிலையினை குறிப்பிடுகிறது. கணவன் இழந்தால் பெண்ணானவள் முதலில் உடன்கட்டை ஏறவேண்டும் அது முடியாமல் போனால் தன்னுடைய அணிகலன்களை களைய வேண்டும், தலை மழிக்க வேண்டும், அறுசுவை உணவை தவிர்க்க வேண்டும், வெறுந்தரையில் தூங்க வேண்டும், பொதுநிகழ்ச்சியில் கலந்துகொள்ளாமல் சகுனத்தடையாகப் பார்க்கும் இச்சமூகமானது மனைவியை .இழந்த கணவனுக்கு யாதொரு கட்டுபாட்டினையும் கூறவில்லையே வெறும் வார்த்தையளவில் மட்டுமே தன்னுடைய துன்பத்தை பதிவு செய்கின்றனர். இத்தகைய ஆணாதிக்க சமூகத்தின் போக்கு நகைப்பிற்குரியதாகவே அமைந்துள்ளது. பெண்ணை பல இழிவுகளுக்கு ஆட்படுத்தி அவளை சுய சிந்தனையும் சுயமாக வாழும் உரிமையினையும் தகர்த்து அவளை தன் விருப்பபடி ஆட்டுவிக்கும் பொருளாக மட்டுமே இச்சமுதாயத்தை மாற்றிய பாங்கினை காணமுடிகிறது.

**முடிவுரை**

ஒரு மனிதனின் மரணம் என்பது அவனளவில் மட்டும் முக்கியத்துவம் பெறுவதன்று அவன் வாழ்ந்த சமூகத்தின் வரலாறு பண்பாடு அரசியல் உள்ளிட்ட அனைத்து வாழ்வியல் கூறுகளையும் அடையாளப்படுத்தி நிற்கிறது. அதிலும் குறிப்பாக ஒருவன் தன் மரணத்தை தானே விரும்பி ஏற்றுக்கொள்ளுவதான நிகழ்வுகள் உளவியல் மற்றும் சமூகவியல் அடிப்படையில் காணவேண்டியது. இத்தகைய நிகழ்வுகள் தொல் சமூக வரலாற்றில் பரவி கிடந்ததையும் அவை மகளிர் வாழ்வியலில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் அறியமுடிந்தன.

பெண்ணுக்குள் மறைந்திருக்கும் சக்தி மேன்மை பெறுவதை விரும்பாத ஆண்கள் தாங்கள் இல்லாமல் சந்ததியினை பெருக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்டபோதே தங்களின் சர்வாதிகாரப் போக்கை பெண்ணக்குள் திணிக்க முற்பட்டிருக்க வேண்டும். பெண்ணுக்கு சந்ததி உருவாக்குதல் என்னும் பலமே பலவீனமானது அவளுக்கான ஆற்றலும் அறிவும் உணரமுடியாத படி அடக்கப்பட்டிருந்ததையும் மேலும் அவளை குற்ற உணர்வில் அடக்கி ஒடுக்கி ஆள நினைத்ததின் விளைவாகவே பலவிதமான அடக்குமுறைகள் பண்பாடு என்னும் பெயரில் அவள் மீது திணித்து சுயத்தையும் இழந்து நிற்கதியாய் பெண்ணை நிற்க வைக்கப்பட்டிருந்த அத்துணை உரிமை மீறல்களையும் அறியமுடிந்தன.

**பார்வை நூல்கள்**

1. **இரயாகரன், பி.** *ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும்.* கீழைக்காற்று வெளியீட்டகம், 2002.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

2. **இராஜ முத்திருளாண்டி.** *இலக்கியத்தில் மனித உரிமைகள்*. குமரன் பதிப்பகம், 2003.
3. **ஜெகதீசன், ஆ.** *இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள்*. தாமரை பப்ளிகேஷன்ஸ், 2008.
4. **பூரணசந்திரன், க.** *தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர்*. அகரம் வெளியீடு, 2004.

Tamilmanam


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

# 15. தியாகபூமி புதினத்தில் மனித உரிமைகள்

**முனைவர் அ. அனுடயானா**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி- 620 002. mail: anuselva007@gmail.com

ORCiD: https://orcid.org/0009-0004-3756-2354

**ஆய்வுச் சுருக்கம்**

தியாக பூமி நாவலில் மனித உரிமைகள் ஆய்வு என்பது சமூக> அரசியல் மற்றும் தனிப்பட்ட தளங்களில் நாவல் முன்வைக்கும் மனித உரிமைகள் மற்றும் நீதிக்கான போராட்டத்தை மையமாகக் கொண்டது. நாவல்> பிரிவினை காலத்தின் வன்முறை மற்றும் மனித மிருகத்தனம்> மற்றும் அதே சமயம் மனித நேயம்> நீதி, மற்றும் சுய தியாகம் போன்ற சிறந்த விழுமியங்கள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை ஆராய்கிறது. மனித உரிமைகளை ஒடுக்கும் அரசியல் சூழல் மற்றும் அதிலிருந்து விடுதலை பெற மனிதர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் இந்த ஆய்வில் முக்கிய கவனம் பெறுகின்றன. சமூக நீதி மற்றும் ஒடுக்குமுறை பிரிவினை காலத்தின் சமூக அரசியல் சூழலில் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளை நாவல் எடுத்துரைக்கிறது. இக்கட்டுரை சமூக நீதிக்கான போராட்டங்களை> குறிப்பாக பிரிவினையின் போது நடந்த கொடூரமான நிகழ்வுகளை> மனித உரிமைகள் மீறல்களாக முன்வைக்கிறது. தனிப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரம் தனிப்பட்ட சுதந்திரம், தியாகம்> மற்றும் சுயத்தை நிலைநிறுத்துதல் போன்ற கருப்பொருள்கள் நாவலில் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதை இந்த ஆய்வு ஆராய்கிறது. மனிதர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டவும், தங்களின் அடையாளத்தை பாதுகாக்கவும் மேற்கொள்ளும் போராட்டங்களை இது எடுத்துக்காட்டுகிறது. அடிப்படை மனிதநேயம் மனிதனின் மிருகத்தனமான செயல்களைக் கொண்ட மனிதர்களையும்> நேர்மையான, தியாக மனப்பான்மை கொண்ட மனிதர்களையும் சித்தரிக்கிறது. மனிதநேயத்தின் அடிப்படை நற்குணங்களையும்> நீதி மற்றும் இரக்க உணர்வையும் இது வலியுறுத்துகிறது. விடுதலைக்கான தேடல் பிரிவினைக்குப் பின்> அமைதியை உருவாக்கவும்> சமூகத்தில் மனித உரிமைகளை நிலைநிறுத்தவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை நாவல் காட்சிப்படுத்துகிறது. இது ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான மனிதகுலத்தின் தொடர்ச்சியான போராட்டத்தை குறிக்கிறது. தத்துவம் மற்றும் ஆன்மீகம் நாவல்> அடிப்படை மனித விழுமியங்களையும்> தியாகத்தின் முக்கியத்துவத்தையும் தத்துவ ரீதியாகவும்> ஆன்மீக ரீதியாகவும் விவாதிக்கிறது. இது மனித உரிமைகளை உணர்வுகளின் அடிப்படையிலும்> மனிதாபிமானத்தின் அடிப்படையிலும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

அணுகுகிறது.

**முன்னுரை**

கல்கியின் மொத்த இலக்கியப் படைப்பின் பரப்பளவைப் பார்த்தால், நூற்றாண்டு விழாக் காண்கிற கல்கி ஒரு சகாப்தமாகக் காட்சி தருகின்றார். தமிழ் உரைநடை வரலாற்றில் கல்கியின் நடை ஒரு தனி முத்திரை பதித்திருக்கின்றது. கல்கியின் மொழிப்பற்றுப் போலவே நாட்டுப்பற்றும் தனிச்சிறப்புடையது. கல்கியின் படைப்புகள் தமிழ்ப் பண்பாட்டின் மீட்டுருவாக்கமாகத் திகழ்கின்றன. எழுச்சிமிக்க எழுத்துகளை மட்டுமல்ல் எழுத்தாளர்களையும், இதழாசிரியர்களையும் உருவாக்கிய ஒரு பல்கலைக்கழகமாகவும் திகழ்பவர் கல்கி. தியாகபூமி, சமூக நாவல் எழுதிய கல்கி பின்னரே வரலாற்றுப் புதினங்களை எழுதியுள்ளார். சாதிக்கொடுமை, விதவையின் வேதனை, பொருந்தாமணத்தின் கொடுமை, விடுதலைப் போராட்ட வேட்கை போன்ற கருத்துகளின் அடிப்படையில் இவர்தம் சமூகப் புதினங்கள் அமைந்துள்ளன. தியாகபூமி என்ற புதினத்தை ஆனந்த விகடனில் இருபது இதழ்களில் தொடராக எழுதியிருந்தார். கல்கியின் புதினப் படைப்புத் திறனை வெளிப்படுத்துவதற்காக இப்பாடத்தில் தியாகபூமி என்ற புதினத்தின் சிறப்புகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**கலைச்சொற்கள்**

குப்பம் - "ஊர்", "காடு", "கூட்டம்", "குவியல்". சாவடி - தூண்களும், ஓடுகள் வேய்ந்த கூரையும், தரைத்தளமும் நிறைந்த பகுதி

**கதைச்சுருக்கம்**

தஞ்சை மாவட்டத்து நெடுங்கரை என்னும் ஊரில் வாழ்பவர் தெய்வ பக்தி நிறைந்த சம்பு சாஸ்திரி; அவருடைய மனைவி பாக்கியம், அவள் பெற்ற பெண் குழந்தை சாவித்திரி. பாக்கியம் இறந்துவிடவே சாவித்திரியை வளர்ப்பதற்காகச் சம்பு சாஸ்திரி மங்களம் என்ற பெண்ணை இரண்டாம் தாரமாக மணம் புரிந்து கொண்டார். சாவித்திரியை மங்களமும், அவளது தாயார் சொர்ணம்மாளும் சேர்ந்து பல வகையில் கொடுமைப் படுத்தினர். சம்பு சாஸ்திரி, சாவித்திரிக்கு மணம் முடிக்க எண்ணி நரசிங்கபுரத்தில் வாழ்ந்த இராசாராமையர் - தங்கம்மாள் என்போரின் மகனான ஸ்ரீதரனை மணமகனாகத் தேர்ந்தெடுத்தார்.

ஸ்ரீதரனுக்கோ, சாவித்திரியின் பழமை பிடிக்கவில்லை. தன் தாயின் வற்புறுத்தலுக்காகத் திருமணத்திற்கு உடன்பட்டான். சம்பு சாஸ்திரியின் தங்கை மீனா காணாமல் போன செய்தி திருமணத்துக்கு முன்பு தங்கம்மாளுக்குத் தெரிகின்றது. இச்செய்தியை மறைத்ததற்காக ரூபாய் ஐயாயிரம் வரதட்சணையாகச் சாஸ்திரியிடம் கேட்க, அதற்கு அவர் உடன்பட்டதால் திருமணம்

நடந்தது.

சம்பு சாஸ்திரியின் தங்கை மீனாவிற்கும், இராமச்சந்திரன் என்பவனுக்கும் திருமணம் நடைபெற்ற பின் அவன் எங்கோ சென்று விட்டதால் மீனா, சம்பு சாஸ்திரி வீட்டிலேயே இருந்தாள். சில ஆண்டுகள் கழித்து, கும்பகோணம் மகாமகத்திற்குச் சென்றபோது, அங்குத் தன் கணவன் விடுதலைப் போரில் ஈடுபட்டு அரசாங்கத்திற்குத் தெரியாமல் மாறுவேடம் பூண்டு மறைந்து இருப்பதைக் கண்டாள். பின் இருவரும் பம்பாய்க்குச் சென்று தனியாகவே தொழில் ஆரம்பித்துப் பெருஞ்செல்வர்கள் ஆனார்கள். இந்நிலையில் காணாமற்போன தங்கையால் சாஸ்திரிக்குப் பழிச்சொல் வந்தது. மேலும் ஆற்று வெள்ளத்தால் துன்பப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சாஸ்திரி, அக்கிரகாரத்தில் உள்ள தனது மாட்டுக் கொட்டகையில் தங்க இடம் அளித்ததால் அந்தணர்கள் சாஸ்திரியை விலக்கி வைத்தனர். இதுவே மீனா காணாமல் போன கதை. இனி சாவித்திரி கதைக்கு வருவோம்.

கணவன் இல்லத்துக்குச் சென்ற சாவித்திரி பல கொடுமைகளுக்கு ஆளானாள். இந்நிலையில் கருவுற்றாள். இச்செய்தியை சாஸ்திரிக்கு எழுதினாள். ஆனால் சாஸ்திரியோ வறுமைக்கு ஆட்பட்டமையால், தன் இரண்டாம் மனைவி மங்களத்தைத் தாய்வீட்டிற்கு அனுப்பிவிட்டுப் பிழைப்பதற்காகச் சென்னை சென்றுவிட்டார். நெடுங்கரைக்கு வந்த சாவித்திரி தன் தந்தை சென்னை சென்றுவிட்டதை அறிந்து, அங்குச் சென்று பல இடங்களிலும் தேடினாள். இறுதியில் மகப்பேறு இல்லத்தில் சேர்க்கப்பட்டு ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

வாழ்க்கையில் பல இன்னல்களுக்கு ஆளான சாவித்திரி, எங்கேயாவது வேலை கிடைக்குமா என்று தேடி அலைந்தாள். கடைசியில் கடல் நீரில் மூழ்கிச் செத்துப் போவது என்று குழந்தையுடன் தண்ணீரில் இறங்கினாள். அப்போது தந்தையின் பாடலைக் கேட்டாள். குரல் வந்த திசையை நோக்கி ஓடினாள். தோப்புக்கு நடுவே ஒரு சிறு குளமும், குளத்தின் கரையில் ஒரு பழைய மேடையும் காணப்பட்டன. மேடையில் அப்பா படுத்திருந்தார். சிறிது நேரம் கழித்து மெதுவாக மேடைக்கு அருகில் சென்றாள். அப்பா அசந்து தூங்குவதைப் பார்த்தாள். அவள் தன் குழந்தையை சாஸ்திரி அருகே விட்டு விட்டு, முன்பு கேள்விப்பட்ட பம்பாயில் வாழும் ஒரு குடும்பத்தாருக்குப் பணியாளாகச் சென்றாள்.

குழந்தையை சாஸ்திரி சாவடிக் குப்பத்திற்கு எடுத்துச் சென்றார். அக்குப்பத்தைச் சீர்திருத்த எண்ணினார். அக்குப்பத்திலுள்ள ஒரு பள்ளியில் குழந்தையைச் சேர்த்தார். அவள் சாருமதி என்ற பெயருடன் அனைத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கினாள்.

பம்பாய்க்குச் சென்ற சாவித்திரி தன் அத்தை மீனாவின் குடும்பத்திற்கே பணியாளாய்ச்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

சென்றாள். பின் மீனாவும், அவளது கணவனும் இறந்துபடவே, மிகுந்த செல்வத்துடனும் உமாராணி என்ற மாற்றுப் பெயருடனும் சென்னைக்கு வந்தாள். உமாராணியைப் பார்க்கச் சாருமதியும், தோழிகளும் வந்தனர். பள்ளிக்கூடக் கட்டிட நிதிக்காக நாடகம் நடத்தப் போவதாகவும், அதற்குரிய நுழைவுச் சீட்டை வாங்க வேண்டும் என்றும் அக்குழந்தைகள் வேண்டினர். உமாராணி எல்லா நுழைவுச் சீட்டுகளையும் தானே வாங்கிக் கொண்டாள்.

அந்தக் குழந்தைகள் சென்ற பிறகு உமாராணி, சாருமதி நினைவாகவே இருந்தாள். எனவே தன்னுடன் பணியாற்றிய வழக்கறிஞர் ஆபத்சகாயமய்யர் உதவியால் சாவடிக் குப்பம் சென்றாள். அங்குத் தன் தந்தை சாஸ்திரியைக் கண்டாள். அங்கு அவள் தன்னை வெளிக்காட்டாமல் பேசினாள். சாஸ்திரியிடம் தான் குழந்தை சாருவை எடுத்து வளர்ப்பதாகக் கூறினாள். இதற்கு சாஸ்திரியும் உடன்பட்டார்.

ஆனால் உமாராணிக்குத் தெரியாமல் சாவடிக் குப்பத்திலிருந்து கிளம்பி, சாருவுடன், சாஸ்திரி ஊர் ஊராகச் சென்று நாட்டு விடுதலைக்காகப் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கினார். தன் மனைவி மங்களத்தின் உடல் நலக் குறைவு அறிந்து நெடுங்கரைக்குச் சென்றார். மங்களம் சாஸ்திரியின் மடியிலே இறந்தாள்.

சாருவைக் காணாத உமாராணி காவல் நிலையத்திற்குச் சென்று முறையீடு செய்யும் போது காவலர்கள் ஸ்ரீதரனை அழைத்து வருவதைக் கண்டாள். அவன் விடுதலை பெற இவள் உதவினாள்.

ஸ்ரீதரன், உமாராணி தன் மனைவி என அறிந்து உரிமை கோரி வழக்குத் தொடுத்தான்.

உமாராணிக்காக ஆபத்சகாயமய்யரும், ஸ்ரீதரனுக்காக நாணாவும் வழக்காடினார்கள். அப்போது தான் உமாராணி தன் மகள் சாவித்திரி என்பதையும், சாருமதி தன் பேத்தி என்பதையும் சாஸ்திரி அறிந்தார். உமாராணி தான் தன் தாய் என்பதை அறிந்து சாரு எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தாள்.

மறுபடியும் உமாராணி - ஸ்ரீதரன் வழக்கு விசாரணைக்கு வந்தபோது சாவித்திரி தன் குழந்தையைக் கொன்று விட்டதாகக் கூறினாள். இதனால் காவல் துறையினர் அவளைக் கைது செய்ய முயன்றனர். உடனே சாரு நீதிபதியைப் பார்த்து உண்மையைக் கூறினாள். வழக்கு முடிந்தவுடன் சாஸ்திரி தன் மகள் சாவித்திரியை ஸ்ரீதரனுடன் சேர்ந்து வாழுமாறு அறிவுரை கூறினார். ஆனால் சாவித்திரியோ அதற்கு உடன்படவில்லை. இந்தப் பெருஞ்செல்வத்துக்குக் காரணம் அத்தை மீனாவே என்று விரித்துரைத்தாள். சாஸ்திரி தன் தங்கையைப் பற்றிய தவறான எண்ணத்தை மாற்றிக் கொண்டார். கணவனுடன் இணைந்து வாழ விரும்பாத சாவித்திரி நாட்டுப்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

ஒரு நாள் நாட்டிற்காகப் பணியாற்றிய பெண் தொண்டர்கள் பலரைக் காவற்படையினர் சிறையில் அடைக்க அழைத்துச் சென்றனர். அதே வண்டியில் ஸ்ரீதரனும் சமூகக் குற்றவாளியாக சிறையில் அடைக்கப்பட ஏற்றப்பட்டான். ஸ்ரீதரனும் போலீஸ் வண்டிக்குள் தேச சேவகிகளின் மத்தியில் சாவித்திரியைக் கண்டு அளவில்லாத வியப்படைந்தான். இத்தனை நாளும் பிரிந்தவர்கள் அந்த நிமிடத்திலேதான் ஒன்று கூடினார்கள்.

இறுதியில், சம்பு சாஸ்திரி தன் பேத்தி சாருமதியுடன் சாவடிக் குப்பத்திற்கு மீண்டும் வந்தார். குப்பத்தில் இறைவழிபாடு நடந்து கொண்டிருந்தது. பின் வைஷ்ணவ ஜனதோ என்ற பாடலை மக்கள் மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டிருந்ததைக் கண்டு மெய்மறந்து நின்றனர் சம்பு சாஸ்திரியும், சாருமதியும். சிறைசென்ற சாவித்திரியும், ஸ்ரீதரனும் விடுதலையானபின் நாட்டு விடுதலைக்காக இணைந்து போராடினர். இவ்வாறு கதை முடிவடைகிறது.

**கதைமாந்தர்**

ஒரு நாவலின் அடித்தளமே கதைமாந்தரைப் படைப்பதைத் தவிர வேறு அன்று என்று கூறுவார் ஆர்னால்டு பென்னட் என்ற அறிஞர். ஒரு நாவலுக்கு உயிர் கொடுக்கும் இன்றியமையாத கூறு பாத்திரப் படைப்பு.

தியாக பூமியில் ஸ்ரீதரன், சாவித்திரி, சம்பு சாஸ்திரி, சாருமதி முதலானோர் முதன்மைப் பாத்திரங்களாகவும், மங்களம், தீட்சிதர், இராஜாராமய்யர், நல்லான் போன்றோர் துணைப் பாத்திரங்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.

**சாவித்திரி**

தியாகபூமி புதினத்தின் தலைவி சாவித்திரி. இவள் இந்த நாட்டின் பழைமையான பண்பாட்டு மரபில் வந்த பெண்மை நலம் கொண்டவள். மண் அடிமைத்தனமும், பெண் அடிமைத்தனமும் நீக்கப்பட வேண்டும் என்ற உரிமையுணர்வு மிக்கவள். பாரதி காட்டிய புதுமைப்பெண்; இளமையிலேயே தாயைப் பறி கொடுத்தவள்; குழந்தை சாருவின் தாய்; ஸ்ரீதரனின் மனைவி.

சாவித்திரியை மணந்த ஸ்ரீதரனுக்கு அவளுடைய பழைமையான பண்பாடுகள் பிடிக்கவில்லை. 'புதுமை' என்பதை அவன் தவறாகப் புரிந்து கொண்டிருந்தான். சாவித்திரி துன்பம் மிகுந்த நிலையிலும் இறை நம்பிக்கையோடு செயல்பட்டவள்.

மீனாட்சி மருத்துவமனையில் உள்ள பணிப் பெண்களை எல்லாம் பார்க்கும் போது, தானும் சுதந்திரமாக வாழவேண்டும் என்றும், பிறர் கையை எதிர்பார்க்காது வாழ வேண்டும் என்றும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

தீர்மானிக்கிறாள்.

சாவித்திரியின் வாழ்க்கை, விடுதலைக்குப் போராடிய வாழ்க்கை. இவள் திருமணத்திற்கு முன் சித்தியின் கொடுமையிலிருந்து விடுதலை பெறத் துடித்தாள். திருமணம் முடிந்ததும் கணவனோடு வாழத் துடித்தவள் கணவனால் பல தொல்லைகளுக்கு ஆட்பட்டாள். குழந்தைக்குத் தாயானதும் எவ்வாறு வாழ்வது என எண்ணி ஏங்கினாள். உமாராணியாகச் செல்வம் படைத்தவளாக மாறியதும் தந்தையையும், குழந்தையையும் தேடி அலைந்தாள். பெண்ணுரிமைக்காகப் போராடினாள். இறுதியில் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டாள். கதைத் தலைவனைவிடத் தலைவியான சாவித்திரி பாத்திரமே கதை இயக்கத்திற்குப் பெரும் பங்காற்றுகிறது.

**சம்பு சாஸ்திரி**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நெடுங்கரை கிராமத்தில் அந்தணர் குலத்தில் தோன்றியவர், சாவித்திரியின் தந்தை; இறை நம்பிக்கை உடையவர்; கிராம மக்களைத் தம்முடைய சாதி பேதம் இல்லாத இடையறாத அன்பினால் சீர்திருத்திய செம்மல்.

அரிசன மக்களைத் தீண்டத்தகாதவர்கள் என்று எண்ணி வாழ்ந்த காலத்தில் சாஸ்திரி அக்கிரகாரத்தில் உள்ள தமது மாட்டுக் கொட்டகையில் அவர்களுக்குத் தங்க இடமளித்து உணவளிக்கிறார். இதனால் அந்தணர்கள் தம் சாதியிலிருந்து சாஸ்திரியைத் தள்ளி வைக்கின்றனர்.

மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலிய பிரச்சாரங்களில் ஈடுபட்டு ஊர் ஊராகச்சென்று, தொண்டு செய்யும் சாஸ்திரி சாவடிக் குப்பத்துக் காந்தியாகவே மாறிவிடுகிறார்.

**ஸ்ரீதரன்**

தியாகபூமி புதினத்தின் தலைவன்; சாவித்திரியின் கணவன்; சாருமதியின் தந்தை; புதினத்தின் தொடக்கத்திலும், இறுதியிலும் மட்டும் இடம் பெறுபவன்.

தங்கம்மாள் தன் மகன் ஸ்ரீதரனைக் கேட்காமலே அவனுடைய திருமணத்திற்கு வரதட்சணை பேசி ஆயிரம் ரூபாய் முன்பணமும் (அட்வான்சும்) வாங்கியாகிவிட்டது என்று மகனுக்குக் கடிதம் எழுதுவதிலிருந்து தாய்க்கு அடங்கிய பிள்ளையாக ஸ்ரீதரன் இருப்பதை அறியலாம்.

ஆடம்பர மோகம் கொண்ட ஸ்ரீதரன், ஸீஸியைக் காதலித்தான். ஸீஸியின் ஆடம்பரமும், அழகும் ஸ்ரீதரனைக் கவர்ந்தன. இதனால் சாவித்திரியைப் பல கொடுமைகளுக்கு ஆளாக்கினான். பல நாட்களுக்குப் பின் ஸீஸி ஸ்ரீதரனைப் பகிரங்கமாய் நிராகரித்துப் போய் விட்டாள்.

புதினத்தின் தொடக்கத்தில் போக பூமியில் வாழ்ந்த இவன் இறுதியில் தியாக பூமியில்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

அடியெடுத்து வைக்கிறான். அன்னை பாரத நாட்டின் கால் விலங்குகளைத் தகர்க்கக் கைவிலங்குப் பூணுகிறான்.

**சாருமதி**

சாவித்திரியின் குழந்தை சாருமதி. சம்பு சாஸ்திரியின் பேத்தி. தியாகபூமியில் அனைவரின் கவனத்தையும் கவர்ந்த பாத்திரம். பிறந்த உடனேயே தாய்தந்தையால் கைவிடப்பட்டுத் தன் தாத்தா சம்பு சாஸ்திரியால் உறவு முறை தெரியாமலே வளர்க்கப்பட்டாள். இசை ஈடுபாடும், தெய்வ பக்தியும், நாட்டுப் பற்றும் சாருமதியிடம் மிகுதியாகக் காணப்பட்டன.

சாருமதி, சாவித்திரியும் ஸ்ரீதரனும் தம்முள் ஒன்றுபட்டு நிச்சயம் தன்னிடம் வருவார்கள் என்ற நம்பிக்கையோடு இருந்தாள். அவர்களும் வந்தனர். தியாகபூமியில் இடம்பெற்ற முதன்மைப் பாத்திரங்களின் பண்பு நலன்கள் குறித்து இப்பாடத்தின் மூலமாக அறிந்து கொண்டோம். இனி, இந்தியப் பெருநாட்டைத் தியாக பூமியாகக் காட்டும் கல்கி, அத்தியாக பூமியின் மேன்மைக்காகப் பெரும் தியாகங்களைச் செய்யுமாறு மக்களுக்கு விழிப்பூட்டிய காந்தியடிகளின் சிந்தனைகளை நாவலில் எவ்வாறு அமைத்துக் காட்டுகிறார் எனக் காணலாம்.

**காந்தியச் சிந்தனைகள்**

கல்கி விடுதலைப் போராட்ட வீரர், காந்தியப் பற்றுள்ளவர். அவர் வாழ்ந்த காலம் காந்தியுகம் என அழைக்கப்பட்ட காலமாகும். விடுதலை இயக்கத்தோடு இணைந்தே வாழ்ந்த கல்கி தம்முடைய காந்தியப் பற்றைக் கட்டுரையிலும், சிறுகதையிலும், புதினத்திலும் வெளிப்படுத்தியுள்ளார். அவர் புதினத்தில் நிகழ்ச்சிகள் மூலமாகவும், கதைமாந்தர் வாயிலாகவும் காந்தியக் கருத்துகளை வெளியிட்டு உள்ளார்.

**தீண்டாமை**

காந்தியச் சமுதாய நெறிகளுள் ஒன்று தீண்டாமைக் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதாகும். மனிதருள் ஒரு பிரிவினரைத் தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கும் கொடுஞ்செயல் தீண்டாமையாகும். தீண்டாமை இந்தியாவின் சாபக்கேடு என்றார் காந்தியடிகள். தியாக பூமியில் சம்பு சாஸ்திரி, சேரி வாழ் மக்களை வெள்ளத்தில் இருந்து காப்பாற்றித் தமது மாட்டுக் கொட்டகையில் தங்குமாறு ஏற்பாடு செய்தார். இதனால் பிராமணர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சம்பு சாஸ்திரியைத் தங்கள் சாதியிலிருந்து விலக்கி விட்டனர். சாஸ்திரங்களில் தீண்டாமை என்ற ஒன்று கிடையாது என்பதை, சம்பு சாஸ்திரி கிராம மக்களுக்குப் போதித்தார். சம்பு சாஸ்திரியின் பாத்திரம், ஓர் அந்தணரே முன்வந்து தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களை அணைத்துக் கொள்வதாக உருவாக்கப்பட்டது. பாரதியார், ராஜாஜி

போன்ற அந்தணக் குலத்தைச் சார்ந்த பலர் விடுதலைப் போராட்டத்தில் காந்தியைப் போல உழைத்தனர். இது, தியாக பூமி நாவலில் எதிரொலிக்கிறது.

**மதுவிலக்கு**

விடுதலை இயக்கக் காலத்தில் மக்களிடையே குடிப்பழக்கம் பரவிக் கிடந்ததைத் தம் புதினங்களில் சுட்டிக் காட்டி, மதுவிலக்குப் பிரச்சாரம் செய்துள்ளார் கல்கி. சம்பு சாஸ்திரி, ஊர் ஊராகச் சென்று கூட்டு வழிபாடு செய்து வந்தார். மக்களிடம் கூட்டு வழிபாட்டின் மூலம் தெய்வ பக்தியையும், நாட்டுப்பற்றையும் அவர் வளர்த்தார். அதனுடன், கள் உண்ணாமைக்கு எதிராக மக்களைத் திரட்டினார். கள்ளுக்கடையில் இருந்த சிலர் சாஸ்திரியைக் கண்டவுடன் கலயங்களைப் போட்டுவிட்டு ஓடத் தொடங்கினர். சிலர் கள்ளுக்கடையை மூடிவிட்டனர். சாஸ்திரியால் கிராமங்களில் இருந்த குடிப்பழக்கம் அடியோடு நின்று போனது.

**பெண் விடுதலை**

**கல்வியில் லாத பெண்கள்**
**களர் நிலம் - அந்நிலத்தில்**
**புல்முளைத் திடலாம் ; நல்ல**
**புதல்வர்கள் முளைப்ப தில்லை**

எனப் பாரதிதாசன் பெண் கல்வி பற்றிப் பாடினார். கல்கி தம் புதினங்களில் பெண் கல்வி மற்றும் பெண் விடுதலையைப் பற்றியும் வலியுறுத்திக் கூறியுள்ளார். தியாக பூமி என்ற நாவலின் உட்பிரிவில் பெண்விடுதலை பற்றிக் கூறியுள்ளார். கிளர்ச்சியில் ஈடுபட்ட மகளிர்,

**கற்பு நெறியென்று சொல்ல வந்தார் - இரு**
**கட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம்**

என்று வீறு கொண்டெழுந்து பாரதியின் பாடலைப் பாடுவதாகவும், மகாத்மா காந்தியின் போதனைக்கு ஆயிரக்கணக்கான பெண்கள் செவி சாய்ப்பதாகவும் நாட்டுத் தொண்டில் ஈடுபட்டு, சிறை புகுந்ததாகவும் காட்டிக் கல்கி தம் புதினத்தில் பெண் விடுதலையை வெளிப்படுத்தியுள்ளார். இந்நாவலில்,..

**தாயின் அடிமைத்தனத்தை நீக்குங்கள், உங்கள்**
**அடிமைத்தனம் தானே விலகிப் போகும்**

என்று காந்தி மகான் உரைத்த வழியிலேயே பெண்கள் தங்கள் விடுதலையைப் பெற முயல்கிறார்கள். கல்கி, தியாகபூமியில் பெண் விடுதலைக்காக ஒரு புரட்சியையே உண்டு பண்ணியுள்ளார் என எண்ணுமளவிற்குச் சாவித்திரி என்னும் பாத்திரத்தைப் படைத்துள்ளார்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**விடுதலைத் தாக்கம்**

தியாகபூமி தமிழகத்தில் நிகழ்ந்த சத்தியாக்கிரகப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டது. இப்புதினத்தில் சம்பு சாஸ்திரி கிராமங்களுக்கெல்லாம் சென்று சத்தியாக்கிரக இயக்கத்தின் போக்கையும், தன்மையையும் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

சாஸ்திரியின் பேச்சைக் கேட்ட மக்கள் தங்கள் உடல், பொருள் அனைத்தையும் நாட்டிற்காகத் தரத் துணிந்தார்கள். சாஸ்திரியோடு சாருவும் இணைந்து கொண்டு நாட்டுச் சேவையில் ஈடுபட்டாள்.

இந்நாவலில் தாம் உணர்த்த விரும்பும் சிந்தனைகளைக் கல்கி எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் என்று பார்த்தோம். அவற்றை, ஓர் அழகிய கலைவடிவமாகத்தரக் கல்கி பயன்படுத்திய உத்திகள் பற்றி இனிக் காணலாம்.

**தொகுப்புரை**

கல்கி பல வரலாற்றுப் புதினங்களையும், சமூகப் புதினங்களையும் எழுதியிருந்தாலும் அவருடைய தியாகபூமி என்ற ஒரு புதினத்தின் பல்வேறு சிறப்பியல்புகள் மட்டும் இங்கு விளக்கப்பட்டுள்ளன. கல்கி ஒரு சிறந்த சமூகப் புதின ஆசிரியர் என்பது புலனாகின்றது. கல்கி தம்முடைய புதினத்தில் மனித உரிமைகளின் உத்தியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

1. கல்கி – தியாகபூமி> தமிழ்வெளி பதிப்பகம்> சென்னை. பதிப்பு – 2001
2. பாரதிதாசன் - பாரதிதாசன் கவிதை தொகுப்பு> அருள் சுடர் பதிப்பகம், சென்னை. பதிப்பு - 1993.
3. பாரதியார் - பாரதியார் கவிதைத் தொகுப்பு, வானவில் பிரசுரம், சென்னை. பதிப்பு 1977

 | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 16. பாரதியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள்

**முனைவர் பா.இமாகுலேட்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி 620 002
imaculateben@gmail.com, Orcid: https://orcid.org/0000-0002-4741-7976

**ஆய்வுச்சுருக்கம்:**

நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த பரதியார் தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். பாரதியாரின் கற்பனையில் பெண் விடுதலை வெளிப்படுகிறது. அடிமை இருள் நீங்கப் பெண்விடுதலை அவசியம் எனப்பாடுகிறார், பெண் மதிக்கப்படும் பொழுது சமூகம் மிளிரும். ஏனென்றால் ஒரு சமூகத்தின் இயக்கத்திற்குப் பெண்ணின் பங்களிப்பும் அவசியமாகிறது. பெண்ணைப் புறம் தள்ளி எந்த வளர்ச்சியும் கிடையாது. பெண் இயற்கையானவள். பாரதியிடம் பெண்ணடிமை குறித்த வலுவான மறுப்புணர்வு இருந்திருக்கிறது என உணர்ந்துகொள்ள முடிகிறது. பெண்கள் மீதான சமூகத்தளைகள் களைந்தெறியப்பட வேண்டும் என்ற வேட்கை பாரதியாரிடம் அதிகமாக இருந்தது. ஆணும் பெண்ணும் சமம் என்ற பெண்ணி உரிமைச் சிந்தனையை அவர் வலியுறுத்துகின்றார். பாரதியின் பெண், ஆண்களுக்கு நிகரானவள். உரிமை மிக்கவள். பெருமை மிக்கவள். வையகத்தைப் புதுமையுறச் செய்பவள். விருப்பமில்லாத விவாகம், குழந்தைத் திருமணம் இவை கூடாது என்கிறார். விவாகத்திற்குப்பின் விரும்பினால் கணவனைவிட்டு விலகவும் அல்லது விவாகமே செய்யாமல், சுயமாகத் தொழில் செய்து கௌரவமாக வாழவும் பெண்களுக்கு உரிமை தர வேண்டும் என்கிறார். தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராடுகின்ற வீரப் பெண்ணாகப் பாஞ்சாலியைப் படைத்துக் காட்டியுள்ளார். இவ்வாறாக பாரதியாரின் பெண்ணுரிமைக் கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை:**

நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த பரதியார் தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் “மகாகவி" என்ற புனைபெயரைக் கொண்டு அறியப்படுகிறார். பெண் விடுதலைக்காகவும், சாதி மறுப்பு, குழந்தைத் திருமணத்திற்கு எதிராகவும் போராடினார். சமூக சீர்திருத்தவாதியுமாவார். கவிதையில் சிறந்து விளங்கியதற்காக இவருக்கு "பாரதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. ஆணும் பெண்ணும் சமம் என்ற பெண்ணிய உரிமைச் சிந்தனையை அவர் வலியுறுத்துகின்றார். பாரதியின் பெண், ஆண்களுக்கு நிகரானவள். உரிமை மிக்கவள். பெருமை மிக்கவள். வையகத்தைப் புதுமையுறச் செய்பவள். விருப்பமில்லாத விவாகம், குழந்தைத் திருமணம் இவை கூடாது என்கிறார். இவ்வாறாக பாரதியாரின் பெண்ணுரிமைக் கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்மை போற்றும் பாரதியார்**

மகாகவி பாரதியார் தன் படைப்பில் பல இடங்களில் பெண் விடுதலைக்காகக்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)
Tamilmanam

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

குரல்கொடுத்துள்ளார். பெண் விடுதலைக்காகக் கும்மி வடிவில் குரல் கொடுத்தவர். காற்றே! துன்பக் கேணியிலே எங்கள் பெண்கள் அழுத சொல் மீண்டும் உரையாயோ? என்று பிஜித் தீவில் கரும்புத் தோட்டத்தில் பணிபுரியும் இந்தியப் பெண்களின் அவல நிலையைக் கருணை உள்ளத்தோடு எழுத்தில் வடித்தவர். புதுமைப் பெண்ணைப் படைத்துத் தம் கவிதையுலகில் உலா வரச் செய்தவர். பாஞ்சாலி சபதத்திற்கு முதன்மை தந்து ஒரு தனிக்காவியம் படைத்தவர். பாரத மாதாவுக்கு நவரத்தின மாலையும், திருப்பள்ளியெழுச்சியும், திருத்தசாங்கமும் இயற்றியவர். தமிழ்த் தாயாக இருந்து தம் மக்களை எட்டுத்திக்கும் சென்றிடுமாறும் புதிய சாத்திரம் படைக்கவும் ஆணையிட்டவர். சரஸ்வதி, இலட்சுமி, மாகாளி, பராசக்தி, முத்துமாரி, கோமதி முதலான பெண் தெய்வங்களின் திருப்புகழைத் தம் தோத்திரப் பாடல்களில் நெஞ்சாரப் போற்றிப் பெண் விடுதலை பற்றிப் பேசியவர். 'தையலை உயர்வு செய்!' என்று புதிய ஆத்திசூடி படைத்தளித்தவர்.

**பெண்விடுதலை**:

பெண் விடுதலைப்பற்றி பாரதியார் தனது கவிதையில் பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால் இவ்வுலகில் மானிடர்கெல்லாம் வாழ்க்கை இல்லை என்பதை,

'பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன்: அதற்குறிய பெற்றி கேளீர்!
மண்ணுக்குள் ளெவ்வுயிருந் தெய்வ மென்றால்,
மனையாளுந் தெய்வமன்றோ? மதிகெட் டீரே!
விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர்,
விடுதலையென் பீர் கருணை வெள்ள மென்பீர்,
பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை'[1]

என்ற வரிகளின் வழி கொஞ்சம் கோபத்தோடு விளக்கியுள்ளார். கேட்பவன் தலையில் மெல்ல ஒரு குட்டுக்குட்டி உலக வாழ்க்கை செழிக்க பெண் விடுதலையின் அவசியத்தை அழுத்தமாக எடுத்துரைத்துள்ளார்.மேலும்

'இன்ப வீட்டைத் திறப்பது பெண்ணாலே'[2] என்று குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் தனிப்பாடல் என்ற தலைப்பின் கீழ் அமைந்த பெண்கள் விடுதலைக் கும்மியில்,

'கும்மி யடிதமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கைக்கொட்டிக் கும்மியடி
நும்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நுன்மைகண் டோமென்று கும்மியடி'[3]

என்ற வரிகளில் பாரதியாரின் கற்பனையில் பெண் விடுதலை வெளிப்படுகிறது. அடிமை இருள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

நீங்கப் பெண்விடுதலை அவசியம் எனப்பாடுகிறார். அப்படிப் பாடும்போது, பெண்களின் விளையாட்டுகளில் ஒன்றான ‘கும்மியடித்தலை’ மனத்தில் நிறுத்தி, பெண்ணடிமை விலங்கொடிக்கக் கும்மியடி என்று கூறுகிறார். அதாவது இந்தப் பாடல் முழுக்க முழுக்கப் பெண்கள் விடுதலையை மையமிட்ட பாடலாக அமைத்துள்ளார். பொதுவாகப் பெண்கள் பொழுது போகவில்லையென்றால் ஏதேனும் ஒரு செய்தியை உள்ளடக்கி, கும்மி விளையாட்டு விளையாடுவது வழக்கமாகும். பெண்கள் விடுதலைக் கும்மி என்ற தலைப்பில் அமைந்த இந்தப்பாடலில், இந்த விளையாட்டின் மூலம், சமூகத்தில் பெண்கள் எப்படி இருக்கிறார்கள். அவர்கள் எத்தகைய சக்தி படைத்தவர்கள் என்பதை விரிவாக எடுத்துக் கூறுகிறார். பெண்களின் மீதான அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறை ஆகியவற்றை ஒழித்துவிட வேண்டும் என்ற வேட்கை இங்கே பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தப் பாடலின் முக்கியத்துவம் என்னவென்றால் இந்தியநாடு ஆங்கிலேயர்கள் பிடியில் சிக்குண்டு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் பெண்களும் அடிமைகளாய் வாழ்ந்து வந்துள்ளனர். இந்த நிலை மாறவேண்டும் என்று விரும்பிய பாரதியார் பெண்கள் விடுதலையே நாட்டு விடுதலை, மானுட விடுதலையின் வேர் பெண்விடுதலையே என்ற கருத்தை மையமாகக் கொண்டு, அவர்கள் விடுதலை அடைந்ததாக எண்ணிப் பாடியிருப்பது அவரின் தொலைநோக்குப் பார்வைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

**புதுமைப் பெண்**

பாரதியார் தம் எதிர்பார்ப்பு, ஏக்கம், கனவு, கற்பனை, குறிக்கோள், வேட்கை ஆகிய அனைத்தையும் சம விகிதத்தில் கலந்து உருவாக்கிய ஒரு கற்பனை ஓவியமே ‘புதுமைப் பெண்’. தமது கற்பனையில் உருவான புதுமைப் பெண்ணுக்குப் பல்வேறு சிறப்புப் பெயர்களையும் அடைமொழிகளையும் அணிவித்து மகிழ்ந்துள்ளார்: ‘மாதரசு’, ‘பெண்மைத் தெய்வம், ‘செம்மை மாதர். ‘உதய கன்னி’, ‘வீரப் பெண்’, ‘இளைய நங்கை’ என்பன இவ்வகையில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை.

ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டும் எனக் காலங்காலமாகப் பேசப்பட்டு வந்த அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் மரபு வழியான குணங்களை அடியோடு மாற்றி, ‘நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்’ என்று முற்றிலும் புதுமையான முறையில் பாடியுள்ளதனை,

**‘நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்’[4]**

என்றும், தாம் கனவு காணும் ‘புதுமைப் பெண்ணின் சொற்களும் செய்கைகளும் எத்தகையனவாய் இருக்கும் என்பதையும்,

**‘புதுமைப்பெண்ணிவள் சொற்களுஞ் செய்கையும்**
**பொய்மை கண்ட கலிக்குப் புதிதன்றிச்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

**சதுமுறைப்படி மாந்த ரிருந்த நாள்**

**லேபொது வான வழக்கமாம்'[5]**

அவர் அழகுறச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**பாஞ்சாலி சபதம்:**

தமிழனுக்கு நாட்டுப்பற்று ஊட்ட வேண்டிய தேவையை அடிப்படையாக்கியும், 'பெண்ணடிமை தீர்ந்தாலே நாடு விடுதலை அடையும்" எனும் கருத்தினை வலியுறுத்தவுமே பாரதி பாஞ்சாலி சபதத்தை உருவாக்கியுள்ளார். பாஞ்சால தேசத்தினர் பெற்ற தவப்பயன் தான் பாஞ்சாலி. பஞ்சபாண்டவரின் உயிர் போன்றவள். அருள் தன்மையுடன் ஒளிவீசுபவள், ஓவியம் போன்றவள், பூமியில் உலவும் செல்வமகள், எங்கும் தேடிக் கிடைப்பதற்கரிய திரவியம் பாஞ்சாலி, அடிமையாக்கப்பட்ட பாஞ்சாலியைச் சபைதனில் இழுத்துவரக் கட்டளையிடுகிறான். அப்படியே துச்சாதனன் அந்த இழிசெயலைச் செய்கிறான். அந்நேரத்தில் பாஞ்சாலி மிகவும் கோபங் கொண்டவளாகப் பேசுகிறாள். பாரதியார் படைத்திருக்கும் பாஞ்சாலி, அவர் கனவு கண்ட புதுமைப் பெண்ணின் வடிவம். எனவே தான், தன் கணவன் தன்னைச் சூதாட்டத்தில் பணையப் பொருளாக வைத்தான் என்பதைக் கேள்விப்பட்டதும் பொங்கி எழுகிறாள். தன்னை அழைத்துச் செல்ல வந்த தேர்ப்பாகனிடம் நியாய நுணுக்கங்களைக் கேள்வி ஆக்குகிறாள். பாண்டவர்கள் தம்மை இழந்த பின்னர் என்னைப் பணையம் வைத்தனரா- அல்லது - முதலில் என்னை இழந்து, பின்னர் தம்மைப் பணையம் வைத்தனரா? எனக் கேட்கிறாள். தம்மை முன்னரே இழந்திருந்தால், அவர்களுக்குத் திரௌபதியைப் பணையம் வைக்கும் உரிமை இல்லை என்பதால் இவ் விவரத்தைக் கேட்டு வரும்படி சொல்கிறாள் தேர்ப்பாகனிடம்.

'வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்

என்னை முன்னே கூறி இழந்தாரா? தம்மையே

முன்னம் இழந்துமுடித்து என்னைத் தோற்றாரா?

என்று ஸபையில்இச் செய்தி தெரிந்துவா!'[6]

என்று சொல்லித் திருப்பி அனுப்புகிறாள்.

இந்த இடத்தில் பெண்களின் உரிமையைப் பெண் மூலமாகவே கேட்க வைத்து ஆணினத்தின் அதிகாரத்தைக் கேள்வி கேட்பதாகப் பாரதி பாஞ்சாலி வழிநின்று பேசுகிறார். சாத்திரங்களில், இதிகாசங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கும் பெண்ணின் அவல நிலையைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

**"ஓம்**

**தேவி பராசக்தி யாணை யுரைத்தேன்**
**பாவிதுச் சாதனன் செந்நீர் - அந்தப்**
**பாழ்த்துரி யோதனன் ஆக்கை யிரத்தம்**
**மேவி யிரண்டுங் கலந்து குழல்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

**மீதினிற் பூசி நறுநெய் குளித்தே**
**சீவிக் குழல்முடிப் பேன்யான் - இது**
**செய்யுமுன் னேமுடியேனென் றுரைத்தாள்”[7]**

என்று சபதம் செய்கிறாள். இக்காப்பியத்தில் வீமன், அருச்சுனன் ஆகியோரின் சபதம் இடம் பெற்றிருந்தும் அதனை விடுத்து, வீழ்ந்து கிடக்கும் பெண் சமூகத்திலிருந்து சபதம் மேற்கொள்ளும் ஒரு குரலாக பல நாட்டு அரசர்கள் அமர்ந்திருக்கும் அவையில் ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டி பாஞ்சாலியின் சபதத்தை அமைத்திருப்பது பாரதியாரின் பெண்ணுரிமையை வலியுறுத்துகிறது.

மகாபாரதக்கதையைப் பெண்ணுரிமைக் காப்பியமாகத் தமிழில் சுப்பிரமணிய பாரதி வடித்துத் தந்ததே பாஞ்சாலி சபதம். இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பாரதப் போராகவும், பாஞ்சாலியைப் பாரதத் தேவியாகவும் உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்பு இது.

**பாரதியாரின் கருத்தில் கற்பு**

ஒரு பெண்ணின் கற்பு போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், அதற்கு அவளைச் சார்ந்த ஆணும் கற்புடையவனாக இருக்கவேண்டுமட. ஆண் தனது கற்பு நெறியைக் கைவிட்டுத் தவறு செய்ய முற்பட்டால், அப்போது பெண்ணின் கற்பும் பிழைபடும். இக் கருத்தினை விளக்குவதற்குப் பாரதியார் ஓர் எளிய உவமையைக் கையாண்டுள்ளார். ஒரு வீடு தீப்பற்றி எரிகிறது என்றால், அதன் கூரையும் தான் அதனுடன் சேர்ந்து பற்றி எரியும்; முடிவில் அழியும். அது போல் தான் ஓர் ஆணின் ஒழுக்கக் குறைபாடு, அவனைச் சார்ந்த பெண்ணின் வாழ்விலும் இழுக்கத்தை ஏற்படுத்தவே செய்யும். எனவே, பாரதியாரின் கருத்தில் கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும் உரியதன்று; ஆண், பெண் இருவருக்கும் கட்டாயம் இருக்க வேண்டிய ஒன்றே ஆகும். இந்நிலையில், ‘கற்பு’ என்ற ஒற்றைச் சொல்லால் சுட்டாமல், ‘கற்பு நிலை’ என்ற ஒரு புதிய தொடரைக் கையாண்டுள்ளார் பாரதியார்.

‘கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்’[8]

இங்கே கற்பினை ஆண், பெண் இருவருக்கும் பொதுவாக்கி ‘கற்பு நிலை’ என்ற ஒரு பொருள் பொதிந்த சொல்லினை உருவாக்கியுள்ளார்.

ஒழுக்க நெறி என்பது ஆண் - பெண் இருவருக்கும் பொதுவானது; பெண்ணின் ஒழுக்கம் பேணப்பட வேண்டும் என்றால், அதற்கு ஆணும் ஒழுக்கம் தவறாமல் இருக்க வேண்டும் என்ற கருத்தைத் தமக்கே உரிய பாணியில் தருக்க நெறியைப் பின்பற்றி வெளியிட்டுள்ளார்; ஆண்களின் பரத்தைமை ஒழுக்கத்தைக் கடுமையாகச் சாடியுள்ளார். இதோ, பாரதியாரின் சொற்களிலேயே அக்கருத்தினை,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**'ஆணும் பெண்ணும் நிகரெனச் சொல்வதால்**
**அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்**
**பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்**
**போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்'[9]**

என்று பெண் விடுதலைப் பற்றி பாடும் இவர், பெண்களுக்கு விடுதலை கிடைக்குமாயின் பூமி அறிவில் ஓங்கித் தழைத்துக் குலுங்கும் என்கிறார்.

**கட்டாய திருமண எதிர்ப்பு:**

பெண்கள் தங்கள் மனதிற்கு ஒவ்வாத ஆடவனை மணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தல் கூடாது. இப்படி வற்புறுத்தி நடத்தி வைக்கப்படும் மணவாழ்வு தானாக பழுக்காமல் தடிகொண்டடித்துப் பழுக்க வைத்த பழமாய் விளங்குமே தவிர, இனித்திட வழியில்லை, அதனால். "வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்" (பெண்கள் விடுதலைக் கும்மி) என்று பாடுகிறார்.

மணம் செய்துகொண்ட பிறகும் கணவனைப் பிடிக்கவில்லையெனில், விலகும் உரிமையை பெண்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை,

'மாட்டை யடித்து வசக்கித் தொழிவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார் அதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி'[10]

என்று கூறுகிறார்.

இங்ஙனம் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராடுகின்ற வீரப் பெண்ணாகப் பாஞ்சாலியைப் படைத்துக் காட்டியுள்ளார் பாரதியார்.

**தொகுப்புரை:**

பாரதியார் பெண் உரிமை சிந்தனைகள் சமூக மாற்றத்தின் அடித்தளமாக அமைந்தவை. அவர் பெண்ணை தெய்வமாக போற்றுவதோடு மட்டுமல்லாமல், சிந்திக்கும், செயல்படும், போராடும் சக்தியாகவும் வர்ணித்தார். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்" எனப் பாடிய அவர், பெண்கள் தாங்களே தங்கள் அடிமைத்தனத்தைத் தகர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பெண்களுக்கு உடல்-மன சுதந்திரம், திருமணத்தில் தேர்வு உரிமை, கல்வி மற்றும் தொழிலில் சம உரிமை வேண்டும் என்றார். ஆண்-பெண் சமத்துவம் நிலைநிறுத்தப்படாத வரை உண்மையான சுதந்திரமும் சமூக முன்னேற்றமும் சாத்தியமில்லை என்பதே பாரதியாரின் உறுதியான பெண் உரிமை சிந்தனையாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. பாரதி அறுபத்தாறு செய்யுள்:45
2. அம்மாக்கண்ணு பா:1


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

3. பெண்கள் விடுதலைக்கும்மி, செய்யுள் : 1
4. புதுமைப் பெண் செய்யுள்:7
5. புதுமைப் பெண் செய்யுள்:6
6. பாஞ்சாலி சபதம் செய்யுள்: 57
7. பாஞ்சாலி சபதம் செய்யுள்: 103
8. பெண்கள் விடுதலைக்கும்மி, செய்யுள் : 5
9. புதுமைப் பெண் செய்யுள்: 4
10. பெண்கள் விடுதலைக்கும்மி, செய்யுள் : 3

**பார்வை நூல்கள்**

1. **பாரதியார்.** *பாரதியார் கவிதைகள்*. மணிவாசகர் பதிப்பகம், 2000.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

# 17. குறுந்தொகையும் மனித உரிமையும்

**முனைவர் ச. புனிதா**

உதவிப்பேராசிரியர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 002.

punitha01081984@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழினம் உலகிற் தோன்றியுள்ள இனங்களிலெல்லாம் 'மூத்தக்குடி' எனப்போற்றப்படுகிறது. தொன்மைப் பண்பாட்டுச் சிறப்புக் கூறும் இலக்கியங்கள் மிகுந்த நாகரீக மேன்மையடைந்துள்ள இனம் தமிழினம் என்பது மிகையல்ல. மனித வாழ்க்கைச் சிறப்புடையது. இயற்கையின் படைப்பில் உயிரினங்கள் பல இருப்பினும் மனித இனமே உயர்தனிச் சிறப்புடையது. எல்லாச் சிறப்புகளையும் வழங்கி இறைவனால் படைக்கப்பட்ட மனித உயிர் தன் அறிவாலும், ஆற்றலாலும் எத்தனை பல ஏற்றங்களைப் பெற்று வாழ்கிறது.

**"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"**

- எனும் ஔவையார் கூற்றுக்கிணங்கவும்

**வீசுகின்ற தென்றல் என்றும்**
**பேதம் பார்ப்பதில்லை**
**வண்ண வண்ண மலர்களும்**
**வாசம் தர மறுப்பதில்லை**
**எண்ணிலடங்கா கனிவகையும்**
**சுவைகூட்ட மறுப்பதில்லை**
**மனித உரிமை இருந்தும்**
**மனிதா அதை நீ**
**மறந்தது ஏன்?**

- எனும் கவிதைக்குக்கிணங்கவும்

மனிதனாகப் பிறந்த காரணத்தினால், ஒருவனுக்கு இயற்கையாகவே கிடைக்கும் உடன் பிறந்த உரிமைகள் மனித உரிமைகள் எனப்படும். மனிதனின் சுதந்திரத்திற்கும், கண்ணியத்திற்கும், நலன்களுக்கும் பயன்படுத்தப்படும் அவசியமான உரிமைகளை, மனித உரிமைகள் என்று நாம் அழைக்கின்றோம். மனிதர்களுக்கு மனித உரிமைகள் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவதால் சில நேரங்களில் மனித உரிமைகளை அடிப்படை உரிமைகள் என்றும், இயற்கை உரிமைகள் என்றும், பிறப்புரிமைகள் என்றும், உள்ளார்ந்த உரிமைகள் என்றும் நாம்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

அழைக்கின்றோம். குறுந்தொகையும் மனித உரிமையும் எனும் இக்கட்டுரையில் மனித உரிமைக்கான விளக்கம், அறிஞர்கள் தரும் விளக்கங்கள், குறுந்தொகையில் தலைவனும் தலைவியும் தங்களது உரிமையை நிலைநாட்டுகின்ற செய்திகள், பிற இலக்கியங்களில் பெறப்பட்ட செய்திகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

**திறவுச் சொற்கள்**

எந்தை - என்னுடைய தந்தை

பெருந்தேன் - அதிகளவில் தேன் சேகரித்தல்

குவளைக்கண் - குவளை மலர் போன்ற கண்கள்

பைங்காற் - பசுமையான

குருகு - கொக்கு

**முன்னுரை**

சமுதாய வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது தமிழினத்தின் இனக்குழு வாழ்க்கை அழிந்து நிலவுடைமைச் சமுதாயமாக மலருங் காலகட்டத்தில் விளைந்தவை சங்க இலக்கியங்கள். அவ்விலக்கியங்கள் தமிழரது பண்பாட்டுச் சிறப்பினைப் பறைசாற்றும் இலக்கிய முரசங்களாக விளங்குகின்றன. மனிதர்களாகப் பிறந்து, சாதி, மதம், பால், இனம், நாட்டுரிமை ஆகிவற்றிற்கு அப்பால் தனது உரிமைகளை நிலைநிறுத்திக்கொள்வது அவனது உரிமைகளாகும். இத்தகைய மனித உரிமை செய்திகள் குறுந்தொகை நூலில் பொதிந்து காணப்படுகிறது. அவற்றை வெளிக்கொணர் வகையில் இக்கட்டுரை அமையவுள்ளன.

**மனித உரிமை விளக்கம்**

“மனித உரிமைகள் என்பது கருணைப் பார்வையோ அருட்கொடையோ அல்ல. ‘பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்’ என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க பிறப்பால் எல்லோரும் சமம். இதன் அடிப்படையில் ‘மனிதனை மனிதனாக மதிப்பதே மனித உரிமை’ என்றும் விளக்கம் கூறலாம். ஆங்கிலத்தில் இதனை ‘Human Rights’ என்று கூறுவர். சட்டம், அரசு இவற்றின் முன் எல்லா மக்களும் சமமானவர்கள் என்பது இதன் அடிப்படை ‘உரிமை’ என்பது ஒருவர்க்குரியது. அதனை மறுக்கப் பிறருக்கு உரிமை இல்லை.

சென்னை பல்கலைக்கழகப் பேரகராதி இதற்கு உரித்தாம் தன்மை, உரி;த்தானது போன்ற பொருள்களைக் குறிப்பிட்டுள்ளது” என்கிறார் ஆ. ஜெகதீசன்

“மனிதர் யாவருமே சுதந்திரமாகவும், சமமாண்புகளுடனும், உரிமைகளுடனும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

பிறந்திருக்கிறார்கள் என்பது தகர்க்க இயலாத அடிப்படையாகும். இருப்பினும், நடைமுறையில் ஆங்காங்கு ஏற்றத்தாழ்வுகளும் வேறுபாடுகளும் விளைந்து மனிதர்களிடையேயான சமத்துவத்தில் பிளவுகளை ஏற்படுத்தியிருப்பது உண்மை. சமத்துவத்தை எவ்வாறாவது அடைந்து விடத்துடிக்கும் பேரார்வம் ஒவ்வொரு மனிதனின் இயல்பிலும் அடிப்படையாகப் பொதிந்திருப்பதால் (அரிஸ்டாட்டில் அப்பேரார்வத்தின் வீரியத்தை உள்ளடக்கிய செயலாக்க வெளிப்பாடாகச் சமத்துவக் கோட்பாடு (Concept of equality) எழுந்து நிற்கிறது. 'இயல்பிலேயே மனிதன் சுதந்திர உணர்வுடையவன்' என்ற கருத்து நிலையும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால், 'சுதந்திரமும் சமத்துவமுமே' மனித உரிமைகளுக்கான இரு கண்கள் எனக் கொள்ளல் நன்று" என்கிறார் பேராசிரியர் இராஜ முத்திருளாண்டி.

இலக்கியம் மனிதனையே தனது களமும் தளமுமாகக் கொ்ணடு இயங்கவதால் மனித விருப்பு, வெறுப்பு, நம்பிக்கைகளைச் செப்பமுற வளர்த்துச் சமுதாயப் பயன் விளையுமாறு வளைத்துப் புதுக்கிடும் பொதுப் பணியும் இலக்கியம் மேற்கொள்வதாகும். இந்நோக்கில் மக்களை உணரச் செய்யப் கூர்மைப்படுத்த, ஆயத்தப்படுத்தச் செயலாற்றச் செய்ய இலக்கியம் தொன்றுதொட்டுப் பயன்பட்டுள்ளதையும் அதனால் மனித வாழ்க்கையும் மனித வரலாறும் மாற்றியமைக்கப் பட்டிருப்பதையும் மனிதகுல வரலாறு நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது.

**காதலில் ஏற்படும் உரிமை**

ஆணும் பெண்ணும் கலந்து வாழ்வதற்கு அடிப்படையாக இருப்பது காதல். திருமணங்கள் பலவகையில் நிகழும், அதில் காதல் திருமணமே அனைத்திலும் சிறந்தது, உயர்ந்தது. காதல் திருமணத்தில்தான் சாதி, மத, மொழி, நிறம் போன்ற வேறுபாடுகள் இருக்காது. காதல் திருமணம் நிகழும் நிலையைக் கொண்டுள்ள மக்களினம் நாகரித்தில் உயர்ந்து, பண்பாட்டில் சிறந்ததாக விளங்குகின்றது. மக்களின் பந்தம் இல்லாமல், உறவு கொண்டு காதல் வயப்பட்டு உள்ளங்கலந்ததையும், தலைவியின் மீது காதல் ஏற்பட்டவுடன் உறவுகளை உரிமையாக்கிக் கொள்ளும் விதத்தை,

**"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறு.40)**

என்ற குறுந்தொகைப் பாடல் நமக்கு அழகாக விளக்குகிறது.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

மேலும், தலைவன் களவுக்காலத்தை விரும்பி மறைவிடம் தேடி நிற்பதை அறிந்த தோழி தலைவியிடம் தலைவனைப் பழித்துக் கூறுகிறாள். அவற்றைக் தாங்காது தன் ஆருயிர் காதலன் மேல் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாட்டத் தோழியிடமும் கூறுகிறாள். அத்தகைய நட்பினை,

**“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவின்றே சாரல்**
**கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனோடு நட்பே” (குறு.3)**

தோழியிடம் மலைச்சாரலில் உள்ள கரிய கொம்புகளையுடைய குறிஞ்சி மரப்பூவிலிருந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை காத்திருந்து அப்பூவிலிருந்து தேன் எடுத்துத் தேனீ தேன் கட்டும் இடமாகிய நாட்டுக்குரியவன் தலைவன். அவன்மீது வைத்துள்ள அன்பு எல்லையற்றது. அவை நிலத்தினும் பெரியது, வானினும் உயர்ந்தது, கடலைவிட ஆழமானது என்று கூறுகிறாள். இக்கருத்தைக் கம்பர்

**“மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்**
**எண்ணினும் பெரியதோர் இடர்” (கம்பராமாயணம் பாடல்.99)**

தலைவனோடு தலைவியின் நட்பு எந்த அளவுக்கு ஆழமாக இருந்தது என்பதையும் அவன் பிரிந்த காலத்து அவள் எவ்வாறு துன்புற்றாள் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

சுத்தமாகப் பாகனால் கழுவப்பட்ட யானையைப் போல, பெருமழை பெய்தால் தூய்மையான பெரிய பாறைகள், பசுமையான மலைகள் காணப்படும். அத்தகைய மலைநாட்டுக்குரியவன் குவளை மலர் போன்ற அழகிய என் கண்களை மறைக்கும் பசலைநோயை தந்தனனே என்று தோழியிடம் கூறும் பாங்கை உவமை நயத்தோடு அறியலாம். அதனை

**“மாசறக் கழிஇய யானைப் போலப்**
**பெரும் பெயல் உழந்த இரும்பிணர்த்துருகல்**
**பைதல் ஒருதலைச் சேர்க்கும் நாடன்**
**நோய் தந்தனனே தோழி**
**பயலை ஆர்ந்தன் குவளையங்கண்ணே” (குறு.13)**

என்ற பாடல் எடுத்தியம்புகிறது. அத்தகை தலைவன் பிரிந்துச் சென்ற காலத்தில் குவளை மலர் போன்ற அழகிய கண்கள் பசலை படர்ந்து மாசுபடுவதைக் கீழ்வரும் குறள்,

**“விளக்கற்றம் பார்க்கும் இருளே போல் கொண்கன்**
**முயக்கற்றம் பார்க்கும் பசப்பு” (குறள். 1186)**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**பொழுது கண்டு இரங்குதல்**

தலைவியின் தந்தை சுறாமீன் தாக்கி வீட்டிலே தங்கி விடுகிறான். தன் தந்தையைக் கவனித்து தாயும் வீட்டிலே தங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பல நாள் தலைவியைக் காணாது தவித்த தலைவன், தலைவியின் கொல்லைக்கு வந்துவிடுகிறான். தலைவனைப் பார்த்த தலைவி தான் வரஇயலாமைக்கான காரணத்தைச் சத்தமாகத் தோழிக்கு எடுத்துரைக்கிறாள்.

**"சேயாறு சென்று துணைபரி அசாவாது**
**உசாவுநர்ப் பெரினே நன்று மனதில்லை**
**இனிவரின் எளியல் என்னும் தூதே" (குறு.269)**

மேலும், பசுமையான கால்களையுடைய கொக்கின் புல்லிய முதுகைப்போல, ஆழமான நீர்ப்பகுதியில் வளரும் ஆம்பல் குவிந்துவிட்டது. மாலைப்பொழுதும் வந்து விட்டது. அதுமட்டுமின்றி, இரவு பொழுதும் வருகிறது. நான் என்ன செய்வேன் என்று தன் ஆற்றாமையைக் கூறுகிறாள்.

**"பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன**
**குண்டு நீர் ஆம்பலும் கூம்பின இனியே**
**வந்தன்று வாழியோ மாலை!**
**ஒருதானன் கங்குலுடன் உடைத்தே!" (குறு.122)**

**சேவலைச் சபித்தல்**

தலைவி தலைவனோடு உறங்கும்போது விடியற்காலையில் சேவல் கூவியது. அவ்வோலியைக் கேட்டத் தலைவி சீற்றம் கொள்கிறாள். தலைவனோடு இருந்த நேரத்தில் சேவல் கூவியது. இவை தலைவிக்குத் துன்பத்தைத் தந்தது. தலைவன் நம்மைப் பிரிவான் என்று அறிந்த தலைவி சேவலைச் சபிக்கிறாள். அதனை,

**"குவியிணர்த் தோன்றி ஒண்பூவன்ன**
**பிள்ளை வெருகிற்கு அல்இரையாகிக்**
**கடுநவைப் படிஇயரோ நீயேநெடுநீPர்**
**யாணர் ஊரன் தன்னொடு விதிந்த**
**ஏம இன் துயில் எழுப்பியோயே" (குறு.107)**

**பரத்தையிற் பிரிவு**

நெருஞ்சிப்பூப் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும், அவை முள்ளை ஈன்ற பிறகு துன்பம் செய்கிறது. அதுபோல, தலைவன் இன்பமாக இருந்து, பின்பு பரத்தையிடம் சென்று நம்மைத் துன்புறுத்துகிறார்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

என்கிறார்

**“நோமென் னெஞ்சே நோமெ; னெஞ்சே**

**கட்கின் புதுமண் முட்பயள் நெஞ்சே**

**இனிய செய்த நங் காதலர்**

**இன்னா செய்தல் நோமென் னெஞ்சே” (குறு.202)**

காம நோய் நீரில் குளித்தாலும், மலையில் ஏறி நின்று குளிர்ந்த இடத்தில் இருந்தாலும் காமம் சுடும் என்பதை தலைவி கூறுகிறாள். தலைவன் மேல் தலைவி வைத்திருந்த அன்பு உணர்வுகளின் வெளிப்பாடே தலைவனைக் கள்வன் என்று கூறுவது கண்களால் தோன்றும் காமநோயை வள்ளுவர்,

**“தொடிற்கடின் அல்லது காமநோய் போல**

**விடிற் கடல் ஆற்றுமோ தீ” (குறள்.1159)**

**தலைவியின் மனப்போராட்டம்**

தலைவன் களவு காலத்தில் தலைவியை விரும்பினான். அவன் திருமணத்திற்கு மறுத்துவிட்டால் என்ன செய்வது என்பது தலைவியின் துயரம். அவன் நான்கு பேர்களுக்கு நீதி கூறும் சான்றோனாக இருப்பதால் பிரியமாட்டான் என்ற நம்பிக்கையாலும், தலைவன் தன்னை மணந்து கொள்வான் என்ற உணர்வோடும் அவனுக்கு இணங்குகிறாள்

**“யாரும் இல்லை தானே கள்வன்**

**தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ**

**தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால**

**ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்**

**குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே” (குறு.25)**

என்று கூறும் செய்தியினை, வள்ளுவன்

**“சான்றவர் சான்றாண்மை குன்றில் இரு நிலந்தான்**

**தாங்காது மன்னோ பொறை” (குறள்.990)**

என்கிறார்.

அத்தகைய தலைவன் பொருள் தேடத் தலைவியைப் பிரியும் நிலை ஏற்பட்டது. தலைவன் பிரிய மாட்டேன் என்ற சூளுரை பொய்யாக உள்ளதே என்று தோழி புலம்புகிறாள். அவனது நாட்டின் கரிய நிறத்தோடு இருக்கும் மலர்கொடி, கரிய நிறமுற்ற பாறையைச் சுற்றி படர்வது போல, யானையைச் சுற்றிப் படர்ந்து, பின்பு அவை செல்லுதலால் நசுங்கி அழியும் கொடி, போல


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

என்னைப் பிரிந்து சென்றான் என்ற உவமை நயத்தை,

**"உறுகலயலது மாணை மாக்கொடி**
**துஞ்சுகளிறிவரும் குன்ற நாடன்**
**நெஞ்சுகளனாக நீயலென் யானென**
**நற்றோண் மணந்த ஞான்றை, மற்றவன்**
**தாவா வஞ்சினம் உரைத்தது**
**நோயோ தோழி நின்வயினானே" (குறு.36)**

என்ற அடிகள் தன் துன்பம் போல் தலைவனுக்குத் துன்பம் ஏற்படுமோ என்ற நிலையைக் கூறுவதாக அமைந்துள்ளது.

**வரைவு நீட்டித்தல்**

தலைவன் தலைவியை மணம் செய்துக் கொள்ளாமல் காலத்தை நீட்டித்திருப்பதால், அவனை நினைத்துத் தலைவி துன்புறுகிறாள். தலைவியின் உடல் மெலிவு கண்டு மக்கள் அலர் தூற்றுகின்றனர். அத்தகைய பழிச்சொல்லைத் தாங்காமல் தோழியிடம்,

மயில் பாறையின் நிழலில் முட்டையிட்டிருக்கிறது. குரங்கு குட்டிகள் அவைகளை உருட்டி விளையாடுகின்றன. அம்முட்டை கருவுற்றிருப்பதைத் தலைவியாகவும், அதனை உருட்டி விளையாடும் குரங்கு குட்டியைத் தலைவனாகவும் ஒப்பிட்டப் பாடல்

**"கான மஞ்சை அறையின் முட்டை**
**வெயிலோடு முகவின் குருளை யுருட்டும்**
**குன்று நாடன் கேண்மை**
**நன்று மன் வாழி தோழி! உன் கண்**
**நீரோடு ஓராங்குத் தனப்ப**
**உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே" (குறு.38)**

என்று அமைந்துள்ளது. தலைவி மீது அன்பு கொண்டுள்ளத் தலைவன் பிரியமாட்டேன் என்று கூறியவன். இல்லறம் சிறக்கப் பொருள் தேட பிரிய நேரிட்டது. அவ்வாறு தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி துன்புற்றாள். பின்பு தலைவன் கூறிய சூளுரை பொய்த்தமையால் தெய்வம் அவனைத் தண்டிக்கும் என்றும் அச்சமுறுகிறாள். தலைவன் செய்த சூளுரைக்காகக் கடவுளிடம் சூளுரை தவறியவன் அல்லன். எனவே அவனுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று வேண்டுகிறாள். அதனை

**"மன்ற மரா அத்த பேஎமுதிர் கடவுள்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

**கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்**

**கொடியரல்லர் எம் குன்றுகெழுநாடர்**

**ஞெகிழ ஞெகிந்தன்று தடமென்தோளே" (குற.87)**

மேலும், தலைவன் வரைவு நீட்டித்தக் காலத்தில் தலைவியின மனநிலை ஒருநிலையில் அமையாது துன்புறுகிறாள். தோழியின் தேற்றுமொழியும் அவளுக்குப் பயனில்லை. ஆண்யானை நாருடைய மரத்து முறித்து நிலத்தினும் படாமல், முறிபடவுமில்லாமல் வாடுவது போல, தலைவி துன்புறுகிறாள். மணம் செய்து கொள்ளாமலும், காணவராமலும் இருக்கும் நிலையை உணர்ந்து

**"கௌவை யஞ்சிற் காமம் ஏய்க்கும்**

**எள்ளை விடினே உள்ளது நாணே**

**பெருகளிறு வாங்க முரிந்து நிலம் படாஅ**

**நாருடை ஓசியல் அற்றே**

**கண்டிசின் தோழியவர் உண்ட நலனே" (குறு.112)**

வேற்று வரைவு கண்டு அஞ்சுதல்

தலைவன் வரைவு பொருட்டு பொருள்தோடப் பிரிந்துள்ளான். வேற்றார் வந்து மணம் செய்தற் பொருட்டுக் கேட்டால் நான் என்ன செய்ய இயலும் என்று தோழியிடம் கேட்கிறாள்

"ஒன்றே னல்லேன் ஒன்றுவென் குன்றத்துப்

பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை

குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்

நின்று கொய மலரும் நாடனொடு

ஒன்றேன் தோழி ஒன்றனானனே" (குறு.208)

**தலைவியின் நம்பிக்கை**

தலைவன் பிரிந்து கார் காலத்தில் வருவேன் என்ற சொல்லிற்கு தலைவி ஆற்றியிருந்தாள். கார் காலம் வந்து விட்டது. இன்னும் தலைவன் வரவில்லை என தோழி கூறியதை மறுத்து, தலைவன் குறித்த காலத்தில் வருவேன் என்ற சொல்லை நம்பி தலைவி உறுதியுடன் காலம் பொய்த்தாலும் தலைவர் பொய் கூற மாட்டார் என்ற நம்பிக்கையோடு இருந்தாள். தோழி கார் காலத்தில் பூக்கும் கொன்றை மலர் பூத்துள்ளது. தலைவன் வரவில்லையே என்ற சொல்லுக்குத் தலைவி மறுத்துரைக்கிறாள்

**"கானம் காரெனக் கூறினும்**

**யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே" (குறு.21)**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11012025.01

**நிறைவுரை**

மனித உரிமைகள் என்பது பண்டைய நாகரீகங்களில் வேரூன்றி தழைத்து நிற்பதாகும். மனிதன் பிறந்தது முதல் தனது அனைத்து நிகழ்வுகளிலும் உரிமையை நிலைநாட்ட எண்ணுகிறான். அந்த அடிப்படையில் சங்க இலக்கியங்களின் நூலான குறுந்தொகையில் தலைவனும் தலைவியும் தன் காதலை வெளிப்படுகின்றனர். அந்த பொழுதிலிருந்தே தலைவன் தலைவியின் வீட்டில் தனக்கிருக்கும் உரிமையை எடுத்துக்கொள்வதை அறியமுடிந்தது. தலைவியும் தலைவன் தந்த காதலால் ஏற்படும் பாதிப்பினையும், தலைவன் மீது தனக்குயிருக்கும் உரிமையையும் தோழியின் வாயிலாக எடுத்துரைப்பதை அறியமுடிந்தது.

**பார்வை நூல்கள்**

1. ஆ. ஜெகதீசன், இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள், தாமரை பப்ளிகேஷன்ஸ்(பி) லிட்., அம்பத்தூர், சென்னை – 50, பதிப்பு 2019
2. பேராசிரியர் இராஜ முத்திருளாண்டி, இலக்கியத்தில் மனித உரிமைகள், குமரன் பதிப்பகம், சென்னை – 17, பதிப்பு – 2003
3. குறுந்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.
4. நற்றிணை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.
5. திருக்குறள், பரிமேலழகர் உரை, கோனார் பதிப்பகம், சென்னை – 15, பதிப்பு – 2002.

 | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

# 18. சமூக பண்பாட்டுப் பொருளாதார உரிமைகள்

**முனைவர்.செ.நான்சி**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி-620 002, மின்னஞ்சல்முகவரி: nancysebastin123@gmail.com

https://orcid.org/0009-0008-2755-929X

**ஆய்வுச் சுருக்கம்**

வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதும் ஏற்றத்தாழ்வுகளை களைவதும் வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்வதும் தம் இனம் நாடு மொழி இவைகளுக்குரிய பண்பாட்டுக் கூறுகளை பேணிப் பாதுகாத்துக் கொள்வதும் கடைப்பிடித்து ஒழுகுவதும் தான்சார்ந்த சமுதாயத்தின் அடையாளங்களோடு கூடிய வாழ்க்கையினை மேற்கொள்வதும் போன்ற பண்புகள் சமூக பண்பாட்டு பொருளாதார உரிமையின் படுவன

தனிமனித வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளைப் போன்று உரிமைகளின் பயனை நுகர்வதும் இன்றியமையாதது இவ் உரிமைகள் இன்றி மக்கள் தம் சமுதாய மதிப்பினை பெறுவதும் குடிமகனாக தம் கடமையாற்றி உரிமைகளை துய்ப்பது என்பது இயலாத ஒன்று பிற உரிமைகளுக்கெல்லாம் அடிப்படையானது இதுவே.

சமூகப் பண்பாட்டுப் பொருளாதார உரிமையினால் மட்டுமே மனிதன் சமூகத்தில் தான் பெற்றிருக்கக் கூடிய தகுதியையும் மதிப்பையும் அளவிட முடியும் சங்க கால தமிழர்கள் இவ்வகை உரிமைகளில் சிறந்து விளங்கினமையும் பண்பாட்டுக் கூறுகளை பதிவு செய்தமையும் குறித்து பல்வேறு உரிமைகளை ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** நமர் – நம்மவர், திங்கள் – சந்திரன், பைதல் - பசுமையான

**முன்னுரை**

பண்டைத் தமிழ் சமுதாயத்தில் மக்கள் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெற்று வாழ்வில் சிறந்தனர். சமூகம் அதற்கு வழி அமைத்து கொடுத்து வாழ்வினை வளப்படுத்த முயன்றது என்பதை பண்டைத் தமிழ் நூல்களின் வழியாக அறிய முடிகிறது .சட்டத்தின் முன் அனைவரும் சமம். பால், இனம், மொழி, மதம், பிறப்பிடம் ஆகிவற்றை அடிப்படையாகக் கொண்டு மனிதர் எவ்விடத்திலும் ஏற்றத்தாழ்வுகளை கருதாமல் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். ஒரு இயற்றப்பட்ட சட்டம் செல்லுபடி ஆகும் நிலவரையறைக்குள் வாழும் அனைத்து மக்களையும் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும். உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஏழை பணக்காரன் வலிமை மிக்கவன் வலிமையற்றவன் என்ற பாகுபாடு இல்லாத அனைவரும் சம உரிமை உடையவர்களாக வாழ


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

வேண்டும்.

சமூகப் பண்பாட்டு பொருளாதார உரிமையினால் மட்டுமே மனிதன் சமுதாயத்தில் தான் பெற்றிருக்கக் கூடிய தகுதியையும் மதிப்பையும் அளவிட முடியும். சங்க கால தமிழர்கள் இவ்வகை உரிமைகளில் சிறந்து விளங்கினமையும் பண்பாட்டுக் கூறுகளை பதிவு செய்தமையையும் குறித்து பல்வேறு உரிமைகளையும் ஆராய்வதை இக்கட்டுரையின் நோக்கமாகும்

**சமத்துவ உரிமை**

சமத்துவம் இந்திய மக்களாட்சி தத்துவத்தின் உயிர்நாடியாக விளங்குவது. சமத்துவமின்மை மக்களாட்சியில் குரல்வளையை நசுக்கும் உயிர்கொல்லி போன்றது. சங்ககாலம் ஏற்றத்தாழ்வுகள் நிரம்பிய காலமாக இருந்திருக்கின்றது. மாடமாளிகைகளிலும் அரண்மனைகளிலும் வசித்த அரசர்கள், செல்வந்தர்கள் ஒரு புறத்திலும் அன்றாட உணவிற்கே அலைந்து திரிந்துண்ணப்படும் வறுமை நிறைந்த கூட்டத்தார் மறுபுறத்திலும் இருந்ததை மன்னர் வாழ்வினையும் பாணர்களின் வாழ்வினையும் ஒப்பு நோக்க விளங்கும். மன்னனை வாழ்த்தி பாடிய பாடல்கள் அனைத்தும் பரிசில் பெறுவதற்கு வறுமையைப் போக்க எடுத்துக் கொண்ட முயற்சியே என்பதை புறநானூறும், பதிற்றுப்பத்தும், பத்துப்பாட்டும் சுட்டிக்காட்டுகின்றது. இதை “பத்துப்பாட்டு எட்டுத்தொகை பாடல்கள் பெரும்பாலும் மன்னர்களையும் குறுநில மன்னர்களையும் நிலக்கிழரர்களையும் போற்றி புகழ்ந்து பரிசு வாங்குவதற்காக கவிஞர்கள் பாடிய பாடல்கள் தம் வாழ்க்கையை நடத்துவதற்கு வேறு வழி என்று மன்னர்களை பாட வேண்டிய நிலை இருந்தது என்பர் கே மு.த்தையா

சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை களைய வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக புலவர்கள் மன்னனின் புகழை பாடும் போது மக்களின் நிலையினையும் சேர்த்து பாடினர் இதை

பண்டை தமிழகத்திலே செல்வம் செழித்திருந்தது இயற்கை வளங்கள் ஏராளமாக நிரம்பி இருந்தன கலைகள் வளர்ச்சி அடைந்திருந்தன வள்ளல்கள் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் கலைகளின் வளர்ச்சிக்கும் கல்வி பெருக்கத்திற்கும் ஊன்றுகோலாய் இருந்தனர். சங்க இலக்கியங்களிலே இந்த உண்மைகளை காண்கின்றோம். ஆனால் வறியோர் பலர் வாழ்ந்து வந்தனர். கலைஞர்களும், கவிஞர்களும் கூட வறுமை கடலால் வாரி வதங்கினர் என்றால் மற்றவர்களை பற்றி சொல்லவா வேண்டும். இவர்கள் நிலமும் செல்வமும் படைத்த வள்ளல்களின் ஆதரவு பெற்று தான் வாழ வேண்டிய நிலையில் இருந்தனர். உயர்ந்த ஆடைகள் நெய்த அக்காலத்தில் உடையில்லாமல் வருந்தினோர் பலர். உறைவதற்கு ஏற்ற இடம் இல்லாமல் ஊர் ஊராக இடம் தேடி அலைந்தோர் பலர். உணவுக்காக செல்வம் படைத்தவர்களிடம் சென்று கையேந்தி நின்றவர்கள் பலர். இத்தகைய ஏழை தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்ட பல பாடல்கள் தாம் இன்று நமக்கு இலக்கிய


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

செல்வங்களாக இருக்கின்றன என்று சங்ககால மக்களின் உண்மையான வாழ்க்கை நிலையினை பதிவு செய்கின்றன.

இதனை பக்குடுக்கை நன்கணியார் என்பவர் கீழ்வருமாறுபாடுகின்றார்

**" அதனால் நமர் எனக் கோல் கோடாது**
**பிறர் என குணம் கொள்ளாது**
**ஞாயிற்றுன்ன வெந்திரல் ஆண்மையும்**
**திங்கள் அன்ன தன் பெரும் சாயலும்**
**வானம் தன்ன வன்மையும் மூன்றும்**
**உடையை ஆகி இல்லோர்கையற"1(புறம் 55)**

என்ற பாடல் அடிகளில் இவர் நம்மவர் என்று செம்மையில் சாயாது இவர் பிறர் என்று அவர் நல்லியல்பை மறவாது அனைவரையும் சமமாக மதித்து இல்லை என்பார் இல்லை என்னும் படி சமத்துவத்த பேணிக்காக்க வேண்டும் என்ற எண்ணத்தினை பண்டாய் புலவர்கள் விதைத்தனர் என்பது சங்ககாலத்தில் மக்களிடையே சமத்துவமின்மையை காட்டுகின்றது. பொருளாலும் வலிமையாலும் இன்ன பிறவற்றாலும் குறைந்த வரை எளியவர் என்று இகழ்தல் கூடாது என்பதை **'எல்லர்க்க என்றும் எளியரென்று என் பெறினும்'** என்கிறது நான்மணிக்கடிகை. செல்வ நிலையில் இருக்கும் மன்னனுக்கும் வறுமையில் இருக்கும் வேடனுக்கும் 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே வேற்றுமை இல்லை'என்பதை

**"உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவுமெல்லாம் மோர் கும்மே"2 (புறம் 189)**

என்று சமத்துவத்தை வலியுறுத்துவதை புறநானூற்றில் காண முடிகிறது.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன**
**சாதலும் புகுவதன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்தன்றும் இலமே முனிவின்**
**இன்னாது என்றலும் இலமே மின்னொடு**
**வானம் தண்துளி தலைஇ ஆனாது**
**கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று**
**நீர்வழிப்படும் புனைப்போல் ஆருயிர்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**முறை வழிப்படூஉம் என்பது திறவோர்**
**காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்**
**பொரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இளமை"3 (புறம் 192)**

என்ற பாடலில் உயிர் நிலையாமையை எடுத்துரைத்து பெரியோரை வியந்து பாராட்டுதலும் சிறியோர் இகழ்தலும் கூடாது என்ற சமத்துவத்தையும் உலக ஒருமைப்பாட்டினையும் கணியன் பூங்குன்றனார் வலியுறுத்துகின்றார்.

இன்பம் ஒருசாரற்கு துன்பம் ஒருசாரற்கு என்பதும் செல்வநிலை வாழ்க்கையையும் வறுமையையும் வேறுபடுத்தி சமத்துவம் இன்மையையும் ஏற்படுத்திய படைப்பாளன் பண்பற்றவன். என்பதை

**" ஓரில் நெய்தல் கறங்க ஓரில்**
**ஈர்ந்தன் முழவின் பாணி ததும்ப**
**புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்**
**பைதல் உண்கண் பனிவார்ப்பு உறைப்ப**
**படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்**
**இன்னா தம்மவிவ் வுலகம்**
**இனிய காண்கிதன் இயல்புணர்ந்தோரை'4 (புறம் 194)**

என்று பக்குடுக்கை நன்கணியார் பாடுகின்றார்.

**ஆண் பெண் சம உரிமை**

ஆணும் பெண்ணும் சம உரிமை உடையவர்களாகவே சட்டம் கருதுகின்றது .பெண்ணை காட்டிலும் ஆண் எந்த விதத்திலும் உயர்ந்தவனாக கருத கருதப்பட முடியாது. சங்க காலத்தில் பெண்கள் அத்தகைய சம உரிமை பெற்றனர் அல்ல. இந்நிலை மக்களிடையே மட்டுமல்லாது உயர்நிலை உள்ள நாடாளுவோர் இடையேயும் காணப்படவில்லை .மன்னனை புகழ்ந்து பாடி பரிசில் பெற வரும் புலவர்கள் எவரும் அரசமாதேவியை முழுவதுமாக புகழ்ந்து பாடினர் அல்லர். மன்னரைப் புகழ்ந்து பாடும் புலவர்களில் ஒரு சிலர் ஓரிரு வரிகளில் புகழ்ந்து இருப்பது அறிய முடிகின்றது இதனை

**"சேண்நாறு நறுநுதல் சேயிழை கணவ"**
**"வண்டுஆர் கூந்தல் ஒண்தொடி கணவ"5 (பதிற்றுப்பத்து 65)**

என்ற பாடலடிகள் ஆணாதிக்கச் சமுதாயத்தை தோலுரித்துக் காட்டுகின்றது.

**சடங்குகள்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

நம்பிக்கை வழிபாட்டோடு இணைந்து இருப்பது. நம்பிக்கையின் அடிப்படையில் சடங்குகள் நிகழ்த்தப்பட்டன. தாயின் வயிற்றில் ஒரு கரு உருவானது முதல் கல்லறை அடையும் வரை வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் சடங்குகள் குறிப்பிட்ட இடத்தினை பெற்று சிறகின்றது. பண்பாட்டின் பிரதிபலிப்பாகவும் நாகரிகத்தின் எச்சமாகவும் இவை திகழ்கின்றன. சங்க காலத்தில் இல்லறம் சார்ந்த சடங்குகள் பெரும் பங்கு வகிக்கின்றன. சமூகத்திற்கு ஏற்ப சடங்குகளும் வெவ்வேறானவைகளாக அமைந்தன. திருமணத்திற்கு பின்பும் திருமணத்திற்கு முன்பும் சடங்குகள் செய்யப்பட்டன என்பதை சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. பெண் குழந்தை பிறந்தவுடன் காலில் சிலம்பினை அணிவித்து மகிழ்வர். அவள் பூப்பெய்தி திருமணம் நடைபெறும் வரையிலும் அச்சிலம்பினை அணிந்து கொண்டிருப்பாள். திருமணத்திற்கு முன்பு அச்சிலம்பு அகற்றுவதற்கு என சடங்குகள் நடைபெற்றன. அது சிலம்புகழி நோன்பு என்று அழைக்கப்பட்டது. தலைவி உடன்போக்கு சென்றபோது காற்சிலம்பு கழிக்கும் சடங்கினை செய்யாதவளாய் நீண்ட தொலைவு தலைவனுடன் சென்றனர் என்று தாய் ஏங்குவதை

**"பெரும்பெயர் வழுதி கூடல் அன்னதன்**
**அருங்கடி வியல் நகர் சிலம்பும் கழியால்"6 (அகம் 315)**

என்ற பாடலில் இருந்து திருமணத்திற்கு முன்பு கன்னிப் பெண்ணின் காலிலிருந்து சிலம்பு கழற்றப்பட்டது என்பதும் அச்சடங்கு பெரும்பாலும் பெண் வீட்டில் நடந்தது என்பதும் புலனாகின்றது. இதை

**"அரி பெய்து பொதிந்த தெறி சிலம்பு**
**யாய் அறிவுறுதல் அஞ்சு "(அகம் 321)**

என்ற செவிலி கூற்றால் உணர முடிகிறது.

**சுற்றுச்சூழல் காப்புரிமை**

எந்தவித பாகுபாடும் இன்றி இயற்கை வளங்களின் பயனை நுகரவும் அவலங்களை பாதுகாக்கவும் உரிமை பெற்றவன் மனிதன். மாண்புடன் கூடிய வாழ்வு என்பது சுகாதாரமான சுற்றுச்சூழலை அனுபவிக்கவும் மாசுக்களில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரிமையினை உள்ளடக்கியதே. அவ்வாறான மாசற்ற சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது அரசால்வோரின் கடமை

சங்ககாலப் புலவர்கள் மனித உரிமை சிந்தனைகளை கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர் கூறினால் ஏற்படும் அழிவுகளையும் சுற்றுச்சூழல் மாசு மற்றும் மக்களின் அழிவுகளை மனதில் கொண்டோராய் விளங்கினர் ஆகையால் போரில் கண்ட காட்சிகளை உவமை உருவங்களுடன்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

பாடி மன்னர் மனதில் மாற்றத்தினை ஏற்படுத்த விரும்பினார்கள் என்பதை பழந்தமிழ் நூல்கள் நன்கு உணர்த்துகின்றன.

**'அடுப்போர் செழிய இகலாது வல்லே**
**நிலநெலி மருங்கில் நீர்நிலை பெறுக**
**தட்டோர் அம்ம இவண் தட்டோரே**
**தள்ளா தோரிவன் தள்ளாதோரே' 8 (புறம் 18)**

அணைகளைக் கட்டி நீர்நிலைகளை பெருக்க வேண்டும் என்று குடவி புலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தியதும் காண முடிகிறது.

இயற்கையோடு இணைந்த வாழ்வினை மேற்கொண்ட பழந்தமிழர்கள் சுற்றுச்சூழல் காப்புநர்வினை நன்கு உணர்ந்திருந்தனர். இயற்கையிலேயே அறங்களாக தமக்கு ஏற்படுத்திக் கொண்டதோடு அவைகளை அழிவிலிருந்து காப்பாற்றியும் வந்தனர். இனிவரும் தலைமுறையினர் மாசற்ற சுற்றுச்சூழலை பெறுவர் என்பது ஐயத்திற்குள்ளானதே .

**சங்ககாலத்தில் பெண்ணுரிமை**

தொல்காப்பியர் காலத்தில் பெண்கள் உரிமைகள் பெற்று சுதந்திரமானவர்களாக காணப்படவில்லை. கல்வி கற்பதற்கும் தூது காரணமாகவும் பகை காரணமாகவும் பொருள் தேடுவதற்காகவும் தொல்காப்பிய வகுக்கும் பிரிவுகளில் மகளிர் குறிப்பிடப்படாமல் இதற்குச் சான்று

கடல் வழியாக தலைவன் பிரிந்து செல்லும்போது தலைமையை உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை கடல் கடந்து செல்லும் உரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டு வந்திருக்கின்றது இதை

**'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை '9 (தொல்.அகம் 37)**

என்ற நூற்பாவின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது

பொருளீட்டுச் செல்லும் தலைவன் தன்னுடன் தலைவியை அழைத்துச் செல்லாததற்கு கூறும் காரணங்கள் அனைத்தும் சங்க கால சமுதாயம் பெண்களை போகப் பொருளாகவும் இல்லறப் பணிகளை செய்யும் பணி பெண்ணாகவும் கணவனின் ஏவல் படி நடக்கும் கை பாவையாகவும் இருந்தனர் என்பதை நம்மால் உணர முடிகிறது.

**தொகுப்புரை**

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் ஆண் பெண் சமத்துவம் மற்றும் சமத்துவ உரிமைகள் பெற்ற சடங்குகள் செய்யும் உரிமைகள் இருந்தன

கடல் கடந்து வாணிபம் செய்து பொருள் ஈட்டும் உரிமைகளை ஆண்கள் பெற்று இருந்தனர்

பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது

பண்டமாற்று முறையிலும் வணிகம் நடைபெற்றது

நுகர்வோர் உரிமை பாதுகாக்கப்பட்டது

சுற்றுச்சூழலை பாதுகாத்து மக்கள் இயற்கையோடு இணைந்து வாழும் வாழ்விற்கு வகை செய்ய மன்னர்களுக்கு புலவர்கள் அறிவுறுத்தினர்

சமுதாயத்தில் மக்கள் அனைவரும் விளையாடும் உரிமை பெற்றிருந்தனர்

அனைத்து சமயங்களையும் போற்றி சமய கால்புணர்ச்சி அற்றவர்களாக திகழ்ந்தனர்

பெண்களின் பெரும்பாலான உரிமைகள் சமுதாயத்தால் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றது

அனைத்து மக்களுக்குமான சமத்துவம் ஆண் பெண் சமத்துவம் சடங்குகள் பொருள் ஈட்டு உரிமை கடல் கடந்து வாணிபம் செய்யும் உரிமை பண்டமாற்று முறையில் வாணிகம் செய்யும் உரிமையை நுகர்வோர் பாதுகாப்பு உரிமை சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமை விளையாட்டு உரிமை சமச்சார் வின்மை மகப்பேறு உரிமை பரப்பியருக்கான உரிமை முதலிய சமூக பண்பாட்டு பொருளாதார உரிமைகளை மக்கள் பெற்றிருந்தனர் என்பதை கட்டுரையின் மூலம் அறிய கிடைக்கும் உண்மையாகும்.

**உசாத்துணைநூல்கள்**

1. அகநானூறு மூலமும் உரையும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் சாரதாபதிப்பகம் சென்னை முதற்பதிப்பு 2019
2. புறநானூறு மூலமும் உரையும்உ.வே.சாமிநாதர் முதற்பதிப்பு 2014 சென்னை

 | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 18. இலக்கியங்களில் மனித உரிமைகள் அன்றும் இன்றும்

**முனைவர்.த.பத்மா**

உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை, புனிதசிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி – 02. மின்னஞ்சல்: padmakvb;gmail.com

**முன்னுரை**

மாற்றம் என்ற ஒன்றை தவிர அனைத்தும் காலத்திற்கேற்ப மாறும் தன்மையுடையன. மன்னராட்சி காலத்தில் ஒரு வரையறைக்குள் கட்டுப்பட்டு குறுகி இருந்த உரிமைகள் மக்களாட்சி மற்றும் காலச் சூழலில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு அதன் எல்லைகளும் பரந்து விரிந்து நின்றன.அறங்களாகவும்> ஒழுக்க நெறிகளாகவும் கற்பிக்கப்பட்டும், உணர்த்தப்பட்டும் வந்த வாழ்வியல் பண்புகளான உரிமைகள் இயற்றப்பட்ட சட்டங்களின் மூலம் நிலை நாட்டப்படுகின்றன. பண்டைய தமிழர்கள் சட்டம் என்பதை அறிந்திருக்கவில்லை. உரிமைகளை ஒழுக்க நெறிகளாக வாழ்நாளில் கடைப்பிடித்து ஒழமுகினர்

**“சட்டமென்பது எக்காலத்துக்கும் செல்லத்தக்க நிலை**
**கொண்ட விதிகளின் தொகுப்பாகப் பிழைப்பட**
**பழந்தமிழருக்குப் பொருள்படவில்லை. மாறாக சட்டத்தை**
**தாம் வாழும் சூழலுக்குக் கட்டுப்பட்ட நெறி முறைகளின் ஒரு தொகுப்பாகவே அவர்கள் புரிந்து கொண்டனர்”**

வழக்கங்களையும் மரபுகளையும் பேணிக்காத்து காலங்காலமாக நிலவி வந்த கட்டுப்பாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் புறந்தள்ளி அடிமைச் சங்கிலியை உடைத்தெறிந்து புதியதோர் உலகினை படைக்க சட்டங்கள் முயன்றன. அடிமைத்தனமும் எதேச்சாதிகாரப் போக்கும் சட்டத்தின் பார்வையில் கருகிப்போயின உரிமைகளின் பாதுகாவலனாக நீதிமன்றங்கள் செயல்பட தொடங்கின சட்ட மன்றங்களும் பாராளுமன்றமும் உரிமையின் தேவையினை அறிந்து சட்டங்கள் ஏற்றின சங்ககாலம் ஏற்றத்தாழ்வுகள் கொண்ட சமுதாயமாக இருந்தாலும் உரிமைகளும் கடமைகளும் வலியுறுத்தப்பட்டு வந்தன, குற்றங்கள் அதிகரித்த போது தண்டனைகள் கடுமையாக்கப்பட்டன. ஆடிமை முறை கல்வியுரிமை,இற்செறிதல் மூலம் ஒழிப்பு, கல்வியுரிமை,இற்செறிதல மூலம் பெண்களின் உரிமை பறிக்கப்படல், சொத்துரிமை, களவு மணங்களின் தன்மை, கலப்பு மணம் உரிமைகள் மற்றும் கடமைகளின் பரிணாம வளர்ச்சி மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்க இந்திய நாட்டில் இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகள் போன்றவைகளில் துணை கொண்டு ஆராய்வது தண்டனையும் தண்டனைகள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

குற்றங்கள் செய்பவரை திருத்தி மேலும் குற்றங்கள் செய்யாதவாறு தடுக்க வேண்டும்.

**குற்றமும் தண்டனையும்**

சங்க காலத்தில் சிறிய குற்றங்களுக்கு மிகப்பெரிய தண்டனைகள் மன்னனால் வழங்கப்பட்டிருக்கின்றன ஆற்றில் மிதந்து வந்த மாங்காயை தின்றதற்காக அவள் தந்தை தொன்னூற்றொன்பது யானைகளோடு அப்பெண்ணின் எடைக்கு சமமான எடையுடைய பொன்னால் செய்யப்பட்ட பாவையை தண்டமாகச் செலுத்துவதை ஏற்காமல் நன்னன் என்ற மன்னன் கொலை தண்டனை அறிந்திருக்கிறான் என்பதை.

**“மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை**
**புனல்தரும் பசுங்காய் தின்றதன் தப்பற்கு**
**ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு, அவள்நிறை**
**பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்”( குறுந;>292)**

என்ற பாடலடிகளால் அறிந்து கொள்ள முடிகிறது.

திருட்டு குற்றத்திற்கு தண்டணையாகத் தான் சுமக்க முடியாத அளவிற்குப் பொதியைத் தலையில் ஏற்றி ஊரில் உள்ள வெள்ளிடை மன்றத்தைச் சுற்றிவரச் செய்தனர் என்பதை,

**“உடையோர் காவலும் ஓரீ இய வாகிக்**
**கட்போர் உளர்வனிற் கடுப்பத் தலையேற்றிக்**
**கொட்பினல்லது கொடுத்த லீயாது**
**உள்ளுநந்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்”**

என்று சிலம்பும் எடுத்தியம்புகின்றது. **( சிலம்பு)**

**அடிமைநிலை**

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஆண்டாள் அடிமை முறைக்கு வித்திட்டன. இனக்குழு சமுதாயத்தில் உணவும் உடைமையும் அனைவருக்கும் பொதுவாயிருந்தன. நிலையுடைமை சமுதாயம் தோன்றிய பின்னர் நிலைக்கிழார்களும் தங்களின் ஆதிக்கத்தைத் தன் கீழ் உள்ளோர் மீது செலுத்த முற்பட்டனர் இந்நிலை தொல்காப்பியர் காலத்திற்கு முன்னதாகவே இருந்து வந்ததையும் பிறருக்கு அடிமைத் தொண்டு செய்து வாழ்வோரும் பிறர் ஏவல் வழி நின்று வினைபுரிவோரும் ஐந்திணை ஒழுக்கத்திற்கு உரியவர்கள் என்று தொல்காப்பியர் கூறுவதை.

**“அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**
**கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்”**

என்ற நூற்பாவால் அறியலாம்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்**

**செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே;( நற்றிணை)**

என்ற நற்றிணைப் பாடலில், மருதநிலத்தில் செல்வம் படைத்தவர்கள் ஏராளமான அடிமைகளை,வைத்துக் கொண்டு இருந்தனர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

**ஏறுதழுவுதல்**

பண்டைத் தமிழர்கள் ஏறு தழுவுதலை ;விளையாட்டாகக் கொள்ளாமல் வீரத்தின் அடையாளமாகத் திருமணத்தை மேற்கொள்ளும் வாயிலாக அமைத்துக் கொண்டனர். வலிமை நிறைந்த காளையை அடக்கும் தன்மையுள்ள வீரம் நிறைந்த, ஆண்மகனையே கணவனாகப் பெண்கள் ஏற்றுக் கொண்டனர். ஏறினைக் கண்டு அஞ்சுபவனைப் பெண்கள் விரும்பும் எண்ணம் உடையவர்கள் அல்லர் காதலித்த தலைவியை மணப்பதற்கும் அது வழி ஏற்படுத்தி தந்தது. இதனை.

**“ கடா அக் களிற்றினும் கண்ணன்சர் ஏற்றை**

**விடா அதுநீ கொள்குவை யாயின், படாஅகை**

**ஈன்றென ஆயமகள் தோள்”**

என்கின்றது கலித்தொகை. பெற்றோரும் வீரம் செறிந்த காளையை அடக்குபவனுக்கே தம்முடைய பெண்ணை மணமுடித்துக் கொடுக்க விரும்பினார் என்பதை,

**“பகலிடக் கண்ணியன,பைதல் குழலன்**

**சுவல்மிசைக் கோல் அசைத்த கையன் அயலது**

**கொல்லேறு சாட இருந்தார்க்கு எம் பல்லிரும்**

**கூந்தல் அணைக்கொடுப்பேம் யாம்”**

என்ற பாடலடிகள் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றன. மேலும்

**“கொல்லேற்றுக் கோடஞ்ச வானை மறுமையும்**

**புல்லாளே ஆய மகள்**

**அஞ்சார் கொலையேறு கொள்பவர் அல்லதை**

**நெஞ்சினார் தோய்தற்கு அறிய உயிர்துறந்து**

**நைவாரா ஆயமகள் தோள்**

**வளியா அறியா உயிர்காவல் கொண்டு**

**நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்கு**

**எளியவோ ஆயமகள் தோள்? (கலித; 103)**

என்ற கலித்தொகைப் பாடல் அடிகள் வழி சங்க காலப் பெண்கள் வீரம் மிக்க


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

ஆண்மகனையே விரும்பியமையம், கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் ஒருங்கே பெற்றிருந்தனர் என்பதை அறிய முடிகிறது

**சொத்துரிமை**

நாடோடியாய் சுற்றித்திரிந்த நிலையில் சொத்துக்கள் குறித்த சிந்தனை இல்லை. ஓரிடத்தில் தங்கி வாழ எண்ணிய போது தனக்கு, என்னுடையது என்ற சிந்தனை மேலெழுந்தது நிலவுடமை சமூகத்தில் இவ்வுரிமை நிலைபெற்று விட்டது. மன்னர்கள் மட்டுமல்லாமல் செல்வந்தர்களும் நிலக்கிழார்களும் செல்வத்தில் மிதந்தனர.; கால்நடைகள் மிகப் பெரிய சொத்தாகக் கருதப்பட்டன. சங்க காலத்தில் மன்னனுக்கு இணையாக மக்களின் சிலர் சொத்துரிமை கொண்டவர்களாக இருந்தனர. சிலப்பதிகாரத்தில. கோவலனின் தந்தை பெரும் செல்வத்தை உடையவன் என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகின்றார். வாழ்வின் வளத்தையும் வளர்ச்சியிணையும் சொத்துக்களைக் கொண்டே மதிப்பிடுகின்றனர்.

**“மனிதன் அடைய நினைக்கின்ற அனைத்து முடிவுகளுக்கும்**
**கருவிகள் இன்றியமையாதன. இக்கருவியைப் பயன்படுத்தும்**
**உரிமை மனிதனுக்கு இல்லாவிடில் அவன் பெற விரும்பும்**
**முடிவுகளுக்குரிய சுதந்திரமும் பயனற்றதாகி விடும் எனவே**
**சொத்துரிமை என்பது மனிதன் கருவிகளைக் கொண்டு**
**வாழ்க்கையின் சுதந்திரமான வளர்ச்சியைப் பெறுதலாகும்**

என்று வாழ்வியல் களஞ்சியம் சொத்துரிமைக்கு விளக்கம் தருகின்றன இந்திய அரசியல் அமைப்பு சட்டம் உறுப்பு 300

**“சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட ஒருவரின் சொத்தை வேறு**
**நபர் ஒருவர் எடுத்துக் கொள்ளக் கூடாது”**

என்று குறிப்பிடுகின்றது. அதன்படி சொத்துரிமை அரசியலமைப்புச் சட்ட உரிமையாக இன்று நீதிமன்றத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சோழ நாட்டில் வீட்டின் முற்றத்தில் உலர்ந்து கொண்டிருக்கும் கோழிகளைப் பெண்கள், தங்களின் கனத்த காதணிகளைக் கொண்டு விரட்டிடும் அளவிற்கு செல்வந்தர்கள் இருந்தன.இதனை,

**“அகல்நகர் வியல்முற்றத்து**
**சுடர்நுதல் மடநொக்கின்**
**நேரிழை மகளிர் உணங்குஉணாக் கவரும்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை"( பட்டினப்பாலை)**

ஏன்ற பத்துப்பாட்டுப் பாடலடிகளில் பெண்களின் செல்வச் சிறப்பை அறிந்து கொள்ள முடிகின்றது,சங்க காலத்தில் ஆண்கள் சொத்துரிமை பெற்றிருந்தனரேயன்றி பெண்களுக்குச் சொத்துரிமை இருந்ததாகத் தெரியவி;லை. ஆனால் பிற்காலத்தில்பெண்கள் அவ்வுரிமையை பெற்றிருந்தனர்.

**அரசியல்உரிமை**

ஆண்கள் போன்று பெண்களும் பொது வாழ்வில்,அரசியல் ஈடுபடவும்,தேர்தலில் போட்டியிடவும்,பொது இடங்களில் பணிபுரியவும் அரசினை விமர்சிக்கவும் அரசாங்க வேலைகளில் பங்கு பெறவும் உரிமை உடையவராவர்.

**சமூக உரிமைகள்**

பெண்கள் திருமணம் செய்துக் கொண்டு குடும்பம் அமைத்துக் கொள்வதற்கும்,திருமணம் போதும், திருமணமுறிவின் போதும் ஆணைப் போன்று பெண்களுக்கும் சம உரிமை உண்டு. சமுதாயத்திடமிருந்தும் அரசிடமிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமையை பெண்கள் பெற்று இருக்கின்றனர்.

**கல்வியுரிமை**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு (29)ன் படி ஆணுக்கு அளிக்கப்படும் அனைத்துக் கல்வி வசதிகளும் பெண்களுக்கும் உண்டு என்பதை உறுதி செய்கின்றது.

**தொகுப்புரை**

1.சிறிய குற்றங்களுக்கு கொடுமையான தண்டனைகள் வழங்கப்பெற்றது

2.குற்றங்களை ஒப்புக்கொள்ளும் போது தண்டனைகள்க் குறைக்கப்பட்டது

3.நீதிமன்றத்தில் பொய்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது

4.சமுதாயத்தில் செல்வந்தர்கள் செழிப்புடனும் அடிமைகளைக் கொண்டு வாழ்ந்து வந்தனர் அடிமைகளுக்கு வசதி வாய்ப்பு மறுக்கப்பட்டது

4.கல்வி கற்பதற்கு அனைவரும் உரிமை பெற்றுயிருந்தனர்

5.சொத்துரிமை ஆண்களுக்கு இருந்தன பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது சில பெண்கள் செல்வ செழிப்புடன் வாழ்ந்து வந்தனர்

6.சமுதாயத்தில் கலப்பு மனம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை

7.இக்காலத்தில் குழந்தைகள் நலன் குறித்து நீதிமன்றம் அறிவுறுத்தும் அரசின் கடமைகள் சங்ககாலத்தில் காண பெறவில்லை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

8.இப்பொழுது பெண்களின் உரிமைகளுக்கு சட்டம் பாதுகாப்பு அளிப்பது போன்ற சங்க காலத்தில் பெண்கள் சில உரிமைகளைப் பெற்றிருந்தனர்

போன்றவைகள் குறித்த விளக்கங்கள் மற்றும் இன்றைய நடைமுறை சட்டங்களோடு ஒப்பிட்டு பகுத்தறியப்பட்டது.

**சான்nறண் விளக்கம்**

1.சம்பந்தர்,வி.ஆர்.எஸ்.தமிழ்நாட்டில்நீதிமுறை – ஒரு வரலாற்று பார்வை>ப.4

2.குறுந்தொகை. 292-4

3.சிலப்பதிகாரம் 114 -117

4.அகம்.19 – 20

5.புறம்> 5 - 6

**பார்வை நூல்கள்**

1.மனிதஉரிமைகள் அன்றும் இன்றும், சு.பெ.அகத்தியலிங்கம், தமிழ் புத்தகாலயம்

2.சிலப்பதிகாரம். பொ.திருகூடசுந்தரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைநகர்

3.சங்கஇலக்கியம் எட்டுத்தொகை குறுந்தொகை மூலமும் உரையும். புலியூர் கேசிகன். சரண் புக்ஸ் 199,ராஜாதெரு,தியாகராயர் நகர் சென்னை – 600 017

4.கலித்தொகை. மூலமும் உரையும். புலியூர் கேசிகன். சரண் புக்ஸ் 199,ராஜாதெரு,தியாகராயர் நகர் சென்னை – 600 017

5.நற்றிணை மூலமும் உரையும்ஈ ஔவை துரைசாமிப்பிள்ளை பூம்புகார் பதிப்பகம்

6.பட்டினப்பாலை மூலமும் ஆராய்ச்சிப் புத்துரையும் முனைவர் கரு.அழ.குணசேகரன்

 | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 20. பாரதிதாசன் படைப்புகளில் பெண்ணுரிமைச் சிந்தனைகள்

முனைவர் து.விஜயராணி

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி-620 002, PH NO: 9698636106

E.Mail - vijayaranidharmaraj@gmail.com

Orcid : https://orcid.org/0000-0003-2715- 7019

**ஆய்வு சுருக்கம்**

மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும் எல்லா மனிதர்க்கும் சமஉரிமை வழங்க வேண்டும் என்ற உறுதி கொண்ட பாரதிதாசன் அவர்கள் மக்களின் உரிமைக்காக பல புரட்சிமிக்க பாடல்களை பாடி மக்களின் மனதில் உரிமை வேட்கையை ஏற்படுத்தினார். அவர்தம் பாடல்களில் பெண்களின் உரிமைகள் சாதி மறுப்புபகுத்தறிவு பொதுவுடைமை மற்றும் கல்வியின் முக்கியத்துவம் போன்ற மனித உரிமைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. பெண்கள் கல்வி கற்க வேண்டும் சுதந்திரமாக வாழ வேண்டும், அவர்களுக்கு சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். சாதிப் பிரிவினையை எதிர்த்தும் சமூகத்தின் சமத்துவத்திற்காகவும். மக்களின் உரிமைக்காகவும் தொழிலாளர்களின் உரிமைக்காகவும் பெண்ணுரிமைக்காகவும் போராடியவர் பாவேந்தர் பாரதிதாசன். பண்டைய காலம் தொட்டு இன்றை காலம் வரை பல வளர்ச்சி நிலைகளை பெண்கள் கண்டு இருந்தாலும் அவர்களின் உரிமைக்காக ஒவ்வொரு காலக்கட்டத்திலும் போராடி கொண்டுதான் இருக்கிறார்கள். இத்தகைய சூழலில் பாரதிதாசன் பாடல்களில் இடம்பெற்றுள்ள பெண்ணுரிமை சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**திறவு சொற்கள் : களர் நிலம்- மாதர் அறிவு - அழகிய பெண்கள் -காரிகை பாடசாலை**

**முன்னுரை.**

பெண்ணுரிமைக்காக காடுபட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பாவேந்தர் பாரதிதாசன்.பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டதை எதிர்த்து, அவர்களுக்குக் கல்வி, சுதந்திரம், சம உரிமைகள் வேண்டும் என்று பாடினார் . பிறப்பால் ஏற்றத்தாழ்வு இல்லை. அனைவரும் சமம் என்று வலியுறுத்தினார். சாதியால் மனிதன் பிரிக்கப்படுவதைக் கடுமையாகக் கண்டித்தார். குறுகிய மனப்பான்மை நீங்கிஇ அன்பு நிறைந்த வாழ்வை வாழவேண்டும் என்றும் ,மனிதனின் அறியாமை,மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போர் தொடுத்தார். உண்மையான அறிவும், பகுத்தறிவும் மனித உரிமைக்கு அவசியம் என்றார்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**பெண்கல்வி**

பெண் கல்வி என்பது பெண்களுக்கு கல்வி கற்கும் உரிமை, அதன் தற்போதைய நிலை, சவால்கள் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றைக் குறிக்கிறது. இது பெண்கள் கல்வி பெறுவதன் முக்கியத்துவத்தையும், சமூகத்தில் சமத்துவம், அதிகாரம் மற்றும் தன்னம்பிக்கை பெறுவதற்கும் பொருளாதார மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு பெண் கல்வி இன்றியமையாதது என்பதனை

**கல்வியில் லாத பெண்கள்**
**களர்நிலம்; அந்நி லத்தில்**
**புல்விளைந் திடலாம்; நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை1** (பாரதிதாசன் கவிதைகள் பக் 113)

என்ற பாடலின் மூலம் பெண்கல்வியின் மூலம் நல்ல குழந்தைகளை இச்சமூகம் பயன் பெறும் வகையில் வளர்க்க இயலும் என எடுத்துரைக்கின்றார். இக்கருத்தினை பாரதியாரும்

**பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி பேணி**
**வளர்த்திடும் ஈசன் மண்ணுக்குள்ளே சில மூடர்**
**நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார் கண்கள்**
**இரண்டினில் ஒன்றைக் - குத்திக் காட்சி**
**கொடுத்திடலாமோ பெண்கள் அறிவை வளர்த்தால் -**
**வையம் பேதமை யற்றிடும் காணீர்"2** (பாரதியார் பாடல்கள் முரசு பக்- 237)

என்ற பாடலின் வழி பாரதியார் பெண்களுக்கு இயற்கையில் பொது அறிவும், அனுபவ அறிவும் அதிகம் இருக்கிறது. கேள்விஞானம் அதிகம் இருக்கிறது. ஆயினும் சில மூடர் அவர்களை அடக்கி வைத்து சமுதாய வளர்ச்சியைக் கெடுக்கிறார்கள். மனிதனுக்கு இரண்டு கண்கள் இருப்பதைப் போல சமுதாயத்தின் இரு கண்கள் ஆண்களும் பெண்களும், இதில் ஒன்றைக் குத்தி எடுத்து காட்சிப் பொருளாக வைக்கலாமா என்று பாரதி கேட்கிறார். பெண்களுடைய அறிவை வளர்த்தால் உலகில் பேதமை போகும் என்பது உண்மை. எனவே பெண்கள் நிலையை உயர்த்த வேண்டும். எனவே பெண்கல்வியை பேணவேண்டும் என பெண்ணுரிமைக்காகப் போராடுகின்றார்.

"ஒருவன் வெற்றிகரமாக வாழ்க்கை நடத்த உதவுபவள் மனைவிதான். மனைவியால்தான் ஓர் ஆடவன் ஒழுங்கும் தூய்மையும் பெறுகிறான்" என்று ஆங்கிலப் பேரறிஞர் பெர்னாட்ஷா கூறியுள்ளார். இதைப் புவிப்பெரியோன் கூறிய பொன்மொழி என்று குறிப்பிடுகிறார் பாரதிதாசன்.

சங்ககாலத்தில் பெண்கல்வி சிறப்பாகவே இருந்திருக்கிறது. ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் கவிபாடும் ஆற்றல் பெற்று விளங்கியதை அவர்கள் இயற்றிய பாடல்களும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

இலக்கியங்களும் மெய்ப்பிக்கின்றன.ஆனால் காலப்போக்கில் அவர்கள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டன. பெண் போகப் பொருள் என்ற அளவிலே மதிக்கப்பட்டாள். சமூகச் சட்டங்கள் பெண்களை மிகவும் கேவலப்படுத்தின. அவள் தேரையாக, பொட்டுப் பூச்சியாக, ஊமையாக வாழும் அவல நிலை ஏற்பட்டது. புழுதி, குப்பை, உமியைவிடக் கேவலமாகப் பெண்ணினம் மதிக்கப்படும் நிலையை,

**புழுதி குப்பைஉமி - இவற்றின்**
**புன்மைதனைக் களைந்தே**
**பழரசம் போலே அவற்றைப்**
**பயன்படுத்து கின்றார்!**
**அழகிய பெண்கள் - நமக்கோ**
**அழுகிய பழத்தோல் 3** (பாரதிதாசன் கவிதைகள் (பக்-489)

என்ற பாடலின் மூலம் பெண்களை அவலப்படுத்தும் நிலையனை எடுத்து இயம்புகின்றார் பாரதிதாசன்.

வீட்டில் அடைபட்டிருக்கும் பெண்டிர் நிலையை விளக்க வந்த பாரதிதாசன்

**தனித்துக் கிடந்திடும் லாயம்-அதில்**
**தள்ளியடைக்கப் படுங்குதிரைக்கும்**
**கனைத்திட உத்தரவுண்டு-வீட்டில்**
**காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும்.**[4]

என்று பாடுகிறார். இவ்வாறு வீட்டில் அடைபட்டு அடிமைபோல் வாழ்ந்த பெண்ணினம் அடைந்த இழிநிலையை 'நம்மாதர்' என்ற கவிதையில் அழகாகச் சித்தரித்துக் காட்டுகிறார்.

**பழங்கல அறைக்குளே பதினைந்து திருடர்கள்**
**பதுங்கிடவும் வசதி யுண்டு**
**பதார்த்தவகை மீதிலே ஒட்டடையும் ஈக்களும்**
**பதிந்திடவும் வசதி யுண்டு**
**முழங்கள் பதினெட்டிலே மாற்றமில் லாவிடினும்**
**முன்றானை மாற்ற முண்டு**
**முடுகிவரும் நோய்க்கெலாம் கடவுளினை வேண்டியே**
**முடிவடைய மார்க்க முண்டு**
**தொழுங்கணவன் ஆடையில் சிறுபொத்தல் தைக்கவும்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**தொகைகேட்கும் ஆட்கள் வேண்டும்**

**தோசைக் கணக்கென்று கரிக்கோடு போடவோ**

**சுவருண்டு வீட்டில் இந்த**

**ஒழுங்கெலாம் நம் மாதர் வாரத்தின் ஏழுநாள்**

**உயர்விரதம் மேற்கொள்வதால்**

**உற்றபலன் அல்லவோ அறிவியக் கங்கண்**

**டுணர்ந்த பாரத தேசமே! [5] (சுயமரியாதைச்சுடர் 34-49)**

என்ற பாடலின் மூலம் பெண்டிரின் இவ்விழி நிலைக்கும் கொடுமைகளுக்கும் காரணம் கல்வியறிவின்மையே என்பதை உணர்த்த வந்த பாரதிதாசன் பெண் கல்வியின் இன்றியமையாமையை விளக்க அழகிய இசைப் பாடல்களை எழுதியுள்ளார். பள்ளிக்குச் செல்லமறுக்கும் தன் பெண் குழந்தைக்குத் தந்தை அறிவுரை கூறுவதுபோல இப்பாடல் அமைந்துள்ளது.

**தலைவாரிப் பூச்சூடி உன்னைப்-பாட**

**சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன் அன்னை**

**சிலைபோல ஏனங்கு நின்றாய் – நீ**

**சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்? 6** (இசையமுது ப-248)

என்று மகளைக் கேட்ட தந்தை அடுத்த வரிகளில் கல்வியின் சிறப்பையும் உயர்வையும் எடுத்துச் சொல்கிறார். மேலும் கல்வியை விலை கொடுத்து வாங்க முடியாது என்பதையும் விளக்குகிறார்.

விலைபோட்டு வாங்கவா முடியும்?-கல்வி

வேளைதோறும் கற்று வருவதால் படியும்

மலைவாழை அல்லவோ கல்வி-நீ

வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி! 7 (இசையமுது பக்-248)

இவ்வாறு கல்வியின் சிறப்பை விளக்கிய தந்தை, தன்மகள் சரியாகப் படித்து முன்னேறாவிட்டால் எதிர்காலச் சமூகம் தன்னைப் 'பொறுப்பற்ற தந்தை' என்று இகழும் என்பதையும் எடுத்துச் சொல்லிப் தன்மகள் கல்வி கற்க வேண்டும் பெண்கல்வியை வற்புறுத்துகிறார்.இதன் வழி பெண்கல்வியின் இன்றியமையாமையை அறிய முடிகின்றது.

**குழந்தை மணம்**

பருவம் அடையாத இளஞ்சிறுமியை முதியவனுக்கு மணம் செய்து கொடுக்கும் கொடிய திருமணத்தை மூடத்திருமணம் என்றுரைக்கின்றார். அதேபோல் சின்னஞ்சிறு குழந்தைகளுக்குத்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

திருமணம் செய்து வைக்கின்ற அவல நிலையைக் கண்டு நொந்தவர், குழந்தை மணம் செய்யக் கூடாது என்பதையும் அறியா பருவத்திலும் விளையாடும் பருவத்திலும் விவரம் தெரியா பெண்ணை திருமணம் என்ற பெயரில் அவளின் உரிமைகளை பறிக்கின்றனர். இளமைத் திருமணத்தால் ஏற்படும் கொடுமையை ஒரு தாய் கூறவது போன்று உள்ளம் உருக எடுத்துரைக்கின்றார்.இதனை

**‘கண்களோ மருமகனும் மகளும் கனிந்து**
**காதல் விளைப்பதைக் காண ஓடின**
**வாயின் கடைசியில் எச்சில் வழியக்**
**குறட்டை விட்டுக், கண்கள் குழிந்து**
**நரைத்தலை சோர்ந்து நல்லுடல் எலும்பாய்ச்**
**சொந்த மருகக் கிழவன் தூங்கினான்!**
**இளமை ததும்ப, எழிலும் ததும்பக்**
**காதல் ததும்பக் கண்ணிர்ததும்பி**
**என்மகள் கிழவன் அருகில் இருந்தாள்!’ 8**
**(பாரதிதாசன் நகைச்சுவைநயம் பக்-289)**

என இளம் பெண்ணுக்கும் வயது முதிர்ந்த ஆணுக்கும் நடைபெற்ற திருமணக் கொடுமையினை பாடல் வழி எடுத்துரைத்து பெண்ணின் உரிமை பறிக்கப்பட்ட விதத்தினை இயல்பாக எடுத்தியம்புகின்றார்.

**கைம்மை நிலை**

இளமையில் திருமணம் முடிக்கப்பட்ட பெண் கணவன் இறந்த பின்பு உடன்கட்டை ஏறுதல் வேண்டும் அல்லது மொட்டை அடித்து வெள்ளை ஆடை உடுத்தி கைம்மை நோன்பு நோற்றல் வேண்டும். இக்கொடுமைதனைக் குறிப்பிடவந்த கவிஞர்

**‘கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே-இங்கு**
**வேரில் பழுத்த பலா-மிகக்**
**கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே-குளிர்**
**வடிகின்ற வட்டநிலா’.9 (பாரதிதாசன் கவிதைகள் தொகுதி-1ப-106)**

என்ற பாடலின் மூலம் பாரதிதாசன் கைம்மை நிலை அடைந்துள்ள பெண்களின் நிலையை எடுத்துரைக்கின்றார். பாடுகிறார். இரக்கமற்ற ‘**ஆண்கள் சமுதாயத்தைப் பார்த்து,**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே-கெட்ட**

**கைம்மையைத் துர்க்காதீர்-ஒரு**

**கட்டழகன் திருத்தோளினைச்-சேர்ந்திடச்**

**சாத்திரம் பார்க்காதீர்’ 10 (பாரதிதாசன் கவிதைகள் பெண்;ணுலகு ப -92)**

என்று அறிவுரை கூறுகின்றார்.

பெற்றோர் தம் பெண்ணை உணர்ச்சியுள்ளவளாக விருப்பு, வெறுப்பு உடையவளாக மதிப்பதே இல்லை. கல்லென அவளை மதிப்பர். கண்ணில் கல்யாண மாப்பிள்ளை தன்னையும் காட்டார். ஆதலால் ‘கற்றவளே! பெற்றோரிடம் உன் விருப்பத்தைச் சொல் அவர் நியாயம் தாராவிட்டால் விடுதலை மேற்கொள்’ எனக் கூறுகின்றார்.

இல்லற வாழ்வு இனிமை பயப்பதாக இருக்க வேண்டும்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது 11( குறள் 45)**

என்ற குறளின் வழி இல்லற வாழ்வு சிறந்து விளங்க ஆணும் பெண்ணும் அன்பு உடையவராகவும் பண்புமிக்கவராகவும் விளங்குதல் வேண்டும் அப்போது தான் இல்லம் சிறந்து விளங்கும் இதனை பாரதிதாhசனும் குடும்ப விளக்கில் ஆணும் பெண்ணும் சமஉரிமை உடையவராக இருத்தல் வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறார்

**மறுமணம்**

மனைவி இறந்துவிட்டால் ஆணொருவன் மறுமணம் செய்து கொள்வதை ஏற்றுக் கொள்ளும் சமுதாயம் பெண்ணிற்கு அந்த உரிமையை அளிக்காததைக் கண்டு மனம் வெதும்பும் கவிஞர் பெண்ணும் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும்; ஆண் திருமணம் செய்து கொண்டால் அதனை ஏற்றுக்கொள்ளும் சமூகம் பெண்ணின் திருமணத்தையும் ஏற்று கொள்ளுதல் வேண்டும் என்று வற்புறுத்துகிறார்இதனை

**‘வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்**

**மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ**

**பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்**

**பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ’[12](பாதிதாசன் கவிதைகள் –ப-126)**

என்ற பாடலின் வழி விதவையின் மறுமணத்தை பற்றி விவரித்து கூறுகிறார்.

**பெண்விடுதலை**

பெண்கள் சுதந்திரத்தோடும் தனது கருத்துகளை வெளிப்படுத்தும் தைரியம் உடையவர்களாக


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

விளங்கவேண்டும் பெண்ணடிமை தீர்ந்தால் தான் மண்ணடிமைத் தீரும் என்பதை தன் பாடல்வழி விளக்குகின்றார்.

**'பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ?**
**மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை!**
**பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு**
**மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!**
**ஊமையென்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்**
**ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு!**
**புலனற்ற பேதையாய்ப பெண்ணைச் செய்தால்அந்**
**நிலம்விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே!''13**
**(பாரதிதாசன் கவிதைகள் சஞ்சீவி பர்வதத்தின்சாரல் ப-3)**

என்ற பாடலின் வழி பெண்ணின் சுதந்திரமே நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கின்றது விளக்கியுள்ளார்.

பாரதிதாசன் தனது பாடல்களில் மனித உரிமைகளுக்காக வலுவாகக் குரல் கொடுத்தார், அவரின் படைப்புகள், ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதிலும், சமூகத்தில் நிலவும் பாகுபாடுகளைக் கண்டிப்பதிலும் ஒரு புரட்சிகரமான கருவியாக அமைந்தன.

**முடிவுரை**

பாரதிதாசனின் பாடல்கள், வெறும் கவிதைகளாக மட்டும் இல்லாமல், சமூக மாற்றத்திற்கான புரட்சிகரமான ஆயுதங்களாக விளங்கின. பெண்களின் உரிமை, சாதிய சமத்துவம் மற்றும் பகுத்தறிவுக் கொள்கைகள் மூலம், மனித உரிமைகளின் அடிப்படைத் தத்துவங்களை அவர் வலிமையாக வெளிப்படுத்தினார். அவரின் கவிதைகள், இன்றும் மனித உரிமைகளுக்கான போராட்டங்களுக்கும் உறுதுணையாக உள்ளது. .பெண்களின் முன்னேற்றத்திற்கும் உரிமைக்கும் இன்றை பெண்களின் உரிமைக்கும் காரணமாக அமைந்தது எனில் மிகையாகாது.

**துணைநூற்பட்டியல்**

1.பாரதிதாசன் கவிதைகள் மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர் தெரு
பாரிமுனை சென்னை- 600108, முதல் பதிப்பு 1998.
2. பாவேந்தர் பாரதிதாசன் இசையமுது பாரத சக்திநிலையம் புதுவை.
3. மெய்யப்பன் ச. முனைவர் பாரதியார் கவிதைகள் தென்றல் நிலையம்
சிதம்பரம் -9001முதல் பதிப்பு 15 ஆகஸ்ட் -2000
4. திருக்குறள் - பரிமமேழகர் உரை சாhதா பதிப்பகம் இராயப்பேட்டை, சென்னை 600014


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 21. சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்

**கி.வான்மதி**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி-620 002

பழந்தமிழ் இலக்கியமாகத் திகழும் சங்க இலக்கியம், மனித சமூகம்உய்வதற்குரியகருத்துக்களை உயரிய அறக்கோட்பாடுகளாக வகுத்துரைக்கின்றது. சமூக மேம்பாட்டின் பல்வேறு சிறப்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. காதலும் வீரமும் அவற்றுள் பெருமையுடையனவாய்ச் சொல்லப்பட்டுள்ளன. இவ்விரண்டும் பண்டைத்தமிழ் வாழ்வின் பண்பாட்டுக் கூறுகளாக விளங்கியுள்ளன.இவ்விருகூறுகளையும்எடுத்துரைத்துத்தமிழ்மொழியின் பெருமையினையும் உயர்வினையும் உலகறியச் செய்தவர்கள் சங்ககாலப் புலவர்கள் ஆவர். தமக்குரிய உரிமைகள் அனைத்தும் பிறருக்கும் உரியன என்ற சமத்துவச் சிந்தனையைக் கணியன் பூங்குன்றனார,; பரணர், உறையூர், ஏணிச்சேரி முடமோசியார,; நன்னாகனார். நக்கீரனார் பிடவூர் கிழார்மகன் பெருஞ்சாத்தன் போன்றோர் பாடல்களில் காணமுடிகிறது. வாழ்வுரிமை என்பது அச்சமின்றி இடரின்றி அச்சுறுத்தலின்றி பசியின்றி பாதுகாப்பாக விரும்பிய இடத்தில் வாழ்வதாகும். சங்ககால மன்னர்கள் மக்களைத் துன்பமின்றிப் பாதுகாத்ததோடு அவர்கள் அச்சமின்னி பசியின்றி வாழவும் வழிவகை செய்திருக்கின்றனர். மக்.கள் உறங்குகின்ற வேளையிலும்தாம்உறங்காமல்மக்களைப்பற்றியேசிந்தித்திருக்கின்றனர் அப்புலவர்கள் தனிமனித வாழவிலும் சமூகவாழ்விலும் சமூகத்துடன் தொடர்புடைய அரசவாழ்விலும் பெறத்தக்க மனித உரிமைகளைத்தங்களபாடல்களில்புலப்படுத்தியுள்ளதிறத்தினைக
குறித்துஇக்கட்டுரையில்ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

**முன்னுரை**

உரிமை என்பது சுதந்திரமாக வாழ உதவும் ஒரு உணர்வு. அதே சமயத்தில், உரிமைகள் மற்றும் கடமைகள் இரண்டும் சமமாக வலியுறுத்தப்பட்டன..தமிழ் இலக்கியங்கள், குறிப்பாக சங்க இலக்கியங்கள், மனித உரிமைகளை அறநெறிக் கோட்பாடுகளாக வகுத்துரைத்துள்ளன. சமூகத்தில் வாழும் மக்களின் தேவைகளை எடுத்துரைத்து, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்ததோடு மட்டுமல்லாமல், மனித உரிமை மீறல்கள் நிகழும்போது மன்னர்களை அறிவுறுத்தித் திருத்தியும் உள்ளனர். மேலும், திருக்குறள் போன்ற நீதி நூல்கள், சமூக நீதி, சமத்துவம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை வலியுறுத்துகின்றன. தமக்குரிய உரிமைகள் அனைத்தும் பிறருக்கும் உரியன என்ற சமத்துவச் சிந்தனையைக் கணியன் பூங்குன்றனார,; பரணர்,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in
DOI: https://doi.org/10.63300/tm11012025.01

உறையூர், ஏணிச்சேரி முடமோசியார,; நன்னாகனார். நக்கீரனார் பிடவூர் கிழார்மகன் பெருஞ்சாத்தன் போன்றோர் பாடல்களில் காணமுடிகிறது. வாழ்வுரிமை என்பது அச்சமின்றி இடரின்றி அச்சுறுத்தலின்றி பசியின்றி பாதுகாப்பாக விரும்பிய இடத்தில் வாழ்வதாகும்.;.மனித உரிமைகளைத் தங்கள் பாடல்களில் புலப்படுத்தியுள்ள திறத்தினைக் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மனித உரிமைகள்**

உலகில் பிறந்த மனிதர்கள் அனைவருமே சம உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். என்றாலும் நடைமுறையில் எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும், எந்தச் சமூகத்திலும், சம வாய்ப்புக்களும், சம உரிமைகளும் அளிக்கப் பெறுவதில்லை. இத்தகு சமமற்ற நிலை மாற்றம் பெறவேண்டும் என்பதனை முதன்மையான நோக்கமாகக் கொண்டு சமூகவியலாளர்கள் செயலாற்றி வந்துள்ளனர். சங்க காலத்தில் புலவர்கள் சமூக அளவில் மிகப்பெரும் திறமுடையோராக விளங்கினர். புலவர்கள் சமநிலைப் பட்ட சமுதாயத்தையே விரும்பினர். உலகில் வாழும் மாந்தர் அனைவரும் பிறப்பால் சமநிலைப் பட்டவர்களே, பொதுமைப்பட்டவர்களே என்பதே அவர்களது கொள்கையாக இருந்தது. இன்றைக்கும் சமூகப் பொறுப்புணர்வு மிக்க படைப்பாளர்கள் மனித உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். தமிழில் மனித உரிமைகளுக்காகப் போராடிய சங்கப் புலவர்களி;ல் திருவள்ளுவர் தலைசிறந்து விளங்குகின்றார். கபிலர், ஔவையார் முதலான புலவர்கள் சங்க காலத்தில் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த புலவர்களாகத் திகழ்கின்றனர்.

**புலவர்கள் பெற்றிருந்த மனித உரிமை**

நாடாளும் தலைவர்கள் இலக்கியம் இயற்றும் புலவர்களையே விழுமியோராகப் போற்றிவந்தனர். அரசனை 'அவன்' என்றும் புலவரை 'அவர்' என்றும் சுட்டியுள்ளதில் உள்ள நாகரிக மதிப்பு, அரசியலில் தலையிட்டு அறிவுரை கூறியும் அறவுரை நல்கியும் அரசரின் போக்கைத் திருத்தும் உரிமை புலவர்க்கு இருந்தது. அரசர் குறுநில மன்னர் ஆகியோரின் குடும்ப வாழ்விலும் புலவர் தலையிட்டு பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர்; இவற்றின் மூலம் சங்ககாலத்தில் புலவர்களுக்கு மதிப்பும் மனித உரிமைக்குரிய செல்வாக்கும் இருந்துள்ளது என்பது புலனாகின்றது.

**மனித உரிமைகளைப் போற்றுதல்**

தகுதியும் திறமையும் உடையவர்களைத் தேர்ந்து அவர்களுக்கு முதன்மை தருதல் மனித உரிமைகளைப் போற்றும் பண்புகளில் ஒன்றாகும். சங்கப் புலவர்கள் இத்தகு மனித உரிமைகளைப் போற்றும் மன்னர்களையே வாழ்த்திப் போற்றியுள்ளனர்.தகடூர்எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைப் போற்றும் அரிசில்கிழார், அவன் அறிவுடையோர் எண்ணினாலும், அறிவற்றோர் எண்ணினாலும் பிறர்க்கு நீ உவமையாய் அமைவாய் அன்றி, உனக்கு உவமையாய்ப் பிறர் இல்லை என்று கூறுவதனை,

"உரவோர் எண்ணினும் மடவோர் எண்ணினும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

பிறர்க்கு நீ வாயின் அல்லது, நினக்கு
பிறர் உவமம் ஆகா ஒருபெரு வேந்தே" (பதி. **73:1-3)**

என்னும் பாடல்வழி உணர்த்துகிறது

**பொறுமை காக்கச் செய்தல்**

மனித உரிமை மீறல்கள் பொறுமையின்மையின் காரணமாகவும், சகிப்புத் தன்மை அற்றுப் போவதன் காரணமாகவும் நிகழ்கின்றன. இதனால் பொறுமையுடன் பிறரது நிலையினைக் கேட்டறிந்தும் அவர்களது நிலையினை உணர்ந்த பின்னருமே எச்செயலையும் செய்தல் வேண்டும். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்ற பழமொழி இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும். மனித உரிமைகளின் முக்கியப் பண்புகளில் பொறுமையும் ஒரு கூறாக அமைந்திருக்கின்றது. இதனை,

**"**அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்" (கலி. **133:10-12)**

எனும் கலித்தொகையின் பாடலடிகள் புலப்படுத்துவதனைக் காணலாம்.

**செங்கோல் செலுத்தும் திறன் போற்றல்**

சமுதாயத்தில் நல்லாட்சி நிலவ, செங்கோன்மை காரணமாக அமைகின்றது. இத்தகு நல்லாட்சியினைப் பற்றிப் பேசும் அதிகாரம் செங்கோன்மை ஆகும். எக்காரணம் கொண்டும் அறநெறியிலிருந்து வளைந்து விடாமல் ஆட்சி செலுத்துகின்ற தன்மையே செங்கோன்மை ஆகும்.

**"**ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை." (குறள். **541)**

சான்றோர் புகழும் திறன் மிக்க தலைவர்களாக நாட்டையாளும் மன்னர்கள் விளங்க வேண்டும் என்றால் அவர்கள் நல்லாட்சியினைத் திறம்பட நடத்தும் திறன் பெற்றவர்களாக விளங்குதல்வேண்டும். இதுவே, செங்கோல் செலுத்தும் திறனாக அமைந்திருக்கின்றது. மழை பொழியாது போயினும், நாட்டில் வளம் குன்றினும், இயற்கை அல்லாத செயல்கள் நிகழினும் ஆள்வோனைக் கொடுங்கோலன் என்று உலகம் பழிக்கும் என்ற கருத்தினை,

**"**அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறை வேண்டுபொழுதில் பெயல் பெற்றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
**............................................................**
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்கண் அகல் ஞாலம்" (புறம். **35:14-29)**

என்னும் புறப்பாடல் எடுத்துரைக்கின்றது.

**புலவர்களின் உரிமைகள்**

ஆள்வோர் நல்லாட்சி புரிய கற்ற சான்றோர்களின் துணையைப் பெரிதும் போற்று மதித்தல்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

வேண்டும். இதன் சிறப்புக் கருதியே அதியமான் நெடுங்காலம் வாழும் தரும் அரியபொருளான நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவைக்குத் தந்தான் என்ற செய்தியை புறநானூற்று பாடல் எடுத்துரைக்கின்றுத.இதே கருத்தை சிறுபாணாற்றுப்படையும் குறிப்பிடுகிறது.

"நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக-பெரும நீயே, தொல் நிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீம்கனி குறியாது
ஆதல்நின் அகத்து அடக்கி
சாதல்நீங்க எமக்கு ஈந்தனையே" (புறம். **91:4-9)**

மதுரைக்காஞ்சியின் பாட்டுடைத் தலைவன்தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.அவன் தான் போரில் தோற்றால் மாங்குடி மருதன் முதலான புலவர்கள்; என்னையும் என் நாட்டையும பாடாதொழியட்டும் என்பதனை,

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என்நிலவரை" (புறம். **72:13-16)**

என்று கூறுவதன் மூலம் சங்ககால மன்னர்கள் புலவர்களையும் சான்றோர்களையும் இன்றியமையாதவர்களாகப் பெற்றிருந்தனர் என்பது புலப்படுகின்றது.

மனித உரிமைகளின் வழி பகையைத் தடுத்தல்

வேந்தரின் வீரத்தையும் அவர்தம் போர் வெற்றியையும் புகழ்ந்து பாடும் பழந்தமிழ்ப் புலவர்கள் போரைத்தடுத்து நிறுத்தி அமைதி ஏற்படுத்தியுள்ளனர். போரின் கொடுமையையும், அறத்தின் அடிப்படையில்விளக்கும்மறப் பண்பையும் விளக்கிப் போரைத் தடுத்துள்ளனர்.சோழன்குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சேரமான் இயமவரம்பன் நெடுஞ்சேரலாதனுடன் பகைகொண்டு, சேரனின் கருவூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். சோழனை எதிர்க்குமளவிற்குத் தன்னிடம் படைவலிமை இல்லையென்பதை அறிந்த சேரன், கோட்டைக்குள்ளேயே அடங்கியிருந்தான், சோழர்படை கருவூர்க்கோட்டையைச் சுற்றியுள்ள காவற்காட்டை அழித்தொழிந்தது. தன் காவல் மரம் வெட்டப்படும் ஓசை கேட்டும் வெளிவராது காலம் நீட்டித்தலால் இருபெரும் படைகளும், மக்களும் துன்புறுவதைக் கண்டார் ஆலந்தூர்கிழார், கிள்ளிவளவனிடம் சென்று, வேந்தனின் மறப்பண்பைக் கிளர்த்திப் போரைத் தவிர்க்க விழைந்தனர் புலவர். நின்படை கோட்டையில் பலகால் முற்றுகையிட்டிருந்தும், அவன் காவல் மரங்களை வெட்டி வீழ்த்திய ஓசைகேட்டும் வெளிவராது இருக்கும் சேரன் வீரனல்லன். வீரர் தம்மை நிகர்த்த வீரரோடே போரிடுவர். பெருவீரனாய நீ வீரனல்லாத சேரனுடன் போரிடுவது பெருமை தருவதன்று எடுத்துரைக்கின்றார்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

"கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
ஆங்கினி திருந்த வேந்தனோடு ஈங்குநின்
சிலைத்தார் முரசும் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே." (புறம். **47:1-6)**

என்னும் பாடலைப் பாடிச் சோழனுக்கு வீரத்தின் தன்மையை உணர்த்திப் போரைத் தடுத்து நிறுத்தக் கருதிய புலவரின் பணி குறிப்பிடத்தக்கதாய் அமைந்துள்ளது.

சங்கப் புலவர்கள் போரில் வெற்றிகொண்ட மன்னரைப் பாடிப் புகழ்ந்துள்ளதோடு மட்டுமல்லாது, தாங்கள் பெற்றிருந்த உரிமைகளை மன்னர்களுக்கு எடுத்துரைத்து அதனைப் பல இடங்களிலும் நிலைநாட்டியுள்ளனர். மனிதனை மனிதனாக நடத்த வேண்டும் என்றகருத்திலும்மனிதஉரிமைகளை மன்னர்கள் மீறும் போதும் அவர்கள் மன்னர்களுக்கு அறிவுறுத்தவும் தவறவில்லை என்பது இவ்வாய்வால் புலனாகின்றது.

**அரசனும் புலவரும்-**

நாடாளும் வேந்தன் பகைவரோடு போர் தொடுப்பதற்கு முன் நல்லநேரம், காலம் பார்த்து போருக்குரிய படைக்கலங்களை மங்கல நீராட்டி புறவீடு செய்வான், ஏனென்றால் போர் எனறவுடனே அவ்வேளையில் இவற்றை எல்லாம் பார்க்க முடியாது,அதனால் போருக்குரிய காரியங்களில் முன்னேற்பாடாகவேத் திகழ்வான் அதுபோல தான் முரசுக் கட்டிலில் இருந்த முரசானது மங்கல நீராட்டி வேறோர் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது, அதனால் அவ்விடம் வெறுமனே இருந்தது, அந்நேரத்தில் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறையை காண மோசிகரனார் என்ற புலவர் அவைக்கு வருகிறார், மன்னன் இல்லாததால் தான் நடந்து வந்த களைப்பை போக்கிக் கொள்ள அருகில் இருந்த முரசுக் கட்டிலில் படுத்துறங்குகிறார்.

இதை கண்ட காவலாளி உடனே வாள் கொண்டு அவரை வெட்டப் போகிறார்,அப்போது வேந்தன் அவனை தடுத்து உறங்குகிறவரை உற்றுப் பார்க்கிறார்,பார்த்தவுடனே அவரைத் தண்டிக்காது சாமரம் வீசுகிறார், கண்விழித்துக் கொண்ட புலவர் இதை பார்த்து வியக்கிறார், ஏனென்றால் பாராளும் மன்னனின் வெற்றியை பாரறியச் செய்வது இம்முரசாகும்,ஆம் முரசு வைக்கும் இடம் தெய்வமிகு வணங்கப்படக் கூடியதாகும் அப்படியிருந்தும் தான் உறங்கியதைக் கண்டு வெகுளாமல் என்மேல் அன்பு பாராட்டியதற்கு என் தமிழ் புலமையே என்றாலும்,இவ் விடத்தில் வேந்தனின் புகழை,சிறப்பை,இரக்கத்தை எடுத்தோதும் விதமாக இப்பாடல் அடிகள் அமைந்துள்ளது,

**"**இவன் இசை உடையோர்க்கு அல்லது அவனது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை"**351**
**(**ஞா.மாணிக்கவாசகன்(உ-ஆ)**2005;** புறநானூறு;பா-எ-**50)**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

நாடாளும்; மன்னனாக இருந்தாலும் தன்னைப் போற்றி புகழ்ந்து பாராட்டும் புலவரை தண்டிக்காது அவன் அருகில்; இருந்து கவரி வீசினான்;;; என்;;பதன் மூலம் வேந்தனின் மனித மாண்பினை அறிந்;துகொள்ளமுடிகின்;றுது.

**முடிவுரை**

பண்டைக்காலப் புலவர்கள் மக்கட்சமுதாயத்தின் பிரதிநிதிகளாகவும், மன்னனுக்கும் குடிமக்களுக்கும் இடையே ஒரு பாலமாகவும் திகழ்ந்துள்ளனர். பழந்தமிழ் வேந்தர்களுடைய சிறப்புகளுள் ஒன்று புலவர்களுடன் அவர்கள் கொண்டிருந்த நட்பு ஆகும். மனித உரிமைகளைப் பற்றிய செய்திகளை மன்னர்களுக்கு அறிவுறுத்துவதற்கு நட்பு ஒரு களமாக அமைந்திருந்தது. நட்புக்கொண்ட மன்னனிடம் தங்கள் உரிமைகளை இடித்துரைத்து எடுத்துரைக்கும் உரிமை சங்கப் புலவர்களுக்கு இருந்துள்ளது. வேந்தரைப் பாடிப் பரிசில் வேண்டுவதே தொழிலாகக் கொள்ளாமல் அவர்கள் தவறு செய்தவிடத்து அஞ்சாது கண்டித்து அறநெறிப்படுத்தும் இயல்பினராகவும் புலவர் பெருமக்கள் திகழ்ந்தனர். பழந்தமிழ்ப் புலவர்கள் வேந்தர்பால் அன்பு கொள்ளலும் நட்பு பூணலும, குறைகண்டவிடத்து அதனை மென்மையாகக் கடிதலும் நிறைகொண்டவிடத்து மேம்படப் பாராட்டலும் ஆகியவற்றை இக்கட்டுரை விவரிக்கின்றுத.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

# 22. தலித் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

**முனைவர் து.நீலாதேவி,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி-620 002

Ph.No – 8825727134, deelatamil@gmail.com,https://orcid.org/0009-0006-3831-0030

**ஆய்வுச் சுருக்கம்**

பெண்ணியம் என்பது இன்றைய நிலையில், உலக அளவில் பேசப்படும் ஒரு பெரும் பாடுபொருளாக உள்ளது. பெண்ணியம் என்பது ஆண், பெண் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்று பெண்களுக்கான உரிமையும் முன்னேற்றமும் சமுதாயச் சிக்கல்களாக இருக்கின்றன. பெண்ணியச் சிந்தனைக் கருத்தினைக் கூறும் அறிஞர்கள் கல்வியின்மையே பெண்ணடிமைக்கு முதற்காரணம் என்கின்றனர். பாலியல் அடக்குமுறையும் நமது மரபார்ந்த பண்பாடுகளும் பெண்ணை அடிமைப்படுத்துகிறது. நமது சமூக அமைப்பில், குடும்பம் என்ற ஆணாதிக்கச் செயல்பாடே இத்தகைய பெண்ணடிமைக்குக் காரணமாக அமைகிறது. இவ்வியலானது, பெண்ணியம் பற்றிப் பேசுவதோ, தலித் பெண்ணியம் பற்றி ஆய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனை ஆய்வதற்கு முதலில், சமுதாயத்தில் பெண்கள் இருந்த நிலை குறித்து ஆய்வது அவசியமாகும். மேலும் இவ்வியலில் பெண்ணியம், வரையறைகள், கோட்பாடுகள், இயக்கங்கள் ஆகியவை ஆய்வு செய்யப்படுகிறது.

பெண்கள் பாலியல், பொருளாதாரம், சாதியம், சமயம் போன்ற பல தளங்களில் ஒடுக்கப்படுகிறார்கள். ஆதிக்க, இடைநிலைச் சாதிப் பெண்களுக்கும், அடித்தளத்தில் உள்ள தலித் பெண்களுக்குமான ஆணாதிக்க அடக்குமுறையானது வேறுபட்டதாக அமைகிறது. தலித் பெண்களைத் தவிர்த்த, பிற பெண்கள், ‘பெண் - என்ற நிலையில் மட்டுமே ஆண்களால் ஒடுக்கப்படுகின்றார்கள். ஆனால் தலித் பெண்களோ, பெண் என்ற நிலையில், (தன் சாதி) தலித் ஆண்களாலும், ஒடுக்குமுறைக்கு ஆளாகின்றனர். எனவேதான் தலித் பெண்ணியம் என்பது தனியாகப் பேசப்படக்கூடியச் சூழல் இன்றைய (சமூகத்தில்) காலகட்டத்தில் அவசியமாகிறது.

**பெண்ணியம் - சொல் விளக்கம்:**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

“ஆங்கிலத்தில் **‘Feminism’** என்று வழங்கும் கலைச்சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச் சொல் பெண்ணைக் குறிக்கும்: இச்சொல் **‘Femine’** என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. ‘பெண்’ என்னும் சொல்லுக்கு பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள்”1 என்று பொருள் கொள்ளப்படுகிறது.

பெண்ணியம் என்ற சொல், பெண் விடுதலை, பெண்ணடிமை, பெண்ணுரிமை, பெண்நிலை ஏற்பு, பெண்ணிலைவாதம் எனப் பல பொருள் தருவதாக அமைந்துள்ளது.

பெண்ணியம் என்ற சொல்லுக்குத் தெற்காசிய நாடுகள், “பெண்கள் சமூகத்திலும் அலுவல்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் இந்நிலையை மாற்றியமைக்க, ஆண்களும், பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, செயற்படும் முயற்சிகளும்”2 என்ற விளக்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.

**பெண்ணியம்:**

உலகம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணியாக விளங்கியவள் பெண். அப்பெண்ணானவள் பிறரை சார்ந்தே வாழ்கிறாள். “பெமினிசம் என்ற சொல்லுக்கு, 1. பெண்ணின் தன்மைகள் 2. சமூகத்திலும் அரசியலிலும் ஆண்களுக்கு நிகரான உரிமைகளை பெற்றுத் தருவதற்கான கோட்பாடு 3. பெண்களின் உரிமைக்காகவும் தேவைகளை நிறைவேற்றவும் பெண்கள் சார்பாக அகராதிகள் பல பொருள் விளக்கங்களைத் தருகின்றன.”

பெண்ணியத்தை வளர்த்தெடுத்த பெண் விடுதலையை மையமாகக் கொண்ட சிந்தனையாளர்களையும், பெண்ணியவாதிகளையும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இயக்கங்களையும் முதலில் அறிந்து கொள்வது தேவையாகிறது. ஐரோப்பா அமெரிக்கா நாடுகளில் ஏற்பட்ட தொழில் ரீதியான வளர்ச்சிகளினூடே பெண்ணியம் பிறந்தது.

“பெண்ணியம்” என்ற கோட்பாடு பெண்களை நவீனமயமாக்கும் சிந்தனையில் எழுச்சியாகும். இக்கோட்பாட்டைக் கீழ்க்காணும் வரையறைக்குள் ஓரளவு தெளிவுப்படுத்துதலாகும்.

“தற்காத்துத் தற்கொண்டாற் பேனித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்”3

**பெண்ணிய வரையறை:**

பெண்ணியம் குறித்த விளக்க வரையறைகள், நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபட்டே வந்திருக்கின்றன.

பெண்ணியம் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் பலவாறாக அமைந்துள்ளன.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**பெண்ணின் சமூகம் குறித்த வரையறைகள்:**

**தேவதத்தா:**

"சமூகத்திலும் வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப் பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறைகளாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்"4 என்கிறார் தேவதத்தா.

**சார்லட் பன்ச்:**

"பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல: சமூகத்தையே மாற்றி அமைக்க முயல்வதாகும்"5 என்கிறார் சார்லட் பன்ச்.

**பார்பரா ஸ்மித்:**

"பெண்ணியம் என்பது, எல்லாத் தரப்புப் பெண்களுக்கும் உரிமை பெற்றுத் தருவதாகும்"6 என்கிறார் பார்பரா ஸ்மித்.

**முனைவர் இரா.பிரேமா:**

"பெண்ணியம் என்ற இயக்கமானது, பெண்கள் தாமாக முடிவெடுத்து அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஒரு சமூகத்தை உருவாக்குவதாகும்"7 என்று முனைவர் இரா.பிரேமா கூறுகிறார்.

"பெண்ணியம் என்பது, பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்"8 என்றும் முனைவர் இரா.பிரேமா கூறுகிறார்.

**முனைவர் அரங்க.மல்லிகா:**

"தந்தை வழிச் சமூக ஆணாதிக்கம் ஏற்படுத்தி வைத்துள்ள பெண் மீதான பண்பாட்டுத் தொன்மங்களை உடைக்க, பெண்ணியவாதிகள் ஏற்படுத்திய கோட்பாடுகளைப் பெண்ணியம் என்று கூறுகின்றனர்"9 என்கிறார் முனைவர் அரங்க.மல்லிகா.

**பெண் என்பவள் யார்?**

பெண் என்பவள் யார்? அவள் எப்படி நடத்தப்படுகின்றாள்? என்ற சிந்தனைப் பூர்வமான வினாவிற்கு விடை காண்பதுதான் பெண்ணிய இயக்கத்தின் குறிக்கோளாகும். பெண் பிறக்கும் போதே பெற்றோருக்கு அடிமையாகிறாள். பின் ஆண்களின் பாலியல் தொடர்பான இச்சைக்கு வடிகால்; ஆகிறாள். பெண்கள் அடிமையாக முக்கியக் காரணம், அவர்கள் போகப் பொருள்களாகக்

கருதப்படுவதோடு, அவர்களை ஓர் உயிராக மதிக்காது, ஒரு பொருளாக நினைப்பதுதான் என்பது, பெண் முன்னேற்றச் சிந்தனையாளர்கள் கூறும் கருத்தாக அமைந்துள்ளது.

"பெண்களைப் பொருளாதாரம், பாலியல், சாதியியம் என்று மூன்று தளங்களும் இணைந்தும் பரந்தும் ஒடுக்குகின்றன என்பததான் பெண்ணிலைவாதிகளின் கருத்தாகும்"10 என்று கூறப்படுகிறது.

ஆணாதிக்கத்தைக் கட்டிக் காக்கவும் ஆணாதிக்கத்திற்குத் துணை நிற்கவும் படைக்கப்பட்டவள் பெண் என்பதாக மாற்றப்பட்டாள்.

இயற்கையின் அம்சம் பெண்:

"ஆண் இயற்கையின் எதிரி, இயற்கையைக் கொல்லுவது, வேரோடு பிடுங்குவது, தரைமட்டமாக்குவது, மாசுபடுத்துவது, அழிப்பது எல்லாமே அவனுடைய உள்ளுணர்ச்சி வகைப்பட்ட வெளிப்பாடுகளாகும். இயற்கை மீது, அவனுக்கு உள்ளூற அச்சமும் அவநம்பிக்கையும் இருக்கின்றன. மாறாகப் பெண் என்பவள் இயற்கையின் கூட்டாளி. இயற்கையைப் பேணுவது, பராமரிப்பது, ஆரோக்கியமாக வளர உற்சாகமூட்டுவத, சுற்றுச்சூழலின் சமனிலையைத் தக்க வைப்பது என்பன, அவளுடைய உள்ளுணர்வாக இருக்கின்றன. அள்தான் சமுதாயத்திற்கும் நாகரீகத்திற்கும் வாய்ந்த இயல்பான தலைவி"11 என்று எலிசபெத் கூட் டேவிஸ் (நுடணையடிநவா புழரடன னுயஎளை) என்ற தீவிரவாதப் பெண்ணியலாளர் கூறுவதாக, க.பரிமளம் குறிப்பிடுகிறார்.

இயற்கையுடன் இரண்டறக் கலந்த மனித இனத்துகள், இயற்கையின் கூட்டாளியாய்ப் பெண் இருப்பதைத்தான் க.பரிமளம் சுட்டிக்காட்டியுள்ளார்.

**காந்தியின் பார்வையில் பெண்கள்:**

காந்தியடிகள், ஆண்களை விட பெண்களையே உயர்வாக மதித்தார். அவர் கருத்துப்படி, பெண்கள் ஆண்களை விட மனவலிமையால் உயர்ந்தவர்கள். அவர்கள் தங்களது இயற்கைப் பண்புகளான அன்பு, அஷிம்சை, சுயநலமின்மை இவற்றால் ஆண்களை விட மேம்பட்டு நிற்கின்றனர். காந்தியடிகள் சுதந்திரப் போராட்டத்தில், தன்னுடைய ஆயுதங்களாகப் பயன்படுத்திய அஷிம்சை, சத்தியாகிரகம் போன்ற பண்புகளைப் பெண்களின் இயல்புகளிலிருந்து தான், பெற்றுக் கொண்டதாகப் பெருமையோடு ஒப்புக் கொண்டார்.

**சரோஜினி நாயுடு:**

சுதந்திரப் போராட்டத்தில், பெண்கள் ஆண்களுடன் சாதிகள் சமானமாகப் போரிட்டுச் சுதந்திரம் பெற வேண்டும். பெண்கள் என்ற போர்வைக்கு பின்னால் மறைந்து கொண்டு,

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

சலுகைகள் பெறக்கூடாது என்ற கொள்கையை உடையவர். பெண்கள் தனித்துவத்துடன் சுதந்திரமாக வாழ வேண்டும். அவர்கள் வாழ்வில் பொருளாதாரச் சுதந்திரம் வேண்டும் என்ற கருத்துடையவர்: இவர் பெண்ணாக இருப்பதினால், பெண்ணுக்கு வாழ்வில் வேண்டிய பொருளாதாரச் சுதந்திரம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

**பெரியாரின் பார்வையில் பெண்:**

மக்கள் தொகையின் ஒரு பாதியாய் சரிபாதியாய் மக்களின் தோற்றத்திற்கு நிலைக்களனாய் விளங்கும் பெண்ணுலகு, கற்பு, விபச்சாரம், கைம்மை, சொத்துரிமையின்மை முதலிய கட்டுப்பாடு எனும் விலங்குகள் களையப்பட்டு, மூடநம்பிக்கை என்னும் அறியாமை இருட்கிறையில் அல்லப்படுவதை அக்கறிடவும், பெண் மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கும் சுயமரியாதைக்கும் தடையாய் இருப்பவற்றை நீக்கிடவும் பகுத்தறிவுச் சுடரொளி ஏற்றினர் பெரியார்.

பெண் இனம் அனைத்து வகைகளிலும் தனது உரிமைகளை மீண்டும் பெற முனைந்து போராடும் பெண்களுக்குச் சுதந்திர உணர்வு ஏற்படுத்திக் கொடுத்தவர், வணக்கத்திற்குரிய பகுத்தறிவாளர் பெரியார்.

தனது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் பெண்குலத்தை தயார்ப்படுத்திய வண்ணினக் காவலர் தந்தை பெரியார்.

பெண் சமத்துவம் - பெண் கல்வி – பெண் விடுதலை என்ற முப்பரிமாணங்களே பெண்களின் இழந்த பெருமையை அடையும் ஆயுதம் என்பதை பகுத்தாய்ந்து கண்டறிந்தார். வியூகங்கள் வகுத்து வீரப்போர் புரிந்தார்.

**திருமணம் குறித்த பெரியாரின் சிந்தனை:**

"வயது வந்த ஒரு ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் பிரவேசிப்பதற்காகத் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பற்றதொரு ஒப்பந்தம் தான் திருமணம்"12

நமது கல்யாணத் தத்துவம் எல்லாம் சுருக்கமாய்ப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்பதைத் தவிர, வேறொன்றுமே அதில் இல்லை. அவ்வடிமை தனத்தை மறுத்துப் பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவை செய்யப்படுகின்றன என்று சடங்கு சம்பிரதாயங்களைச் சாடினார் பெரியார்.

"ஏதோ கல்யாணம் என்பதாக ஒன்றைச் செய்து கொண்டோலோ, செய்தாகிவிட்டதே அது எப்படி இருந்தாலும் சகித்துக் கொண்டு தானே இருக்க வேண்டும் என்று கருதித் துன்பத்தையும் அதிருப்தியையும் அனுபவித்துக் கொண்டிருப்பதும் அனுபவித்துக் கொண்டிருக்கச் செய்வதும் மனிதத் தன்மையும் சுயமரியாதையும் மற்ற காரியமாகுமே அல்லாமல் ஒரு நாளும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

அரிவுடைமையாகிறது”13 என்று வரையறுத்துக் கூறினார்.

உலக வாழ்விலும் சமுதாயத்தில் சட்டத்திலும் மதத்திலும் ஆண்டுகளுக்குள்ள சௌகரியங்களும் உரிமைகளும் பெண்களுக்கும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் பெண்களுக்கு உண்மையான சுதந்திரமும் ஏற்பட்டதாகும்.

மனிதப் பிறவி கொண்ட ஆணும் பெண்ணும் இயற்கைத் தத்துவத்தில், சமுதாய வாழ்க்கைத் தன்மையில், அறிவின் பெருக்கில் வீரத்தின் மாண்பின் சமமானவர்களே.

உலகில் மனிதவர்க்கத்தினர்க்கு இருக்கும் அடிமைத் தன்மை ஒளிய வேண்டுமானால், பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் அழிய வேண்டும். அது அழித்த நிலையே சமத்துவம், சுதந்திரம் ஆகியவை முளை விடத் தொடங்கும் இடமாகும்.

**தலித் பெண்ணியம்:**

பெண்கள் பாலியல், பொருளாதாரம், சாதியம், சமயம் போன்ற பல தளங்களில் ஒடுக்கப்படுகிறார்கள். ஆதிக்க, இடைநிலைச் சாதிப் பெண்களுக்கும், அடித்தளத்தில் உள்ள தலித் பெண்களுக்குமான ஆணாதிக்க அடக்குமுறையானது. வேறுபட்டதாக அமைகிறது. தலித் பெண்களைத் தவிர்த்த, பிற பெண்கள், ‘பெண் - என்ற நிலையில் மட்டுமே ஆண்களால் ஒடுக்கப்படுகின்றார்கள். ஆனால் தலித் பெண்களோ, பெண் என்ற நிலையில், (தன் சாதி) தலித் ஆண்களாலும், ஒடுக்குமுறைக்கு ஆளாகின்றனர். எனவேதான் தலித் பெண்ணியம் என்பது தனியாகப் பேசப்படக்கூடியச் சூழல் இன்றைய (சமூகத்தில்) காலகட்டத்தில் அவசியமாகிறது.

“தலித் பெண்ணியமென்பது மிகவும் தேவையான ஒன்றாகும். அதற்குக்காரணம் அனுபவித்து வருகின்ற தனித்தன்மையான கொடுமைகளே”14 என்று மோகன் லார்பீர் கூறுகிறார்.

**திருமணம்:**

திருமணம் என்பது இருமனங்களின் சங்கமம். ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு, உனக்காக நான், எனக்காக நீ என்ற மனநிலையில், விட்டு கொடுத்து வாழும் மனப்பக்குவம் பெற்றவர்களாக வாழ, திருமணம் என்ற சடங்கின் மூலம் இணைக்கப்படுகிறார்கள். இவ்வாறான திருமண வாழ்க்கையில், ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் எதிரிகளாகப் பார்க்கும் சூழலும் நிலவுகிறது. திருமணம் என்ற சடங்கின் மூலம் ஆணானவன், பெண்ணைத் தனக்கு அடிமையாக நடத்தும் நிகழ்வுகளைக் கண்ணால் காண்பதும் காதால் கேட்பதும் இயல்பு.

அத்தகைய நிகழ்வுகள் தலித் பெண்களின் வாழ்க்கையிலும் நிகழ்வதை ஆசிரியர் கோவேத.சுவாமிநாதன் படைப்பின் வழி வெளிப்படுத்துகிறார்.

சின்னையன் குராயூர் வட்டாரத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பெரும் புள்ளிகளில்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

ஒருவன். திருமணமாகி குழந்தை இல்லாததால், மூத்தாள் செல்லம்மாள் விரதங்கள் இருந்து பார்த்து அலுத்துப் போனாள். முடிவில் தங்கை கருப்பாயியைச் சரடு போட்டுக் கொண்டு வந்து சக்களத்தி ஆக்கிக் கொண்டாள். அவள் வயிறும் கல்லாய் இறுகிப் போய் விட்டது. ஒருநாள் குள்ளப்பக் கவுண்டன் பட்டிக்கு சின்னையன் இழவு விசாரிக்கப்போனபோது உறவுக்காரப் பெரிய மூக்கன் வீட்டில் தங்கியவன், அவன் மகள் வெள்ளையம்மாளோடு இசகுபிசகமாக நடந்தான். பின்பு அவளை திருமணம் செய்து கொண்டான். அவள் வயிற்றிலும் ஒரு பூச்சியோ ஒரு புழுவோ பிடிக்கவில்லை. மூவரும் சக்களத்திகளாக இருந்தாலும் அவர்களுக்குள் சண்டை சத்தம் வருவதில்லை. வெள்ளையம்மாள் வந்த புதிதில் அக்காளும் தங்கையும் சேர்ந்து கொண்டு அவளோடு பாரதப் போர் நடத்தியதுண்டு. அவளுக்கும் இனி குழந்தை பிறக்காது என்று தெளிவாகத் தெரிந்த பிறகு சண்டை போடுவதை நிறுத்திக் கொண்டனர். பின்பு வேறு திருமணம் செய்வதற்கு முடிவு செய்தான்.

“ஒங்களுக்கு அறுவறுக்குமேல இருக்குமில்ல? யாரு பொண்ணு குடுப்பா…ஒங்க மூணு சம்சாரங்களும் விடுவாங்களா… புதுசா வர்றவ குடும்பியைப் பிடிச்சு ஆஞ்சுற மாட்டாளுகளா…”

“கத்திய கடவாயில கோர்த்து அறுத்துப்புட மாட்டேன்.” சின்னையன் நினைத்த மாதிரியே ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு, “மூத்த மனைவியர் மூவரையும் மாட்டை வெளுப்பது போல் சாட்டைக் கம்பால் வெளுத்தான்.”15 இவ்வாறாக பெண்களை அடிமைப்படுத்தப்படுகிறார். கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன், அவன் அடித்தாலும் உதைத்தாலும் கணவனே தெய்வம் என்று கருதுகின்ற அடிமை உணர்ச்சி கண்டிப்பாய் பெண்ணுக்கிருக்கவே கூடாது.

**கட்டாயத் திருமணம்:**

தமிழ்ச் சமூகத்தில், திருமணம் பற்றிய முடிவானது, மணம் புரிந்து கொள்ளும் ஆணும் பெண்ணும் எடுப்பதில்லை. மாறாக, அந்த முடிவானது, பெற்றோர்களாலும் உறவினர்களாலுமே எடுக்கப்படுகிறது. அதுவும் மணம் புரிந்து கொள்ளும் பெண்ணின் சம்மதத்தைப் பெறுவது தேவையற்றது என்ற எண்ணமே பெரும்பான்மையான குடும்பங்களின் நிலவி வருகிறது.

கட்டாயத் திருமணங்கள் பெற்றோர்களின் சுயநலத்திற்காக நடத்தப்படுகின்றன.

சின்னையன் தோட்டத்தில் வேலைகளுக்கு ஆட்களை கூட்டி வருவாள் சங்கரம்மாள். சின்னையனும் அவளை நம்பிப் பொறுப்புகளை விட்டு விடுவான். அவன் சங்கரம்மாளுக்குப் பதிலாக கடைசிப் பெண்ணான சுப்புத்தாய் தான் வேலைக்கு ஆட்களைக் கூட்டிக் கொண்டு வந்திருந்தாள். அவளை சிறுவயது முதலே பார்த்திருக்கிறான் சின்னையன். ஆனால் அன்று


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

அவளின் உடலிலும்தோற்றத்தில் கொம்பிலே பழுத்துத் திரண்டிருக்கும் கொய்யாப்பழத்தின் பொலிவினைக்கண்டான். அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான். அடுத்த நாள் சங்கரம்மாளிடம் சுப்புத் தாயை தனக்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்டான். ஒரு வழியாக சுப்புத்தாயிக்கு உள்ளூரில் மாப்பிள்ளை கிடைத்து விட்டான். அதுவும் பெரிய புள்ளி.

"அவர்கள் சொத்துக்கு ஆசைப்பட்டு சுடுகாட்டுக்குப் போற கெழவன் பச்ச மண்ண பிடிச்சுக் குடுக்கிறாயெ வெட்கங்கெட்டவளே" என்று காறித்துப்ப மாட்டார்களா. ஏன்றெல்லாம் எண்ண எண்ண அவள் மணம் பதைபதைத்தது.

சிறிது தெம்பு வந்தவளாக, "ஈக் கடிக்கும், எறும்புக்கடிக்கும் நண்டு, நத்தையெல்லாம் விழுந்து பிராண்டும் என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தால் பிள்ளைக்கு வசதியாக வாழ்க்கை கிடைக்குமா? மூத்த பெண்கள் மூவரையும் கஞ்சிக்குச் செத்த பயல்கள் வீடுகளில் கொடுத்து ஆடைக்கும், கோடைக்கும் அதுகளுக்கும் செஞ்சு மாளல.... அப்படி வந்தட்டிப் பயகிட்டத்தான் இவளையும் தள்ளணுமா.... தானா வரும் சீதேவியை காலால் எட்டி மிதிக்கணுமா.... அப்படித்தான் ஒரு மாதம், ரெண்ட மாதம் மிஞ்சிப் போனால் ஒரு மூன்று மாதத்திற்கு ஊரும் ஒட்டும் பேசும். பிறகு எல்லாம் சரியாப்போகும். முதலில் எதையேனும் செய்து சுப்புத்தாயின் கழுத்தில் ஒரு சரட்டைப் போட வைத்து விட்டால் உலை வாயையும் ஊர் வாயையும் மூடுகிற வழியைப் பிறகு பார்க்கலாம்."16 என்ற முடிவுக்கு வந்தாள் சங்கரம்மாள். கட்டாயத் திருமணங்கள் பெண்களின் விருப்பத்திற்கு மாறாக நடைபெறும் இடங்களில், பெண்கள் வலிந்து பாலியல் உறவுக்கு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

**பெண்ணியச் சிந்தனை:**

பொன்னம்மையும், கர்ணனும் திருமணமாகி வாழ்ந்து வந்தனர். ஒருநாள் பொன்னம்மை வயலில் உழுது கொண்டிருக்கும் கணவன், கொழுந்தனுக்கு சாப்பாடு கொண்டு சென்றாள். அங்குள்ள கிணற்றில்; இறங்கி, சிறிது நேரம் சுதந்திரமாக நீரில் குதித்து நீச்சலடித்து விட்டு ஈரச்சேலையுடன் மேட்டிற்கு வந்தாள். கர்ணன் தம்பியான வெள்ளையனுக்கு கோலம் தலைக்கு ஏறியது.

"ஏ எப்படி பொண்டாடிய வச்சுப் பொழைக்கிற ஆம்பிளைய உழுதுகிட்டு இருந்தோம் பயமில்லாமல் கிணத்தில் தவ்விக் குளிச்சிட்டு வந்து நிக்கிறதப்பாரு. இது அவுக ஊர்ல பொம்பிளைக எல்லாம் குளத்திலையும், கிணத்திலையும் விழுந்து நீச்சலடிச்சுதான் குளிப்பாக. அந்தப் பழக்கம்" என்று மனைவியின் செயலை மேலக்கட்டிப் பேசினான் கர்ணன்.

"அத அவுக ஊர்ல வச்சுக்கிறணும். இங்க வந்தா பொம்பள குளிக்க வேண்டிய இடத்தில்

தான் குளிக்கணும். இப்பிடி வெக்கமில்லாம ஊரே பாரு நாடே பாருண்ணு அரைகுறையா நிக்கக்கூடாது. நாமெல்லாம் வேட்டி கட்டி இருக்கமா. சேலைய உடுத்தி இருக்கமா... அக்கம் பக்கத்துத் தோட்டக் காரனுக நம்மளப் பத்தி என்னா நினைப்பானுக...."17

ஆண் சமூகக் கட்டுகளிலிருந்து, பெண் தன்னை விடுவிடுத்துக் கொள்ள எடுக்கும் எந்த முயற்சியும் அவள் பாலியலை, நடத்தையைச் சந்தேகிக்கும் முயற்சியாகவே இருக்கிறது. எனவே பெண் உடலைச் சமூகப் பொருளாக்கி இழிநிலைப்படுத்தும் போது, உடல், உள்ளம் இரண்டும் பாதிப்படைகிறது.

**பெண் மீட்சி பெறுதல்:**

"பெண் மீட்சி பெறுதல் என்பது, அவள் கட்டுண்டிருக்கிறாள் என்று உணரும்போதுதான் சாத்தியமாகிறது. தனிமனிதனும் பெண்ணும் விடுவிக்கப்படும் போதுதான் சமூகம் வளர்ச்சி பெறக்கூடும்"18 என ஜான் ஸ்டுவர்ட் மில் கருதுவதாக, அரங்க மல்லிகா கூறுகிறார்.

"சமூகத்தின் வளர்ச்சிக்குத் தனிமனித சுதந்திரம் தேவை"19 எனக் கூறுகிறார்.

எனவே, சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெண் மீட்சி பெறுதல் என்பது இன்றியமையாததாகிறது. இதைத்தான் பாரதியார்,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்..."20

என்கிறார். 'ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்' என்ற கொள்கை பாரதியாரின் உயிர்க் கொள்கையாகும். இவ்வுலகில் பிறந்த மக்கள் அனைவரும் சமம் என்ற உணர்வு கொண்டவராகப் பாரதி பாடியிருப்பது இங்குத் தெளிவாகிறது.

**முடிவுரை:**

பெண்ணியம் சொல் விளக்கம், வரையறைகள் கூறப்பட்டு, பெண்ணிய விடுதலைக்கான சிந்தனைகளும், வழிமுறைகளும் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் இவ்வியலில் முன்வைக்கப்பட்டுள்ளன. தலித் இனம் சார்ந்த ஆண்களால், பெண்கள் அடிமைப்படுத்தப்படுவதும், ஆண்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளப் பெண்களைக் கட்டாயப்படுத்துவதுமான ஆணாதிக்கச் செயல்பாடுகளும், அதனை எதிர்த்துப் போராடும் குணம் கொண்டவர்களாகத் தலித் பெண்கள் படைக்கப்பட்டிருப்பதும் இவ்வியலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. தலித் குடும்ப அமைப்பில், கணவன் - மனைவி இடையேயான உறவில், ஆணாதிக்கச் செயல்பாடுகள் மிகுந்திருப்பதையும், அதனை எதிர்த்துப் போராடும் பெண்களையும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகப் படைக்கப்பட்டிருப்பதையும் இவ்வியலின்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

வழி அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ச.முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப.1.
2. ச.முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப.2.
3. திருவள்ளுவர், திருக்குறள், குறள்-56.
4. சு.சண்முக சுந்தரம், (தொ.ஆ)., பெண்ணியம் ஆய்வுக்கட்டுரைகள், ப.10.
5. இரா.ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணிய அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.9.
6. இரா.பிரேமா, பெண்ணியம், ப.13.
7. மேலது, பக்.12-13.
8. மேலது, ப.14.
9. அரங்க மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப.174.
10. இரா.ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணிய அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.25.
11. க.பரிமளம், இந்துப் பெண்ணியம், ப.11.
12. கு.மா.இராமாத்தாள், பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள், ப.49.
13. மேலது, ப.41.

**துணைநூற்பட்டியல்**

- **அந்தோனி குருசு, ஆ.** *தலித்தியக் கருத்தாடல்கள்.* ஸ்ரீசெண்பகா பதிப்பகம், 2003.
- **அரங்க மல்லிகா.** *தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்.* 2nd ed., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2006.
- **சிவகாமி, ப.** *தலித் சிறுகதைத் தொகுப்பு.* சாகித்திய அகாதெமி, 2014.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

# 23. தலித் கவிதைகளில் மனித உரிமைகள்

**முனைவர் சா. பாலின் செல்வ ஷோபா**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி -02

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் பாரதியின் காட்சிக் கவிதைகள் காலகட்டத்திலிருந்தே புதுக்கவிதைகள் எழுதப்பட்டாலும் ,ருபதாம் நூற்றாண்டின் ,றுதியில்தான் தலித்துகளின் உரத்தகுரல்களை ,வ்வகைமைக்குள் கேட்க முடிந்தது. அம்பேத்கரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் ,ந்திய அளவில் தலித் ,லக்கிய முயற்சிகளைப் பரவலாக்கியது. தமிழில் தலித்முரசு> புதிய கோடாங்கி போன்ற ,தழ்கள் தலித் ,லக்கியங்களை வெளிக்கொணர்வதில் தீவிரம் காட்டின பல்கலைக்கழகங்கள் தலித்,லக்கியத்தைப் பாடப்பிரிவில் சேர்த்துக் கொண்டன. தலித் ,லக்கிய ஆய்வுகள் ஆய்வுலகில் பெருகின. தலித் எழுத்தாளர்கள் நவீன ,லக்கியத்தின் அனைத்து வகைமைகளிலும் முக்கியமான படைப்புகளைத் தந்தனர். அவர்கள் பொருளாதார வேறுபாடுகள் மற்றும் சாதிய வேறுபாடுகளுக்கெதிராக எழுதினர். தமிழில் தலித் புதுக்கவிதை ,லக்கியவரலாறு எழுதும் அளவுக்கு ஆக்கங்கள் பெருகின. தலித் புதுக்கவிதைகளில் மனித உரிமைகள் என்ற பொருண்மையை ஆய்வது காலத்தின் தேவையாக உள்ளது. சாதி வேறுபாடற்ற சமத்துவ சமுதாயம் அமைப்பது ஆய்வின் நோக்கமாகும். தலித் புதுக்கவிஞர்கள் வர்க்க வேறுபாடுகளைவிட சாதிய வேறுபாடுகள் அகலவே அதிக கவனம் செலுத்தினர் என்பது ஆய்வின் கருதுகோளாகும்.

**முன்னுரை**

தமிழில் தலித் புதுக்கவிதைகள் 1990களில் தோன்றின. சிற்பி> ,ன்குலாப் போன்றவர்கள் எழுபதுகளிலேயே தலித்விடுதலை எனும் பொருண்மையைப் புதுக்கவிதைக்குள் கொண்டுவந்தாலும் 90 களில்தான் அவ்வுள்ளடக்கம் தீவிரம்பெற்றது. தலித் கவிஞர்கள் தங்கள் நேரடி அனுபவங்களைக் கவிதையாக்கியமையால் அவற்றில் உண்மை ,ருந்தது. தலித் அல்லாத கவிஞர்களும்; திறனாய்வாளர்களும் தலித் எழுச்சியோடு தங்களையும் ,ணைத்துக்கொள்ள முற்பட்டனர். ,வ்வாறு வளர்ந்து வரும் தமிழ் தலித்கவிதைகளின் முக்கியப் பொருண்மையாக மனித உரிமைகள் அமைந்தது. மனித உரிமை பேசும் தலித்கவிதைகள் ,க்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

**அரசியல் உரிமை**

தலித் ,லக்கியம் அரசியல் உரிமைகளுக்காய்; குரல் கொடுக்கிறது. வாக்குரிமை என்பது


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

மேலடுக்கு சமூகத்தினருக்கும் அடித்தட்டு சமூகத்தினருக்கும் ஒரே மாதிரியானதாக உள்ளது. தலித்துகளுக்கென்று தனித்தொகுதிகளும் ஒதுக்கப்படுகின்றன. பெருங்கூட்டம் ஆதிக்கசமூகத்தினர் அதிகாரத் தலைமையேற்கும் போது தலித் சமூகத்தில் விரல்விட்டு எண்ணும் பிரதிநிதிகளே அதிகாரத் தலைமைக்கு வர முடிகிறது. தலித்விடுதலையை முன்னெடுக்கும் கட்சிகளை அரசியல் களத்தில் காணமுடிகிறது. தலித் ஆளுமைகளின் பிறந்த நாட்களில் அரசியல் தலைவர்கள் வந்து மாலையிடுவதைச் செய்தித்தாள்கள் புலப்படுத்துகின்றன. ,வற்றை வைத்துக்கொண்டு தலித்துகளுக்கு அரசியலில் சரியான மற்றும் சமத்துவமான ,டம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வர ,யலாது. பொருளாதாரம்> கல்வி ஆகியவற்றில் பின்தங்கியிருக்கும் தலித்துகளுக்கான ,டம் மரியாதைக்குரியதாக மாறும்போதுதான் அரசியல் விடுதலையை அவர்கள் அடைந்ததாகக் கருத முடியும்.

தலித் கவிஞர்கள் அரசியல் விடுதலைக்கான முழக்கங்களை எழுப்புகின்றனர். பேச ,யலாதவர்களின் குரலாகத் தமது குரலை உயர்த்துகின்றனர். அழகியபெரியவன் ஊரிலுள்ள பிரச்சனைகளுக்காய் மனுகொடுக்கச் செல்லும் தலித்துகளை அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் மரியாதையாக நடத்த வேண்டும் என்கிறார்.

“ மனு கொடுப்பதற்கு
நாய்போல் நிற்கவைத்தால்
காற்றென நுழைவோம்
குளிரூட்டப்பட்ட அலுவலகத்திலிருந்து
வெளியே வாருங்கள்
எங்களை உட்கார வைத்து
குறை கேட்க மறுத்தால்
கோமணக் குண்டிகளுடன்
உங்கள் எதிரில் அமர்வோம்;”1; என்பதில் எதிர்ப்பின் குரலைக் காணமுடிகிறது.

‘விடுதலை முதலில் எமக்கானது’ என்பது அழகிய பெரியவனின் உறுதியான நிலைப்பாடு ஆகும்.

**சாதி சமத்துவ உரிமை**

மேல்தட்டிலிருக்கும் சமூகத்தினரும் ,டைநிலைச் சமூகத்தினரும் தங்களது ,யற்பெயரின் பின்னால் சாதியின் பெயரை ,ணைத்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றனர். ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் சாதிப்பெயரைத் தங்கள் பெயருக்குப் பின்னால் ,ணைத்துக்கொள்வதில்லை. ஒவ்வொரு தலித்தும் சாதியற்ற சமூகத்தைத்தான் கனவு காணுகிறான். ‘நான் உனக்கு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

மேலே'என்பதைக் காட்டுவதற்கான அனைத்து அடையாளங்களையும் அவன் எதிர்க்கிறான். ஆனால் ,ந்தியச் சமூகம் சாதிப்படிநிலை கொண்ட சமுகம் ஆகும். எதை அழித்தாலும் சாதியை மட்டும் அழித்துவிடக்கூடாது என்பதில் அது கவனம் செலுத்துகிறது. சாதிமுறைக் கெதிரான குரல்கள் எல்லா தரப்பிலிருந்தும் வந்தாலும் அதனை அகற்ற ,யலவில்லை. சாதியை அழிப்பதற்கான மாற்றங்கள் புறத்தில் நிகழ்ந்தால் போதாது.அகத்தில் நிகழவேண்டும். சாதி மனங்கள் சமூகநீதி மனங்களாக மாறும் போதுதான் முழுமையான மாற்றத்தை அனுபவிக்க முடியும்.

"சாதி என்பது ஒரு கண்ணோட்டம் ஒரு மனநிலை. அதைத் தகர்ப்பது என்றால் வெறும் பௌதீகத் தடையைத் தகர்ப்பது என்பது அல்ல; மாறாக சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவதாகும்"2
என்ற அம்பேத்கரின் கருத்து கவனிக்கத்தக்கது.

புதுக்கவிஞர்கள் சாதியின் பெயரால் மனித உரிமைகள் மறுக்கப்படும்போது அதற்கெதிராகச் சொற்களை ஆயுதங்களாக்குகின்றனர்.

" பூக்களைப் பறித்துக்கொண்டே எங்கள்
வேர்களையும் வெட்டும்
ஊயர்சாதிக் கோடாரிகளை
---------------
பழிவாங்க வேண்டிய
கட்டாயத்தில் இருக்கிறோம்"3

என்ற கவிதை உயர்சாதி மனநிலையைக் கோடாரியாக உருவகிக்கிறது. கோடாரியால் வெட்டுவார்கள். இக்கவிதையோ கோடாரியை வெட்ட வேண்டும் என்கிறது.

**வாழிட உரிமை**

தலித்துகள் வாழவேண்டுமானால் அவர்கள் மைய நீரோட்டத்தில் கலக்க வேண்டும். ஆனால் அவர்கள் ஓரத்தில் இருக்கிறார்கள். மற்றவர்கள் வாழுமிடம் ஊர் என அழைக்கப்படுகிறது. தலித்துகள் வாழுமிடம் சேரி என்று அழைக்கப்படுகிறது. பெயரில் என்ன இருக்கிறது என்று இதைக் கடந்து போய்விட முடியாது சேரியில் வாழ்பவர்கள் ஊரின் நடுவே வாழ அனுமதிக்கப்பட வேண்டும். வழிபாட்டில் முழுமையான உரிமைகள் வழங்கப்படவேண்டும். தனிக்கிணறு> தனி நடைபாதை> தனிச்சுடுகாடு, தனிக்குவளை போன்ற அநீதிகள் மாற்றப்பட வேண்டும். சேரிகளில் சாலைவசதி, குடியிருப்புவசதி, கழிப்பறை வசதி, தொழிற்சாலை வசதி, குடிநீர் வசதி போன்றவை உருவாக்கப்படவேண்டும். அப்போதுதான் "ஊர் மென்று துப்பியது போல் ஓர் ஓரமாய் கிடக்கிறது


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

சேரி"4 என்ற ராஜ்கவுதமனின் வருத்தத்துக்குத் தீர்வு கிடைக்கும். தலையாரி தலித் சேரிகள் புத்தாக்கம் செய்யப்படவேண்டும் என்று கருதுகிறார். அவர்>

"பாழும் ஊரு பறச் சேரியெனும்
பழியை நீ மாற்று
ஆளும் பாழாகும் உனது வேர்வையை
அனாதைச் சேரிக்காரனின் வேர்களில் ஊற்று"5

என்பதில் சேரிகளைச் சீரமைக்க வேர்வைகள் தேவையென்ற கருத்தை முன்வைக்கிறார். இக்கவிதைகள் பண்பட்ட வாழிட உரிமையைக் கோருகின்றன.

**பெண் உரிமை**

பாமா,சிவகாமி,அரங்கமல்லிகா>சுகிர்தராணி,உமாதேவி போன்ற தலித்; பெண்கவிஞர்களின் கவிதைகள் சாதிய ஒடுக்குமுறைகளையும் குடும்ப ஒடுக்குமுறைகளையும் கேள்விக்குட்படுத்துகின்றன. தலித் பெண்ணியக் கவிதைகளின் உள்ளடக்கம் பற்றிப் பேசும் பா. செல்வகுமார்.

"பெண்கவிஞர்கள் எழுதும் கவிதைகள் பாலியலை அரசியலாக்குகிறது. பாலியல் அடிப்படையில் பெண்ணுடல் மீது ஆதிக்கம் செலுத்த விழையும் ஆணாதிக்கப் போக்கைக் கேள்விக்குட்படுத்துகிறது. தலித் பெண்கள் எழுதும் கவிதைகள் இதனோடு சாதியில் உயர்ந்த பெண்களின் அதிகார ஆதிக்க அரசியலை தலித் ஆண்களின் ஆதிக்கத்தைப் பேசுகிறது" என்கிறார்.

தலித் பெண்ணியக்கவிதைகள் பாலின ஒடுக்குமுறைகளை எதிர்க்கின்றன.ஆண் வகுத்த விழுமியங்களைக் கேள்விக்குட்படுத்துகின்றன. பாலியல் வன்முறை குடும்ப வன்முறை, ஆணாதிக்கம், தொழிற்களங்களில்; செயற்படும் பாலினப் பாகுபாடு, சாதிய வேறுபாடுகள் போன்றவற்றை உள்ளடக்கங்களாகக் கொண்டு இக்கவிதைகள் வெளிவருகின்றன.

சிறுகதை, புதினம் போன்ற வடிவங்களில் பெண்கள் சந்திக்கும் சிக்கல்களைப் பெண்படைப்பாளர்கள் இயல்பாகப் பதிவு செய்கின்றனர். ஆனால் புதுக்கவிதையில் பெண்படைப்பாளர்கள் போராளிகளாகின்றனர். கேள்வி கேட்கின்றனர். ஆண்களின் அஸ்திவாரத்தை ஆட்டம் காணச் செய்கின்றனர். ரௌத்திரம் பழகியவர்களே கவிதையும் பழகி இக்களத்திற்கு வருகின்றனர்.

"நூலின் நீளத்தில்
காற்றில் பறப்பதாய்ப்
பாவனை செய்யும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

காற்றாடி அல்ல
எங்கள் கவிதைகள்
வெட்ட வெட்டப்
புதிது புதிதாக
எரியும் சாம்பலிலும்
எழுந்து பறக்கும்
எழுத்து பறவையாய்

எங்கள் சுவடுகள்"7 என்ற குரலில் துணிவான பெண்ணைத;; தரிசிக்கமுடிகிறது

**முடிவுரை**

தலித் கவிதைகளில் மனித உரிமைகள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து கண்டறிந்த உண்மைகளைக் கீழே காணலாம்.

- தமிழில் தலித் புதுக்கவிதை முன்னோடிகளாகச் சிற்பியும் இன்குலாப்பும் திகழ்கின்றனர்.
- தலித் கவிதைகள் அரசியல் உரிமை சாதி சமத்துவ உரிமை வாழிடஉரிமை பெண் உரிமை ஆகியவை பற்றிப் பேசுகின்றன.
- சாதியை ஒழிக்க வேண்டுமென்றால் மாற்றங்கள் புறத்தில் நிகழந்தால் போதாது, அகத்தில் நிகழ வேண்டும்.
- புதுக்கவிதை வடிவத்தில் பெண்படைப்பாளிகள் தங்கள் பிரச்சினைகளைப் சொல்லி பரிதாபம் தேடாமல் பிரச்சினைகளுக்கெதிராகக் கிளர்ந்; தெழுகின்றனர்.

**சான்றெண் விளக்கம்:**

1. அழகிய பெரியவன், உனக்கும் எனக்குமான சொல் ப.14
2. பி.டி போர்கர் (ப.ஆ)> அம்பேத்கர்- சாதியை ஒழிக்கும் வழி ப.89
3. புவனா (ப.ஆ)> தலித்தியக் கவிதைகள் ப.50
4. ராஜ்கவுதமன், தலித்திய விமர்சனங்கள் ப.198
5. தலையாரி>>அந்த வண்டிக்காரனும் காந்தியும் ப.157
6. பா. செல்வகுமார், இலக்கியத்தில் பெண்ணியம் ப.349
7. மேலது ப.357

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

# 24. ஆற்றுப்படையின் மனித உரிமைகள்

**கு.சிந்து**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனிதசிலுவைதன்னாட்சிக்கல்லூரி

திருச்சிராப்பள்ளி-620 002, Ph.No – 9362144278, E.Mail –sindhusammu2022@gmail.com

Orchid : https://orcid.org/0009-0009-8656-5013

***ஆய்வுச்சுருக்கம்:***

மனித வாழ்க்கைக்கு மிக அடிப்படையாக தேவைப்படும் உரிமைகளே மனித உரிமைகள் ஆகும். உரிமை என்பது நம் மற்றவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறோமோ அதுவும் மற்றவர்கள் நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்களோ அதுவும் சேர்ந்த ஒரு கலவை ஆகும். மனித வாழ்க்கைக்கு அடிப்படையான தேவைகளாக இருப்பது உணவு, உடை,உறையுள், சுகாதாரம், கல்வி இவை முதலான அனைத்தும் அடிப்படை உரிமைகளே.மனித உரிமையின் வளர்ச்சியை காண முற்படும்போது நேரடியாக மனித உரிமை என சொல்ல முடியாவிட்டாலும் கூட ஏதாவது ஒரு வகையில் மனித உரிமை கூறுவதன் தொடர்பு கொண்ட பல நிகழ்வுகளை காண முடிகிறது, ஆற்றுப்படை சமூகம் அரச சமூகமாகவும் பேதமில்லாத சமூகமாகவும் இருந்ததனை ஆய்வு கட்டுரையின் வழி அறிய முற்படுகிறேன். சங்க கால ஆற்றுப்படை சமூகம் பாதுகாப்பாக எல்லா இடங்களிலும் சென்று தன் உரிமையை நிலைநாட்டியுள்ளனர். அவர்களின் பரிசில் வாழ்க்கையே இதனை நினைவுபடுத்தும் என்பதே இந்த ஆய்வு கட்டுரையின் நோக்கமாகவும் ஆக்கமாகவும் அமைந்துள்ளன.

**திறவுச்சொற்கள்**

1) ஆற்றுப்படுத்தல் -வழிகாட்டுதல், 2) பாணர்-பாடல் பாடுபவர், 3) புரவலர்-வள்ளல்

4) ஓங்கிய-உயர்ந்த, 5) நெடுவேள்- முருகவேள், 6) மிதவை-பால்சோறு

**முன்னுரை**

சங்க இலக்கிய நூலான பத்துப்பாட்டு சிறந்த தகவல் களஞ்சியமாக விளங்குகின்றது. சமுதாயத்தின் எண்ணங்கள், செயல்கள் எல்லாம் மனிதஉரிமையின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன. மனித எண்ணங்களின் வெளிப்பாடே இலக்கியமாகும்.சுதந்திர பெரு நாட்டில் இன்று இன்பமாகவும் அமைதியாகவும் வாழ்வு நடத்துகின்றோம்.ஆனால் ஈராயிரம ஆண்டுகளுக்கு முன்;பு ஒரு சமூகம் ஆற்றலோடும் உலகத்தோடும் இருந்துள்ளதை ஆற்றுப்படை நூல்கள் நமக்கு காட்டுகின்றன.

**வாழும் உரிமை**

வாழ்தல் என்பது இந்த பூமியில் பிறந்த எல்லா உயிர்களுக்கும் பொதுவானது.விலங்கு மனிதன் பறவை தாவரங்கள் என எல்லாவற்றிற்கும் பூமியின் மீது இருத்தல் என்பது அவசியமாகிறது. இந்த இருத்தலை சுதந்திரமாகவும ;தன்னிச்சையாகவும் செயல்படுத்த முடியாமல் போகும் போது அங்கே உரிமைக்கானக் குரல் எழுகின்றது. ஆற்றுப்படைக் கலைஞர்களான

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

பாணர். பொருநன் விறலி கூத்தர் போன்ற விளிம்பு நிலைக்கலைஞர்கள் ஒருவர்மற்றவரை ஆற்றுப்படுத்தி பூமியில் வாழ்வதற்கான உரிமையை நிலைநாட்டுகின்றனர்.

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத்தோன்றிப்**
**பெற்றபெருவளம் பெறாஅர்க் அறிவுறீஇச்**
**சென்று பயன் எதிர சொன்னப் பக்கமும்"**

**(தொல்.பொருள்.88)**

மேற்கூறிய பாடலில் தான் பெற்று வாழும் உரிமையை மற்றவரும் பெறுதல் என்பதே சிறந்த எண்ணமாக அமைகிறது. இதனை தன்னலத்தைப் பொதுநலம் கொண்டு பார்க்கவேண்டும் என்ற உயரியசிந்தனையை பின்வரும் புறநானூற்றுப் பாடலால் அறியமுடிகிறது.

**"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே"**

**(புறம்:182)**

**சுதந்திரஉரிமை**

சுதந்திர உரிமை என்பது சமுதாயத்தில் தனிமனிதனின் சிந்தனை பேச்சு நடமாடுதல் போன்றவற்றில் தான் சுயமாகவும் பிறருடைய கருத்துக்கோபேச்சுக்கோஅடிமைப்படாமல் வாழும் வாழ்வியல் ஆகும். சங்க இலக்கியபத்துப்பாட்டுமாந்தர்கள் யாதும் ஊரேயாவரும் கேளிர் என்ற சிந்தனையே அவர்களிடம் மேலோங்கி இருந்தது. சுதந்திரமாக ஒரு நாட்டிற்கோ. இடத்திற்கோ சென்று அங்கு தன்னுடைய உரிமையை பெற்றனர். இது அவர்களுக்கு தானாகவே நிகழ்ந்தது. சுதந்திரம் இல்லாத தனிமனிதனால் தன்னுடைய ஆளுமையை வளர்த்துக் கொள்ளவே முடியாது. ஆற்றுப்படை நூல்களில் பாணன் விறலியர் கூத்தர் போன்றோர் பல குறுநில மன்னர்களாலும் நாட்டின் வளத்தையும் போற்றிப் பாடியுள்ளனர்.

**"பொருள் வயின் பிரிதலும் அவர் வயின் உரித்தே"**

**(தொல்.பொருள்.35)**

'என்றுஅடிகளினால் காணமுடிகிறது.

**காடும் காவும் கவின் பெறு இருத்தியும்**
**யாறும் குளனும் இரு வேறு பல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும; .புதுப்பூங்கடம்பும்'**

மன்றமும் பொதியிலும் கந்திடை நிலையினும் மேற்கூறப்பட்ட பாடலில் முருகனை எல்லா இடங்களிலும் சென்று சுதந்திரமாக வணங்கினர் என்பதை இதன் மூலம் காணமுடிகிறது

**சமத்துவஉரிமை:**

சமத்துவம் என்பது ஆண் பெண் சமத்துவம் கருத்துக்கு சமத்துவம் இருப்பிடத்துக்கு சமத்துவம் என்று விரிந்துக் கொண்டே செல்லும் .புரவலர்களின் வாயில் எப்போதுமே இரவலர்களுக்காக ஏங்கியிருந்தது என்பது கீழுள்ள பாடலால் அறியமுடிகிறது .


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**“பொநர்காயினும் புலவர்காயினும்**
**அருமறைநூலின் அந்தணர்காயினும்**
**கடவுள் மால்வரை கண் விடுத் தன்ன**
**அடையா வாயிலவன் அருங்கடை குறுகி”**

**(பெரும்பாண்: 203-206)**

கூத்தன் தன் மனைவி விறலியையும் பாணன் பாடினியும் செல்லுமிடமெல்லாம் கூட்டி சென்று பொருள் பெறும் நிலையிலிருந்தது. சங்ககால மாந்தர்கள் பாலின சமத்துவத்தை ஓம்பினார். என்பதை ஆற்றுப்படை மாந்தர்களின் வாழ்வியலால் அறிய முடிகிறது.

சமத்துவ உரிமையின் சிந்தனையில் தலைவன் தலைவி எந்த நிலம் எந்த இனம் என்பது கூட அறியாமல் காதல் செய்து திருமணம் செய்து கொள்வதை குறுந்தொகைப் பாடல் சித்தரிக்கின்றது

**‘யாயும் யாயும் யார கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**…………………………………..**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங்கலந்’**

**குறுந்:40**

மேற்கூறியப் பாடலால் சமத்துவ உரிமையை இலக்கியங்களின்; வழி அறிய இயலுகிறது.

**தனிநபர் பாதுகாப்பு உரிமை**

சமுதாயத்தில் மனிதன் ஒரு அங்கம்.ஒருவர் ஒருவரை அடிமைப் படுத்தவோ கட்டாயப்படுத்துவதோ வரம்பு மீறிய செயலாகும். அவ்வாறு இருக்கையில் வேறு இரவலர் சமூகத்தை புரவுலர் சமூகம் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டியவற்றை செவ்வனே செய்தது. இதனால் இருவருக்கும் அன்பு மலர்ந்தது. அறம் தழைத்தது. ஒருவரை பேணுவதில் தாய் போல பேண வேண்டும் என்பதை புரவுலர் சமூகம் இலக்கியங்களில் காட்டுகிறது என்பதை கீழ் உள்ள பாடல் வரிகளால் அறியமுடிகிறது.

**‘மகமுறை மகமுறை நோக்கி முகனமர்;ந்து**
**ஆனா விருப்பிற் றானின் றூட்டி’**

**(பெரும்பாண்: 203-206)**

தாய் தன் பிள்ளையை பேணுவது போல இளந்திரையன் பாணனை தனிநபராக பாதுகாக்கிறான் என்ற செய்தியை அறிய முடிகிறது. இது போல கூத்தாற்றுப்படையிலும் தன்னுடைய உறவைப்போல தனிநபரை பேணும் உரிமை அரசனுக்கு இருப்பதனை நிலைநாட்டுகிறார்கள் புலவர் சமூகம.;

**‘அகமலி உவகை ஆர்வமொ டளைஇ**

**மகமுறை படுப்ப மனைதொரும் பெறுகுவீர்'**

**மலை.(184-185)**

மலை நிலத்தில் இருக்கும் குறமகளின் உபசரிப்பு கூத்தர் சமூகத்திற்கு பாதுகாப்பு கிடைத்திருப்பதனை அறிய முடிகிறது.

**குடும்பம் நடத்தும் உரிமை**

பூவுலகில் அனைவரும் சமம்.தனக்கு கிடைத்த வெகுமதி. பிறருக்கும் கிடைக்கவேண்டும் பிறரும் மகிழவேண்டும.; பிறரும் தன்னிறை பிறரைபெற வேண்டும.; ஆளுக்கு ஒரு உரிமை நாளுக்கு ஒரு பேச்சு என்பது ஆற்றுப்படை நூல்களில் காட்டாத செயலாகும.; சமுதாயத்தில் புதிய உறுப்பினர்களை உருவாக்கவும் பாதுகாக்கவும் செய்கின்ற பொறுப்புடைய சூழலே குடும்பம் என்கிறார்.மனித சமுதாயம் விரிவடைய குடும்ப வாழ்வுரிமை அடிப்படையாகின்றது. குடும்பம் என்பது சமுதாயத்தில் தனிமனிதனின் திருமணம் செய்து பின்னாளில் பிள்ளைகள் பெற்று நல்ல முறையில் வளர்த்து படிக்க வைப்பதே குடும்பம் ஆகும.; குடும்பம் என்பது திருமணக் கட்டுக்களாலும் ரத்தஉறவுகளாலும் இணைக்கப் பெற்ற மக்கள் கூட்டம் என்கின்றனர்.

**"குப்பைவேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் ளகடையடைத்து"**

**(சிறுபாண்: 137-138)**

மேற்கூறிய வரியினால் குடும்பம் என்ற அமைப்பை பாழ்படுத்தாது வறுமையான சூழலும் வாழ்வு நடத்தும் பாங்கையும் அறிய முடிகிறது.

**'ஈத்தாலை வேய்ந்த ஏய்ம்புறக் குரம்பை'**

**(பெரும்பாண்: 88)**

என்ற எயிற்றியர் குடிசையையும்

**'மடிலாய் கோவலர் குடிவயீர் சேப்பின்'**

**(பெரும்பாண்: 166)**

போன்ற அடிகளினால் குடும்பம் நடத்தும் உரிமையை செயல்படுத்தி வாழ்வுநடத்தினார்கள்.

**முடிவுரை**

சங்க இலக்கியமான ஆற்றுப்படை நூல்கள் சிறந்த உரிமைகளை பிறரிடம் கேட்காமலே அரங்கேற்றியுள்ளது. சமுதாயமானது அன்பு கலந்து அறிவிர் சிறந்த இன்பம் பெருகி வாழ்ந்துள்ளது. தன் மனக்கருத்தை வள்ளலிடம் கூறுவதற்கு தயங்கவில்லை. காரணம் அவர்களுக்கான உரிமையை மக்கள் பெற்று நல்வாழ்வை வாழ்ந்தனர். சகோதரத்துவ சமத்துவ உரிமைகளை சமுதாயத்தில் நிலைநாட்டியுள்ளது. அச்சத்தை தவிர்த்து ஆளுமையைப் பெருக்கியுள்ளது.மனிதன் மனிதனாக வாழும் உரிமையை நிலைநாட்டியுள்ளது. சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்காதவர்களும் பாதுகாப்பான தனிநபர் உரிமையையும் பெற்றுள்ளனர்.ஒருவரோடு ஒருவர் உறவாடவும் அன்புகாட்டவும் கலைஞர்கள் தயங்கவில்லை என்பதே அவர்களின் ஒற்றுமை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

மனப்பான்மையையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. **கதிர் முருகு, உரை.** *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம்.
2. **ஜெகத்ரட்சகன், எஸ். டாக்டர்.** *குறுந்தொகை*. ஆழ்வார்கள் ஆய்வு மையம்.
3. **திருஞானசம்பந்தம், ச., உரை.** *தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும்*. கதிர் பதிப்பகம்.
4. **பாலையன், அ., உரை.** *புறநானூறு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம்.

Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 25. சதக இலக்கியங்களில் மனித உரிமைக் கோட்பாடுகள்

**கா. ரஞ்சனா,** முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - **02.** Mail ID: ranjanakalimuthu1998@gmail.com

https://orcid.org/0009-0000- 9337- 114X, Mobile No:8072816152

நெறியாளர் : **முனைவர் ம. பிரேமா,** தமிழாய்வுத் துறைத்தலைவர்,

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – **02.**

Mail ID : premasoosairaj@gmail.com, Mobile No : 9942106490,

https://orcid.org/0009-0000-5982-2437

**ஆய்வுச் சுருக்கம் :**

சதக இலக்கியங்கள் **17** ஆம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றியவை. அவை **100** பாடல்களின் தொகுப்பாக அமைந்திருக்கும். இச்சதக இலக்கியங்கள் மனித உரிமைகள் என்ற நவீன சட்டக் கட்டமைப்பை நேரடியாகப் பேசவில்லை என்றாலும் அவை மனித உரிமைகளின் அடிப்படையான அறநெறிகள் மற்றும் சமூகக் கடமைகளை மறைமுகமாக வலியுறுத்துகின்றன.ஒரு சமுதாயத்தில் உள்ள தனி மனிதர்கள் ஒருவருக்கொருவர் கடைபிடிக்க வேண்டிய தார்மீகக் கடமைகளைச் சுட்டும்பொழுது உரிமைகளையும் பேசுகின்றன. சமூக நீதிக்கான உரிமை,கருத்துச் சுதந்திர உரிமை, கல்வி மற்றும் அறிவுக்கான மதிப்பு, ஏழைகளுக்கான உரிமை,வாழ்வாதார உரிமை சமத்துவ உரிமை என்று மனித சமுதாயம் பின்பற்ற வேண்டிய எண்ணற்ற உரிமைகளை ஆழமாகவும் அழுத்தமாகவும் எடுத்துரைக்கின்றது.அனைவரும் கடமைகளைச் சரியாக பின்பற்றுவதன் விளைவாக எந்தவொரு சட்டத்தேவையும் இன்றி சமுதாயத்தில் கண்ணியம், நீதி மற்றும் பாதுகாப்பு இயல்பாகவே உறுதிப்படுத்தப்படும் என்ற சிந்தனை சதகங்களின் அடித்தளமாக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவதே ஆய்வின் சாராம்சமாகும்.

**திறவுச் சொற்கள்:** 1) சதக இலக்கியம் - நீதி இலக்கியம்; 2) உரிமை – சுதந்திரம், 3) கோட்பாடு - கொள்கை, 4) ஈகை – கொடை, 5) தார்மீகக் கடமை - அறம்; 6) குலத்தாழ்ச்சி - பாகுபாடு 7) நவீன உரிமை - சட்டம்.

**முன்னுரை :**

சதக இலக்கியம் பொதுவாக தமிழ் இலக்கிய வரலாற்றில் நீதி, பக்தி மற்றும் மண்டலச் சிறப்பைப் போற்றும் 100 பாடல்களின் தொகுப்பாகும். 17ஆம் நூற்றாண்டுக்குப் பின் நீதி, பக்தி மற்றும் அறிவியல் கருத்துக்களைப் போதிக்கும் சதக நூல்கள் அதிக அளவில் தோன்றின. மனித உரிமைகள் என்ற கருத்தாக்கம் நவீன ஜனநாயகம் சமூகங்களில் இருந்து உருவானது என்ற போதிலும், நவீன மனித உரிமைக் கோட்பாடுகளாக அவை பிற்காலத்தில் மலர்ந்தன. சதக இலக்கியங்கள் அறநெறிகள், மனித கண்ணியம், சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகியக் கருத்தாக்கங்கள் மனித உரிமைகளின் அடிப்படை விழுமியங்களைத் தாங்கி நிற்கின்றன. தனிமனித


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

ஒழுக்கத்தையும் சமூகக் கடமைகளையும் வலியுறுத்துவதன் மூலம் சதகங்கள் உரிமைகளைச் சட்டமாக அல்லாமல் தார்மீகப் பொறுப்பாக நிலைநாட்ட முயன்றன. இவ்இலக்கியங்களில் காணப்படும் மனித உரிமைக் கோட்பாடுகளை ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**சதக இலக்கியம் :**

தமிழ் இலக்கிய வரலாற்றில் நீதி நூல்களின் நீட்சியாக, பதினேழம் நூற்றாண்டிற்கு பிறகு பிற்காலப் பாண்டியர் மற்றும் நாயக்கர் காலங்களில் சிறப்புற்று விளங்கியவை சதக இலக்கியங்கள் ஆகும். **'சதகம்'** என்பது நூறு அல்லது நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்டமைந்த ஒரு சிற்றிலக்கிய வகையாகும். இவை பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட இறைவனையோ, வள்ளலையோ அல்லது நீதியையோ முன்னிறுத்தி நீதி போதனைகளையும், அறநெறிக் கருத்துகளையும் பொதுமக்களுக்கு எளிய மொழியில் எடுத்துரைக்கின்றன. குமரேச சதகம், அறப்பளீசுர சதகம் போன்ற பல சதக நூல்கள் அன்றைய சமுதாயத்தின் வாழ்வியல் குறைபாடுகளையும், ஒழுக்க சீர்கேடுகளையும் துணிச்சலுடன் விமர்சிக்கின்றன.

**நவீன உரிமைக்கும் தார்மீகக் கடமைக்கும் உள்ள வேறுபாடு :**

இன்றைய நவீன உலகில் நாம் பேசும் மனித உரிமைகள் சட்டபூர்வமாகவும், அரசியல் சட்டங்களாலும் உறுதிப்படுத்தப்பட்டவை. ஆனால் சதக இலக்கியங்கள் உருவான காலகட்டத்தில் இத்தகைய உலகளாவிய சட்ட உரிமைக் கோட்பாடுகள் நடைமுறையில் இல்லை. எனவே சதகங்கள் நேரடியாகச் சட்ட உரிமைகளைப் பற்றிப் பேசாமல், ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை வாழ்வாதாரம், கண்ணியம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றைச் சமூகத்தில் உள்ள பிறர் கட்டாயம் பின்பற்ற வேண்டிய தார்மீகக் கடமைகளாகவும், அறநெறிகளாகவும் வகுத்துரைக்கின்றன. ஒருவன் உரிமையைக் கோரும் முன் பிறருக்கு உரிமைகளை வழங்கும் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதை சதகங்களின் மையத் தத்துவமாகும்.

**சமூக நீதிக்கான உரிமை :**

சமூக நீதிக்கான உரிமை என்ற நவீன கருத்தை சதக இலக்கியங்கள் நேரடியாக கூறாமல் இருப்பின் சமூக நீதியின் அடிப்படை தூண்களான சமத்துவம், பாகுபாட்டின்மை, நீதி வழங்குதல் மற்றும் ஏழைகளுக்கான பங்களித்தல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. சமூகத்தில் நடக்கும் அநீதிகளை கடவுளிடம் முறையிடுவது சதகங்களின் பொதுவான போக்கு. இது நீதி மறுக்கப்படும் போது மக்கள் குரல் எழுப்பும் உரிமைக்கான மறைமுக வெளிப்பாடாகும்.

**“உண்மை யுரைத்தவர்க் கீகையில் லாமலு முண்மையில் லாமலே பொய்மைப் பண்ணாரப் பேசுஞ் சண்டாளர்க் கென்றென்றும”;..... (குமரேச சதகம்)**

இப்பாடலில் சமுதாயத்தில் உண்மையானவர்கள், உழைப்பவர்கள் ஆகியோருக்கு நீதி மறுக்கப்படும் போது அந்த அநீதிக்கு எதிராக குரல் எழுப்பும் உரிமையை பேசுகிறது. சமூகத்தில் பொய்யை ஆதரித்து, நீதியைக் குலைப்பவர் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்து சமூக நீதிக்கான உரிமையை வலியுறுத்துகின்றன.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

சதக பாடல்களில் அநீதிகளை பற்றி மறைமுகமாக கூறப்பட்ட போதிலும் பாரதியாரின் பாடல்கள் வெளிப்படையாகவே அநீதிகளின் கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழும், சமூக ஒழுக்கமுறையின் கீழும் இருந்த மக்களுக்கு சுதந்திரமான வாழ்வுக்கான உரிமையை பாரதியார் பாடல்கள் எடுத்துரைக்கிறது.

**"சுதந்திரப் பள்ளுப் பாடுவோம் எங்கும் சுதந்திர தீபம் ஏற்றுவோம்"....(தேசிய கீதங்கள்)**

இப்பாடலில் சுதந்திரமான தேசத்தில் வாழும் உரிமை அனைவருக்கும் உண்டு என்பதையும், யாரும் எவருக்கும் அடிமையாக இருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகிறது.

**"சாவதற்கு அஞ்சாதே அச்சம் தவிர்".... (புதிய ஆத்திச்சூடி)**

சுதந்திரமாக வாழும் உரிமை மற்றும் அச்சமின்றிச் சுயமரியாதையுடன் வாழும் உரிமை பற்றி எடுத்துரைக்கின்றது பாரதியாரின் பாடல்கள் சமூக நீதி என்பது வெறும் தார்மீக கடமை மட்டுமல்ல அது ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் பெறவேண்டிய அடிப்படை உரிமை என்ற கருத்தை ஆழமாகப் பதிவு செய்கின்றது.

**கருத்துச் சுதந்திர உரிமை :**

கருத்து சுதந்திர உரிமை என்பது நவீன ஜனநாயக உரிமைகளில் மிக முக்கியமானது. கருத்து சுதந்திரத்தின் எல்லைகள் பற்றி பேசும்பொழுது சதகங்கள் நாவடக்கமே மிகச் சிறந்த ஒழுக்கம் என்றும், பேசுவதற்கு காரணம், தகுதி அவசியம் என்றும் வலியுறுத்துகின்றது.

**"நன்மை பயக்காத ஒரு சொல்லை ஒருபோதும் நாவினின்று உதிர்க்காதே;**

**அது உனக்கே இழிவை தரும்..... " (குமரேச சதகம்)**

இப்பாடலில் ஒரு கருத்தை வெளியிடும் உரிமை இருந்தாலும், அந்த கருத்தை பொறுப்புடனும், பயனளிக்க கூடியதாகவும் இருக்க வேண்டும். வீண் பேச்சுக்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் பேச்சுக்கள் சமூகத்தால் புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதை இந்த பாடல்கள் உணர்த்துகின்றது. சதகங்களில் கருத்துச் சுதந்திரம் சட்ட உரிமை என்பதை விட, உண்மையையும் அறத்தையும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் தார்மீகக் கடமையாக அமைகின்றன.

**"காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே மா நிறைவு இல்லதும்,**

**பல் நாட்கு ஆகும்"...... (புறநானூறு)**

இப்பாடலில் பாண்டிய மன்னன் அறிவுடைய நம்பி மக்களுக்கு துன்பம் தரும் வகையில் மிகுந்த வரி வசூலித்ததால். பிசிராந்தையார் மன்னனுக்கு நீதியுரை வழங்குகிறார். புலவர்கள் மன்னன் தவறுகளை அஞ்சாமல் சுட்டிக்காட்டி அறவழியில் செல்ல அறிவுறுத்தும் உரிமையையும் கடமையையும் பெற்றிருந்தனர். தனது கருத்தை அஞ்சாமல் வெளியிடுவதும், சமூக அநீதிகளை கண்டிப்பதும், நீதியை நிலைநாட்டுவதும் ஒரு மனிதனின் அடிப்படை உரிமை மற்றும் கடமை என்று தமிழ்ச்சமூகம் நம்பிக்கையை வெளிப்படுகின்றன..

**கல்வி மற்றும் அறிவுக்கான மதிப்பு :**

சதகத்தில் நவீன வரையறையின்படி கல்வி உரிமை பற்றி பேசவில்லை என்றாலும் கல்வி கற்பதன் அவசியத்தையும் அது தனிமனித வளர்ச்சிக்கும் சமூக மரியாதைக்கும் இன்றியமையாதது

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

என்பதையும் வலியுறுத்துவதன் மூலம் கல்விக்கான தேவையை அழுத்தமாக உணர்த்துகின்றன.

**"கல்லாதவன் ஒருவனைக் காணில் ஒருவருமில்லை".....      (குமரேச சதகம்)**

இப்பாடலில் கல்வியின் மேன்மையும், கல்லாதவரின் இழிவையும், அறிவின் அவசியத்தையும் உணர்த்துகின்றன. கல்வி கற்கும் உரிமை மற்றும் சமூகத்தில் அறிவால் நிலைபெறும் வாய்ப்பிற்கான சமத்துவத்தை மறைமுகமாகப் பேசுகிறது.

**"கல்வி இல்லாக் குடும்பம் கண்ணில்லாத வீடு"...... (இருண்ட வீடு)**

கல்வி இல்லாத குடும்பம், இருட்டில் இருக்கும் கண்ணில்லாத வீட்டிற்குச் சமம் என்று கூறியதன் மூலம், கல்வியே வாழ்க்கைக்கு ஒளி தரும் அடிப்படை உரிமை என்பதை வலியுறுத்துகின்றார். பாரதிதாசன் தனது பாடல்களின் மூலம் கல்வி மறுக்கப்படுவதால் சமூகத்தின் பின்னடைவைக் கண்டித்து அறிவொளியைப் பெற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறார். இப்பாடல்கள் அனைத்தும் கல்வி வெறும் வாய்ப்பு அல்ல அனைவருக்கும் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமை என்ற கருத்தை உறுதிப்படுத்துகின்றன.

**ஏழைகளுக்கான உரிமை :**

ஏழைகளுக்கான உரிமைகள் என்பது சமூக நீதி மற்றும் மனித உரிமை ஆகியவற்றின் ஒரு முக்கிய அங்கமாகும். வறுமையில் வாழும் மக்களின் கண்ணியத்தை உறுதி செய்வதற்கும், அவர்களுக்குச் சமமான வாய்ப்புகள் கிடைப்பதற்கும், ஒரு கண்ணியமான வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கும் இந்த உரிமைகள் அவசியமாகும்.

**"மண்ணில் வெகு தருமங்கள் செய்ய வேண்டும்"..... (அறப்பளீசுர சதகம்)**

செல்வந்தர்கள் தங்கள் செல்வத்தை அறம் செய்யாமல் வீணடிப்பது தவறானது என்று கண்டிக்கிறது. செல்வத்தை நல்வழியில் தருமம், ஏழைகளுக்கு உதவி என்று செலவிடாமல் ஆடம்பரத்திற்கோ அல்லது அநியாயத்திற்கோ பயன்படுவதை கூறுகிறது. இது நேரடியாக சொத்துரிமையை பேசவில்லை என்றாலும் சமூக வளங்கள் முறையாகப் பங்கீடு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. ஏழைகளின் உணவுக்கான உரிமை மற்றும் வாழ்வாதாரத்திற்கான உரிமை ஆகியவை செல்வந்தர்களின் தார்மீகக் கடமையாக சதகங்கள் வலியுறுத்துகின்றன.

சங்க இலக்கியங்கள் நேரடியாக உரிமை பற்றிக் கூறாவிடினும், ஏழைகளுக்கு உணவளிப்பது சமுதாயத்தின் தார்மீக கடமையாக கூறப்படுகின்றது.

**"இனிது எனத் தமியர் உண்டலும் இலரே"..... (புறநானூறு)**

இப்பாடலில் அமுதத்தை ஒத்த உணவு கிடைத்தாலும், அதனை தாம் மட்டும் உண்ணும் செயல் இல்லை என்பதையும், பிறருக்கு உதவும் நோக்கத்திற்காக வாழும் நல்லோர்களின் தன்மையைப் பற்றி பேசுகிறது. இவை செல்வம் உள்ளவர்கள் ஏழைகளுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டிய தார்மீக கடமையை வலியுறுத்துகிறது. வறுமையில் பாகுபாடு காட்டாமல் சமமான வாய்ப்புகளை பெரும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலுவாக நிலைநாட்டுகின்றன.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

**வாழ்வாதார உரிமை:**

வாழ்வாதார உரிமை என்பது நவீன சட்ட கருத்தை நேரடியாக பேசவில்லை என்றாலும் அதன் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் பசிப்பிணி நீக்கல் ஆகியவற்றை சமூகத்தின் மிக உயர்ந்த தார்மீக கடமையாக வலியுறுத்துகின்றன. இந்தக் கடமைகளை ஏழைகளுக்கு உரிய வாழ்வாதார உரிமைகளின் அடித்தளமாக அமைகின்றன.

**“உணவின்றி கண்ணால் நீர்ததும்ப வொருவன் உன்னிடத் திருந்திடக் கண்டுங்" ...... (குமரேச சதகம்)**

பசியால் கண் கலங்கி நிற்பவனைக் கண்டால், அவனுக்கு உணவு கொடுத்து உபசரிப்பது தான் உலகநீதி. **‘தனி ஒருவன் உண்ணுதல் என்பது மரணத்திற்கு சமம்’** என்ற கருத்தை அறிந்தவன் ஒருபோதும் தனியே உண்ண மாட்டான். உணவை பகிர்ந்து பசியை போக்குவதை தலையாய அறம் என்றும், வாழ்வாதாரத்தை பேணும் சமூக கடமையாக வலியுறுத்துகின்றன.

அடிப்படை வாழ்வாதாரமான உணவு மறுக்கப்படுவதை கண்டித்தும் தனி மனிதன் உரிமையை குறித்தும் நேரடியாக பாரதியார் தனது பாடல்களின் வாயிலாக புரட்சி கருத்துகளை வலியுறுத்துகிறார்.

**“தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"...... (பாரதியார் கவிதைகள்)**

இப்பாடலில் அனைத்து உயிர்களுக்கும் பசியில்லாத உலகை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும், அதற்கான சமூக பொறுப்பையும் வலியுறுத்துகிறது. இது மனிதநேயம், சமூக சமத்துவம் மற்றும் அனைவருக்கும் உணவு என்ற அடிப்படை தேவையை நிறைவேற்றும் உன்னதமானக் கருத்தை பறைசாற்றுகிறது.

**சமத்துவ உரிமை:**

சமத்துவ உரிமை குறித்த தமிழ் சமூகத்தில் சங்க இலக்கியம் முதல் தற்காலம் வரை வலுவான கருத்துக்கள் இடம் பெற்று வருகின்றன. சமத்துவ உரிமை என்ற கருத்தை நேரடியாக நவீனச் சட்ட உரிமையாக வெளிப்படையாக கூறாமல் இருப்பினும் சமத்துவத்தின் மூலக்கூறுகளான பிறப்பால் சமம் மற்றும் பாகுபாடு காட்டாமை ஆகியவற்றை கூறப்படுகின்றனர்.

**“குலத்தாழ்ச்சி யுயர்ச்சிகள் இல்லை குணத்தாற் கொள்வது வேற்றுமையாம் உலவவரும் மனிதரெல்லோரும் ஒருவரே"...... (திருவகுப்பு)**

மனிதர்களுக்கிடையே பிறப்பால் ஏற்றத்தாழ்வுகள் கிடையாது அவரவர் குண நலங்களின் அடிப்படையிலேயே வேறுபாடுகள் அமைகின்றன உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே என்ற கருத்து அருணகிரிநாதர் எழுதிய திருவகுப்பு என்ற நூலில் இடம்பெறுகின்றது. இது பொதுவாக 'சதகம்” என தனிப்பட்ட ஒரு நூலின் பெயராக அல்லாமல், இந்தப் பாடலின் உள்ளடக்கம் ஒரு சதகத் தன்மையை (நூறு பாடல்களின் தொகுப்பு) ஒத்திருப்பதாகக் கருதப்படுகிறது.

**“ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே**
**நினைவில் நமனில்லை நாணாமே"........ (திருமந்திரம்)**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

பக்தி இலக்கியங்களில் கடவுள் நிலையில் அனைவரும் சமம் என்ற கருத்தின் மூலம் சமூக நல்லிணக்கத்திற்கான விதையைப் பரப்புகின்றன. குலம் என்பது ஒன்று; தேவனும் ஒருவனே. மனிதர்கள் தங்களுக்குள் உயர்வு, தாழ்வு கற்பிப்பது பயனற்றது என்பதையும், இவை ஆன்மீக நிலையில் அனைவரும் சமமானவர்கள் என்ற சமத்துவ உரிமையை போதிக்கின்றன.

**முடிவுரை:**

சதக இலக்கியங்கள் தற்கால மனித உரிமைகளை நேரடியாகச் சட்ட வடிவில் பேசவில்லை என்றாலும் நீதி, சமத்துவம், கண்ணியம் மற்றும் அன்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு அறம் சார்ந்த சமூகத்தைக் கட்டமைக்க முயன்றன. இந்த கட்டமைப்பு, ஒவ்வொரு தனிமனிதனின் தனது கண்ணியம் மற்றும் சுதந்திரத்துடன் வாழத் தேவையான சமூகப் பாதுகாப்பையும் நீதியையும் உறுதி செய்து செய்யும் தார்மீக அடித்தளமாக அமைந்தது. மனித உரிமைகளை சட்டங்களாக அல்லாமல் மனித சமூகத்தில் உள்ள அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகள், ஒழுக்கம் மற்றும் கூட்டுறவுக் கடமைகளாக முன் வைக்கின்றன. இந்த அறங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் எந்தவொரு சட்டத் தேவையும் இன்றி, சமுதாயத்தில் உள்ள அனைவரும் கண்ணியம் நீதி மற்றும் பாதுகாப்பு தானாகவே உறுதிப்படுத்தப்படும் என்ற சிந்தனையைக் கொண்டிருக்கின்றது. எனவே சதகங்கள் மனித உரிமைகள் கோட்பாடுகளின் அடிப்படை விழுமியங்களைத் தாங்கிய நீதிப் பெட்டகங்களாக விளங்குகின்றன என்பதே இக்கட்டுரையின் முடிவுரை ஆகும்.

**பார்வை நூல்கள் :**

1. அறப்பளீசுர சதகம் - கதிர்முருகு டாக்டர் உரையாசிரியர்), சாரதா பதிப்பகம்,சென்னை 600014 முதற்பதிப்பு -2013.
2. இருண்ட வீடு - பாவேந்தர் பாரதிதாசன், நாம் தமிழர் பதிப்பகம். கௌரா பதிப்பக குழு.
3. சிற்றிலக்கிய களஞ்சியம் (தொகுதி 1) சதக இலக்கியங்கள்
பதிப்பாசிரியர் அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் 53 புதுத்தெரு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608001.
4. திருமூலர் அருளிய திருமந்திரம் (மூலமும் உரையும்) டாக்டர்
சாது.சு.சீனிவாஸ், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், சென்னை - 600 035.
5. குமரேச சதகம் - கதிர்முருகு டாக்டர் (உரையாசிரியர்), சாரதா
பதிப்பகம், சென்னை 600014 முதற்பதிப்பு -2013.
6. புறநானூறு டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை. பதிப்பு 2014.
7. பாரதியின் புதிய ஆத்திச்சூடி – ஆசிரியர் ஆர். சீனிவாசன்
பதிப்பு 2002.
8. பாரதியார் கவிதைகள் - (தேசிய கீதங்கள்) எஸ். விஜயபாரதி,
பழனியப்பா பிரதர்ஸ் -2008.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 26. ஆண்டாள் பிரியதர்ஷினி கிடங்கு புதினத்தில் தலித் இன மக்களின் வாழ்வியல் உரிமைகள்

**மு.மாலினி**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி- 620 002, malinirameshkumar1984@gmail.com

**முனைவர் க.சுஜாதா,**

ஆய்வு நெறியாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி- 620 00

**ஆய்வு சுருக்கம் :**

இக்கால இலக்கியங்களில் மக்களால் அதிக அளவில் விரும்பி படிக்கக்கூடிய இலக்கியம், புதினங்கள் ஆகும் அதில் ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களின் புதினங்கள் மக்களின் வாழ்வியல்உரிமைகள்பிரச்சனைகளையும்அதன் தீர்வுகளையும் எடுத்துக் கூறுகின்றன அதில் குறிப்பிடத்தக்க புதினம் கிடங்கு. இந்தபுதினத்தில்பிணக்கூராய்வுத் தொழிலாளர்களின் அக, புற வாழ்வியலை விசாலமாகப் பேசுகிறது .பார்க்கவே அருவருப்பாகத் தோன்றும் உருச் சிதைந்த பிணங்களை சகஜமான மனநிலையில் உடற்கூராய்வு செய்யும் தொழிலாளர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் சிக்கல்கள், அவலங்கள், பாடுகளை இயல்போட்டமாகக் கூறிச் செல்லும் இந்நாவல் புதியதோர் வாசக அனுபவத்தைத் தருவதாக அமைந்துள்ளது. தினந்தோறும் பிணங்களோடு உறவாடும் மனிதர்களின் எளிய வாழ்க்கை உருவாக்கித் தரும் சித்திரங்கள் கனமானவை என்பதோடு சஞ்சலத்தையும் தருபவை என்றுரைக்கிறது. கிடங்கு புதினத்தில் தலித் இன மக்களின் வாழ்வியல் உரிமைக்கான போராட்டங்கள் அப்படியே காட்சிப்படுத்தப்படுகின்றன.

**ஆய்வு முன்னுரை:**

ஆண்டாள் பிரியதர்ஷினியின் கிடங்கு புதினத்தில் வாழ்வியல் உரிமைகள் பற்றிய செய்திகள் மைய பொருளாக அமைகிறது.பிணக்கூராய்வுத் தொழிலாளர்களின் வாழ்வை விவரிக்கிறது பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டுப் பிணக்கூராய்வுக் கூடத்தில் எட்டு வயதுசிறுமி கிடப்பதில் இருந்து நாவல் தொடங்குகிறது. சமுதாய அக்கறை உள்ள பெண் சமுதாயத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதாக நாவல் முடிகிறது.

**வாழ்வியல் உரிமைகள்:**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

வாழ்வியல் உரிமைகள் என்பது ஒரு தனிநபர் தனது வாழ்வை மேம்படுத்திக்கொள்ள தேவையான அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் உரிமைகளைக் குறிக்கிறது. இது வாழ்வதற்கான உரிமை (சட்டத்துக்குப் புறம்பான கொலைகளிலிருந்து பாதுகாப்பு), சமூக உரிமைகள் (சம உரிமை, பேச்சுரிமை, சுதந்திரமான சமய உரிமை, அமைதியாக கூடி வாழும் உரிமை) மற்றும் பொருளாதார உரிமைகள் (தமது உழைப்பையும் அறிவையும் பயன்படுத்தி வாழ்வை மேம்படுத்திக்கொள்ளும் உரிமை) ஆகியவற்றை உள்ளடக்கியது. இவை மனிதனாக இருப்பதற்கான அத்தியாவசியமான தேவைகள் மற்றும் சுதந்திரங்கள் ஆகும்.

**வாழ்வியல் உரிமைகளின் வகைகள் :**

வாழ்வியல் உரிமைகளின் வகைகள் பல உள்ளன. அவை அரசியல் உரிமைகள் (வாக்களிப்பது, தேர்ந்தெடுக்கப்படுவது), குடிமை உரிமைகள் (வாழ்வு, சுதந்திரம், பாதுகாப்பு), பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் (கல்வி, வேலைவாய்ப்பு), மற்றும் குழுக்களின் உரிமைகள் (சிறுபான்மையினர், பெண்கள்) போன்ற பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

**அரசியல் உரிமைகள்:**

சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் பாதுகாப்பு.

வாக்களிக்கும் மற்றும் தேர்தலில் போட்டியிடும் உரிமை.

**குடிமை உரிமைகள்:**

வாழ்வுரிமை (கொல்லப்படாமல் இருத்தல்).

சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை.

பேச்சு மற்றும் வெளிப்பாட்டு சுதந்திரம்.

அமைதியாகக் கூடும் மற்றும் ஒன்றிணைந்து செயல்படும் உரிமை.

**பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள்:**

கல்வி பெறுவதற்கான உரிமை.

உரிமைவேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான உரிமை.

சமூக நீதிக் கோரும் உரிமை.

**குழுக்களின் உரிமைகள்:**

சிறுபான்மையினருக்கான உரிமைகள்.

பெண்களுக்கான உரிமைகள்.

**கணவன்-மனைவி உறவு:**

இல்லற வாழ்வில் கணவன்-மனைவி எவ்வாறு அன்பும் மரியாதையும் கொண்டு வாழ வேண்டும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

என்பதை இலக்கியங்கள் விளக்குகின்றன.

**பெண்களின் நிலை:**

தமிழ் இலக்கியங்கள் பெண்களின் முக்கியத்துவத்தையும், சமூகத்தில் அவர்களின் பங்களிப்பையும் எடுத்துரைக்கின்றன.

**தன்னடக்கம்:**

மனதில் உள்ள எண்ணங்களை அடக்கி, சுயக்கட்டுப்பாட்டுடன் வாழ்வது எப்படி என்பதை இலக்கியங்கள் விளக்குகின்றன.

**கல்வி மற்றும் அறிவு:**

கல்வி கற்பதின் முக்கியத்துவத்தையும், அறிவைப் பெறுவதன் அவசியத்தையும் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

**தமிழ் புதினங்கள் உணர்த்தும் வாழ்வியல் உரிமைகள்**:

தமிழ் புதினங்கள், மனிதாபிமானம், சமூக நீதி, தனிமனித வளர்ச்சி, மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வியல் உரிமைகளை உணர்த்துகின்றன. இவை பெண்ணுரிமை, காதல், குடும்ப உறவுகள், கல்வி, மற்றும் உழைப்பின் முக்கியத்துவம் போன்ற வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் விளக்குகின்றன.

**மனிதாபிமானமும் சமூக நீதியும்**

**மனிதாபிமானம்:**

சக மனிதர்களை மதித்தல், ஒருவருக்கொருவர் உதவுதல், இரக்கம் காட்டுதல் போன்ற நற்பண்புகளைப் புதினங்கள் வலியுறுத்துகின்றன.

**சமூக நீதி:**

சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், சாதிப் பாகுபாடுகள், மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவதற்கான உத்வேகத்தை அளித்து, சமத்துவமான சமூகத்தை உருவாக்க அறைகூவல் விடுக்கின்றன.

**தனிமனித வளர்ச்சி மற்றும் சுயமரியாதை**:

**கல்வி:**

கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி, தனிமனித வளர்ச்சிக்கு கல்வி எப்படி உதவுகிறது என்பதைப் புதினங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**சுயமரியாதை:**

சுயமரியாதையுடன் வாழவும், தனது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவும் புதினங்கள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

தூண்டுகின்றன.

**பண்பாடு:**

தமிழ் பண்பாடு, பாரம்பரியம், மற்றும் கலைகளின் முக்கியத்துவத்தைப் புதினங்கள் எடுத்துரைக்கின்றன.

**உறவுகள் மற்றும் குடும்பம்**

**காதல்:**

காதல் என்பது வெறும் உணர்ச்சிப் பிணைப்பு மட்டுமல்ல, அது ஒரு புனிதமான பந்தம் என்பதையும், அதற்குத் தியாகங்களும் முக்கியம் என்பதையும் புதினங்கள் விளக்குகின்றன.

**குடும்ப உறவுகள்:**

குடும்ப உறவுகளின் முக்கியத்துவம், அதன் பலங்கள், மற்றும் பலவீனங்கள் அனைத்தையும் புதினங்கள் யதார்த்தமாகச் சித்தரிக்கின்றன.

**பெண்ணுரிமை:**

பெண்ணுரிமை மற்றும் பெண்களின் சமூக பங்களிப்புகள் பற்றிப் பல புதினங்கள் பேசுகின்றன.

**பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல்**

பொருளாதாரம்: உழைப்பின் மதிப்பு, வருமான சமத்துவமின்மை, மற்றும் வறுமைப் பிணி ஆகியவற்றைப் புதினங்கள் விவரிக்கின்றன.

**சுற்றுச்சூழல்:**

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை நிலைநாட்ட வேண்டியதன் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன

**கிடங்குபுதினத்தில் தலித் இன மக்களின் வாழ்வியல் உரிமைகள்:**

**வாழ்வியல் போராட்டங்கள்**:

தொழிற்சங்கத் தலைவரான மாயாண்டி முப்பது வயதில் மனைவியை இழந்தவர். குழந்தைகளுக்காகத் திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்கிறார். உதயா, இதயா ஆகிய இருவரும் மாயாண்டியின் குழந்தைகள். முதல் தலைமுறை பட்டதாரிகள். உதயா வேலைதேடி அலைகிறான். அவன் தலித் என்பதாலும் அவனின் அப்பா பிணவறைக்கூடத்தில் வேலை செய்கிறார் என்பதாலும் அவனுக்கு வேலை கிடைக்காமல் துன்பப்படுகிறான்.

மாயாண்டிதான் பிணவறைக் கூடத்தில் சீனியர். அவருக்கு உதவியாளர்கள். பழனி, ரவுசு என்ற திருநங்கை, ஐம்பத்தைந்து வயதுடைய சங்கரத்தம்மாவும் இருக்கின்றனர். ரவுசு குடும்பத்தினரால் கைவிடப்பட்டவள். பிணவறையில் வைத்து ரவுசுவின் ஆணுறுப்பை அறுத்துப் பழனிதான்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

பெண்ணாக மாற்றினான். ஓடிப்போன ஒரே மகனை எண்ணியே வாழ்வைக் கழிக்கிறாள் சங்கரத்தம்மா. பிணவறைக்கூடமும் மாயாண்டியின் குடும்பமுமாக புதினம் நகர்கிறது.

பிணவறைக்கூடம் கொரானா கால நெருக்கடியில் ஏசி வசதி இன்றி பிணத்திலிருந்து புழுக்கள் ஊர்கின்றன. பிணவாடை வீசுகிறது. ஈக்களின் கூட்டமும் ரத்தக் கறையும் அறையில் நிறைந்திருக்கின்றன. மின்விசிறியும் பழுதானதால் புழுக்கத்தில் பிணங்களோடு பிணங்களாக இவர்களும் அதிகாரிகளை எதிர்த்துப் பேசமுடியாமல் வாய்மூடி நிற்கின்றனர்.

கொரானா காலத்தைக் காரணம் காட்டி பல்வேறு மோசடிகள் அரங்கேறுகின்றன. பிணவறையில் உள்ளும் வெளியும் நிலவும் துன்பக் காட்சிகள் நாவலில் காட்டப்படுகின்றன. பிணத்தை அறுப்பதிலும் தைப்பதிலும் நடக்கும் தேர்ந்த செயல் காட்டப்படுகிறது. தொழில் செய்வதில் உள்ள துன்பம் நாவலில் இழைந்தோடுகிறது. மற்றொருபுறம் மாயாண்டியின் குடும்பம் வாழ்வு காட்டப்படுகிறது.

மாயாண்டியின் மகன் இறக்க அவனின் உடலையும் போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டிய நிலை வருகிறது. பழனிதான் எல்லாவற்றையும் செய்கிறான். தன் மகன் இறந்த துக்கத்தால் மாயாண்டியால் வேலை செய்ய முடியவில்லை. ஒரு கட்டத்தில் தன் வேலையை ராஜினாமா செய்ய முடிவு செய்கிறான். ஆனால் அந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சாலைவிபத்தில் மாயாண்டி இறக்கிறான். அதனால் மனமுடைந்தவளாக இதயாவும் அவளுக்குத் துணையாக ரவுசுவும் இருக்கிறாள். மாயாண்டியின் இறப்பிற்காக ஒரு இரங்கல் கூட்டம் நடத்தப்படுகிறது. அதில் இதயாவிற்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்க முடிவு செய்யப்படுகிறது. ஆனால் அதை இதயா மறுத்து, ஆதரவற்ற பெண்களைக் கொண்டு உணவகம் ஆரம்பிப்பதாகக் கூறுகிறாள்.

**வாழ்வியல் போராட்டங்களைக் காட்டும் சில குறள்கள்:**

**"இனிய உளவாகஇன்னாத கூறல் கனியிருப்பக்காய்கவர்ந் தற்று"1**

**(குறள்.100)**

ஒரு குறள், இனிமையான சொற்கள் இருக்கும்போது கடுமையாகப் பேசுவது, கனி இருக்கும்போது காயை உண்பது போன்றது என்கிறது. இது வார்த்தை வேறுபாடுகளாலும், உறவுகளில் ஏற்படும் போராட்டத்தாலும் வரும் மனக்கசப்புகளை எடுத்துக்காட்டுகிறது.

**"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்"2**

**(குறள்.721)**

என்பது போன்ற எண்ணற்ற குறள்கள், மனதின் குழப்பங்களையும், போராட்டங்களையும் முகத்தின் வெளிப்பாட்டோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றன.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**மறுக்கப்படும் சுயமரியாதைக்கான உரிமைகள்:**

உதயா இன்ஜினியரிங் படித்தவன். அவன் திறமையானவான இருந்தபோதிலும் அவனுக்கு வேலைக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன.

**"அப்பனை மாதிரி நானும் கருப்புத் தோலு, அழுக்கு மூஞ்சி, எவனுக்குமே ஆகல...."3**

**(கிட.ப.24)**

என்கிறான். முகத்தோற்றத்தையும் உடலின் நிறத்தையும் கொண்டு சுயமரியாதை மறுக்கப்படுவதை கண்டு மனம் வெதும்புகிறான்.

காக்கை சிறகினிலே நந்தலாலா" என்பது மகாகவி பாரதியார் இயற்றிய பிரபலமான பாடல் ஆகும், இது அவரது கண்ணன் பாட்டு நூலில் இடம்பெற்றுள்ளது. இந்தக் கவிதை, காக்கையின் சிறகுகளிலும், மரங்களின் பச்சை நிறத்திலும் கண்ணனின் கரிய நிறத்தையும், அவன் எங்கும் நிறைந்திருப்பதையும் காண்பதை விளக்குகிறது.

பாடல் வரிகள்:

**"காக்கைச் சிறகினிலே நந்தலாலா! நின்றன் கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா! பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா! நின்றன் பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா!".4**

**(கண்ணன்பாட்டு .480)**

பரம்பொருளான கண்ணன், இயற்கையின் ஒவ்வொரு அங்கத்திலும், குறிப்பாக காகத்தின் கருப்பு நிறத்திலும், மரங்களின் பச்சை நிறத்திலும் எங்கும் வியாபித்திருப்பதைக் காட்டுவது.

**பொருளாதார உரிமைகள்:**

**. "ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் சொந்தமாகக் கால் ஊன்றி நிற்கக் கொஞ்சம் நிலமும், கூரையாக வீடும் என்கிற கனவை 50 வயசுக்கு மேல்தான் நிறைவேற்ற முடிந்திருக்கிறது"5**

**(கிட.ப.20)**

தலித் இனமக்கள் கடன் வாங்கி வீட்டை கட்டி முடிப்பது வரை பல பொருளாதார பிரச்சனைகளை சந்திக்கிறார்கள் என்பதை கிடங்கு புதினம் காட்டுகிறது

**பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்6**

**(குறள். 751)**

பணம்இல்லாதவர்களை மதிக்கத்தகுந்தவர்களாக மாற்றுவது பணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறுகிறது

**சாதிய உரிமைகள்:**

ஊரின் மையத்தில் அம்பேத்கர் பெயரினை வைக்க முடியுமா? என்றகேள்வியினைஎழுப்புகிறது.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

உயர் சாதியைச் சார்ந்த பெரிய மனிதர்கள் இருக்கும் இடத்துக்கு அம்பேத்கர் பெயரினை வைக்கமுடியாத நிலையினை எண்ணி வருந்துகிறது; உலகத் தலைவர் அம்பேத்கர் உள்ளூரில் எல்லை-யிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அவலத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

**"உலகத்துக்கே தலைவராவிட்டாகு உள்ளூர்ல இன்னமும் அவருக்கு உக்கார சமமா இடம் தால என்னய்யா ஊரு இது".7**

**(கிட.ப19)**

**அம்பேத்கர்னா அலர்ஜி, பறை அலர்ஜி, கவுச்சின்னா அலர்ஜி, புதுமைன்னா அலர்ஜி, சமத்துவம்னாக்கூட அலர்ஜிதான். 8**

**(கிட.ப.22)**

தலித் இனத்தில் பிறந்து பெருந்தலைவராக இருந்தாலும் மக்களின் இன்றைய மனப்போக்கையும், சாதிய உரிமையையும் அழகாக எடுத்துக்காட்டுகிறது இந்த புதினம்

சாதிகள் இல்லையடி பாப்பா!" என்ற மகாகவி பாரதியாரின் பாடலின் வரிகள்:

**சாதிகள் இல்லையடி பாப்பா!-குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;**
**நீதி உயர்ந்த மதி,கல்வி-அன்பு**
**நிறை உடையவர்கள் மேலோர்.**
**உயிர்க ளிடத்தில்அன்பு வேணும்;-தெய்வம்**
**உண்மையென்று தானறிதல் வேணும்;**
**வயிர முடையநெஞ்சு வேணும்;-இது**
**வாழும் முறைமையடி பாப்பா! 9**

**(பாப்பா பாட்டு)**

என்பதாகும். இந்த வரிகள் சாதி வேறுபாடுகளைப் பற்றிப் பேசுவதைத் தவறு என்றும், சாதி பேதமின்றி அனைவரும் சமம் என்றும் கூறுகின்றன

**பெண்ணிய உரிமைகள்:**

தந்தையின் இறப்பினால் கிடைக்கும் கருணை அடிப்படையிலான வேலையினை

**“நவீன கொத்தடிமை மாதிரி நானும் இருக்கணுமா?” 10**

**(கிட.ப.81)**

என்று கூறி இதயா உதறுகிறாள். கருணை அடிப்படை-யிலான வேலை தனக்குத் தேவையில்லை என்றும் எல்லாரையும் போலத் திருமணம், குழந்தை என்றும் செக்குமாட்டு வாழ்க்கை வாழ

 | Copyright © Author(s)

விரும்பவில்லை என்றும் கூறுகிறாள்.

இதயா ஒடுக்கப்பட்ட பெண்களைக் கொண்டு உணவகம் ஆரம்பிப்பது, பெண் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக அமைகிறது. யாருக்கும் அடிமைப்படாமல் தன் வாழ்வைத் தானே தீர்மானிக்கும் சக்தியாகப் பெண் இருக்க வேண்டும் என்ற பெண்ணிய உரிமையை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

பெண்ணுரிமை குறித்த பாடல் வரிகள்:

**பாரதியார்:**

**"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென் றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்; வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்."11**

**(பெண் விடுதலை)** **ஆய்வு முடிவுரை:**

இக்கால இலக்கியத்தில் மனித உரிமைகள் பற்றிய செய்திகளை புதினங்கள் வாயிலாக எடுத்து இயம்புபவர் பலர் இருப்பினும் ஆண்டாள் பிரியதர்ஷினியின் புதினங்கள் அதில் முக்கிய இடம் வகிக்கிறது .அவற்றில் கிடங்கு புதினத்தில் தலித் இன மக்களின் வாழ்வியல் உரிமைகளை நம் கண் முன்னே உயிரோட்டமாக காட்டுகிறார் ஆசிரியர் என்று கூறினாள்அது மிகையல்ல.

**சாண்றென் விளக்கம்:**

1.எம். சிவசுப்பிரமணியன் -திருக்குறள் மூலமும் உரையும்- குறள்.100

2.எம். சிவசுப்பிரமணியன் -திருக்குறள் மூலமும் உரையும்- குறள்.721

3.ஆண்டாள்பிரியதர்ஷினி- கிடங்கு--கிட.ப.24

4.பாரதியார்- பாரதியார் கவிதைகள்-பாரதியார்-கண்ணன் பாட்டு .48

5.ஆண்டாள்பிரியதர்ஷினி- கிடங்கு- கிட.ப.20

6.எம். சிவசுப்பிரமணியன் -திருக்குறள் மூலமும் உரையும்-குறள்.751

7.ஆண்டாள்பிரியதர்ஷினி- கிடங்கு- கிட.ப.19

8.ஆண்டாள்பிரியதர்ஷினி- கிடங்கு- கிட.ப.22

9.பாரதியார்- பாரதியார் கவிதைகள்-பாரதியார்-பாப்பா பாட்டு

10..ஆண்டாள்பிரியதர்ஷினி- கிடங்கு- கிட.ப.22

11.பாரதியார்- பாரதியார் கவிதைகள்-பெண்விடுதலை

**துணைநூற் பட்டியல்**


| | |
|---|---|
| 1.ஆண்டாள் பிரியதர்ஷினி | கிடங்கு -என். சி. பி. எச்-முதல் பதிப்பு ஜனவரி 2024சென்னை-600050 |



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

| | |
|---|---|
| 2..எம். சிவசுப்பிரமணியன் | திருக்குறள் மூலமும் உரையும் கமர்சியல் பப்ளிகேஷன் 437-2ராதாகிருஷ்ணன் காலனி - இரண்டாவது தெரு, விருதுநகர் ரோடு சிவகாசி 626130 |
| 3.பாரதியார் | பாரதியார் கவிதைகள் (முழுவதும்) திருமகள் நிலையம் / விசா பப்ளிகேஷன்ஸ்இரண்டாம் பதிப்பு1993 |

Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 27. ஊத்தாம்பல்லா புதினத்தில் இருளர்களின் வாழ்வுரிமையும் பாதுகாப்பும்

**கு. பிரியதர்ஷினி**

**முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை**

**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02.**

Mail ID: shivapriya3997@gmail.com, Mobile No:952443323,

https://orcid.org/0009-0008-2160-8003

**நெறியாளர் : முனைவர் ம. பிரேமா**

**தமிழாய்வுத் துறைத்தலைவர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**

**திருச்சிராப்பள்ளி – 02.**

Mail ID : premasoosairaj@gmail.com, https://orcid.org/0009-0000- 9337- 114X

Mobile No : 9942106490

**ஆய்வுச்சுருக்கம்:**

இருளர்கள் பன்னெடுங்காலமாகவே தொன்றுதொட்டு தங்களுக்கென்று ஒரு நிலப்பகுதியைத் தேர்ந்தெடுத்து வாழ்ந்து வருகின்றனர.; இவர்கள் ஒரு பழங்குடி இனக்குழு சமூக மக்கள். இம்மக்கள் எவ்வித அடிப்படை வசதியும் இல்லாதவர்களாக வாழ்ந்து வருகின்றனர். பொருளாதாரத்திலும், படிப்பறிவிலும் நாட்டம் இன்றி வாழும் இவர்களுக்கு வேட்டைக் கருவிகளே துணை புரிகின்றன. நேற்று வரை நிலங்களை காவல் காத்தவர்கள் இன்னும் ஒடுங்கி, உள் ஒடுங்கி, சுயக் கரை ஏறுதலை நிகழ்த்தாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய இருளர் இனமக்களின் வாழ்க்கைக்கு வெளிச்சம் கொணரும் வகையில் இருளர் குல அமைப்பு, சமய நம்பிக்கை, எளிய வாழ்வு, மரபு சார்ந்த அறிவு, வாழ்வுரிமையும், அதிகாரத்தின் தாக்கமும், உரிமை மீட்பு போராட்டமும் அவர்களின் வாழ்வுரிமையையும் பாதுகாப்பினையும் எடுத்துரைப்பதேஆய்வின் போக்காக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:**

**1) ஊத்தாம்பல்லா - எலிகளைப் புகை போட்டு பிடிக்க பயன்படும் கருவி - "மண் பல்லா"**

**2) இருளன் பதி - வைத்தியம் பத்து போடுவது**

**3) பட்டத் தண்ணி - மதுபானம்**

**முன்னுரை:**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

தமிழ் சமூகம் நீண்ட நெடிய வரலாற்றையும், அழிக்க முடியாத, தொடர்ச்சியும் கொண்டுள்ள ஒரு சமூகக் கட்டமைப்பாகும். இதில் மனிதகுலம் இன்று பல்வேறு இனங்களாகவும் பல்லாயிரங்களுக்கும் மேற்பட்ட சமூகங்களாகவும் வேறுபட்டு காணப்படுகிறது. இதில் பழங்குடி சமூகம் தொன்மையாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் 37 வகையான பழங்குடிகள் இருந்தாலும் சமவெளிப் பரப்பில் வாழ்கின்ற மக்களாக இருளர் இனக்குழு மட்டுமே அறியப்படுகிறார்கள். கோவை, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் வசிக்கும் இருளர் பழங்குடிகள் பற்றி சில இலக்கியங்கள் எழுதப்பட்டிருந்தாலும், வட தமிழக இருளர்கள் பற்றிய முதல் எழுத்து இலக்கியப் படைப்பாக செஞ்சி தமிழினியனின் ஊத்தாம் பல்லா அமைகின்றது.

இந்நாவல் விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி பகுதியில் வாழும் இருளர் பழங்குடி பற்றியது. செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி முதலான மாவட்டங்களில் இவர்கள் பரவி வாழ்கின்றனர். வேட்டைக்காரன், வில்லி, சிகாரி, இருளர் என்றெல்லாம் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். (தமிழகப் பழங்குடிகள் - பழங்குடி : அடையாளச் சிக்கல்கள் பக்கம். 90) இருளர்களின் வாழ்க்கை, பண்பாடு பற்றிய பிரச்சினைகளை தெளிவாக வெளிப்படுத்தி இருக்கிறது. இருளர்களின் பிரச்சினைகளையும், சிக்கல்களையும், மனித நேயமற்ற சில அதிகாரத்தின் செயல்களையும் எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

இருளர்:

இருளர்கள் பெரும் எண்ணிக்கையிலான இனக்குழுவாக இருந்தாலும் விவசாயத்தை ஒட்டிய வாழ்வியலோடுப் பின்னப்பட்டு இருக்கிறார்கள். வேட்டை என்பது கூட பெரும் மிருகங்களை கொள்வதல்ல. முயல், காட்டுப்பன்றி, உடும்பு, பாம்பு, எலி என விவசாய நிலம் சார்ந்த இடத்தில் வாழும் உயிரினங்களையே வேட்டையாடுவதாக குறிப்பிடப்படுகின்றது. இன்னமும் இவர்களின் வேட்டை அனுபவம் அறுபடாமல் இருக்கிறது. இன்றும் தாய் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாக மூத்த தேவியின் மூலத்திலிருந்து இன்று கன்னியம்மன் ஆக தொடர்கிறது. மேலும் ஆதிக்குடி என்று பெருமைப்பட்டாலும் நிலமற்ற சமூகமாய் இன்னும் கடைநிலையில் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். (ஊத்தாம் பல்லா நாவல்.ப.4)


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ் ஆகியவை பெறுவதில் சிக்கல் இருக்கிறது. விசாரணைக்கு வரும் அதிகாரிகள் இவர்களின் நிலையில்லாத போக்கு, அடிக்கடி நிகழ்ந்து கொண்டே இருக்கும் இடம்பெயர்ச்சி முதலியக் காரணங்களால் சுலபமாக நிராகரித்து விடுகிறார்கள். இவ்வாறு அனைத்து செயல்களிலும், மறுத்தலுக்கு பின்னால் நின்று, ஒதுங்கி, தன்னை எதிலும் முன் நிறுத்தாத மக்களினமே இருளர்கள். அரசியலமைப்பு ஏற்படுத்திக் கொடுக்கிற அதிகார பரவல், வேலைவாய்ப்பு, கல்வி உரிமைகள் ஆகியவற்றை முழுமையாக பயன்படுத்தாமல் வாழ்கிற அவலம் இன்றும் தொடர்கிறது. பசியின் காரணத்திற்கு பணயம் வைத்து வாழ்வை நடத்துகின்றனர். ஊட்டச்சத்து தேவைப்படும் சமூகமாக திகழ்கிறது.

ஆதிகுடிகளாக இருப்பினும், நிகழ்காலச் சிக்கல்களையும், அவலங்களையும் சந்தித்து வருகின்றனர். பெருமைமிக்க வரலாறுகள் இருந்தாலும் எதிர்காலம் பற்றிய எந்த கனவுகளும், கனவுகளுக்கான வாய்ப்பையும், அவர்களின் கால்கள் விரும்புவதில்லை. இப்போதும் இப்படித்தான் இருக்கிறார்கள்.

இருளர் குல அமைப்பு:

விழுப்புரம் மாவட்டம,; விக்கிரவாண்டி ஒன்றியம், தும்பூர் கிராமம் என்று சொன்னாலும் சன்னியாசி ஏரிக்கரை இருள குடிசையினு சொன்னாதான்;; விவரம் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் யாருக்கும் கையளவு கூட பட்டா நிலம் கிடையாது. மொத்தம் ஆறு கொத்து வசித்து வருகிறார்கள். ஒரு கொத்து என்பது பங்காளி உறவுகள் மற்றும் அங்கிருக்கும் ஆண் வழி உறவுகள். நல்லது, கெட்டது என்று யார் கூப்பிடாவிட்டாலும் அவர்களே முன்னின்று செய்வர்.

சமய நம்பிக்கை:

இருளர்கள் குலசாமியாக கன்னியம்மன் தெய்வத்தை வணங்குகியதையும்,இவர்களின் அனைத்துப் பழக்கத்திற்கும் மஞ்சள் கூடவே இருந்ததையும் புதினம்

“கன்னிமாருக்கு புடிச்ச வண்ணமும் அதுதான் அதோட சாமி வந்து சாட்டை எடுத்து அடிக்கிறதுக்கு முன்னாடி பட்டத் தண்ணீர் தெளிக்கிறதும் பழக்கம். திருவிழா ஆரம்பிக்கும்போது மஞ்சள் கிழங்கு வைத்து தான் திருவிழா ஆரம்பித்ததில் இருந்து கரகம் கலைக்கிறது வரையிலும் மஞ்சள் தான் கூடவே இருக்கும்." (ஊத்தாம் பல்லா நாவல்.ப.25-26) என்று சுட்டுகின்றது. இதிலிருந்து ஆடி மாதம் கன்னிமாருக்கு திருவிழா பண்ணுவது அவர்களுடைய நம்பிக்கையாகவும் கடமையாகவும் இருந்துள்ளது தெரியவருகிறது.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

எளிய வாழ்வு:

இருளர்கள் தங்கள் கை, கால்களை நம்பி கடுமையாக உழைத்து வாழும் சமூகம். திருட்டு, வழிப்பறி போன்றவற்றை நாடாமல், தங்களின் வயிற்றுப்பசிக்காக வேட்டையாடுதலையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர்.(எலி பிடித்தல், முயல் வேட்டையாடுதல், பாம்பு பிடித்தல் போன்றவை)அவர்கள் வேட்டைக்கு கடப்பாரை, கொடுவாள் மற்றும் "ஊத்தாம் பல்லா" (வரப்பில் பதுங்கி உள்ள எலிகளை புகை போட்டு பிடிக்க பயன்படுத்தப்படும் மண் பல்லா) போன்ற கருவிகளைப் பயன்படுத்தி இருக்கின்றனர். இதன் மூலம் வேளாண் குடிகளுக்கு ஒத்தாசையாக இருக்கும் தொழிலை மேற்கொண்டிருப்பது புலனாகின்றது.

மரபு சார்ந்த அறிவு:

நச்சுக்கடிகளுக்கு மூலிகைகளைப் பயன்படுத்தும் மரபு அறிவு இவர்களுக்கு இயற்கையிலேயே இருக்கின்றது. ஊரில் உடல் நலம் இன்றி இருப்பவர்களுக்கு செய்யப்படும் "இருளன் பதி" போன்ற நிகழ்வுகளும், எலும்பு முறிவுக்கும், பாம்பு கடி போன்ற கொடிய விஷத்திற்கும் இவர்கள் மூலிகை மருந்துகள் அளித்துள்ளனர். அவர்களின் இச்செயல் சமுதாயத்தின் மீதுள்ள அக்கறையையும், மருத்துவ அறிவினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

"நல்ல பாம்பு கடித்த ஒருவருக்கு தொப்பை, சிரியாநங்கை தழையையும், வெற்றிலை பாக்குப் பையை திறந்து மருந்தை எடுத்து தழையோடு கசக்கி பாம்பு கடிபட்டவரின் வாயில் திணித்தார். மஞ்சளை கடித்த இடத்திலும், அதை சுற்றியும் பூசினார்". (ஊத்தாம் பல்லா நாவல்.ப.251-253) இதிலிருந்து இருளர்களின் மருத்துவ அறிவு தெரியவருகிறது.

வாழ்வுரிமையும், அதிகாரத்தின் தாக்கமும்:

இருளர் சமூகம் எதிர்கொள்ளும் அடிப்படை வசதியின்மைகள், சமூகத்தின் கடை நிலையில் வாழும் எளிய வாழ்க்கை, கடுமையான உழைப்பு முதலியவை அவர்களின் அவலநிலையை வெளிப்படுத்துகின்றது. இம்மக்கள் தங்களின் அவல நிலைக்கு தீர்வு காணும் வகையில் "சூளைக்கு ஆள் வேணும்" என்று புரோக்கர் கூற அம்மக்களும் செங்கல் அறுக்க செல்வதை பற்றி யோசிக்கத் தொடங்கினர். ஏனெனில் அவர்களின் அவல நிலையே அதற்கு முக்கிய காரணமாகும்.

சன்னியாசி ஏரிக்கரையில், கணேசன், பழனி, செங்கேணி, சாஞ்சகாலன், சின்னபொன்னு, மலையனூரம்மா, களவெட்டி, சடையன், தொப்பை, காசி, காத்தவராயன், சேட்டு, பரவதம்,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

கதிர்வேலு போன்றோர் இந்நாவலின்; முதனமைக் கதைமாந்தர்;கள். சன்னியாசி ஏரிக்கரையோடும், பென்னகர் கிராம மண்ணோடும், மக்களோடும் காலத்தைத் தள்ளும் இவர்களிடம் புரோக்கர் மனோகர் வந்து "செங்கல் சூளையில் கல் அறுத்தால் அதிக பணம் கிடைக்கும். கல்லூடு கட்டி மற்றவர்களைப் போல நீங்களும் வாழலாம்" (ஊத்தாம் பல்லா நாவல்.ப.25) என பேசி மக்களை மூளைச்சலவை செய்து முன்பணம் கொடுக்கிறார்.

வயிற்றுப் பசியைத் தீர்த்துக்கொள்ள தகுந்த வேலை இல்லாததாலும், சீரான வருமானம் இல்லாத காரணத்தினாலும் செங்கல் சூளையில் கல் அறுக்கலாம் என்ற எண்ணம் மக்களிடையே பரவியது. "வறுமையின் பரமபத ஆட்டத்தில் காய்களாக நகர்த்தப்படுவது எளிய மக்கள்தான்". (ஊத்தாம் பல்லா நாவல்.ப.28) இவர்களின் உச்சபட்ச இலக்கு வயிற்றுப் பசியை அணைக்க முயல்வது. தலைக்கு 25 ஆயிரம் ரூபாய் ஜோடிக்கு 50 ஆயிரம் ரூபாய் என கல் அறுப்பதற்கு பேரம் பேசப்பட்டது.

"கன்னியம்மாவுக்கு திருவிழா" நடத்தி அவளின் உத்தரவு பெற்ற கையோடு 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சன்னியாசி ஏரிக்கரை குடிசையிலிருந்து லாரியில் புறப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குப் பக்கத்தில் உள்ள ஊத்தங்கரை கிராமத்திற்குச் சென்றனர். அங்கிருந்து மனிதர்கள் அற்ற காட்டுப்பகுதியை அடைகிறார்கள். மறுநாளிலிருந்து இந்த உலகத்தோடு எந்த தொடர்பும் அற்ற மனிதர்களாக மாற்றப்பட்டு பெரும் முதலாளி ஒருவரின் செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக மாட்டிக்கொள்கின்றனர். அந்த வாழ்வின் துயரம் என்னவென்று அறியாமல் முதல் நாள் முதலாளி, தொழிலாளர்களை அனுசரிக்கும் விதத்தைக் கண்டு நம்பி தங்கி விடுகின்றனர். பிறகு, நாட்கள் கடக்கத் தொடங்குகின்றன. முதலாளிகளின் அதிகாரத்; தாக்கம் தலைதூக்கத் தொடங்குகின்றது. இருளர்கள் மெல்ல,மெல்ல அடிமைகளாக மாறிக்கொண்டு வந்தனர். வேலை நேரம் அதிகரிக்க ஆரம்பித்தது, உணவு மூன்று வேலையும் உட்கொண்ட நிலையில் உணவு தயாரிக்க தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களும் இல்லாத நிலையை முதலாளித்துவம் உருவாக்கியது.

இதனை எதிர்த்து கேட்டதற்கும் மக்களை கொடுமைப்படுத்தி அடித்து துன்புறுத்தினார்கள். உயிரைக் கொல்லும் அளவிற்கு முதலாளித்துவம் தலைவிரித்தாடியது. இருளர்களின் வாழ்வில் எதிர்பாராத நிலை உருவாகிற்று. ஒவ்வொரு குடும்பத்தின் பிள்ளைகளும் தேவையான உணவு இல்லாமல் ஊட்டச்சத்து இன்றி எலும்பும், தோலுமாக மெலியத் தொடங்கினர்.

மேலும், முதலுதவி இன்றியும், தேவைக்கு மருத்துவமனை செல்லும் வசதி இன்றியும், தம்முடைய ஊர் மக்களிடம் தகவல் சொல்லும் வசதி இன்றியும் மக்கள் அந்த சூளையில் அடைத்து


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

வைக்கப்பட்டு, காவலாளிகளின் கவனத்தில் இருக்குமாறு கட்டமைக்கப்பட்டது.

நாவலில் கூறப்பட்டுள்ள வகையில், இருளர் குடியை சேர்ந்த கதிரேசன் இறப்பு மிகவும் துயரத்தை தந்தது. ஏனெனில் தனது மகனின் எலும்பு முறிவுக்கு ஒரு கிழங்கை தேடி காட்டிற்கு செல்லும் இடத்தில் "கரண்டு ஒயர்" தாக்கி கதிரேசன் இறந்து போனார். அவரை தன்னுடைய சொந்த ஊருக்கு அழைத்துச் சென்று எரிக்க கூட அனுமதி அளிக்கப்படாமல் அங்கேயே எரித்து, சாம்பலைக் கூட தராமல், எரித்த இடமே தெரியாத அளவில் நிலம் தோண்டும் கருவியை வைத்து அந்த இடத்தை சுத்தம் செய்தனர். அதனை எதிர்த்துக் கேட்ட மக்களுக்கு ஒரு பதிலும் இல்லை. தாங்கள் வாங்கியுள்ள பணத்திற்கு மேலாக அங்கு உழைக்க ஆரம்பித்தனர். அவர்களின் உழைப்பிற்கான கணக்கு கடைசி வரை கூறப்படவில்லை.

இருளர்கள் அங்க அடையாளம் இன்றி உடம்போடு ஒட்டி கிடக்கும் பறவை ஒன்றின் அடையாளமற்ற உடலைப் போலக் காட்சியளித்தனர்.

"சிந்தை மெலிந்தோம் - எங்கள் சேவைக்
கெலாம்இது செய்நன்றி தானோ?" (பாரதிதாசன் - தொழிலாளர் விண்ணப்பம் பாடல்-5)

என்ற பாரதிதாசனின் உணர்வு இவர்களுக்குப் பொருந்தும்.

உரிமை மீட்பு போராட்டம்:

இருளர் இன மக்கள் அடிமை வாழ்வில் இருந்து வெளியேற முடிவு செய்கின்றனர.;; தங்களின் அடிமை நிலையை வெளியே இருக்கின்ற மக்களிடம் தெரிவிக்க எண்ணினர். எல்லோரும் கேட் கிட்ட போயிட்டு ஓய்..... ஓய்..... ஓய்......னு மூச்சு பிடிச்சு பெருங்குரலில் எடுத்து கற்ற வேண்டியது தான் என திட்டமிட்டனர். வாட்ச் மேன் ஓடு சேர்ந்து ஐவரும் திகைத்துப் பார்த்தார்கள். எல்லோரும் கிளம்பி கேட் அருகே கூடி திட்டமிட்டபடி கத்த ஆரம்பித்ததும் ஒன்றும் புரியாமல் விழித்தபடி "எதுக்கு கத்துறீங்க"? என்று கேட்டனர். அக்கம் பக்கம் கழனிக்காரர்கள் வந்து பார்த்தார்கள். முணுமுணுப்புகள் தொடர்ந்தன. அதே சமயத்தில் சன்னியாசி கிராமத்தில் தேர்தல் நேரம் நெருங்கியது. "விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஒன்றியம் தும்பூர் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்கும் ஒன்றிய குழு உறுப்பினர் மாவட்ட குழு உறுப்பினர் பதவிக்கும் தேர்தல் நடத்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது." (ஊத்தாம் பல்லா நாவல்.ப.463)

விக்கிரவாண்டி ஒன்றிய வாக்குச்சாவடியில் பழங்குடியினருக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமாக இருந்தது. அதனால் ஒவ்வொரு கட்சியின் சார்பாகவும் மலையனூர் அம்மாவை வந்து சந்தித்து, ஆதரவைக் கேட்டுக் கொண்டும், அங்குள்ள மக்களை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
*DOI: https://doi.org/10.63300/tm11012025.01*
www.tamilmanam.in

கவனித்தும் சென்று கொண்டிருந்தனர். ஓட்டுப்போட ஆட்கள் வேண்டும் என்ற நிலையில் ஊரிலிருந்து வயிற்றுப்பிழைப்பிற்காக வேற்றூர்களுக்கு வேலைத் தேடிச் சென்ற மக்களைத் தேட ஆரம்பித்தனர்.

விக்கிரவாண்டி ஒன்றியத்தில் சென்ற ஆண்டு நடந்த தேர்தலில் 42 வாக்குகள் வித்தியாசத்தில் முத்துசாமி நாயுடு தோல்வியைச் சந்தித்தார். ஆகையால் விக்கிரவாண்டி ஒன்றியத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களைத் தேட முடிவு எடுத்தார். மாவட்டத் தலைநகரான கிருஷ்ணகிரிக்கு சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் கொத்தடிமைகள் மீட்பு அதிகாரியிடம் சென்று விவரங்களைச் சொல்கிறார்கள்.

“மொத்தம் 71 பேர் மேடம் எனக் கூறுகையில் மிகவும் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது." (ஊத்தாம் பல்லா நாவல்.ப.470) அவர்களைத் தேடுவதற்கானப் பணி நியமிக்கப்பட்டது அவர்கள் இருக்கும் இடமும் கண்டுபிடிக்கப்பட்டது.

28 குடும்பத்தைச் சார்ந்த 71 பேர் செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக இருந்தவர்களை ஆர்டிஓ விஜயராணி தலைமையிலான அதிகாரிகள் மீட்டனர.; முதல் கட்டமாக அவர்களைச் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்லவும் முதலுதவி செய்யவும் முடிவெடுத்தனர.; அந்த சேம்பரை சீல் வைத்ததுடன் விசாரணை நடத்த உத்தரவு போட்டார். கடைசியாக மேனேஜரும் அவருடைய உதவியாளரும் கைது செய்யப்பட்டார்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களின் உழைப்பிற்கான ஊதியம் கணக்கிட்டுத் தரப்பட்டது.

“ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்
உடையப்பராய் ஆகிவிட்டால், ஓர் நொடிக்குள்,
ஓடப்பர், உழையப்பர் எல்லாம் மாறி,
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா?"

(பாரதிதாசன் கவிதைகள்- உலகப்பன் பாட்டு.37-40, முதல் தொகுதி)

மனிதர்களிடையே உள்ள ஏழை-பணக்காரர், உழைப்பவர்-உடையவர் என்ற வேறுபாடுகளைப் பார்க்காமல், அடிப்படை மனித மாண்பு காரணமாக அனைவரும் சமமானவர்களே (ஒப்பப்பர்) என்ற மனிதநேயப் பார்வையே என்று பாரதிதாசனின் கருத்து இந்நாவலிற்க்கு பொருத்தமாக உள்ளது.

முடிவுரை:


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

பழங்குடி மக்களின் நல வளர்ச்சிக்காக அரசு பல்வேறுத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதனைப் பழங்குடியின மக்கள் பயன்படுத்தி முன்னேற வேண்டும.; செங்கல் சூளை ஆரம்பிக்க நான்கு இலட்சம் பணம் கடன் தருகிறார்கள். அதில் இரண்டு இலட்சம் திருப்பி கட்டினால் போதும். இது போன்று அரிசி ஆலை வைக்க கடன் உதவி, ஆடு வளர்ப்பு மாடு வளர்ப்பு, தேனிக்கள் வளர்ப்பு, மூலிகைப் பண்ணை வைத்தல், பழங்குடி மருத்துவம் என பல பிரிவுகளில் உதவிகள் தர அரசு தயாராக இருக்கின்றது. இதையெல்லாம் தெரிந்துக் கொண்டு அரசு அதிகாரியிடம் கேட்டு பயன்பெறலாம் என அறியாமல் துன்பத்தில் உழல்கின்றனர். முதலாளிகள் தங்கள் அதிகாரத்தினைப் பயன்படுத்தி இருளர் சமூகத்தையே பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்ற அவலம், முதலாளித்துவத்தின் ஒடுக்குமுறைகள், முறைகேடுகளற்ற வன்முறைகள், குடும்ப அட்டை, நில உரிமை, கல்வி மற்றும் சுகாதார வசதிகள் அற்ற மனித உரிமை சுரண்டல்கள், குழந்தைகள் மீதான வன்முறைகள், காவல்காரர்களிடம் அன்றாடம் படும் இன்னல்கள் முதலியவற்றை வெளிச்சத்திற்கு வெளிப்படுத்திக் கட்டுரை நிறைவுறுகின்றது.

**பார்வை நூல்கள்:**

1) செஞ்சி தமிழினியன், ஊத்தாம் பல்லா, வேரல் புக்ஸ் வெளியிட்டு எண்:172. பதிப்பு - 2024.

2) பக்தவச்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி.
மூன்றாம் பதிப்பு - 2017.

 | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

# 28. சித்தர்கள் கூறும் மனித உரிமைகள்

**மீ.எலிசபெத் ஜனூல் மகரிபா**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-02 Email: elizabeth2002maharifa@gmail.com

ஆய்வுச் சுருக்கம்:

சித்தர்கள் கூறும் மனித சமத்துவம், சமூக நீதி, மனிதநேயம் போன்ற கொள்கைகள் தான் மனித உரிமைக்கான முற்போக்குப் பார்வை. இறைவனை நோக்கி மட்டும் பக்தியைச் செலுத்தாமல் மனிதனின் அடிப்படையை வலியுறுத்தும் சித்தர் பாடல்கள் எழுச்சிக்கான வித்து. கற்றுக்கொண்ட பாடல்களை மட்டும் ஓதிக் கொண்டு இறையாண்மையைக் கடத்திச் சென்ற சமூகத்தில் மனிதம், பகுத்தறிவுச் சிந்தனை என பல உண்மைகளை இடித்துரைத்த சித்தர் சமூகம் தான் இன்றைய மனித உரிமைக்கான முன்னோடி.

**திறவுச்சொற்கள்:**

சரியை – ஒழுக்கங்கள், கிரியை - இறைவனை நம்புதல், இறையியல்; - இறைவன் பற்றிய சிந்தனைகள்

**முன்னுரை:**

பண்பாடும் பரிணாம வளர்ச்சியும் மனிதர்களின் வாழ்க்கை நிலைகளை மாற்றியமைத்துள்ளது. முந்தைய காலத்தில் உயிர் வாழவே போராடி, அவனுக்குத் தேவையானதை வேட்டையாடி உண்டு, வலியவன் பிழைப்பான் என இருந்த மனித சமூகம் தற்பொழுது மனிதன் வாழ அவனுக்கென்று தனி உரிமைகளையும் சட்டங்களையும் அமைத்துள்ளது. இலக்கியங்கள் தான் ஒரு மொழியின் ஆழத்தை வெளிப்படுத்தும்.

தமிழ் இலக்கியங்கள் மொழியின் ஆழத்தை மட்டும் கணக்கிடாமல் மனித வாழ்விலையும் எடுத்துரைக்கின்றது. பக்தி இலக்கியங்கள் இறையாண்மையை மட்டும் உணர்த்துவன அல்ல. மனித குணங்களை திரையிட்டு காட்டியும், அறநெறிகளை விளக்கியும் நிற்கினறன. அதனுள் சித்தர் பாடல்கள் மறைமுகமாக மனித உரிமைகளை பக்தி வழி விளக்குகின்றன.

**சித்தர் இலக்கியம்:**

சித்தர் பாடல்கள் பக்தியைப் பகர்வதாக இருந்தாலும் அவை அறிவியல், சமூக சிந்தனை, மருத்துவம் போன்றவற்றையும் வலியுறுத்துவதால் பக்தி இலக்கியம் என்ற பொதுப்படையில் அடங்காமல் சித்தர் இலக்கியமாக தனித்து நிற்கின்றன. பக்தியைத் தனக்கெனதொரு தனி அணுகுமுறையில் பாடல்களாக சித்தர்கள் இயற்றியுள்ளனர்.

**மனித உரிமை:**

மனித உரிமை என்பது காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப மாறும் தன்மை கொண்டது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அடிப்படையாகவே கிடைக்கவேண்டிய அனைத்துமே மனித உரிமையில் அடங்கும். அப்படியான மனித உரிமைகளைப் பற்றிச் சட்டங்கள் மட்டும் கூறவில்லை. பழந்தமிழ்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

இலக்கியங்களும் அதனை விளக்கியுரைக்கின்றன. சித்தர்கள் தனி அறநெறிகளைக் கொண்டவர்கள். சாத்திரங்களில் இருந்து மாறுபட்டு உண்மைத் தன்மையை மட்டும் நம்புபவர்கள். இறைவனை அடைய தான் பக்தி இலக்கியங்கள் படைக்கப்பட்டிருந்தாலும், மனிதனின் வாழ்வியலை பக்தியைப் போல் எடுத்துரைக்க வேறு இலக்கியம் இல்லை. நேரடியாக மனிதனின் உரிமைகளைப் பற்றி சித்தர் பாடல்கள் பேசாவிட்டாலும், மனித உரிமை என்பதற்கான அடிப்படைச் சாரம் தான் அவை.

மனித உரிமையானது மூன்று நிலைகளில் கூறப்பட்டுள்ளது.

- மன ரீதியாக – அன்பு, ஒழுக்கம்
- சமுதாய ரீதியாக – கல்வி, சமஉரிமை
- இறையியல் ரீதியாக – உடல் மற்றும் மன வலிமை, இறைவனை அடையும் வழி அறிதல்

**மன ரீதியான உரிமை:**

**அன்பு:**

உலகில் வாழும் அனைத்துயிர்களுக்கும் இன்றியமையாத துணை அன்பு தான். சக மனிதனையும், நம்முடன் வாழும் பிற உயிர்களையும் நேசித்தலும், நேசிக்கப்படுதலும் அவசியம். அன்பினால் எதனையும் மாற்றலாம். இறை அருளும் அன்பின் வடிவம் தான்.

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு"1

உடலோடு உயிர் இணைந்து இவ்வுலகில் வாழ்வதற்கான பயனே அன்பு நிறைந்த வாழ்க்கை தான்.

திருமூலர்:

"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"2

(திரும.பா.270)

அன்பும், சிவமும் (இறைவனும்) வேறு வேறு என்பவர்கள் அறிவற்றவர்கள். பிற உயிர்கள் மீது காட்டும் அன்பில் தான் இறைவன் குடி கொண்டுள்ளார் என திருமூலர் உரைக்கிறார்.

"ஆர்வம் உடையவர் காண்பர் அரன்றன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி..."3

(திரும.பா.273)


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

உலகில் படைக்கப்பட்ட அனைத்துமே இறைவன் தான். அதனால் அனைத்து உயிரையும் நேசித்தல் என்பது இறைவனை நேசித்தலுக்கு இணை என்பதும் எல்லா உயிருக்கும் தயவுக் காட்டி அனைத்தையும் சமமாய் கருதுபவருக்கே இறைவனடி கிடைக்கும் என்பதும் திருமூலர் வாக்கு.

**பட்டினத்தார்:**

தனக்கு இருக்கும் அதே உணர்வுகள் தான் மற்ற உயிர்களுக்கும் உண்டு என்பதை உணர்ந்த மனிதன் தான் பசியில் இருப்பவரின் முகத்தை வைத்தே அவருக்கு பசியாற்றுவார். இது தான் இரக்கம் என்னும் மனிதனின் அடிப்படைப் பண்பு. தனக்கு கிடைத்த உணவு சக மனிதனுக்கும் கிடைக்க வேண்டும் என உணவளிப்பதே மனித உரிமைக்கான வளர்ச்சி.

“பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்”4

பசியாற்றுவதே நல்லறம் என்பது பட்டினத்தடிகள் கூறும் உரிமை.

ஒழுக்கம்:

உயிரைக் காக்க வேண்டும் என்றால் முதலில் உடலைக் காக்க வேண்டும். உடலைப் பாதுகாக்கும் அறிவியல் தான் யோகம். அதனை ஒவ்வொரு மனிதனும் சரியாகப் பயன்படுத்தினால் ஆரோக்கியமான உடலும், நல் வாழ்வும் அமையும்;. யோகம் என்பது சித்தர்கள் அல்லது குறிப்பிட்ட மனிதர்கள் மட்டும் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கம் அல்ல. ஒவ்வொரு மனிதனும் அறிந்திருக்க வேண்டிய கலை இது. உயிரை காக்கும் கருவி இது.

“உடம்பும் உடம்பும்; உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு உயிரிடை நட்புஅறி யாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின்; றாரே”5

(திரும.பா.2148)

திருமந்திரமானது உயிரோடு இணைந்த உடலின் நட்பை அறியாதவர் நாயைப்போல் அறிவற்றவர் என உரைக்கின்றது. உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள தான் சித்தர்கள்;

- சரியை
- கிரியை
- யோகம்

என்ற நெறிகளை வகுத்து வைத்துள்ளனர். இதனை அனைத்து மக்களும் சமமாகக் கற்று வாழ்வினை மேம்படுத்த வேண்டும் என்பதையே சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.

சரியை நிலையில் தன்னை நோக்கி வரும் விருந்தினை உபசரித்து, ஏழைகளுக்கு பசியாற்றுவித்து, நெறியாக பொருள்; சேர்த்து, உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, ஜீவகாருண்யம் கடைப்பிடித்து, எவ்வுயிர்க்கு தீங்கு செய்யாது வாழ்ந்து இறுதியாக இறைவனை நம்பி வழிபாடு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

செய்வது சரியை மற்றும் கிரியை நிலை.

யோகம் என்பதே மூச்சுக் காற்றையும், அதன் இயக்கத்தையும் வெளிபாட்டையும் இரகசியத்தையும் பயன்களையும் எந்த சக்திக்கும் கட்டுக்கடங்காத வாசியென்னும் மூச்சுக்காற்றை கட்டுப்படுத்துவது தான்.

சமுதாய ரீதியான உரிமை:

ஒன்று கூடி வாழ்ந்து வந்த மனித இனம் குழுக்களாக வாழத் தொடங்;கின. அதன் விளைவே தொழிலின் காரணமான சாதிய பாகுபாடு. மனிதனின் மனிதம் மாண்டு போனதன் வழி ஏற்றத் தாழ்வும், சக மனிதர்களை வெறுத்தலும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"6

என வள்ளுவம் கூறும் செய்தியானது பிறப்பின் காரணமாக உலகில் உள்ள அனைத்து உயிர்களுமே சமம் தான் என்பது.

"சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெலோ
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ
காதில்வாளி காரைக்கம்பி பாடகம்பொ னொன்றலோ
சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே"7

மனிதர்களுக்கு இடையே உள்ள சாதி, மதம் என்ற பாகுபாடு எல்லாம் அறியாமையின் வெளிப்பாடு.

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பது தான் சமூக நீதி. சாதி அல்லது மத பாகுபாடானது அனைவருக்கும் உரிய சம வாய்ப்பைப் பாதிக்கும். ஒருவனுக்கு கிடைக்க வேண்டிய உரிமை தடுக்கப்பட்டால் அதற்குக் காரணமான பாகுபாட்டைக் களைவதே நன்மை.

பெண்ணுரிமை:

பெண்களின்; கல்விக்கும் சுதந்திரத்திற்கும் போராடும் இந்த சமூகம் இன்னும் பெண்ணின் மாதவிடாய்; காலத்தை தீட்டு எனப் பார்த்து அவர்களை ஒதுக்கி வைக்கும் தீண்டாமை பழக்கத்தை முழுவதுமாக கைவிட போராடவில்லை. அடக்குமுறையின் உச்சத்தை ஓய்வு என்னும் போர்வைக்குள் அடக்கி வீசப்படும் ஆயுதம் தான் மாதவிடாய் காலத்தில் வீட்டில் ஒதுக்கி வைக்கப்படுவது.

"அறையறை யிடைக்கிட வன்றுதூமை யென்கிறீர்
முறையறிந்து பிறந்தபோது மன்றுதூமை யென்கிறீர்
துறையறிந்து நீர்குளித்தா லன்றுதூமை யென்கிறீர்
பொறையிலாத நீசரோடும் பொருந்துமாற தெங்ஙனே"8

ஒரு பெண் பருவமடைவது முதல் அனைத்திற்கும் தீட்டு என ஒதுக்கி வைக்கும் மூடர்களுடன் எவ்வாறு வாழ முடியும் என சிவவாக்கியர் வினவுகிறார். இப்பாடல் பெண்களுக்கு தங்கள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

வாழ்க்கை முறையில் முழு சுதந்திரம் தர வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

இறையியல் ரீதியான உரிமை:

உடல் வலிமை:

இறைவனை நித்தம் போற்றிப் புகழ்வதால் மனிதனுக்கு கிடைப்பது ஒன்றும் இல்லை. நல்ல மனிதனாக இருப்பதே இறைவன் அருகில் இருப்பதற்கு சமமாகும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"9

(திரும.பா.1823)

தூய்மையான உள்ளமே இறைவன் குடிக்கொள்ளும் ஆலயமாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனது உள்ளமே கோயிலாக அமைய வேண்டும்.

"உயிருறும் உடலையும் உடலுறும் உயிரையும்
அயர்வறக் காத்தருள் அருட்பெரும் ஜோதி"10

என வள்ளலார் பாடுகிறார்

உடம்பை இழுக்கு என்று எண்ணாமல் அதனை பேணி காத்தல் அவசியம். அதுவே பரமன் வாழும் இடம் என்பதை திருமூலர்

"உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே"11

(திரும.பா.725)

என்று அனைத்து உயிர்களும் உடலின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறார்.

இறைவனை அடையும் வழி:

இறைவன் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானவன். எந்த பேதமும் இன்றி காத்தருள்பவன். உயர்ந்தோன் தாழ்ந்தோன் போன்ற எந்த பாகுபாடும் இன்றி தூய உள்ளத்துடன் நன் முறையில் வாழ்பவனை தன்னோடு இணைந்துக் கொள்ளும் இயல்பினன்.

"மூலமாம் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து நாலு கட்டு அறுப்பிரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம்மம் ஆகலாம்
ஆழம் உண்ட கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே"12

அதிகாலையில் செய்யும் தியானமும் மூச்சுப் பயிற்சியும் தான் இறைவனை நோக்கி செல்லும் வழியாகும் என்பது சிவவாக்கியம் கூறும் மனிதனுக்கு உரிய உரிமையாகும்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

முடிவுரை:

இன்றைய சமூகத்தில் வாழ்வதற்கே மனிதர்களுக்கு பல உரிமைகள் மறுக்கப்படுகின்றது. அவை பழங்காலம் தொட்டே இருந்து வந்தாலும் தற்பொழுது அதன் போக்கில் மாறுதல்கள் உள்ளன. வாழ்க்கை என்பது மிக குறுகியது. இதனுள் எந்த பேதமும் காட்டாமல் தன்னை தானே ஒழுங்குப்படுத்திக் கொண்டு நன் முறையில் வாழ்ந்தால் இறுதி நிலையான இறைவனை அடையும் நிலை மிக எளிமையானதாக அமையும். மனித உரிமையின் முதன்மையாக சித்தர் பாடல்கள் கூறுவது இறையியல் கொள்கைகளை உணர்;ந்து அதன் வழி அனைத்து உயிர்களுமே வீடுபேறு அடைய வேண்டும் என்பதே இக்கட்டுரையின் வழி கண்டறிந்த உண்மை.

**1. பார்வை நூல் பட்டியல் (Works Cited)**

MLA முறைப்படி நூலாசிரியர் பெயர் அகரவரிசையில் (Alphabetical Order) அமைக்கப்பட்டுள்ளது:


- **சுப்புரெட்டியார், ந.** *பட்டினத்தடிகள்*. கலைஞன் பதிப்பகம்.
- **திரு அருட்பிரகாச வள்ளலார்.** *அருட்பெருஞ்ஜோதி அகவல்*. திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையம்.
- **பார்த்தசாரதி யோகியர், வு. ஊ.** *திருமந்திரம்*. பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், 1940.
- **முத்தையா, முல்லை பி. எல்., உரை ஆசிரியர்.** *திருக்குறள் எளிய உரை*. முல்லை பதிப்பகம்.
- **வடிவேலு முதலியார், மா., உரை ஆசிரியர்.** *சிவவாக்கியர் பாடல் மூலமும் உரையும்*. பி. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ், 1953.


**2. மேற்கோள் குறிப்புகள் (Notes Format)**

1. முத்தையா, பா. 72.
2. பார்த்தசாரதி யோகியர், பா. 270.
3. பார்த்தசாரதி யோகியர், பா. 273.
4. சுப்புரெட்டியார், பா. 20.
5. பார்த்தசாரதி யோகியர், பா. 2148.
6. முத்தையா, பா. 972.
7. வடிவேலு முதலியார், பா. 47.
8. வடிவேலு முதலியார், பா. 155.
9. பார்த்தசாரதி யோகியர், பா. 1823.
10. வள்ளலார், பா. 368.
11. பார்த்தசாரதி யோகியர், பா. 725.
12. வடிவேலு முதலியார், பா. 137.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

# 29. எஸ். ராமகிருஷ்ணன் புதினங்களில் மனித உரிமைகள்

**ந. சுவேதா**

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், முனைவர் ஆ.தேவதா ஆய்வு நெறியாளர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி- 620 002

206175swetha@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இக்கால இலக்கியங்களில் அதிகளவில் மக்களால் விரும்பிப் படிக்கக் கூடியதில் புதினங்களும் ஒன்றாகும். அதில் எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களின் புதினங்கள் இன்றைய காலகட்டத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப எழுதும் திறம் படைத்தவர் எஸ் ராமகிருஷ்ணன். இவரின் புதினங்களில் பலவும் ஒரு சமூகம் சார்ந்த மக்களின் வாழ்க்கையும் இன்னல்களும் போராட்டங்களும் ஏராளம்.ஒடுக்கப்பட்ட மனிதர்களின் உரிமைக் குரலாகவே புதினங்கள் காணப்படும்.உரிமைக்கான பல போராட்ட நிகழ்வுகளும் அப்படியே காட்சிப்படுத்தியிருப்பார்.

முன்னுரை

எஸ்.இராமகிருஷ்ணன் பார்வையில் மனித உரிமைகள் என்பது இலக்கியத்தின் மையக் கருப்பொருளாக அமைகிறது. அவர் தனது நாவல்களான நெடுங்குருதி, இடக்கை, சஞ்சாரம், துயில் ஆகியவற்றின் மூலம் கிராமத்து மனிதர்களின் வாழ்க்கையையும், நீதி மறுக்கப்பட்ட மனிதர்களின் துயரங்களையும், சாதிய அடிப்படையில் கலைஞர்களின் வாழ்வில் ஒடுக்கப்பட்ட விதம் பற்றியும், வரலாற்று அடிப்படையிலும் புனைவின் ஓட்டத்திலும், பகுத்தறிவு மற்றும் இலக்கியத்தின் மூலம் நம்பிக்கையை வளர்ப்பதையும் வலியுறுத்துகிறார்.

மனித உரிமைகள்:

மனிதர்கள் பிறப்புரிமையாகப் பெற்றுள்ள அடிப்படை உரிமைகளே ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கப் பெறவேண்டிய மற்றும் உரித்தான அடிப்படை உரிமைகளும்,சுதந்திரங்களும் ஆகும். இந்த உரிமைகளை மனிதர்கள் மனிதர்களாக பிறந்த காரணத்தினால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையான விட்டுக் கொடுக்க இயலாத மறுக்க முடியாத சில உரிமைகளாக கருதப்படுகின்றன. சுதந்திரம்,சமத்துவம்,கண்ணியம் மற்றும் உரிமைகள் அனைத்தும் இதில் அடங்கும் மனித உரிமைகள் பாதுகாப்பு அனைவரின் கடமை அரசு,சமூகம் தனிமனிதர் என அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் மனித உரிமைகளின் வரலாறு பல ஆண்டுகள் பழமையானது மகா கார்டா (1215), உரிமைகள் மனு (1628),அமெரிக்கா சுதந்திர பிரகடனம் (1776), ப்ரெஞ்ச் புரட்சி (1789) ஆகியவை மனித உரிமைகளின் வளர்ச்சியின் முக்கியப் பங்கு வகித்தன.

"ஐ.நாவின் மனித உரிமைகள் பிரகடனம் (ருனுர்சு) 1948-ல் வெளியிடப்பட்டது இதில் 30 உரிமைகள் அடங்கியுள்ளன.சார்வதேச அளவில் மனித உரிமைகளைப் பாதுகாக்க வழிவகுத்து"

சிவில் உரிமைகள்,அரசியல் உரிமைகள்,பொருளாதார உரிமைகள்,சமுக உரிமைகள்,கலாச்சார


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in
DOI: https://doi.org/10.63300/tm11012025.01

உரிமைகள் என மனித உரிமைகளின் வகைகளைப் பிரித்து வைத்துள்ளனர்.

மனித உரிமைகளின் பாதுகாப்பு அமைப்புகளாக ஐ.நா. சபை மனித உரிமைகளின் கவுன்சில் அம்னேஸ்டி இன்டர்நேஷனல், ஹியூமன் ரைட்ஸ் வாச், தேசிய மனித உரிமை ஆணையம் (இந்தியா).

சட்டவிரோத கைது, சித்ரவதை பாகுபாடு, வன்முறை, பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகளின் மீறல்கள் என பலவும் மனித உரிமைகள் மீறல்களாக கூறப்பட்டுள்ளன.

'இந்திய அரசியலமைப்பு பகுதி-3 (அடிப்படை உரிமைகள்) மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் (1993) தேசிய மனித உரிமை ஆணையம் இந்தியாவில் காணப்படுகின்றது."

அடிப்படை மனித உரிமைகள்:

அடிப்படை மனித உரிமைகள் என்பது தொடர்பாக பல்வேறு வெளிப்படுத்தல்கள் உள்ளன. அனைத்து உலக மட்டத்தில் ஐக்கிய நாடுகளால் வெளியிடப்பட்ட உலக மனித உரிமைகள் சாற்றுறைகள் அடிப்படையாக பெரும்பான்மை நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் உரிமைகளின் சட்டம்,கனடாவின் உரிமைகள் சுதந்திரங்களுக்கான கனடிய சாசனம் போன்று பல்வேறு நாடுகளில் மனித உரிமைகளை வெளிப்படுத்தி சட்டங்கள் உள்ளன.

1.வாழும் உரிமை

2.உணவுக்கான உரிமை

3.நீருக்கான உரிமை

4.கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்ஃ பேச்சுரிமை

5.சிந்தனைச் சுதந்திரம்

6.ஊடகச் சுதந்திரம்

7.தகவல் சுதந்திரம்

8.சமயச் சுதந்திரம்

9.அடிமையாகா உரிமை

10.சித்ரவதைக்குட்படா உரிமை

11.தன்னாட்சி உரிமைஃ சுய நிர்ணயம்

12.ஆட்சியில் பங்கு கொள்ள உரிமை

13.நேர்மையான விசாரணைக்கான உரிமை

14.நகர்வு சுதந்திரம்

15.கூடல் சுதந்திரம்

16. குழுமச் சுதந்திரம்

17.கல்வி உரிமை

18.மொழி உரிமை

19.பண்பாட்டு உரிமை


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

20. சொத்து உரிமை

21.தனி மனித உரிமை.

மனித உரிமைகள் விளக்கம்:

மனித உரிமைகள் குறித்து பல்வேறு அறிஞர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இவர்கள் தமது கருத்துக்களை கால சூழ்நிலைகளுக்குகேற்ப முன் வைத்துள்ளமையை நாம் அறிய முடியும்.

"மனிதன் வாழ்ந்தால் மட்டும் போதாது , நன்றாக வாழ வேண்டும் நலன்கள் பாதுகாக்கப்பட்டால் தான் மனிதன் நன்றாக வாழ இயலும். தனது நலனைப்பேணி பொது நலனையும் பாதுகாப்பதற்கு ஒருவனுக்குள்ள சக்தியை உரிமைகள் என்பர்" என்பது அரிஸ்டாட்டில்.

லஸ்கி என்பவர் குறிப்பிடும்போது 'பிறருக்கு இடைஞ்சல் இன்றி ஒவ்வொரு மனிதனும் தனது ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கான சூழலை சமூகத்தில் நிலைநிறுத்திக் கொள்ளுதலையே உரிமைகள்" என்கிறார்.

லொக் என்பவர் 'உரிமைகள் என்பன ஒவ்வொருவருடைய அதிகாரம் அல்லது கோரிக்கையை விட உயர்ந்தவையாகும்"என்பார்.

கோப் கவுஸ் என்பவர் 'சமூக நலனை பேணும் நிபந்தனைகளே உரிமைகள்" எனக் குறிப்பிடுகின்றார்.

புதினங்களில் மனித உரிமைகள்:

எஸ்.இராமகிருஷ்ணன் பெரும்பாலும் புதினங்களில் ஏதேனும் ஒரு சமூகத்தினையும், வரலாற்றுப் பின்னணியும், மையக் கருப்பொருளாகக் கொண்டே எழுதியுள்ளார். மனிதனுக்கான உரிமை கிடைக்கப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்துவதில் இவர் தவறியதில்லை. தன் எழுத்தின் மூலமும் ஏதேனும் ஒரு கருத்தைக் கொண்டு மனிதனுக்கான உரிமையை கூறுவது இவரின் சிறப்பு ஆகும்.அவ்வகையிலே, நெடுங்குறுதி, இடக்கை,சஞ்சாரம்,துயில் போன்ற புதினங்களை கூறிக் கொண்டே போகலாம்.

நெடுங்குருதி:

வேம்பலை என்னும் ஊரில் வாழும் வேம்பர்கள் வேட்டைச் சமூகத்தினை சேர்ந்தவர்கள். பின் வேட்டைத் தொழிலை விட்டு களவில் ஈடுபடுகிறார்கள். அவர்களில், ஆண்கள் காவல்துறைக்குப் பயந்து காடுகளில் போயிருந்து பின்னர் மரணத்தைத் தழுவுகின்றனர். இவர்களின் கதை வெள்ளையர் காலத்தில் துவங்குகிறது. வெல்சி என்ற வெள்ளையன் ஒரே நேரத்தில் நாற்பத்தி ரெண்டு வேம்பர்களை சுட்டுக் கொன்ற பிறகு பல ஆண்டுகளுக்குப் பிறகும் வெல்சியின் மீது கசப்பு ஒளிந்து கொண்டிருந்தது. ஊரும் குரல்வளை அறுபட்டது போல் சதா நிசப்தத்திலே மூழ்கிக் கிடக்கிறது. மேலும்,

'பிடிபட்ட கள்வனைப் போல எப்போதும் ஒடுங்கி நிற்கும் வேம்பொன்று வேம்பர்கள் தெருவின்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

வடக்கே நின்றிருந்தது"

(நெ.கு.ப.47).

வேம்பலை மக்களை அடக்கும் முறையை அதிகாரம் யார் கொடுத்தார்கள்? தங்களின் கிராமங்களில் தங்களுக்கான ஏதோ ஒரு தொழிலை செய்து பிழைத்து இருக்கின்றார்கள். அது அவர்களுக்கான உரிமை ஆகும்.

சங்க இலக்கியமான புறநானூறு

'வேற்றுமை இல்லா விழுதிணை பிறந்து"1

(புறம்:பா:27)

என்று கூறுகிறது. இது மனிதர்களுக்குள் பாகுபாடு காட்டாமல் அனைவரும் சமமாக வாழ வேண்டும் என்ற உயர்வான பண்பாட்டு விழுமியத்தை கூறுகிறது. ஆனால் இந்நாவலில் நாம் அதிக அளவில் அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வறட்டுத் தன்மையோடு இருப்பதையே காண முடியும். அது மட்டுமின்றி கதை முழுவதும் வேம்பலை மக்கள் நிம்மதியற்று காணப்படுவார்கள். வாழும் உரிமையானது வறட்சியோடு காணப்படும் இந்நாவல் முழுவதும்.

இந்நாவல் பற்றி இந்நாவலின் முன்னுரையில்:

'காலம் கதையைச் சொல்வது போல கதை தானே செல்கிறது. ஒரு அமைதியான நதியைப் போல கதை நீண்டு போய்க் கொண்டிருக்கிறது. இந்நாவல் மனித வாழ்வை மூன்று நிலைகளில் சித்தரிக்கிறது. அவர்களது செயலில் கனவுகளில் மற்றும் விழிப்புணர்வில் என மூன்று நிலைகளிலும் கதாபாத்திரங்கள் வளர்கிறார்கள். கோடையில் வெப்பமும் கிராமத்தின் நுண்மையான சித்தரிப்புமாக இந்நாவல் இயற்கையையும் ஒரு கதாபாத்திரமாகவே கொண்டிருக்கிறது என்கிறார் நீல பத்மநாபனும்.

வேம்பலையின் மீது படர்ந்திருப்பது யாராலும் தீர்க்க முடியாத சாபத்தின் துர்கனவு. தலைமுறைகளாக இக்கனவை கடந்து கொண்டிருக்கும் மனிதர்களின் வாதைகளும் ஏக்கங்களும் நிலை கொள்ள முடியாத தத்தளிப்புகளும் ஆபாசங்களின் இருளும் வெளிச்சமும் இந்நாவலில் முடிவற்றக் குருதிப் பெருக்காகின்றன. இந்நாவலில் எந்த உரிமையும் அம்மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை என்பதே இந்நாவலின் எதார்த்தத்தை இன்னும் தீவிரமாகப் புரிய வைக்கிறது.

எவ்வித மனித உரிமைகளும் இன்றி பொருளற்ற வாழ்வும் மரணமும் தங்கள் பசியை குரலால் வேம்பலையை நோக்கி மனிதர்களை அழித்துக் கொண்டே இருக்கின்றன.

இடக்கை:

இந்நாவலின் முன்னுரையில் இந்தியாவின் இரு பெரும் இதிகாசங்களும் நீதி குறித்தே, பேசுகின்றன. நீதி கேட்பது, நீதிக்காகக் காத்திருப்பதுஈ நீதி கிடைக்காத போது யுத்தம் செய்வது என்பதையே இரண்டும் முதன்மைப்படுகின்றன என்று இந்த நூலின் முன்னுரையில் எஸ். ராமகிருஷ்ணன் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடுவது போல் வரலாறு நெடுகிலும் நீதியின் குரல் நெறிக்கப்பட்டு வந்திருப்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அரசனின் கடமை,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 11, Issue 01 (December -2025)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm11012025.01*

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"2

(புறம்.186)

இது மன்னனே உலகிற்கு உயிர் போன்றவன் என்பதைக் கூறி மன்னன் மக்களுக்குப் பொறுப்புடன் இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

ஆனால் இந்நாவல் முழுக்க நீதி மறுக்கப்பட்ட மனிதனின் துயரக் குரலை அழுத்தமாகப் பதிவு செய்கிறார் எஸ். ராமகிருஷ்ணன். ஔரங்கசீப்பின் கடைசி நாட்களில் துவங்குகிறது நாவல் .ஔரங்கசீப் ஒரு வீரனின் குதிரையை மிகக் குரூரமான வகையில் கொன்று விடுகிறார். நீதியும் இப்படிப்பட்டது தான்.அதை அடக்கி ஆள முடியாத போது அதைப் பலி கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை தன்னால் அடக்க முடியாதவற்றைக் கொன்று விடுவதே ஒரே தீர்வு என்ற ஆழமான பாடம் அவர் மனதில் வேரூன்றி விடுகிறது.

'மாமன்னரும் எளிய விவசாயியும் எப்படி ஒன்றாகி விட முடியும்? அப்படி ஒரு சட்டம் இருக்கிறது என்றால் அது மன்னருக்கு எதிரானதில்லையா" எனக் கேட்பவரே ஔரங்கசீப்"

(இட.ப:20)

அரசுக்கு எது நன்மை பயக்கிறதோ அதுவே நீதி.இந்த நீதியின் படியே ஆள்பவன் ஆள்கிறான் சாமானியன் தனது விதியை நொந்து கொண்டு வாழ்வை நகர்த்துகிறான்.

இதில் தூமகேது என்பவனின் மீது ஆட்டுத்தோல் திருடியதாக் கூறி குற்றம் சுமத்தி சிறையில் அடைத்து உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேற்றுமையைக் காட்டி நீதிக்காக காக்க வைத்து நீதி கிடைக்காமலே இன்னல்களை அடைந்து என்ன ஆனான் என்று தெரியாத நிலையை அடைந்து போனான்.

அரசாட்சியில் மக்களின் உரிமையானது,

“கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து"3

(குறள்:551)

அரசன் பொருள் மீது மிகுந்த பற்றுக் கொண்டு மக்களைத் துன்புறுத்தினால் ,அவன் பகைவரை விடக் கொடியவன் என்கிறார். அரசு மக்களை அடிமை நிலையில் நடத்தக்கூடாது என்பது உறுதியாகக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது.

மனித உரிமைச் சட்டம் தனிநபர் பாதுகாப்பை வலியுறுத்துகின்றது. சரியான காரணம் இல்லாமல் கைது செய்யவோ, சிறையிலடைக்கவோ நாடு கடத்தவோ கூடாது என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்குறள் தெளிவுபடுத்துகிறது.

ஒருவரின் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தால் அவரின் குற்றம் நிரூபிக்கும் வரை அவரை குற்றமற்றவராகவே கருத வேண்டும் என்கிறது மனித உரிமைச் சட்டம்.

'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

மிகைநாடி மிக்க கொளல்"4

(குறள்-504)

மன்னரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தியதாக மகா கார்டா (1215) வரலாற்று பின்னணி மூலம் அறிய இயலும்.இந்நாவலில் ஒரு கற்பனை கதையானது இடம்பெற்றிருக்கும் அதில்,

'ஆண் புழு , பெண்புழு பற்றிய கதை ஆகும். இதில் ஆண் புழு தேர் சக்கரத்தில் இறந்து போய்விடும். அது காசிராஜன் மனைவி சென்ற தேர் ஆகும். அதனை காசிராஜன் அறிந்தும் நீதிக்கு உண்மையின்றி இருப்பார்."

(இட.பக்.217-225)

புறநானூறு கூறும் அரசனின் கடமை:

'பகைவர்கள் எனப்படுபவர்கள்

அருளின்றி கொடுக்காமல்

இருப்பதில் வல்லவராகட்டும்"5

(புறம்.166)

பகைவர்கள் கூட இரக்கம் இல்லாமல் இருப்பதில் வல்லவர்களாக இருக்கட்டும். ஆனால் ,மன்னன் மட்டும் மக்கள்படும் துன்பத்தைப் பார்த்து இரக்கமின்றி இருக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறது.ஆனால், காசிராஜன் அவ்வாறின்றி பாகுபாடுகாட்டி கருணையில்லாதவன் என்பதை இக்கதையானது விளக்கும்.

நீதிக்காக காத்திருக்கும் ஒவ்வொரு மனிதனும் தனக்கான நீதி கிடைத்துவிடும் என உறுதியாக நம்புகிறான். அந்த நம்பிக்கை பொய்த்துப் போகும்போது கூட அவன் மனம் தளர்வதில்லை இன்னொரு இடத்தில் தனக்கான நீதி கிடைக்கக்கூடும் எனத் தேடிச் செல்கிறான்.

அநீதியின் குரூரத்தையும் அறிவீனத்தையும் இந்திய இலக்கியங்கள் எப்போதுமே அடையாளம் காட்டி வந்திருக்கின்றன. அவ்வரிசையில் நீதி கிடைக்காத மனிதனின் அவல வாழ்வினைப் பேசுகிறது இடக்கை.

சஞ்சாரம்:

நாதஸ்வரக் கலைஞர்களைப் பற்றிய படைப்பு இது.சாதிய அடிப்படையில் நாதஸ்வர கலைஞர்கள் ஒடுக்கப்பட்ட விதம் தமிழக இசை வேளாளர்களின் பெருமைமிகு வாழ்வு மற்றும் கால ஓட்டத்தில் அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட தாழ்வு போன்றவற்றை வரலாற்று அடிப்படையிலும் புனைவின் ஓட்டத்திலும் இந்த நாவல் விளக்குகிறது. தொல்காப்பியத்தில் இக்காலத்தில் பரவலாக பேசப்படும் மனித உரிமை கூறுகள் விரைவில் நிற்றல் நோக்குதற்குரியது.

சாதி ஏற்றத்தாழ்வு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்று நான்கு வகைச் சாதிகளைச் சுட்டி அவர்களின் இருப்பிடங்களையும் குறிப்பிட்டு உரிமையற்ற நான்காம் வருணத்தார் வேளாளர் என்றும் குறிப்பிடுகின்றார்.

'அறுவகை பட்ட பார்ப்பனர்ப்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

பக்கமும் ஐவகை மரபின் அரசர் பக்கமும்

இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்"6

(தொல்.பொ.நூ.74)

என வேளாளருக்குரிய உழவு உழவால் அழிந்த தொழில், விருந்தோம்பல் பகடு புறந்தருதல் வழிபாடு வேதம் ஒழிந்த கல்வி போன்றவற்றை குறிப்பிடுகின்றார். இவை மட்டுமின்றி திருக்குறளில்

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"7

(குறள்;.972)

என்ற குறள் எல்லா உயிர்களும் பிறப்பால் ஒத்திருக்கின்றது என்று உணர்த்துகிறது.

'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்

கீழல்லார் கீழல் லவர்"8

(குறள்.973)

பிறப்பில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று யாரும் கிடையாது. மேன்மை குணம் உடையவர் உயர்ந்தவர் என்றும் கீழான குணம் உடையவர் தாழ்ந்தவர் என்றும் பாவலர் கூறுகின்றார். பல்வேறு இலக்கியங்கள் சாதி ஏற்றத்தாழ்வுகள் பற்றி விளக்கியுள்ளதை நாம் அறிவோம். இந்நாவலும் சாதிய அடக்குமுறைகளையும், ஒடுக்குமுறைகளையும் விளக்கியுள்ளது.

நாதஸ்வரக் கலைஞர்கள் என்றாலே தாழ்ந்தவர்கள் என்ற கருத்து இன்றும் காணப்படுகின்றது .அவ்வாறு தான் நாதஸ்வரக் கலைஞர்கள் கோயில் திருவிழாக்களிலோ அல்லது திருமண நிகழ்ச்சிகளிலோ அவர்கள் வாசிக்க வரும்போது அவர்களுக்கான முழு உரிமையானது வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கான ஊதியம் உணவு என எதுவும் முழுவதுமாக கிடைப்பதில்லை. பசியும் வறுமையும் இவர்களின் வாழ்வின் பெருந்துயரமாகும். மனிதனின் அடிப்படை உரிமையாகக் கூறப்படும் உணவு உரிமை வாழும் உரிமை பேச்சுரிமை என இவை எதுவுமே இந்நாவலில் காணப்படுவதில்லை.

பேச்சுரிமை இல்லாத போது எவ்வாறு அவர்களுக்கான உரிமையானது கிடைக்கப் பெறும். மனிதர்களுக்குள் பாகுபாடு காட்டாமல் அனைவரும் சமமாக வாழ வேண்டும் என்று கூறுவது மட்டுமே மனிதர்களிடம் உள்ளது. ஆனால் சக மனிதர்களையும் கலைஞர்களையும் சமமாக நடத்தும் பழக்கம் குறைவாகவே உள்ளது.இவை எல்லாவற்றையும் எடுத்துரைப்பதே சஞ்சாரம் இதில் மனித உரிமையானது காணாமற் போனதே குறிப்பிடத்தக்கது. எத்தனை இலக்கியங்களில் எந்த பாகுபாடும் இல்லையென்று கூறினாலும் ஒரு சில உரிமைக்கான போராட்டம் நடந்து கொண்டு தான் உள்ளது.

அதில் பாதிக்கப்படுபவர்கள் அதிக அளவில் கலைஞர்கள் மட்டுமே.தன் உரிமையைப் போராடியே பெற வேண்டியுள்ளது.

துயில்:


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

துயில்தரு மாதா தேவாலயத்தை முன் வைத்து 1873 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்கள் குறிப்பிடுகின்றது. இந்நாவலானது மூன்று கதைக்களங்களைக் கொண்டு உள்ளது.

1.கடற்கன்னி ஷோ போடும் குடும்பம் சூழலை பற்றியும்

2.ஒரு பெண் மருத்துவர் ஆனால் ஏற்படும் இன்னல்களையும்

3.கருணையோடு நோயாளிகளின் வலிகளை நீக்கும் மற்றொரு பெண் பற்றியும் கூறுகின்றது. மூன்று கதைக்களங்கள் காணப்பட்டாலும் ஏதோ ஒன்றில் பெண்களின் நிலையையே விளக்குகிறது.

1.பெண்களுக்கான பேச்சுரிமை கருத்துரிமை இல்லை என்பது பற்றி கடற்கன்னியாக வேடம் போடும் பெண்ணின் மனக் குரலை நம்மால் உணர முடியும். அப்பெண்ணிற்கு தனிமனித உரிமையானது இல்லை என்பதும் நம்மால் அறிய முடியும். சுதந்திரமாக எண்ணுவதற்கும் பேசுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு எப்பொருளை யாரிடம் கேட்டாலும் கேட்டவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதன் உண்மைப் பொருளை ஆராய்ந்து தெளிய வேண்டும் ஒருவர் நல்வழியை கடைப்பிடிப்பதற்கு சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்பதனை

'துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"9

(குறள்.;42)

ஒரு கருத்தை பதவியில் உள்ள ஒருவர் கூறினார் என்பதற்காக அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடாது. அதனை முறையாக ஆய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்.

இவை எவையுமில்லாமல் அப்பெண் இருந்தமையால் இறுதியில் அப்பெண்ணின் வாழ்வானது சிறைக்குப் போனது. கண்ணாடிப் பெட்டியில் முடங்கியிருந்த அவள் சிறையில் முடங்கிப் போனாள்.

இதில் எங்கு தனிமனித உரிமையானது காணப்படுகிறது. உரிமையின்றி தன் வாழ்வும் வீணாகி போனதே இதன் முடிவு.

2.ஒரு பெண் மருத்துவராக ஒரு ஊருக்கு செல்கிறாள். அங்கு இருக்கும் ஊர் மக்கள் அனைவரும் ஒரு பெண் மருத்துவரா என்று ஏற்றுக் கொள்ளவில்லை.அதனால் அவளை அனைவரும் ஏற்க மறுத்து மருத்துவம் பார்க்கக் கூட செல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் அப்பெண் பிரசவம் பார்த்து தாயையும் குழந்தையையும் காப்பாற்றிய பிறகே அவளை அனைவரும் நம்பத் தொடங்கினார்கள்.பின் அவளிடம் மருத்துவம் பார்க்கச் செல்ல ஆரம்பித்தார்கள். அவளிடம் ஒரு சிறு பெண் பணி பெண்ணாக இருந்தாள்.அந்த ஊரில் மருத்துவராக இருப்பதால் பலரும் பல மரியாதையைக் கொடுத்தார்கள் அதனைக் கண்ட பணிப் பெண்ணான சிறு பெண் தானும் கல்வி


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

கற்க ஆசைப்படுவதாகக் கூறினாள். கல்வியின் முக்கியத்துவம் நம்மால் அப்பொழுது உணர முடியும் கல்வியையும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றி பல நூல்கள் எடுத்து இயம்புகின்றன.

கல்வி பெறுவது ஒவ்வொரு குடிமக்களின் அடிப்படை உரிமை கல்வி கற்பதில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் பால் பாகுபாடு இல்லாது அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்ற சட்டங்கள் உரைக்கின்றன. ஆனால் அன்றைக்கே புலவர்கள் பலரும் எழுதியுள்ளனர் என்பதை எண்ணும்போது பெருமையாக இருக்கின்றது.

“உற்றுறுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை
முனியாது கற்றல் நன்றே”10

(புறம்:183)

'மன்னனில் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்-மன்னனின்
கற்றோன் சிறப்புடையன் மன்னற்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோருக்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு"11

(மூதுரை.26)

“இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாம்உளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து”12

(நாலடி:132)

இவை மட்டுமின்றி திருக்குறள் தொல்காப்பியம் என பலவும் கல்வியின் இன்றியமையாமைப் பற்றி விளக்கியுள்ளது.

தனிமனிதனுடைய வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் உயர்த்துவது கல்வியே என்று அப்பணி பெண்ணிற்குப் புரிய வைத்தது. தினமும் ஏதாவது ஒன்றை கற்றுக் கொடுத்தாள். ஆனால் என்னவோ ஒரு பெண் மருத்துவராக இருப்பதை ஆண்கள் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அவள் மருத்துவ உரிமையும் மருத்துவ இடம் அனைத்தும் பறிபோனது. இறுதியில் ஏதேதோ காரணங்கள் கூறி அவளைக் கொலையும் செய்தார்கள். இதில் அனைவருக்கும் சமமான கல்வியின் உரிமை எங்கே உள்ளது? அவள் மருத்துவர் என்பது பிரச்சனையா அல்லது ஒரு பெண் மருத்துவர் என்பது பிரச்சனையா என்று தெரியவில்லை. ஆனால், இறுதியில் கல்வி உரிமை பெண்ணிற்கு இல்லை என்பது தான் உண்மையானது.

3.நோயாளிகள் மாதா கோயில் செல்லும் வழியில் ஒரு இடத்தில் தங்குவார்கள். அப்போது அங்கு ஒரு பெண் அவ்விடத்திற்கு வரும் நோயாளிகளை தன் குடும்பத்தார் போன்று கவனித்துக் கொள்வாள். அதில் அவளின் விருந்தோம்பல் பண்பை அறியலாம்.

சங்க நாளில் பெரிதும் போற்றப்பட்ட பேரறம் விருந்தோம்பல். தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறுகையில் விருந்தோம்பல் பண்பாட்டையும் சேர்த்துக் கூறுகின்றார்.

'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியம் பொறையும் நிறையும்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்"13
(தொல்.பொ.நூ.150)

'விருந்துகண் டொளிக்கும் திருந்தா வாழ்க்கை"14
( புறம்.266:;11 )

என்று கூறியுள்ளார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான திரிகடுகம், ஆசாரக்கோவை, ஏலாதி, நான்மணிக்கடிகை போன்ற நூல்களும் சேக்கிழாரின் பெரியபுராணமும், கம்பரின் கம்பராமாயணமும், கலிங்கத்துப் பரணி போன்ற நூல்களும் இதன் சிறப்பைக் கூறுகின்றது.

அதில் கூறப்படும் பெண் அனைவரின் கவலையையும் துயரங்களையும் நீக்கினாலும் அப்பெண்ணிடம் ஏதோ ஒரு கவலையும் துயரங்களையும் காண முடியும்.அப்பெண்ணிடம் அனைவரின் உணவுக்கான உரிமையும் பேச்சுரிமையையும் காண முடியும் .

பெண் உரிமைகள்:

பெண்களின் உரிமைக்காகவும் பெண்கள் சமூகம் மற்றும் அதிகார அளவில் மதிக்கப்பட வேண்டும் என்றும் பெண்ணியச் சிந்தனையையும் சிந்திக்க வைக்கிறது.

'வானூர்தி செலுத்தல் வைய
மாக்கடல் முழுதளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண் அனைவர்க்கும் பொதுவே!"15
(குடு.வி;.பக்:49)

என்ற வரிகளால் அறிய முடிகிறது

புதுமைக் கருத்துக்களை இயம்பும் வகையில் 20-ம் நூற்றாண்டில் எழுந்தவையே மறுமலர்ச்சி இலக்கியங்கள். அதில் பெண்கள் கல்வி பெறுதல் போன்ற பாடுபொருள்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று பாவேந்தர் பாரதிதாசனின் குடும்ப விளக்கு ஆகும். அதில் வானூர்தியைச் செலுத்தல் உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண் பெண் இருபாலருக்கும் உரியது என்று பொதுவாக கூறியிருப்பது.

**முடிவுரை:**

சங்க இலக்கியங்களில் ஐந்திணைகளாகப் பிரித்து மனிதர்கள் வாழ்ந்து வந்தனர். அதில் நிலங்களுக்கேற்ப கிடைக்கும் தொழில்களைச் செய்து வந்தார்கள். அதேபோல தான் நெடுங்குருதி நாவலிலும் விளக்கியுள்ளார் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள். ஆனால், கரிசல் நில மக்களின் துயரங்களே அதிக அளவில் காணப்படும். மூவேந்தர்களின் ஆட்சி பற்றி நாம் அறிவோம் இடக்கை நாவலில் நீதி கிடைக்காமல் ஒரு மனிதன் ஒடுக்கப்படுவதும் நீதியின் மதிப்பற்ற தன்மையும் காண முடியும்.சங்க இலக்கியங்களில் இசை கலைஞர்களையும் இசைக்கும் அரசரும் புலவரும் கொடுத்த மதிப்பு சஞ்சாரம் நாவலில் காணவில்லை என்பதே வேதனைக்குரியது. சங்க காலங்களில் பெண்கள் முன்னேற வேண்டும் என்று பலரும் பேசினாலும் அவர்களின் நிலை மாறவில்லை என்பதற்கான உதாரணம் தான் துயில். சங்க காலத்திற்கும் இக்காலத்திற்கும் பல்வேறு வேற்றுமைகளை காண முடியும். மனிதன் மட்டும் காலத்திற்கு ஏற்றவாறு தன்னை தகவமைப்பு செய்து கொள்கிறான் என்பதே இறுதி ஆகும் .

## 1. பார்வை நூல் பட்டியல் (Works Cited)


- இராமகிருஷ்ணன், எஸ். *இடக்கை*. 4th ed., தேசாந்திரி பதிப்பகம், 2022.
- ---. *சஞ்சாரம்*. 6th ed., தேசாந்திரி பதிப்பகம், 2024.
- ---. *துயில்*. தேசாந்திரி பதிப்பகம், 2018.
- ---. *நெடுங்குருதி*. உயிர்மை பதிப்பகம், 2005.
- ஔவையார். *மூதுரை*. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1927.
- சாதிக்பாஷா, மு. *நவீனப் புதினங்களும் இலக்கிய இயக்கங்களும்*. ராஜா பப்ளிகேஷன், 2012.
- சிவசுப்பிரமணியன், எம்., உரை ஆசிரியர். *திருக்குறள் மூலமும் உரையும்*. கமர்ஷியல் பப்ளிகேஷன்.
- தட்சிணாமூர்த்தி, அ. *தமிழ் நாகரிகமும் பண்பாடும்*. ஐந்திணைப் பதிப்பகம், 2023.
- திருஞானசம்பந்தம், ச., உரை ஆசிரியர். *தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும்*. கதிர் பதிப்பகம்.
- புலியூர்கேசிகன், உரை ஆசிரியர். *சமண முனிவர்கள் இயற்றிய நாலடியார் தெளிவுரை*. சாரதா பதிப்பகம், 2010.
- மாணிக்கவாசகன், ஞா., உரை ஆசிரியர். *புறநானூறு மூலமும் உரையும்*. உமா பதிப்பகம், 2005.
- மெய்யப்பன், ச., உரை ஆசிரியர். *குடும்ப விளக்கு*. மாணிக்கவாசகர் பதிப்பகம், 1993.


---

## 2. மேற்கோள் குறிப்புகள் (Notes Format)


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

1. மாணிக்கவாசகன், பா. 27.
2. மாணிக்கவாசகன், பா. 186.
3. சிவசுப்ரமணியன், குறள் 551.
4. சிவசுப்ரமணியன், குறள் 504.
5. மாணிக்கவாசகன், புறம் 166.
6. திருஞானசம்பந்தம், நூ. 74.
7. சிவசுப்ரமணியன், குறள் 972.
8. சிவசுப்ரமணியன், குறள் 973.
9. சிவசுப்ரமணியன், குறள் 42.
10. மாணிக்கவாசகன், புறம் 183.
11. ஔவையார், பா. 26.
12. புலியூர்கேசிகன், நாலடி 132.
13. திருஞானசம்பந்தம், நூ. 150.
14. மாணிக்கவாசகன், புறம் 266:11.
15. மெய்யப்பன், பக். 49.

# 30. From Pyre to Price Tag: The Unbroken Chain of Violence


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

# Against Women

**Dr. C. JEEVA SELVI**
Assistant Professor, PG and Research Department of History
Holy Cross, College (Autonomous), Tiruchirappalli.
jeevashana2013@hcctrichy.ac.in

**Objectives:**

1.To analyse the 1987 Sati (Prevention) Act and assess the role of Indian constitution, judiciary etc in eradication of this social evil from the society.

2. To use the Roop Kanwar Case to understand the impact of glorification of Sati and its manifestation in our society .

3.To find out exactly why dowry cases and deaths are increasing in certain states in India.

**Significance:**

1. It highlights the gap between the law (banning Sati in 1987) and social persistence of its glorification.
2. It is important to reveal the causes of the dowry related cases which has a hike in India in this 21st century.

**Methodology:**

Mixed approach is adopted for this article

1. The research is centred on an in-depth, socio- legal analysis of the 1987 Roop Kanwar case.
2. Some primary sources (from sources like the NCRB) and Secondary sources – mainly books and e-sources like articles, journals etc. are used.

**Findings:**

Both Sati and dowry are rooted in patriarchal structure that devalues women's autonomy and fundamentally treats women as economic liabilities or transferable property.

The failure of law enforcement Agencies and administration: eradicating these evils requires more than criminal punishment, it demands fundamental societal shift towards gender equality.

**Abstract:**

India is a country known for its rich diversity in culture, traditions and beliefs. India is also fondly regarded as 'mother country' by its countrymen. During the ancient period, people regarded

women as goddesses and gave them an important position in society. While ancient Indian society provided women relatively equal opportunities, post-Vedic times saw a decline in their status and property rights were denied to them. Men considered women as objects of lust and childbearing machines. According to the Manu Dharma Shastra, independent status was forbidden to women. This article will explore the impact of major social evils like **Sati** and **Dowry** on women and the efforts taken through the Indian Constitution to eradicate these evils.

**Keywords:** ***Sati, Dowry, Kanyadan, Varadaksina***

**Introduction:**

During earlier times in our country, the birth of a female child was discouraged by society, and female infanticide was prevalent. Girls had limited access to education, child marriage began to dominate society and paved the way for many types of violence against women. Although many social reformers began to oppose this through their writings, activities, and protests, they couldn't achieve the desired impact. Some forms of violence faced by women in our society includes gender-based discrimination, the dowry system, sexual harassment, femicide, eve-teasing, rape, kidnapping, human trafficking, cyberbullying, etc. Between the seventieth and twentieth centuries, various social reformers emphasised the importance of women rights and demanded equal rights. Notable among them were, Rajaram Mohan Roy, Dayananad Saraswathi, Ishwar Chandra Vidyasagar, Saavithiri Phule, Panditha Ramabai etc., all of whom advocated various means to create awareness among public. The efforts made by these reformers didn't go in vain, and various legislations were passed as a result. Some of them were:

- Child Marriage Restraint Act 1929
- Hindu Marriage Act 1955
- Special Marriage Act 1954
- Hindu Women's Right to Property Act 1939
- Hindu Succession Act 1956
- Dowry Prohibition Act 1961
- Domestic Violence Act 2006

These legislations, committees, and commissions established for the protection of women's equality have not had a significant impact on improving the condition of women in our country.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Women continue to face both physical and mental exploitation, not only in their homes but also in their workplaces. Coercion and the glass ceiling syndrome remain prevalent in our society against women.

The following table depicts the incidence of crimes against women and the charge-sheeting rate over the past four decades.

*Table 1: At a glance - IPC Crimes over the years 1981 - 2022*

| S. No. | Year | Total IPC Crimes | | | S. No. | Year | Total IPC Crimes | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **Crime Incidence** | **Crime Rate** | **Charge-sheeting Rate** | | | **Crime Incidence** | **Crime Rate** | **Charge-sheeting Rate** |
| 1 | 1981 | 1385757 | 200.8 | 61.3 | 22 | 2002 | 1780330 | 169.5 | 80.0 |
| 2 | 1982 | 1353904 | 192.0 | 65.3 | 23 | 2003 | 1716120 | 160.7 | 80.1 |
| 3 | 1983 | 1349866 | 187.4 | 67.3 | 24 | 2004 | 1832015 | 168.8 | 79.8 |
| 4 | 1984 | 1358660 | 184.7 | 67.9 | 25 | 2005 | 1822602 | 165.3 | 80.7 |
| 5 | 1985 | 1384731 | 184.4 | 70.2 | 26 | 2006 | 1878293 | 167.7 | 80.6 |
| 6 | 1986 | 1405835 | 183.5 | 71.1 | 27 | 2007 | 1989673 | 175.1 | 80.1 |
| 7 | 1987 | 1406992 | 180.1 | 72.4 | 28 | 2008 | 2093379 | 181.5 | 79.8 |
| 8 | 1988 | 1440356 | 180.8 | 70.7 | 29 | 2009 | 2121345 | 181.4 | 78.4 |
| 9 | 1989 | 1529844 | 188.5 | 72.3 | 30 | 2010 | 2224831 | 187.6 | 79.1 |
| 10 | 1990 | 1604449 | 194.0 | 70.2 | 31 | 2011 | 2325575 | 192.2 | 78.8 |
| 11 | 1991 | 1678375 | 197.5 | 71.3 | 32 | 2012 | 2387188 | 196.7 | 78.8 |
| 12 | 1992 | 1689341 | 194.7 | 72.2 | 33 | 2013 | 2647722 | 215.5 | 79.5 |
| 13 | 1993 | 1629936 | 184.4 | 72.5 | 34 | 2014 | 2851563 | 229.2 | 79.6 |
| 14 | 1994 | 1635251 | 181.7 | 74.1 | 35 | 2015 | 2949400 | 234.2 | 77.7 |
| 15 | 1995 | 1695696 | 185.1 | 74.3 | 36 | 2016 | 2975711 | 233.6 | 72.9 |
| 16 | 1996 | 1709576 | 183.4 | 76.9 | 37 | 2017 | 3062579 | 237.7 | 70.7 |
| 17 | 1997 | 1719820 | 180.0 | 77.5 | 38 | 2018 | 3132955 | 236.7 | 68.1 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | 1998 | 1778815 | 183.2 | 77.8 | 39 | 2019 | 3225597 | 241.2 | 67.2 |
| 19 | 1999 | 1764629 | 178.9 | 78.0 | 40 | 2020 | 4254356 | 314.3 | 75.8 |
| 20 | 2000 | 1771084 | 176.7 | 78.4 | 41 | 2021 | 3663360 | 268.0 | 72.3 |
| 21 | 2001 | 1769308 | 172.3 | 78.6 | 42 | 2022 | 3561379 | 258.1 | 71.3 |

The above table reveals that for the past four decades there is a rise in recorded crime under the IPC. The number of cases that were recorded increased from 13,85,757 in 1981 to 35,61,379 in 2022 which amounts to a 157% increase. Some of the major reasons for the increased number of reporting are mandatory FIR registration and major legal reforms like Protection of Women from Domestic Violence Act, 2005 which provides civil remedies within 60 days to a woman victim and the Criminal Law (Amendment) Act 2013. The increased number of cases reported can also be attributed to the increase in population as well as the willingness to report, apart from other reasons like awareness on gender inequality, economic stress and urbanization.

**Table 2: Crime Heads-wise Cases Registered (CR) under Crime against Women during 2020-2022:**

| Sl. No. | Crime Head | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|
| 1 | Murder with Rape/Gang Rape | 219 | 284 | 248 |
| 2 | Dowry Deaths | 6966 | 6753 | 6450 |
| 3 | Abetment to Suicide of Women | 5040 | 5292 | 4963 |
| 4 | Miscarriage | 239 | 196 | 236 |
| 5 | Acid Attack | 105 | 102 | 124 |
| 6 | Attempt to Acid Attack | 33 | 48 | 38 |
| 7 | Cruelty by Husband or his relatives | 111549 | 136234 | 140019 |
| 8 | Kidnapping and Abduction of Women | 62300 | 75369 | 85310 |
| 9 | Human Trafficking | 646 | 914 | 781 |
| 10 | Selling of Minor Girls | 12 | 12 | 8 |


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Volume 11, Issue 01 (December -2025)
www.tamilmanam.in DOI: https://doi.org/10.63300/tm11012025.01

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Buying of Minor Girls | 1 | 2 | 3 |
| 12 | Rape | 28046 | 31677 | 31516 |
| 13 | Attempt to Commit Rape | 3741 | 3800 | 3288 |
| 14 | Assault on Women with Intent to Outrage her Modesty | 85392 | 89200 | 83344 |
| 15 | Insult to the Modesty of Women | 7065 | 7788 | 8972 |
| **A** | **Total IPC Crimes against Women** | **311354** | **357671** | **365300** |
| 16 | Dowry Prohibition Act | 10366 | 13568 | 13479 |
| 17 | Immoral Traffic (Prevention) Act | 868 | 1071 | 946 |
| 18 | Protection of Women from Domestic Violence Act | 446 | 507 | 468 |
| 19 | Cyber Crimes/Information Technology Act | 2334 | 2597 | 2940 |
| 20 | Protection of Children from Sexual Offences Act | 46123 | 52836 | 62095 |
| 21 | Indecent Representation of Women (Prohibition) Act | 12 | 28 | 28 |
| **B** | **Total Special and Local Laws Crimes against Women** | **60149** | **70607** | **79956** |
| | **Total Crime against Women** | **371503** | **428278** | **445256** |

Source: Crime in India

While the Table 1 shows the IPC crimes registered over the years 1981- 2022 and includes all types of crimes registered against women, Table 2 specifically mentions 'Crime Heads- wise Cases Registered (CR) under Crime Against Women during 2020-2022, and includes cases like, Rape, dowry deaths, cruelty by husband etc.

**Position of women now and then:**

Our society is based on a patriarchal structure, where women have to respect and obey those values. In India most of the women from rural as well as urban areas are dependent on others.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm11012025.01

Initially, only 10 percent of women's participation was observed in the elected assemblies, but now one-third of all seats in the Lok Sabha, State Legislative Assemblies, and the Legislative Assembly of the National Capital Territory of Delhi, including those designated for SCs and STs, are reserved for women under the Constitution (106$^{th}$ Amendment) Act, 2023.

Mahatma Gandhi, the father of our nation rightly said that, women are equal to men intellectually, mentally, and spiritually and also can participate in every activity with equal competence as men. In reality, gender discrimination is present in all the fields. According to recent studies, only 14 percent of women occupy managerial and administrative jobs. They often work longer hours than men but much of their work remains under-valued, unrecognised, unappreciated and the threat of violence stalks their lives from cradle to grave.

Dowry is another social evil that exists in our society, and dowry-related deaths occur in large numbers. Dowry death is prevalent more in middle class urban areas. There is a common saying that every marriage is made in heaven, but in reality, most marriages are arranged based on materialistic considerations. Just like every commodity has a price tag, in some communities in India, a bride is tagged with a price on the basis of her qualification, economic background, social status etc. This price is subject to bargaining in a way similar to people bargain, while purchasing commodities in a market. The dowry amount is then finalised to the satisfaction of the groom’s family.

When a girl is born and brought up in a family, she is considered as someone who shall be moving out after marriage and is treated like someone belonging to another family. When a tender sapling is transplanted, extra care and nourishment is given to ensure that the new soil is suitable for its proper growth. Even if the temperature and other conditions are maintained properly, the plant still requires some time to adjust. Similarly, when a bride enters a new life, she brings with her own desires, impressions, habits, etc. It takes time to adapt to the new situation. This process of adaptation should not and cannot be one-sided. She needs a warm welcome and guidance from family members, such as parents-in-law, husband, and others. The husband must stand as a pillar of support, ready to protect her and champion her cause when she is right, and offer equality and protection, by lifting her up or taking responsibility upon himself when she is at fault.

Sati was an ancient practice in India, followed by upper-caste Hindus. It involved the self-

 | Copyright © Author(s)

immolation of widowed women, who believed it would allow them and their deceased husbands to enjoy heavenly pleasures and escape the cycle of birth and death. During the colonial period, through the efforts of the Bengal elite, missionaries, and colonial officials, Sati was legally abolished in 1829.

In India, especially in Bengal, between 1815 and 1828, 8,135 widows were burnt alive. The reason behind this inhumane practice was the *Dayabhaga* system of Hindu law, according to which widowed women could inherit their deceased husband's property in the absence of male heir.

In order to avoid gender discrimination in our country, our Constitution ensures equality, prohibition of discrimination, and protection of life and liberty through Articles 14, 15, and 21. Article 51A(e) promotes harmony and the spirit of common brotherhood among all the people of India, transcending religious, linguistic, regional, or sectional diversities, and encourages the renouncement of practices derogatory to the dignity of women.

**Roop Kanwar's Case study:**

